இராம நாடகம்

அருணாசல கவிராயர்

1873

DIGITIZED

O-,892 MAR2R
M73
117056

ஸ்ரீ

இராமஜெயம்.

15

4-76

இராமநாடகம்.

3204

சீர்காழி
அருணாசலக்கவிராயர்
பாடியது.

இஃது
சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவர்
திரு-வேங்கடாசலமுதலியாரவர்களாலும்
சங்கீதசாஹித்தியவித்துவாமிசராகிய
பொன்விளைந்தகளத்தூர்
இராமசாமிநாயகராலும்
முன்பதிப்பித்தபிரதிக்கிணங்க
களத்தூர்
வேதகிரிமுதலியார் - குமாரர்
ஆறுமுகமுதலியாரால்
ஆராய்ச்சிசெய்து
இராஜசேகரமுதலியாரால் - இயற்றிய
இராமாயண ஓரடிக் கீர்த்தனையுடன்
ஆ - அருணாசலமுதலியாரது
திருமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

௧௮௭௬௵ ஆகஸ்டுமீ

0-,692 MAR2 R
H73

புத்தகவிளம்பரம்.

இதனால்சகலர்க்குமறிவிப்பதி யாதெனில் திரிசிரபுரம் கோட்டையில்புத்தகபரிபாலனச்சபைத்தலைவராகிய ஆ-முத்துசாமி முதலியாரிடத்தில் தமிழ்.தெலுங்கு-கிரந்தம்-இங்கிலீஷ்முதலிய புத்தகம் வேண்டியவர்கள் சரசமானவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

17056



இராமாயணத்தோடிக்கீர்த்தனை.

விருத்தம்.

ஏர்கொண்டநான்மறையின் பொருளெல்லாம் ... ... *
இனியதமிழாற்செய்து தொண்டர்க்கீந்த ... ... *
பார்கொண்டகுருகூர்வாழ் சடகோபாழ்வார் ... ... *
பதமலரைப்பணிந்துதிருச் சென்னைமேவுந் ... *
தார்கொண்டபுயாசலன் ஒப்பில்லாவீரன் ... ... *
சதுரன்அயன்றொழும் ராமச்சந்திரமாலின் ... *
சீர்கொண்டதிருஅருளின் பெருமைதன்னைத் ... ... *
தேறுவேன்மனமகிழ்ந்து கூறுவேனே ... ... *

தோடிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

கோதண்டதீக்ஷாகுருவே—பக்தரக்ஷ
கோகனக மலர் மருவே

அநுபல்லவி.

தாதண்டுமலர்ச்சோலை - விண்கற்பகத்தின் ... மேலே
தழைக்குஞ்சென்னைநகர்வாழ் - ஸ்ரீவேங்கடேச ... மாலே
பூதகிமுலைஉண்ணல்போல் - ஆவிஉண்டோருக் ... காலே
போற்றும்யாதவர்க்கின்பந் - தேக்கச்செய்தாய்பரி வாலே
புத்ரமுதத்தினை நற்சுரருக்குமுன் ... ... *
உற்பிடமிக்க அளித்திடுசற்குண ... ... *
பூஜிதப்பெறு ராமசந்திர ... ... *
ஸௌந்தர ரூபரஞ்சித... ... ... *
புகழ்மலர்மகள்தழு வியஅதிபுஜபல ... ... *
மிகுபரிமளமுறு துளவணிசவிகுல ... ... *
புண்யநீடும்அண்ட பகிரண்டங்களை உண்ட ... *
இன்பனேஅகண்டபுகழ்கொண்டபிரசண்ட (கோதண்ட)

தசரதன் சுதனுவுதித்து.

தரணிமன்னர்மன் னவன்அதிபுஜபல ... (தசரதன்)

தகைமைவாய்ப்பஉயர் மனுநெறிமுறைகொடு ... *
தருமயோத்திநகர் அரசுசெய்ரவிகுல ... (தசரதன்)
சர்ப்பராஜசய னத்தின்மீதுதுயில் ... ... *
உற்றவீறுபர வஸ்துவானதொரு ... ... *
தசமுகனால்இடர்படும் உயர்அமரர்கள் ... ... *
நசையுடனேதுதி தரநரஉருவொடு ... (தசரதன்)

தார்புனைசனும்வின் சூரியனும்வேதனும் ... ... *
மாமகவானும்அவன் [illegible]னுந்தேயுவுந் ... ... *
சீர்அனுமான்சுக் ரீவனர்சாம்பவன் ... ... *
வாலிஅங்கதனீலன் ஆய்வரவானவர் ... ... *
வானரங்கள்ஆய்மண்ணினில் வந்திடச்செய்துமட்டி ... *
தானவர்குலத்தை பின்னரிற் சேர்த்திடக்கங்கணங்கட்டி. (தசரத)

சங்குசக்கரமு மங்களாத்தினில்மி ... ... *
குந்தஅற்புத அனந்தநற்றவனும் ... ... *
வந்துதித்திடநி னைந்திடத்தனாயில் ... ... *
சம்பிரமத்தில்இல குஞ்சுமித்திரையின் ... ... *
தன்னிடம்லட்சுமணன் சத்துருக்கனும்கைகேசி ... *
மின்வயிற்றிற்பரத னுந்தம்பியர்ஆய்சனிக்கத் ... *
தானென்னரிக்கோசலை வயிற்றிற்சித்திரைமாதம்... ... *
ஆனவமிபுனர் பூசநக்ஷத்திரநாளில் ... (தசரத)

சந்த்ரவிம்பமுக முங்கிர்பைவளர்தரு ... ... *
கின்றகண்களுநெ டுஞ்சிலைநுதலுத ... ... *
ஒஞ்சிறந்தபவ ளந்தனிநிகரத ... ... *
ரந்தருந்தளிர் குண்டலம்அணிசெவி ... ... *
கனுநிலவெறிகமு கினைநிகர்களமொடு ... ... *
விரைகமழ்துளவணிபுயமலைகளும்அலர் ... ... *
கமலமலர்அனைய கரமலர்களும்நெடு ...
உலகம்அதனைஉணும் அழகியவயிறொடு
தாரணிமார்பும்வெண் டாமரைத்தாள்களுந்
சாமளமேனியும் ராமநன்னாமமுந்
தயங்கஅருமறை உணர்புங்கவர்மிகு (தசரத)
ஜெயம்விஜய[illegible]ங்களமொடு

தசரதன்சுதனு வுதித்து - தனுவிற்கதித்து
தாடகைப்பாவியை வதைத்து போது
விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச்செல்லும் போது
வேதச்சிரத்தில்நடம் ஆடும்சீர்பாதப் மாது
இசைவுறப்பட்டளவில் அகலிகையென்னு மீது
எழுந்தாள்கல்லுருமாறி இதுஅல்லாமல்மண்
இந்த்ரபோகசன கன்வில்லைரண்டு
துண்டமாகஒடித் தான்அதைக்கண்டு
சுந்தரிசீதையைத் தந்தனனேமகிழ்
கொண்டிடவேமண மானபின்னேவரு
கின்றவழிஅதனிற் பரசிராமன்வில்மு
றிந்திடவேசெய்து சனகியொடயோத்தி
வந்துகூனிகல கந்தனால்அரசி
ழந்துநீடுபுகழ் தம்பியோடுமலர்
மங்கைசீதைபதம் நொந்துவாடிவர
கங்கைமாநதி கடந்துவாசமலர்க்
காவிரிதருசித்ர கூடபர்வதத்தில்
மேவிபரதனுக்குப் பாதுகைஅளித்தபின்
விரிதண்டகவன வழிகொண்டதில்அந்
திரிஎன்றிடுதவ முனிவன்கிர்பைபெற்
றிட்டபின்புவி ராதன்இருகைஅறு
பட்டவிண்டிட வேசெய்துசரபங்க
முனிவன்ஆசிர மந்தனிலேஎழிற்
சனகியோடெய்தி இந்திரன்போனபின்
தண்டகாரண்ய வாசிகள்படுதுயர்
கண்டேனர்இடர் தீர்கஇணைஅறு
கருணைகொண்டேஅந்த வனம்திறபத்து
வருடம்நின்றுவரும் வழியிற்சுதிட்ட
மாமுனிவரங்கொண்டே அகஸ்தியன்றனைக்கண்டு
சேமவிற்சரங்கொண்டு துதித்தவன்றனைவிண்டு
சென்றுசடாயுஉற வாடப்பஞ்சவடியில்
நின்றுவிடாதமய லோடுகெஞ்சியபெரு
நீலிசூர்ப்பனகை காதுமூக்கரிந்து
காலனுர்க்குநிகர் ஆகப்போர்க்குவந்த
கரதூஷணத்திரி சிரசன்ஆதியரை
அரைநாழிகைதனில் மரலிநாட்டதனில்

அறுப்பமான்உருவாய்வந்தமாரீ
சனைப்பாற்பிடித்திடவேபோன
தருணங்கண்டிராவணன் தபசிபோல
விரைவில்வந்துசீதையை நிலத்தினோடு
மேனெடுத்துச்செல்லும் போதுசடாயுவின்
ஆவியிழவைத் தசோகவனத்தினில்
அரியசிறையில்இடவேசானகிதன்னைப்
பிரியும்அதிதுயர் மேலேயினடங்கணைப்
பின்பிறக்கவந்தனைச் சொர்க்கம்பெற்றிச்சவரி
சொன்னவிதங்கொடு சுக்கிரீவனைத்தனது
சொந்தமாக்கி அந்தமயிருவாலிதனை
முந்தவாட்டிவிக்கிரம அனுமானைஅளி
மொய்த்தகுழற்சீதைதனைத் தேடவிடுக்கஅவன்
உத்தமசம்பாதிதன்னால் உளவறிந்துகொண்டு
ஒப்பில்லாதவிஸ்வரூபங்கொண்டுமயேந்திரமேறிச்
செப்பமாய்க்கடலைத் தாண்டிலங்கையிற்சேர்ந்து
இடறுலங்கணியை முதற்பலியிட்டுச்சீதையைக்
கடிபெறுலங்காபுரந் தேடிக்காணாமற்பின்பு
காவல்மிகும்அசோகவனத்திற்றிரிசடையன்பு
மேவக்காத்திடவே முகம்பார்த்திருக்கக்கண்டு
விநயபோதகன்ராம தூதன்நானென்றுசொல்லி
கரதருங்கணையாழி கொடுத்திடமுடிசூடி
நாயகிசீதைதந்த சூடாமணிகைக்கொண்டு
தீயகிங்கரர்ஐம்பதாயிரம்பேர்களொடு
செழித்தஅசோகவனந்தனையும் அழித்திடக்கண்டெதிர்த்தக்
கொழுத்தமாகுதசேனை யொடுசம்புமாலிபிருந்த
கொடுமைசெய்பஞ்சசேனாதிபர்களும்அட்சகுமா
மடியநாற்பதுவெள்ளம் அரக்கரோடிந்திரசித்தன்
வந்துபோர்செய்யஅனு மந்தன்அந்தளத்தைச்
சிந்தவிந்தாக்கிஇந்திர ஜித்தன்சேனைஅழித்துச்
சிலையைமுறித்துமுடித் தலையைஉடைக்கஅவன்
வலியப்பிரமபாசத்தாற் கட்டராவணன்அப்பேர்
வாலில்நெருப்பைஇட அந்நெருப்பாலங்கையின்
மேலிருந்தழலைஇட்டுக் கொளுத்திவீழ்விட்டு
உளமகிழ்கொண்டுமீண்டு வந்துசாமியைச்சேவித்து
அணிதிகழ்சூடாமணி தரக்கண்டுமகிழ்ந்தபின்பு
அடல்மிகுந்தஎழு பதுவெள்ளவானரப்
படையுஞ்சுக்கிரீவனும் அடிபணிந்திட

... ... *
பரிவொடுதென்கடல்அருகில்நிறைந்தபின் ... *
சரணம்அடைந்தவின் ஆணைஅடிதந்தருள் ... ... *
சாமிஎன்றவிபீஷணன்றனக்குலங்கா ... ... *
பூமிதந்துவிகாதஞ்செய்தவருணன்மேற் ... ... *
பொற்கணைவிடுத்தவனைவரச்செய்துபல ... *
சித்திரக்கவிஇனங்கள் அதைக்கொடுவிரைவொடு ... *
சேதுபந்தனஞ்செய்வித்து நீள்கடல்வழிகடந்திடு ... *
மாதிரம்பயந்திடச்செய்ராவணன்இலங்கைதன்னை ... *
வந்துமுற்றிகைசெய்து கொண்டுதம்பிஅங்கதன்மீதும் ... *
முந்துவிக்கிரமஅனுமந்தன் அம்புயந்தன்னிலுமதி ... *
மூதண்டந்திகில்மேவிஅதிர்ந்திட ... ... *
கோதண்டத்தவில்நாணொலிகொண்டே ... ... *
குணகடல்வெருவிடநெடுவில்லம்அதுதனை ... ... *
ஒருசுமையெனஉம்உரகன்உடல்நெரிய ... ... *
உயர்மதிகதிர்வழிபிசகிடநெடுவரை ... *
அயர்தரஉடுஇனம்அதுதரையில்உதிர ... ... *
அணிரதகஜபரிபரிசனவகைமிக ... *
அணிஅணியொடுவர அதிவலிமைகள்சொலி ... ... *
அனல்கக்கிடும்அக்கிரசத்திரமழு ... *
கனசக்கரம்கெட்டாயில்பட்டயமொடு ... ... *
கதிர்வீசுங்கதிர்முத்தலைசூலங் ... ... *
கதைவார்அஞ்சிலைகைக்கொடுதாளங் *
காளஞ்சின்னந்தாரைகள்மத்தளபேரிகள்பலவித ... ... *
மேளம்மின்னும்காகளத்தொடுபூரிகைஒலிதர ... *
ஸ்ரீராவணன்தேரிலேறிப்போர்க்களத்தில்வந்து ... *
சேரவேஅவன்சேனைவீரர்யாரும்போரில்முந்த ... ... *
தீபவச்சிரமுஷ்டிதுன்முகன்சுபாரிசன் ... ... *
மாயப்பிரகஸ்தன்கெட்ட வன்மனங்கொள்நீசரை ... *
வானரவீரர்கள்கொல்லராவணன்இவனாவெல்ல ... *
சானகிமணாளன்வில்லிற்சோனைமாரிஎன்றுசொல்லத் *
தருஞ்சரங்களைவிட்டுஅவன்தேர்வில்லைமுறித்துத் ... *
திகழ்மணிமுடிபத்துந்தரையேல்உருளச்செய்து ... *
இடமொடுசண்டைசெய்யநாளைவாஇன்றுபோவென்று ... *
விடதரமனம்நொந்துதனியாய்ப்போயிலங்கைசேர்ந்து ... *
வெற்றிசேர்கும்பகர்ணனை நித்திரையில்இருந்தெழுப்பி ... *
அத்தடியில்சண்டைக்குவிடுத்திடஅவன்சனத்தை

அடுக்கராகவன்அம்பு தொடுக்கவேகும்பகர்னன் ... *
கொடிக்குள்காலுங்கையும்போய்ப்படிக்குள்ளேமுண்டமாய் ... *
　　நொந்துபின்சாமிதனைச்சிந்தனைபேசிஇ ... ... *
　　றந்ததைராவணனறிந்ததிகாயனை ... ... *
அனுப்பஅவன்பரிசனத்திரளினொடு ... ...*
முனைத்தலைவர்களுஞ்சமர்க்களம்அணுகி ... *
　　முச்சிரத்தன்வயமஸ்தன்கும்பன்தேவாந்தகனும் ... *
　　அச்சமற்றரணமஸ்தன்வம்பன்நராந்தகனும் ... ... *
அநுமான்முதலோர்கையால்மடிந்திடஅதிகாயன் ... *
இனமாகிஇளையோனுடமர்செய்துமுடிவாகச் ... ...*
　　செய்திதெரிந்திந்திரஜித்தன்தேரில்ஏறி ... ... *
　　வெய்யசரசங்கம்மொய்க்கப்போரில்வீறி ... *
விஞ்சுஞ்சுக்கிரீவன்பனசன்சாம்பன்அநுமன் ... ... *
வஞ்சம்அற்றநீலன்முதலினோர்கள்தமையும் ... *
　　வாட்டக்கண்டிலட்சுமணன்தன்வில்லினிற்சரம் ... ...*
　　பூட்டஇந்திரஜித்தன்ரதகஜபரிசனம் ... ... *
புரவியாவற்றும்மாண்டுதானும்மிகமெலிந்து ... ... *
இரவில்நாகபாசத்தைஏவஅதனால்நொந்து... ... *
　　இலக்குமணன்முதலோர்களத்திற்படுக்கராமன்
　　அக்கணமவ்விடமேவிதிகைத்துவருந்தும்வேளை
அடல்சேர்கருடன்வரநாகபாசந்தெறிக்க
விடயாவரும்எழுந்துபோரில்வீறிக்கறிக்க
　　மிதம்அற்றசேனைசூழஉக்கிரங்கொண்டுவந்தெதிர்த்த
　　மதம்உற்றசூரியகேதுவச்சிரதந்தன்பெரும்பக்கன்
மாலிசிங்கன்பேயன்பரிதிக்கண்ணனையும்
ஆலம்அஞ்சுந்தீயகுருதிக்கண்ணனையும்
　　ஆர்க்குங்கவித்தலைவர் மாய்க்கராமலட்சுமணர்
　　தாங்கமகராக்கண்ணன் அக்கினிகேதுமடிய
தசமுகன்அதைத்தெரிந் திந்திரஜித்தனைவிட
வசைகொள்ளாதும்அவன்களம்வந்துலட்சுமணனுடன்
　　வாதுசெய்யஇளையோன்அப்போதுசரமாரிவெய்யன்
　　மீதில்எய்யஅதனால்அப்பாதகன்திரேகட்டைய
விண்ணில்மறைந்துதன் ஊரைச்சேர்ந்தானது
பண்ணிவெல்லஎண்ணி போருக்ககம்பனோடு
　　பாவிமகோதரனைஏவஅவர்கள்களம்
　　மேவிபலத்துடனே நாவில்அமர்புரிய
வீறும்அநுமான்தன்னால் அகம்பன்நிகும்பன்சிரங்களுருண்டபின்
சிலமகோதரன்சரங்கள் அழுந்திடவருந்திஇளையவன்

　　இளைக்கும்வேளையில்இந்திரசித்தன் அங்குவந்துசோபித
　　பிருத்தபிரம்மாஸ்திரம்விடுக்கத்தம்பிமுதலோர்சாய்ந்திட
வித்தகஸ்ரீராமன்கண்டுமெத்தவும்ஆகுலங்கொண்டு
சித்தப்பிரமையாகஅன்புடைத்தம்அநுமான்சென்று
　　செழித்தசஞ்சீவிபருவதத்தைக்கொண்டுவந்தபின்
　　பிழைத்தனைவரும்போருக்கெதிர்க்கஇந்திரசித்தென்னும்
பித்தன்மாயாசீதையை வெட்டிநிகும்பலையா
கத்தின்சாலைசேரஅதைத்தெரிந்திளையவன்
　　கணைமழைபொழிந்தரக்கன் செய்யும்யாகமழித்து
　　க்ஷணமதில்அவன்சிரத்தைக்கொய்துதேவர்துதிக்கச்
சாமிபாதசேரில்வைக்கராவணனறிந்துதன்மேலமர்செயவிட
பூமிபாரமானதுஷ்டமூலபலங்கள்ஓர்ஆயிரம்வெள்ளமும்
　　போரிலேழுதல்கண்டுவானர வீரரோடவேஒன்றியாகிய
　　ஸ்ரீராகவன்சண்டமாருதம் ஆகிநீசர்கள்பஞ்சுபோல்கெட
திவ்யமோகஅஸ்திரம்விளங்கும்ராமனுகத்தோன்றிட
வெய்யர்யாரும்பார்க்குள்தாவி தங்களிற்றுங்களேமாண்டபின்
　　வேதனையேசெய்யும்ஜாதககாதக
　　பாதகனாமகோதரன்போர்செய்து
படையும்போய்ராகவன்கைக்கணைதன்னால்ஆவிவிண்டு
மடியவேராவணன்துர்ச்சகுனம்மென்மேலுங்கண்டு
　　வந்துபெருஞ்சண்டைசெய்யச் சாமிராவணன்பத்துசிரத்தையும்
　　விந்தைஅம்புகொண்டுகொய்யக்கொய்ய மீண்டும்மீண்டுமுளைக்கஅவ்
வேளையிலேஇதமாகபிரதாபகு
ணவிபீஷணன்ஓதும்உபாயத்தி
　　னால்இணையதுபிரமாஸ்திரம்அதனைவிட்டு
　　ஆலம்அனையவிழிராவணன்காயமேயில்வைத்த
அமிர்தகலசத்துடன்முடிகள்சிதறச்செய்து
இமையவர்முனிவர்கள்படுதுயரம்ஒழித்து
　　இணைஇல்எழிற்சனகி தீயினிற்குளித்தபின்பு
　　துணைவன்கவிப்படைவிபீஷணனுங்கற்பிலங்கு
தூயசீதைதன்னொடுபுஷ்பகமீதிலேறி முன்வினைமுற்றிலும்
மாயவேசெய்கின்றமகத்துவமானசேதுஅண்டையிலொப்பரு
　　மாதேவர்க்கன்றுகாட்டிஇறைஞ்சிதிரும்பிமுன்வந்தவழிகளை
　　சீதேவிக்கன்பொடுகாட்டிமகிழ்ந்துநடந்துபன்னருந்தவனிலே
திகழும்பரத்துவாசன்மடத்தினிற்சேர்ந்தபின்இடத்துடன் அநுமானைப்
புகழும்பரதராஜன்இடத்தினிற்சேவிடநொடிக்குள்ளேஅவன்போன

போதுசாபிவரனைக்காணேனென்றபரதன்
இறந்தீயினில்விழப்போகக்கண்டுஅனுமான்
மோதிரக்கரும்பதனுதோருபதிவசமுனிமடம்வந்துசேர்ந்தானென்று
ஆதரவுந்தசுபமுங்கூறிபரதனிடம்விடைகொண்டு ஆஞ்சநேயன்
அக்கணந்திரும்பிலோகநாயகனுடனுறும்வேளைக்க
ணக்கணம்முந்திவந்தோதப்பண்ணைகொண்டவனைக்கூட
வைத்துவரதன்பொசித்துப் புஷ்பகமதிற்கதித்து
சத்யபாதன்றுதிக்கஉத்தமருசன்மதிக்க
தனையைபேவியஅயோத்திநகரில்வந்து
திகழும்மூவுலகம்போற்றநவமிதெரிந்த
சித்திரமிகுந்தசிங்காசனமீதினில்
அற்புதம்உற்றசெந்தேன்மொழியாள்சமா
தன்னோசிதையோ டமர்ந்துபேரிகைகள்
மன்னுகாளமிரு தங்காககுர
வாத்தியம்ஒலிக்கவருசுரர்மருமலர்சொடு
காற்றிசைஇறைக்கவெகு முனிவர்கள்மணிமுடி
நரபதிகளும்வா னரபதிகளும்பூ
சுரர்துதிசொலவே கவரிகள்அருகே
ஆயலட்சுமணனுடன் சத்துருக்கனும்வீசிட
நேயமுற்றபரதன்உட் களித்திதம்பேசியே
நிலவெறிதருசந்திரவட்டக்குடைகவிக்க
பலமிகுஅனுமந்தனற் றுணை அடிபிடிக்க
பகர்வசிஷ்டனும்மகுடாபிஷேகங்கொண்டு
ஜெகதலத்தனோர் துதிபேசச்சேர்வைதந்து
தீனதயாநிதியேஅடியார்உள
மேவியபாவிதம்வாழ்வரதாடையர்
வேதாஅரிஅனை மேவுசிநேகா
தாதாசுரர்முதலோர்துதிபோதா
சதாசனேசா சரங்களைத்தருமேலா
அதிசெய்ராஜசே கரன்தமிழ்க்கனுகூலா
சுமுகசுருணைசுந்தராங்கசுகிர்தசய
விமலசிபவவிக்கை யோகமெபிருபா. —(கோதண்ட
கோதண்டதீரகுருவே—பக்தர்தய
சோகனகமலர் மருவே

இராமாயணநாடகக்கீர்த்தனை.

முற்றிற்று.

—*—

உதவிச்சிறப்பு.

இஃது - செற்றேரி

அருணகிரிமுதலியார்பேரில்

தரு-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி

அருணகிரி வள்ளலைப்போலே - இசை - ஆர்பெற்றார் இந்தப்புவிமேலே.

அநுபல்லவி.

தெருண்மிகுந்திடு தீரன் - செற்றேரிஎன்னும்ஊரான்
அருஞ்செங்குவளைத் தாரன் - அற்புதம் சேர்வசீரன்
ஆழிசூழ்உலகம் - எழும்மதித்திட உற்ற
வாழ்வினால்உயர்வு-சூழ்வுற நிலைக்கப்பெற்ற—அருணகிரி

சரணங்கள்.

சண்பைஅருணாசலப் பண்புறுகவிஞன்சொல்
இன்பெயராமநாட கம்பெருகப்புவிமேல்
தன்இதயத்தன் மதித்துப் - புலவர்களால்
சொன்னயம்தூகச் சோதித்து - இசைதாளங்கள்
முன்னிலும்பாங்கா அமைத்து - நற்சரஸ்வதி
என்னும்அச்சினிற் பதித்து - விளங்கச்செய்தி
இக்கினும்-நற்சுவை-யைத்தரும்-அற்புத-சொற்புகல் - விற்பனம்-உற்றிடு [கொற்றவன்
சசன்னீறுமலர் வீசியசுகந்தமாரன்
மாசிலாதநிதி பூஜைதமிகும்குபோன்—(அருண)

நேசமையுஞ்செங்கோல்வி லாசமாகடத்தும்
ராசர்களும்புகழ்ந்து பேசவாழும்புருஷ
சிங்கமா னுட்கெம்பீரன் -குலோத்துங்குபோதில்
தங்கிய விவகாரன் - பலபாஷாப்பிர
சங்கக வையாரன் - பலம்கொள்சதா
ரங்கத னவில்வீரன் - நினைவிசேஷ்ட
அத்தா-தப்பரி-சுத்தன்ன-வர்க்கும்-அ-னைக்குமி-கர்த்தம-னத்த-ர்அ-னைத் [தல
காதிபன்கனக சோதிமுடிபுனைதாயன்
வேதமுந்துதிசெய் மாதவனைநினைநேயன்—(அருண)

தலத்தினில்உயர்ந்துகன் னலத்தைஉற்றிடும்கங்கா
குலத்தில்அவதரித்து சலட்சணம்உற்றபிரு

சத்வகு ணவிலாசன் - முத்துபூபந்த
வத்தில்உ இத்தபாலன் - மாதர்மகிழ்வி
சித்திரஇங் கிதலோலன் - செல்வம்நிறைந்த
நித்தியமங் களசீலன் - மனதில்என்றும்
நிர்ப்பயம்-உற்றிடு-சற்சனர்-மிக்கவி-யப்பின்ட-ரைத்தமை-திக்கும்அ-ருட்க [டல்
நீடுமேருஎன நாடுபுயசுந்தரன்
ரடிலாதபுகழ் கூடியசுந்தரன்—(அருணகி)

◆

உதவிச்சிறப்பு.

இஃது - மன்னுடி

வெங்கட்டசுப்புராயபிள்ளைபேரில்

கியால்மெட்டு

தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இப்போதேஅழைத்துவா - போடிசேடிநீபோய்.

ஒப்பில்வீராசாமிசெய்த வப்பயன்எல்லாம்உருக்கொ
டிப்புவியில்வந்ததெனும் சுப்புராயமகிபனை-இப்

ஆவலுடன்பாடிவரும் பாவலர்க்கருள்கரனை
மாவலகமுடையோனை கோவைசியசிகாமணியை-இப்

நீடியபுகழ்சேர்ஆயர் பாடிவளர்கண்ணன்அடி
நாடிமலர்சூடி-இசை பாடியகுணாகரனை-இப்போ

ஓங்குபுகழ்கெவுனர்மெண்டு பாங்கியில்டிப்டிமானேஜர்
வேங்கடாசலசெட்டியார் பாங்கனைஇன்றிங்கென்முன்னே-இப்போ

முத்தமிழினல்உயர்வு பெற்றபுலவோர்கள்இடர்
உற்றசமையத்தினிம்அ டுத்துசெய்சகாயனை-இப்போ

ஆசம்ஊறிகடல்சூழும் பார்உள்ளோர்புகழும்எழு
மூரினில்வாழ்ந்திடும்முல்லைத் தாரனைஉதாரனை-இப்போ
சென்னபுரிமன்னிவளர் நன்னயகவுண்டாண்டு
சென்னல்ஆபீஸ்தன்னில்மிகு உன்னதஉத்தியோகனை-இப்போ

மாபாவிகளைக்கொன்றேஇப் பூபாலனம்செய்யதேவ
கோபாலன்வளர்த்தாந்த கோபாலகுலமணியை-இப்போ

உதவிச்சிறப்பு.

இஃது.

அக்கம்மாள் பேட்டை

வேங்கடாசலசெட்டியார்பேரில்

தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

செய்தாய்புலவோர்களுக்கேசகாயம்- செய்துதவிபெறுதன்ஞாயம்

அநுபல்லவி.

செய்யேஅனம்-சேர்அக்கம்மாள்பேட்டைவாழ்
செயமுத்துவேங்கடா சலசெட்டியார்குமாரா
மெய்யேஉருக்-கொண்டுவந்ததென்னவந்த
வேங்கடாசலதீரா ஓங்குபுகழ்கெம்பீரா
வீராஅரிவையர் மனம்மகிழ்மாரா
கராகரம்உள் கர்ணனுவதாரா—செய்

சரணங்கள்.

சேதமிலதனன்-எதயில்சியகங்கன் மதித்து- பவனத்தி
செய்தசகாயம்தன்னை
திறந்தன்னூலில்அவன்-இறந்தும்இறவாமலே பதித்து-பின்னும்
செய்தானேபாயிரத்துள்ப்
தீதில்அருணகிரி-நாதருக்குபகாரம் துதித்து - பிரவுட
செய்துமனமகிழத்
தேவமகாராயனும்-மேவித்திருப்புகழில் கதித்து - நாளும்
திகழ்ந்திருக்கப்பெற்றான்பார்
கோகில்மொழிகள்ராக வனைப்போல்மொழியும்-சிலா
குணசிகாமணிஎன எவரும்புகழும்-மேலா
குணமில்பரமலோ பியர்பிரதிகூலா
குணம்உடையபுலவர் குலபரிபாலா—செய்

சங்கைஇல்லாமல்அந்த-கொண்டராயர்முன்செய்ச
காயத்தினால்அல்லவோ நல்லூர் - வில்லிபுத்தூரா

சந்திரசூரியர்உள்ள-அளவும்தம்புகழ்சிறக்க
சயபாரதத்தில்பாடப் பெற்றார்-கார்போற்செறிய
அங்கைஉடையதிரு-வெண்ணெய்நல்லூர்ச்சடை
யப்பமுதலியாரும் கற்றார் - கம்பருக்குமுன்
அகம்மகிழ்ந்திடவேச-காயஞ்செய்தேராமா
யணத்தில்என்றைக்கும்நிலை யுற்றார் - ஆதலினாலே
மங்களம்ஆய்ச்செந்தோன்றி மாலைமருவும்மார்பா
வைசியகுலம்இலங்க வந்துதித்திடும்தீபா
மதுரம்ஒழுகமிருது மொழிபகர்பூபா
வரும்இரவலர்மகி ழஅருள்பிரதாபா —செய்

அழிவில்வேதங்கள்ஓதிக்-கிழிஅறுத்திட்டபெரி
யாழ்வாருக்கோர்சகாயம் புரிந்து-பல்லாண்டில்
அகன்றஉலகீரேழ்உள்ளளவும்செல்வநம்பியும்
அமர்ந்திருக்கின்றான்புகழ் விரிந்து- எங்கும்நிறைந்த
வழுவில்மாயவன்பால்வாள்-வலியால்மந்திரம்கொண்ட
மங்கையர்கோனுக்குமுன் பரிந்து - சகாயம்
மகிழச்செய்தேபல்லவ-ராயன்திருமொழியில்
வாழ்ந்திருக்கின்றான்நீபார்! தெரிந்த-இன்னமும்சொல்வேன்
ஒழிவில்லாமல்புல வோருக்களித்துச்சொர்ணம்
ஓங்குகளிபெற்றாரே உலகில்ப்பிரபுக்கள்முன்னம்
உடல்பொருள்களனைவையும் நிலையிலைபின்னம்
உயிர்இதுவேவேறு நிலையிலைஇன்னம்—செய்

நவமன்மதனைப்போல்உருவம்-இருந்தென்சௌபாக்கிய
நலம்இருந்தென்என்றுள்ளம் வைத்தாய் - பாடும்
நாவலமைஉடைய-பாவலர்க்களித்துப்பா
நாம்கொள்வோம்என்றுணர்ந்தும் உற்றாய் - இந்தப்
புவியில்இப்படிசெய்தே-கவிகள்பெற்றார்என்றதன்
புத்தியினாலும்ஆலோ சித்தாய் - நீயும்
புகழ்பெறஎங்கள்மனம்-மகிழ்வுறச்செய்தெங்களால்
புத்தமுதம்போல்க்கவி பெற்றாய் - இனிஓர்
சவிஇல்லாமானிடர்இப் புவிமேல்இருந்துமின்ன
தன[illegible]வஸ்துவா கனம்அனுபோகித்தென்ன
தரையினில்உதவிசெய் பவர்களில்உன்ன
தனேஇனிஎவர்களெ னிலைப்புகழ்துன்ன—செய்

இக்கீர்த்தனைபாடிய

அருணாசலக் கவிராயரது சரித்திரம்.

தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் அருளிச்செய்த ஸ்ரீராமாயணத்தைக் கற்றும், பிறர்க்கு உரைத்தும், தமக்கேஓதியும், சபைகளுக்குப்பிரசங்கித்தும், சீதாலட்சுமண பரதசத்துருக்கன் அனுமச்சமேதர் ஆகிய ஸ்ரீராமச்சந்திர சுவாமியின் இடத்தில் பண்ணியபக்தி உபாசனாலத்தினால், அதைக்கீர்த்தனரூபம் ஆகிய ஓர் நாடகமாப் பாடியதினாலேயே மகானுபாவரும் பிரபலரும்ஆகி, நாடகக்கவிகளில்சிறந்த இக்கவிராயர், பூர்வம் சைனத்திற்பிரிந்து, சைவத்திற்புக்க சீர்காழிவேளாளப்பூவைசியரும், தில்லையாடியில் ஒருகுடியும், ஆகிய நல்லதம்பியார் பிள்ளையும், அவரது கற்புடைமனையாள் வள்ளிஅம்மாளும் புரிந்தசஞ்சிதபுண்ணியத்தால் இவருக்கு தந்தையும் தாயும் ஆகும்படி, சாலிவாகனசகம் ௲௬௱௩௰௪ - ஆவதில், விஜயவருஷத்தில் அவர்களுக்கு ஒருசற்புத்திரர்ஆகவந்து உதித்தார்.

அவர்கள் தம்மரபின் வழக்கத்திற்கு இசைய இவரது ஐந்தாம் வயதின்,ஐந்தாம்மாதத்தின்,ஐந்தாம்தினத்தில்,ஒரு தமிழ்ப்பள்ளியில்இவரை அமர்த்தினார்கள். இவர் தமது பன்னிரண்டுக்கு உள்சாமானியக்கல்விகளை அதில்கற்றார், அவ்வளவில் இவரை ஈன்றோரில் தாயார் முன்னும் தந்தையார்பின்னும், சிவலோகப்பிராப்தி ஆனார்கள்.

இவரது தமையன்கள் மூவரும் வாலிபர் ஆகையால் இவர்வாசிப்பின் விசாரணைமட்டிட்டாலும், ஆகூழ் இவருக்குத் துணைக்காரணம் ஆனதால், இவர் அவ்விடத்திற்கு அருகே இராநின்ற தருமபுரத்துச்சைவவாதீனத்தை அடுத்து அதில்சில தம்பிரான்களில் வடுகும் கிரந்தமும் தமது பதினெட்டுக்குஉள்ளே மிதமாகக்கற்றார்.

பின்னும் இவர் தமது பத்தொன்பதுமுதல் விசேஷக்கல்விகளைக்கற்கக்கருதி அவ்ஆதீனத்தில் சிலவரில் சைவாசாரத்திற்கு உரியநூல்கள் பலவும் கிரந்தத்திலும் தமிழிலும்கற்றார். தமது இருபத்தைந்துவரைக்கும் அதின்பின்மற்ற பலதமிழ்நூல்கவிற் பயின்றார். அம்மடத்தில் இவர்க்குப் பலபாஷைகட்கும் ஆசான்கள் பலர்ஆகிலும் தமிழிலே முக்கியஆசான் அம்பலவாணக்கவிராயர் என்றவர்.

அக்காலத்தில் இவரது கல்வி அளவையும் புத்தியின் கூர்மையையும் விசாரணையும் ஞானத்தையும் உன்னிய அப்பண்டாரச்சந்நிதி நீர்தாமவுண்டு இவ் இவ் ஆதீனத்துத்தலைமையும் பூணுவீரா என்று இவரை வினாவிற்று. அதற்கு இவர் விடைதந்தார், சுவாமி ஸ்ரீராமாயணம் சொல்லுகின்றது, தசரதச்சக்கிரவர்த்திமுதல் இல்லறம்பூண்டு பிற்பாடு துறவறவு

புரைஇச்சித்தார் அவரது இருக்குமாரர்முதல் இல்லறம்பூண்டு பின்பு மனந்தால் முற்றத்துறவுபூண்டிருந்தார். மற்றை மகாரிஷிகளும் எப்பொழுதும் முன்னதோடுகூடிய பின்னதையே பூண்டிருந்தார்கள் என்று இருக்குறளிலும் இவற்றையேநோக்கி அறப்பாலின்முதற்கண் இல்லறமும் பின்பு துறவறமும் நிருத்தப்பட்டன. ஆதலால் அடியேனும் இவ்விதியையே கைக்கொள்ள நோக்குகின்றேன் என்று அதற்கு அங்குற்றி அவ்வாறேசெய்யும் என்று ஆசீர்வதித்தது.

ஆயினும் இவர் அப்போதே தமது விவாக காரியத்தில் பிரவேசிக்க இல்லை இவரதுகருத்து விவாகம் வித்தியாநாசம் என்கின்ற பழமொழியைமறவாமலும், தமிழ்க்கல்வியைச் சாதித்தலுக்கேஒப்பிக்கப்பட்டுமிருந்ததால் இவர் பின்னதையே விடாதுபூண்டனர்.

இவருக்கு வயது முப்பதில் அபிஷேகக்கட்டளைக் கருப்பூரில் தமது இனத்தாரில் இவர் ஒரு குமரிக்கன்னிகையை மணந்து அப்புண்ணியவதியோடு தில்லையாடியிலேயே வாழ்க்கையில் தமது இல்லறத்தைநடத்துதற்குத் துணைக்காரணம்ஆகிய பொருள்களைஈட்டுதற்காக ஓர் காசுக்கடைத்தொழில்செய்தார்.

அதினால் இவருக்கு மிகவும் சாவகாசம் நேரிட்டதால் அதுவரையில் தாம் கற்ற தமிழ்நூல்களில் ஸ்ரீவைஷ்ணவத்திலும் சைவத்திலும் முன் அவதரித்த தெய்வப்புலவர்கள்ஆகிய பன்னிருவராலும் நால்வராலும் தோன்றிய திவ்வியப்பிரபந்தங்களும், திருமுறைகளும், வேதாகமப்பொருள்களால் ஆகிய தமிழ்கள் என்றும் இவ் இருமதங்களுக்கும் தமிழில் முதனூல்கள் என்றும் தமக்கு முன்னோர்கள் தாமேஅமைத்தலால் அதுகளைஒழித்து மற்றதுகளில் உலகத்திற்கு உபகாரியும் உபயோகியும் ஆகி அருமையும் பெருமையும் உள்ள முக்கிய மாசாரம் ஆனவைகள் எவைகள் என்று அதிநுட்பம் ஆகிய தமது மதிநுட்பத்தால் உரைமாற்று இடைக்காணப்புகுந்தார்.

அச்சோதனையில் இவர் கம்பநாட்டாழ்வாருடைய ஸ்ரீராமாயணமும் திருவள்ளுவநாயனாருடைய திருக்குறளும், மற்ற எல்லாத் தமிழ்நூல்களிலும் மிகிய கூரியதிருந்த சொற்களாலும் செவ்வியமதுரம்சேர்ந்த நற்பொருள்களாலும் சிறந்த அரிய பெரிய அதிகாரம் உள்ளநூல்கள் ஆக நடுவுநிலைமையில் நின்று கண்டுகொண்டார் மேலும் தெய்வப்புலமைகளை உடையமேற்படிஇருவராலும் தோன்றியஇவ் இருநூல்கள் உள்ளும் முன்னது வேதமாதா ஆகிய காயத்திரி அர்த்தம் உள்ள இதியாசம் என்றும் பின்னது மனுமுதலிய தருமநூல் அர்த்தம் உள்ள நீதிநூல் என்றும் இவற்றின் உண்மையைக் கண்டுகொண்டார்.

அதுமுதல் விசேஷமா இவ்இருநூல்களிலும் பயிலுகையில், மதுரைச் சங்கப்புலவர்கள் துதித்த திருவள்ளுவமாலையில்.

வெண்பா.

எப்பொருளும்யாரும் இயல்பின்அறிவுறச்
செப்பியவள்ளுவர்தாம் செப்பவரும்-முப்பாற்குப்
பாரதம்சீராமகதைமனுப் பண்டைமறை
நேர்வனமற்றில்லை நிகர்

என்று இராமாயணம் குறளுக்கு உவமிக்கப்பட்டதை நோக்கினார் அதினால் இவர் கண்டுகொண்டார், முன்னதில் சொல்லப்பட்ட இராமசரித்திரங்களே, பின்னதில் நீதிகள்போலச் சொல்லப்பட்டன என்றும், ஆதலால் நீதிகள் குறளிலும், அவற்றிற்கு இலக்கியங்கள்ஆகிய நடைகளோடு, பகவத்குணனுபவமும் தோத்திரங்களும் இராமாயணம் முழுதிலும் இருக்கின்றனஎன்றும் இத்திடக்கியானத்தால் இக்குறளிற்பார்க்கிலும் இவ்இராமாயணத்தில் அதிகமாய்ப்பயின்றும், பாராயணித்தும், அனேகரை ஓதுவித்தும், சபைகளிற் பிரசங்கித்தும்வந்தார்.

இவ்வாறு நிகழ்கையில், இவர் தமது தொழில்முறைமைபற்றி பொன்வெள்ளி கொள்ளும் பொருட்டு, அக்காலத்தில் அவை நயமாகவிற்ற புதுவைக்குப் பயணம்கொண்டார், அதற்குச் சீர்காழியால் போகவேண்டுதலின் அவ்விடத்தில் வந்து தருமபுரத்து ஆதீனத்தைச் சார்ந்த ஒரு மடத்தில்தங்கினார்.

அதற்கு அக்காலத்தில் கட்டளைத்தம்பிரான் சிதம்பரம்பிள்ளை என்றஓர்கார்காத்தவேளாளர் தருமபுர ஆதீனத்தில் இவருக்குச் சகலபாடிஆன ஒருபாவலர் இவர் அப்பண்டாரச்சந்நிதியானத்தால் இல்லறம் பூண்டகாலத்திலே அவரும் அங்குற்ற எவலால் துறவுபூண்டு இதற்குக்கட்டளைத் தம்பிரான்ஆகி அங்குவந்திருந்தார்.

ஆதலால் இவ்இருவரும் சந்தித்து தங்களில்இருந்த நெடுங்காலப்பிரிவின்பரிவு அகலத்தழுவி சிலநேரம் குசலப்பிரசினம் பண்ணின பின்பு அவர் அம்மடத்து அலுவலின் பேரில் அங்குவந்ததின் நோக்கம் அதின் முன்னையகட்டளை வருவாய்க்கு ஆயினும் தாம் அதிகம்கண்டதற்காகத் தாமேபாடின ஒருகட்டளைமாலையை இவருக்குக்காண்பித்து அதற்கு இவரதுஒப்பம்கொண்டார், சீர்காழிக்கு ஒருபள்ளுபாடப் பிடிகைபோட்டேன், பலசோலிகளால் அதை நிறைவேற்ற எனக்குச்சாவகாசம் கிடைக்கஇல்லை நீரோ அதைமுடியும், எப்பொழுதும் இவிடம் விட்டு அகலாதேயும், என்று இவரைப் பிரார்த்தித்தார், அப்பள்ளின் பிடிகையைப்பார்க்கஎன்று அதை இவர்கையில் ஒப்பித்தார், இவர் அற்றை இராத்திரி மற்றைப்பொழுதிலே, அதைமுடித்துப் போட்டார் ஆம். அன்றுவிடியலில் அதையும் தாம் அவசியமாய் புதுவை பட்டும்

போகவேண்டிய பயணச் செய்தியையும் அவருக்கு ஒப்பிக்கும்படி சிஷர்களை அவர் அடியான் ஒருவன் வசம்பண்ணி அவருக்குப்பயணம்சொல்லிக்கொள்ளாமல் தமதுகுறிப்பிடம்போய்ச் சிலநாள்கள் அங்கையே தங்கிஇருந்தார்.

அந்தம்பிரான் அன்று விடிந்தபின்பு, அப்பர்ளின் முடிவைக்கண்டும் இவரது பயணச் செதியைக் கேட்டும், ஆச்சரியப்பட்டு இவரை எவ்விதத்தும் இங்குதானே இருத்தவேணும் என்றுறுதிகொண்டு இவருக்கு என்று பெரியவீடுமொன்று சித்தம்செய்து இவரது குடும்பத்தை இவர்பெயராலே சீர்காழிக்கு அழைப்பித்து, புதுவைக்குச் சென்ற உங்கள்சமாரனும் இவிடம் வருவாரென்று அவர்களுக்குத் திடம் சொல்லி தாம்கட்டுவித்த அவ்வீட்டில் அவர்களைக் கிரகப்பிரவேசம் பண்ணுவித்திருந்தார்.

இக்கவிசாயசோதம் ஊருக்காத் திரும்புகாலில், வழிவாட்டால் சீர்காழிவந்து அம்மடத்தில் முன்போல் இறங்கினார், அங்கு இவரைக் கண்ட சிதம்பர தம்பிரான், இவரோடு சம்பாஷிக்கையில், முன்பு தம்மோடு எச்சரியாமல், இவர் புதுவைக்கு வழிக் கொண்டதைப் பற்றி இவரோடு சற்று நேரம் சலித்த பின்பு, தாம் இவருக்கென்றொரு வீடு காட்டினதும், அதில் இவர் குடும்பம் குடிபெயர்ந்ததும், இவரோடு முன்னறி எச்சரியாமல் இருவரும் உலாவப் போகிற வர்கள் போல இவரை இட்டுக்கொண்டு அந்தப் புதுமனையில் நுழைந்தார். இவர் தமது சமுசாரத்தை அங்குகண்டு ஆச்சரியப் பட்டு அவர்களாலேயே அவர்கள் வரலாறு தெரிந்துகொண்டு அவர்களோடு அம்மனையில் குடிவாழ்க்கை செய்து கொண்டுசீர்காழியில்தானே என்றென்றைக்கும் வீற்றிருக்கும்படி அத்தம்பிரானால் வேண்டப்பட்டு அதுவே இருப்பிடம்கொண்டார். ஆதலால் இவர் அன்று தொட்டு சீர்காழி அருணாசலக்கவிராயர் என்று சொல்லப்பட்டார்.

அங்கு இவர் வசிக்கையில் அத்தம்பிரானுக்காகப் பலதனிக் கவிகளும், சிலசில்லறைப்பிரபந்தங்களும், புனைந்து கொடுத்ததும் அன்றி அசோமுகிநாடகமும், சீர்காழிஸ்தலபுராணமும், சீர்காழிக்கோவையும் பாடி அநுமார் பிள்ளைத்தமிழ் தமக்காகவேபாடினார்.

அக்காலத்தில்சீர்காழிக்கு அடுத்தசட்டநாதபுரம் என்கிற அக்கிராரத்தில் இருந்து வெங்கட்டராமய்யர் கோதண்டராமய்யர் என்ற இருவர் பிராமணர்கள் சங்கீதவித்துவான்கள் இவரிடத்தில் சில சில்லறைப் பிரபந்தங்களில் பாடம் கேட்டபின் தெய்வப்புலமையை உடைய கம்பநாட்டாழ்வாராலே செய்யப்பட்டிருக்கின்ற ஸ்ரீ ராமாயணத்திலும் பாடம்கேட்டுக்கொண்டு வந்தார்கள். அவர்கள் இவரைப்பிரார்த்தித்தார்கள், இதுவரையிலும் தாங்கள்செய்த பல பிரபந்தங்களாலும் புராணத்தாலும் நாடகத்தாலும் தங்கள்நாமதேயம் எங்கும் குப்பென்றுபரவாமல் இருக்கின்றதால் அதை எங்கும்பரவச் செய்யத்தக்க முக்கியப் பிரதானம் ஆகிய, ஒருபிரபந்தத்தைத் தீர்க்க ஆலோசித்து தாங்கள் செய்யத் தக்கது என்று

அப்பால் இவர் யோசித்தது இது மெய்யே, இனி நமக்கும் உலகுக்கும் புத்திக்கும் முத்திக்கும் சாதனம் ஆகிற ஒருகதையைப் பற்றிப் பதடுவோம், அது ராமகதையே என்னனில் ராமமந்திரம் பரப்பிரம்மத்தைக்குறிக்கிறது, தாரகப்பிரம்ம மந்திரம் என்கிறது, காயத்திரிக்கு ஒருசுருக்கம்ஆகியது, ஸ்ரீமந்நாராயணன் பிரம்மாவுக்கும் பிரம்மா பரமசிவனுக்கும் பரமசிவன் பார்வதிக்கும் உபதேசித்தது இறக்க முத்தி என்கிற காசியில் யாவருக்கும் அந்தியத்தில் உபதேசிக்கிறது அந்நாமமே பரப்பிரம்மம் தசரதனிலே அவதரிக்கும் என்று அதைக் குறிக்கிற காயத்திரி(௨௪) அக்ஷரங்களை உடைய எழுகாண்டங்கள் ஆகிய எசுர் வேதமே, எழுகாண்டங்களும்(௨௪௲)கிரந்தம் ஆகி, ராமனைக் குறிக்கிற புண்ணிய கதாருபம்ஆய், மகரிஷியும் ஆதிகவியும் ஆகிய வால்மீகி பகவானிலே அவதரித்தது. இது காயத்திரி ஆதலால் அன்றே பிரமகத்தி முதலான சகலமகாபாதகங் களையும் போக்குகிறது அன்றியும் தெரிந்தோ, தெரியாதோ, திருந்தியோ. குளறியோ, பக்திஆயோ, அபக்திஆயோ, நினைவோடோ நினைவு தப்பியோ, அன்வயத் தோடோ அன்வயம் இன்றியோ, பொருள்உணர்வோடோ அது இன்றியோ, ராமா என்ற இரண்டு அக்ஷரங்கள்மாத்திரம் வரத்தக்க மராமரா இந்தமரப்பில் இராமல்ப்போச்சதே ராமா இடியாதே, மோராமா, காராமணிஆமா, சீராமா என்ற இப்பேர்ப்பட்ட வசனங்களிலும் வாக்கியங்களிலும் ஒவ்வொன்றையே ஒவ்வொருவர் தங்கள் அந்தியத்தில் உச்சரித்து முக்தி பெற்றவர் அனேகர் இதை உச்சரிக்கையில்-ரா-பாவங்களைத் திரட்டி வெளிப்படுத்துகிறதும் அதுகள் மறுபடியும் உள்ளே நுழையாமல் வாயை மூடுகிறது இதினால் அன்றே முன்னைய பெரியோர்களில்.

நம்மாழ்வார்.

கற்பார் இராம பிரானை அல்லால் மற்றும் கற்பரோ
புற்பா முதலாப் புல் எறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்குற்றன நான்முகனார் பெற்ற நாட்டுளே

என்றார் படிக்கில் ராகவன் சரித்திரம், கொடிக்குள் போகுமே தரித்திரம்என்று பழமொழியும் இருக்கிறது மேலும் சங்கர ராமானுசமத்துவா சாரியர்கள் ஆகிய திரிமதஸ்தாபனர்களும் இந்த ராமகதையையே நியமமா வீட்டிலும் வெளியிலும் பாராயணித்தும் கேட்டும் கேட்பித்தும் இகபரசௌக்கியங்களை அடையஎன்று தங்கள் சிஷர்களுக்கு நியமித்தார்கள் அவர்களும் அப்படியே செய்கிறார்கள் என்று இந்தப்பிரகாரம் இராமாயணத்தின் பலமகத்துவங்களையும் தமதுகல்வி மிகுந்த கரு

த்தில் இவர் பிரயாணித்து இதையே தாமும் பாடத்தொடங்கித் தமது காலத்தை சற்போதாப் போக்கத் தீர்மானித்தார் ஆகிலும் இவர் இதை யன்னரூபமாய்ப் பாடத்தக்கது என்று மேலும் சிந்தித்து இதனைத் தெய்வப்புலமை ஸ்ரீமத் கம்பநாட்டாழ்வார் திருவிருத்தங்களால் நிறைத்தார் பாலபாரதியார் திருச்சந்த விருத்தங்களால் நிறைத்தார் பின்னும் பலரும் பலவால் நிறைந்தார்கள். ஆதலால் நாம் பெண்களும் பேதையரும் உணரத்தக்க வெளிப்படையும் வழக்கமும் ஆகிய செந்தமிழ்ச்சொற்களாலே ஓர் நாடகம் ஆகிய கீர்த்தனரூபம் ஆக, நிறைக்கக்கடவோம் என்று நிச்சயித்தார். சங்கீத நடைதெரிந்த மேற்படி இருவர் ஆகிய தாது பிராமணசிஷ்யர்களையே இராகதாளங்களுக்கு உதவியாகக்கொண்டு இக்கவிராயர் அதைத்தொடங்கி நிறைவேற்றினார் அதின் விவரம் ஆவது இவருக்கு இந்த நினைவு அங்கதராயபாரத்தில் தோன்றியதால் முதல்முதல் அடடாவெளியே புறப்படா என்ற கீர்த்தனையை அதின் விருத்தத்தோடு முடித்து அச்சிஷ்யர்களுக்குக் கொடுத்தார். அதற்கு இராகமும் தாளமும் அமைத்துக் கொண்ட அவர்களாலும் அதை அவர்களிடத்தில் கற்றுக் கொண்ட மற்றவர்களாலும் சிலநாள்களுக்கு உள்ளே அது அங்கு எல்லாம் பரவினது தக்கன்றி இராமாயணத்தில் செம்மைச் சிலவிஷயங்கள் எடுத்துச் சிலகாலத்தில் சுருக்கமாய் நாநூறுகீர்த்தனைகள் அதின் விருத்தத்தோடு முடித்தார் அதுகளுக்கு எல்லாம் இராகதாளங்கள் அமைத்த அந்தப்பிராமணர்கள் கில்லென்று சென்னப்பட்டணத்துக்குவந்து அதுகளை அங்கங்கேபாடிப் பரிசுபெற்று, மறுபடியும் தங்களூருக்குத் திரும்பிப்போய் அதினால் தங்கள்கலியாணங்களையும் நிறைவேற்றிக்கொண்டு திரும்பி இக்கவிராயர் இடத்துக்குப்போய் நடந்தசெய்திகளை அவருக்கு அறிவித்தார்கள்.

அதினால் இக்கவிராயர் பின்னும் ஐம்பதுகீர்த்தனைகளும் விருத்தங்களும் பாடி முன்னதுகளோடு ஆதி அந்தம் ஒழுங்குபெறக்கோத்து ஒருபிரகாரமா முடித்துக்கொண்டு சீரங்கத்துக்குப்போனார் அதை அரங்கேற்ற பூர்வத்தில் கம்பநாட்டாழ்வார் தமது ஸ்ரீராமாயணத்தை அரங்கேற்றியஸ்தலம் அதுவே ஆகையால் அப்பொழுது அக்கோவில்முதலியார்கள் சொன்னார்கள். பூர்வத்தில் கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தை பூர்வாசாரியர் ஆகிய ஸ்ரீ மந்நாதமுனிகள் திருமுன்னர் பிராட்டியார் சந்நிதானத்தில் பெருமாளும் எழுந்தருளியிருக்க அரங்கேற்றினார் அக்காலத்தில் பலதருணங்களில் பலஅற்புதங்களை அவர் உலகத்துக்குக்காண்பித்தார் அதைத்தானே நீர் கீர்த்தனைகள் ஆகப் பாடினபடியால் அனந்தக்குவிந்துப் பெருமாள் எங்களுக்கு நியமித்தால் இந்த நூல் அரங்கேறச் சம்மதிப்போம் என்று அதின்பேரில் இக்கவிராயர் தனியே ஓர்இடத்தில் இருந்து ஒருகீர்த்தனையால் ஸ்ரீரங்கநாயகனைத் தோத்திரம்பண்ணினார் அது இது.

கரு மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்பள்ளிகொண்டீர் - ஐயா - ஸ்ரீரங்கநாதரே நீர்
என்பள்ளிகொண்டீர் - ஐயா

அநுபல்லவி.

ஆம்பல்பூத்தசைய நீலவதமடுவிலே - அவதரித்த
இரண்டாற்று நடுவிலே—என்

சரணங்கள்.

க. கௌசிகன்சொல்குறித்ததற்கோ-அரக்கி-குலையில்அம்புதெறித்ததற்கோ
ஈசன்வில்லை முறித்ததற்கோ பரசுராமன்உரம்பறித்ததற்கோ
மாசிலாதமிதிலேசன்பெண்ணுடன் வழிநடந்தஇளைப்போ
ஆசிலாதகுகன்-ஓடத்திலேகங்கைத் துறைகடந்தஇளைப்போ
நேசமாம்சித்திர-கூடச்சிகரக்கல் - மிசைகிடந்தஇளைப்போ
கனிமேல்மா-ரீசன்ஓடிய கதிதொடர்ந்தஇளைப்போ - துங்க
கனைத் தோ - தேவியைத்தேடி - இளைத்தோ-மரங்கள்ஏழும்
துளைத் தோ - கடலைக் கட்டி - வளைத்தோஇலங்கையென்னும்
காவல்மாநகரை இடித்தவருத்தமோ
ராவணாதிகளை அடித்தவருத்தமோ—(என்)

உ. மதுரையிலேவருங்களையோ - முதலை - வாய்மகனைத்தரும் களையோ
எதிரனுதைப்பொருங்களையோ-தனகறை-எடுத்தெறிந்தபெருங் களையோ
புதுமைவதனமுலை - உண்டுபேயின்உயிர் போக்கிஅலுத்தீரோ
அதிரஓடிவரும்-குருவிவாயைரண் டாக்கிஅலுத்தீரோ
துதிசெய்ஆயர்களைக்-காக்கவேண்டிமலை தூக்கிஅலுத்தீரோ
சதிசெய்காளிங்கன்மணிமுடி தாக்கிஅலுத்தீரோ-மருதம்
சாய்த்தோ-ஆடுமாடுகள் மேய்த்தோ சகடுருளைத்
தேய்த்தோ-கஞ்சன்உயிரை மாய்த்தோ அர்ச்சுனனுக்காச்
சாரதியாகத்தேர் விடுத்த வருத்தமோ
போரிலேசக்கரம் எடுத்த வருத்தமோ—என்

௩. பாடி-தனிக்கெத்தவும்நானே-உம்மைப்பாயெனவே அடுத்தேனே
அடிமைகொள்வீர்என்னைத்தானே-செம்பொன்-அணிஅரங்கப்பெருமானே
தடம்உறைந்தகரும்பாறைசாபமதை தடுத்து ரட்சித்தீரோ
விடஒண்ணாதகாகாசுரனுக்கொருகண் விடுத்து ரட்சித்தீரோ
கொடுமைகண்டழுதபோபனைக்குத் துயில்-கொடுத்துரட்சித்தீரோ
மடுவில்ஆனைமுனைஓடிமுதலையை மடித்துரட்சித்தீரோ-அதுபோல
வாரும்-கிருபைக்கண்ணாலே பாரும் - மனக்கவலை
தீரும்-நினைத்தவரம் தாரும் - தாரும்என்சாமி
வடமேவும்மக லட்சுமியுடன்பெரும்
பட்சம்ஆகஎன்னை ரட்சியும்எழுந்திரும்—என்

இந்தக்கீர்த்தனைக்காகப்பெருமாள் திருவுள்ளமுகந்து இக்கவிராயருக்குச் சொப்பனத்தில், ஒரு ஸ்ரீவைஷ்ணவனைப்போலவந்து, ஐய் ராமநாடகப்புலவா முற்காலத்தில் கம்பநாட்டாழ்வார் இராமாயணம் அரங்கேற்றவருகையில், நம் சடகோபனைப் பாடினையோ என்று பெருமாள் கேட்க அவர் நம்மாழ்வாருக்கு ஒரு அந்தாதிபாடினபின்புதான் அதை அரங்கேற்றவமைத்தார், அவ்வாறே நீயும் உன்னாடகத்தில் நம்பெருமாள் பரிசனங்களைப்பாடில் உன்நூல் அரங்கேறும் என்றார். அவ்வண்ணமே பெருமாள் கோவிற்றுறையாருக்கும் சொப்பனம் சாதித்தார், இவராலே அதைப்பாடிவித்துக்கொண்டு, இவரது இராமநாடகத்தை அரங்கேற்றும்படியா அப்படியே ஆன்று விடிந்தபின் இருதிறவரும் அச்சொப்பனங்களை ஒப்பிட்டுக்கொண்டவர்களாய், இவர் இந்நாடகத்திற்குத் தோடையம் பாடத்தொடங்கி, நம்பெருமாள்பரிசனங்கள் ஆகிய அனந்த கெருடவிஷ்வக்சேனர் பஞ்சாயுதங்கள் ஆழ்வார் ஆசாரியர்கள் அனைவரையும் அதில் அமைந்தார். ஆகிலும் அத்தோடையத்திலிருக்கின்ற விநாயகரோ அக்கோவிற் பரிவாரத்தில் இருக்கின்ற ஒருவர் தாம், மேற்காப்பு விநாயகரோ, சேனைமுதலியார் பாரிவாரத்தில் ஒருவர். இவ்விதமாகுந்தால் ஸ்ரீரங்கத்தில் பூர்வத்தில் தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தை அரங்கேற்றியகம்பர் திருமண்டபத்திலே அந்தப்பங்குனி அஸ்த நட்சேத்திரத்திலேதானே, திருவரங்கத் திருமுற்றத்து அடியார்கள் கோஷ்டியில்முதலில் அரங்கேற்றினார், அக்கோவிலாரால் பலமரியாதைகளோடு பலபரிசுகளும் பெற்றார்.

அப்புறம் இக்கவிராயர் தஞ்சாவூர்ச் சமஸ்தானாதிபதி ஆகிய துளஜமகாராசாவின் சபையில் இந்நாடகத்தை அரங்கேற்ற வந்தார். அந்நேரம் தஞ்சைக்கோட்டை சென்னப்பட்டணத்து நவாப் ஆகிய மதார்மலக்கின் தண்டினால் முற்றிக்கை இடப்பட்டிருந்தது. அச்சமயபேதத்தால் புதுவைநகரத்து ஆனந்தரங்கப்பிள்ளையின் சபையில் இதை அரங்கேற்றவந்தார். அவர் தமக்குமிகவும்இஷ்டர் ஆகிய துளஜமகாராசா இதைக்கேட்டதற்கு முன், தாம் கேட்டல்கூடாது என்று இவருக்கு நானாவெகுமதியும்செய்து, மணலி முத்துக்கிருஷ்ண முதலியாருக்குத் தகவுரைப் பத்திரிகையோடு, இவரைச் சென்னைபுரிக்கு அனுப்பினார், இவர் அவ்விடம் சேர்ந்து அவருக்கு ஒரு சீட்டுக்கவிதை, அத்தகவுரைப் பத்திரிகையோடு, விடுத்தார்.

அது இது. ஆசிரியவிருத்தம்.

சித்திதருசிறவல்லிபுத்திதருசிறவல்லிதேவர்கள்வணங்குவல்லி
இல்லையெனவல்லிசிவகாமவல்லிஇருதிருவிழிக்கருணையாலே

சத்தியவாசகன்மன்றுமண்டலாதிபர்கள் தாய்மனும் துதிக்கும்
சகலபாஷாநிபுணமணலிமுத்துக்கிருஷ்ணசதுரநீலாதிகண்டாய்
நத்துமலர்குவளைநான்மதியம்நீசெஞ்சாலிநான்கருவிமழைமேகம்நீ
நளினம்நான்பருதிநீபிள்ளைநான்அன்னைநீநான்கவிஞன்வழுதிநீகாணென்
சுத்தமுளராமாயணத்தைக்கொண்டுனதுசமுகமதுபெறவருகிறேன்
சொற்பொருள்அறிந்தளவுசொல்லுவேன்கேட்கவே துணைஆகவேணும்நீயே

இதை அங்கீகரித்த முதலியார், இவரைத் தம்இடத்துக்கு அழைப்பித்து, தக்கமரியாதைசெய்து, இவர்கேள்விக்கு இசைந்தார், அப்பால் இவர் ஸ்ரீராமகதையை, ஸ்ரீமத் கம்பராமாயணத்தைப்பற்றி நாடகமாய் ஒன்று செய்திருக்கிறேன், அதையும் கூடவே தாங்கள் கேட்கஎன்றார். அப்போது அவர் இவரைக்கேட்டார் சில்காலத்திற்குமுன், இருவர் பிராமணர்கள் இராமநாடகம் ஒன்றுகொண்டுவந்து, இங்கே கீர்த்தித்தார்கள். அதுதானோ இது என்று இவர் அதுவும்நான் பாடியதுதான் அது ஒரு சங்கிரகம்ஆதலால் அதையே விரிவாய்ப் பிறகும்பாடினேன் என்றார், முதலியார் அப்படிஆகில் இரண்டும் ஏககாலத்திலேதானே நடக்கஎன்றார். ஆதலால் அப்பால் இவர் தமதுநாடகத்தைப் பின்னும் பலதருக்களாலும் விருத்தங்களாலும்புதுக்கிவிரித்தார், முதலியார் சபையில் இராமாயணப் பிரசங்கம் ஆரம்பித்தார், கூடவே அங்கங்கே இக்கீர்த்தனைகளையும் விருத்தங்களோடு அரங்கேற்றினார். ஆதலால் ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்தில் முதலியாரால் பலமேன்மைகளையும் பரிசுகளையும் பெற்றார் அதுகள் இக்கவியால் அறியவரும்.

ஆசிரியவிருத்தம்.

கனம் தந்தான் கனகாபிஷேகம் தந்தான்
களங்கம் இல்லாக் கருப்பொருளை அழைத்துத் தந்தான்
மனம் தந்தான் முடிசூட்டுமாலை தந்தான்
வாணிசிங்காதனத்திருத்தி வரிசை தந்தான்
இனம் தந்தான் ராமகதை எவர்க்கும் தந்தான்
எனை ராமாயணக்கவிஞன் எனப் பேர் தந்தான்
அனம் தந்தான் மணலி முத்துக்கிருஷ்ண பூபன்
அகம் தந்தான் இருமையிலும் சுகம் தந்தானே

இப்படி முத்துக்கிருஷ்ணமுதலியார் சன்மானம் செய்யப்பெற்ற இக்கவிராயர், பின்பு லிங்கப்பசெட்டியார்குமாரர் ஆகிய தேப்பெருமாள் செட்டியாருக்கு ஒரு சீட்டுக்கவிதை அனுப்பினார். அது இது.

ஆசிரியவிருத்தம்.

கனிகொண்டபஞ்சலக்ஷணமும்ராமாயணக்கடலையும்உணர்ந்தபுலவன் கவிராசர்புகழ்கின்றகாழிஅருணாசலக்கவிராயன்எழுதும்ஓலை, மணிகொண்டமார்பிலிங்கப்பமகிபாலகன்மகிழ்ந்தசுதன் வணிகாதிபன், வருசீர்படைத்ததேப்பெருமாள்மகிபன்இதைமனதுக்குவந்தினிதுகாண்க,அணிகொண்டியாசேசர்வண்ணம் உரைசெய்ததும். [illegible] வெகுமதிசெய்ததும்,அதனக்குபகாரம்ஆனதும்இப்புவியில்ஆர் [illegible] ருமுளரோ, பணிகொண்டராமகீர்த்தனையும் அப்படியேபரிந்தீந்தே கேளுறும், பாரில்ஓராயிரம்பிறைகண்டுநீபொருள்படைத்துவாழ்ந்திடுகமாதோ.

அவர் அப்படியே அதைக்கேட்டு இவருக்கு கனிசமானபரிசோடுமரியாதைசெய்தார். பின்பு மதார்மல்க் நவாப்போடு சமாதானப்பட்டிருந்த துளசிமகாராஜாவையும்,அப்பால் ஒரு பஞ்சரத்தினமூலமா ஆநந்தரங்கப்பிள்ளையையும் பின்பு உடையார்பாளையத்துத் துரை ஆகிய, உவரங்கப்புடையாரையும் பின்னும் சிலபாளையப்பட்டுத் துரைகளையும் இவர்கண்டு,இதை அரங்கேற்றி, பலநல்வரிசைகளும் மெய்வரிசைகளும் அவர்களால் பெற்றார்.

இவ்விதத்தால் இவர் ஈட்டிய பொருள்களைக்கொண்டு தம்குடும்பத்தோடு கலந்தபின்,சிலவருஷங்கள் இருந்து சீர்காழியில்தானேவிகாரி௵ ஆனி௴ வைகுண்டப்பிராப்தி ஆனார். இவர் வேஷத்தில் கொத்துத்தாழ்வடம் தலையிலும், வெள்ளைவேட்டி அரையிலும்,தரித்து, சைவப்பண்டாரங்கள்போல் இருந்தார் ஆம்.

இவர் தமதுவிவாகத்தின்பின் தில்லையாடியில் ௧௨ ௵ வசித்து, சீர்காழியில் ௨௫ ௵ வசித்தார், இவருக்குவயது - ௬௮ - இவர்தமது - ௬௰ - ஆம்வயதில் இக்கீர்த்தனை பாடியது இந்த யுவவருஷத்துக்கு இதுபாடி - ௱௪ ௵ ஆகிறது. இவர்வைகுண்டப்பிராப்திஆகி - ௯௬ ௵ ஆகிறது.

இவரதுசரித்திரம், இவரதுபேரரும், இவர்குமாரர்கள்மூவரில் மூத்தவர் ஆகிய அம்பலவாணக்கவிராயருக்குப் புத்திரரும் இக்கீர்த்தனைக்குப் பிரசங்கியும்ஆகிய, சுப்புராயக்கவிராயராலும் பின்னும் அநேகராலும் நாங்கள் கேள்விப்பட்டபடிக்கு எழுதப்பட்டது.

அமைத்தவர்கருத்து.

இக்கவிராயர் நிச்சயித்தபடி, மகிமையுள்ள இந்த இராமாயணகீர்த்தனை ஆகிய பண்ணியதால், வெளிப்படை ஆன வழக்கச்சொற்களாலே செய்யப் பட்டிருந்தும், இடையிலே அவ்வளவுந் தெரியாத சிலர்வாய்களில் அகப்பட்டு, [illegible] எழுத்தும் சொல்லும்பொருளும், அங்கங்கே சரணங்களும் [illegible]ம் மிகுந்தும் குறைந்தும், இராகதாளங்களும் பேதித்தும், சில[illegible]ங்களும் கீர்த்தனைகளும்சிலபுஸ்தகங்களிலே குறைந்தும், சிலவற்றிற் சில மிகுந்தும், இப்படிக்குப் பலவிதங்களிலும் பிழைபாடங்கள்ஆய்விட்டது. இதற்கு முக்கியகாரணங்கள், இத்தமிழ்ப்பாஷையின் நடையில் அக்ஷரங்களைத் தொடர் எழுத்துகளாக முடிகிற சந்திவழக்கமும், அவ் அக்ஷரங்கள் இயல்பாயே மிகுதலும் குறைதலும் மாறுதலும் அல்லாமல், வலிய அதுகளை மிகுத்தலும் குறைத்தலும்மாற்றுதலும் செய்கிற விகாரவழக்கமும்தாம். இச்சந்திகளும் விகாரங்களும், இன்னதற்காக இன்ன இடங்களில் வேண்டத்தக்கதுகள், இன்னஇடங்களில் வேண்டத் தகாதுகள். என்றுகற்ற இலக்கணப்புலவர்களில் சிலர் இன்னமும் தெளியாமல் இருக்கிறார்கள்.

ஆகையால் இத்தப்புஸ்தகத்திலே வாசிப்போர்களையும் பொருள்கொள்பவர்களையும், தடுத்தும் மருட்டியும் பிழைகளுக்கு உள்ளாகிற மேற்படி சந்திகளையும் விகாரங்களையும் அவசியமா வேண்டத்தக்க இடங்களிலே கொண்டும், வேண்டத்தகாத இடங்களிலே விலக்கியும் கற்றவர்களுக்கே அன்றியும், மற்றவர்கள்ஆகிய பெண்களுக்கும் பேதையருக்கும் கூடத்தாட்டியாப் படிக்கவரவும், சொல்லும்பொருளும் அவர்களுக்கும் விளங்கும்படி ஆகவும், சொற்களைப்பிரித்திருக்கிறோம். ஏனெனில், இந்நூல் படிக்கின்றவர்களில் இச்சந்தியும் விகாரமும் வேண்டத்தக்கவர்கள் மிகவுஞ்சிலர், அவை வேண்டாதவர்கள் மிகவும் பலர், ஆதலால் பலருக்குப் பயன்படுவதையே முக்கியமா நாங்கள் வேண்டினோம். மேலும் எழுத்து நடை இல்லாதவர்களும் சங்கீதப்பயிற்சி இல்லாதவர்களும்கூட, இதனைப்படிக்கையில் எந்தெந்த விருத்தத்தையும், எந்தெந்த கீர்த்தனையும், சற்றேறக் குறைய எழுத்து நடை அறிந்தும் சங்கீதநடைஅறிந்தும் நடத்தும் படியா, அதுகள்தாமே அவர்களை நடத்திக்கொண்டு போகத்தக்கதாக, அவ்வளவு பக்குவமாத் தகுந்தபடி பிரிவினை செய்யப்பட்டிருக்கின்றது.

இதில் கீர்த்தனைகளும், விருத்தங்களும், நூறும், ஐம்பதும், ஆகக்காலானுகூலப்படி பாடப்பட்டபடியால், அப்போதைக்கப்போது எ

ழுதிக்கொண்ட புஸ்தகங்களில், சிலவற்றில் கீர்த்தனைகளும், விருத்தங்களுங்குறைந்தும் சிலவற்றில் அதுகள் மிகுந்தும் போய் விட்டதுகள், அவற்றுள் சிலபொருத்தம் இல்லாமலும் ஆய் விட்டதுகள். ஆதலால் நாங்கள்பலபுஸ்தகங்களைக்கொண்டு பரிசோதிக்கையில் பொருந்தாமை கண்டஇடங்களில், எழுத்துகளையும் சொற்களையும் திருத்தினதுமாத்திரம் அல்லாமல், தனிச்சொற்கள்சேர்த்[illegible] விருத்தங்களை உடைத்துப் பொருத்தினோம், நூதனவிருத்தங்[illegible] பாடிச்சேர்த்தோம், கீர்த்தனைகளிலே குறைவை நிறைவு ஆக்கி[illegible]ல்லாமல், நூதனகீர்த்தனைகளும் பாடிப்பதிப்பித்தோம், இக்கவிர[illegible]ாலே பாடப்பட்டதுகளாகக் காணுமலும், கூறியதையேகூறியது போலக்கண்டதும்ஆகிய சிலகீர்த்தனைகளையும், விருத்தங்களையும், கழித்துவிட்டோம்.

இந்த இராமாயணகீர்த்தனையிலே நாங்கள் திருத்தியதுகளையும், கூட்டியதுகளையும். கழித்ததுகளையும், நாங்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவரே அல்லாமல் பின்னும் தகுந்த சில வித்துவான்கள் சில புலவர்கள் சில கவிராயமார்கள், சில சங்கீத வித்துவான்கள், சில இராமாயணப்பிரசங்கிகள், சில கீர்த்தனைப்பிரசங்கிகள், போதானந்தகு வால்மீகப்பிரசங்கிகள், ஸ்ரீமத்கம்பராமாயணம், யாவரோடும் ஆலோசித்தே செய்தோம், இதுகளைப் பார்க்கிறவர்கள் பொறுமையை விட்டுப் பார்வையிட நாங்கள் பிரார்த்திக்கிறோம். ஏனெனில்பொறுமையுள்ளவர்க்குப் பொருளுண்மை தோன்றுது, என்றுபழமொழிஇருக்கிற படியால், அப்படிசெய்வார்களாகில் அவர்கள் எங்களுக்குக். கொடுக்கும் வெகுமானமும் பரிசும் ஒருசபாகும் ஒரு சிரக் கம்பமும் ஒரு கரக் கம்பமுந்தாம், இவைகளும்செய்யக் கோருதவர்கள் அனேகர் இருப்பார்கள்.

சங்கீதவரதய்யங்கார் என்கிற இராமாயண கீர்த்தனைப் பிரசங்கி ஆனவர், இதிலே நாங்கள் இராகங்களையும், தாளங்களையும், பரிசோதித்து நவரசங்களில் இன்னரசத்துக்கு இன்ன இராகமே சரி இன்ன தாளமே வேணும் என்று ஆராய்ந்து பதிக்கையில், அதற்குகூடஇருந்துஎங்களுக்கு உதவிபண்ணினார்.

இதிலே அங்கங்கே கீர்த்தனைகளுக்கு இராகங்களும், தாளங்களும், நாங்கள் இன்னது இன்னதென்று போட்டிருந்தாலும். இராகதாளங்களுக்கு அதுவே நிபந்தனை அல்ல, சுதிக்கியானம் லயைக்கியானம்தெரிந்த மகாசங்கீதவித்துவான்கள், தங்கள் வல்லமைக்குத் தக்கபடி ஒருராகத்தைப் பலராகத்திலும், ஒரு தாளத்தை பல தாளங்களிலும் பாடிக்கொள்ளல் ஆம்.

ஸ்ரீராமஜெயம்.

இரா[illegible] நாடகம்.

(*)

ஆக்கி[illegible]யான்பெருமை.

சகக்கலிப்பா

கம்பஇராமாயணப்பாற்[illegible]லேஉண்டு
நம்பவரும்ராம நாட[illegible]மாமழையை
அம்புவியில்காழி அரு[illegible]சலமேகம்
கும்பும்உயிர்ப்பயிர்க்குப் [illegible]ய்துவினைகொய்தறவே. (௧)

மேல்க்காப்பு.

வழிபடுகடவுள் வணக்கம்.

விநாயகர்தோத்திரம்.

நேரிசைவெண்பா.

ஆனைமுகனே அரனார்திருமகனே
சேனையர்கோனாகவளர்ந் செய்வோனே - ஞானமே
நாடகத்தைக்கொண்டஉன்றன் நல்லருளாலேராம
நாடகத்தைச்சொல்லுவேன் நான். (௨)

௧-தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விநாயகாசரணம் - செயசெய - விநாயகாசரணம்.

அநுபல்லவி.

அநாதரட்சகனே-கெசமுகனே-ஐங்கரனேசிவ சங்கரன்மகனே.—(விநா)

சரணங்கள்.

௧. அன்பிலாத பேயென் - என்றுடை
அறிவுவிளங்கவேதுணை வருவாயே
என்குலதெய்வம் நீயே - இந்த
ராமநாடகத்துக் - கனுக்கிரகிப்பாயே—(விநாயகா)

௨. வானவர்பணி வோனே - நல்ல
வாக்குத்தந்துகாத்தருள் சீமானே
நான்உரைத்திடு வேனே - ராம
நாடகத்துக்கருள்புரிநீ தானே—(விநாயகா)

௩. உண்மைஞானம் தோணும் - உன்றன்
உதவியாலேநல்லபுத்திகள் பூணும்
நன்மைமெய்த்திடும் காணும் - ராம
நாடகத்தைச்சொலநீமுன்னிற்கவேணும்—(விநாயகா)





நன்றாக. திருவாழ்க. குருவேதுணை.

இராம நாடகம்.

பாயிரம்.

உள்க்காப்புகள்.

அற்புடைக்கடவுள் வணக்கங்கள்.

அனுமார்தோத்திரம்.

நேரிசைவெண்பா.

கோதண்டதீட்சா குருராமநாடகத்தைத் ... ... *
தீதண்டாவாறடியேன் செப்பவே—கோதண்டா ... ... *
மாருதியே அஞ்சனையாள் மைந்தனேநற்கருணை ... ... *
வாருதியேநீதுணையா வா ... ... (௧)

உ-திரு-கலியாணிராகம்-ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

துணைவந்தருள்புரிகுவாய் * அனுமந்தாநீ
துணைவந்தருள்புரிகுவாய்.

அநுபல்லவி.

துணைவந்தருள்வாய்நல்ல சொல்பொருள்தாபுல்லி
இணையொன்றிலாதவல்ல * ராமநாடகம்சொல்ல
துணை.

---

* இந்தப் பல்லவியை இரட்டித்துப் பாடும்போது அநுமந்தாநீ - என்கிறதற்குப் பிரதியாக என்றனைக்குற்ற என்றும் - வாக்குப்பங்க - என்றும் சொல்லிக்கொள்ளவும்.

சரணங்கள்.

௧. இஷ்டவாலிதோழமையை விண்டோனே - விண்டு
சுக்கிரீபன்தோழமையைக் கொண்டோனே - வெகு
இஷ்டமாராகவனைப்போய்க் கண்டோனே - அவன்
செப்பியசொல் அபூர்த்தனத உண்டோனே - சுக்கிரீவன்
கஷ்டமும்தீர்மிருக்க
நஷ்டமும்அவனிருப்பும்
சட்டமாச்சொன்னமாருதி
இஷ்டகருணை வாருதி
ஆனை

௨. அஷ்டதிக்கில்தென்றிசை உகந்தோனே - சீதைக்காய்
அரியிலத்தினுள்ப் புகுந்தோனே - அப்போது
பொட்டெனப்புசியினாற்பி ளங்தோனே - உயிரைப்
போக்கவேமிகமனந்து ணர்ந்தோனே - சம்பாதி
எட்டவேயிருந்துமென்னை
கிட்டிலேவாரவற்குப்
பட்டத்தைச்சொல்லும்தூயனே
முட்டிலாஅஞ்சனையனே
ஆனை.

௩. உக்கிரமாவிஸ்வசொரூபம் எடுத்தோனே - மயேந்திரத்
தானதந்துகடலைத்தாண்டி விடுத்தோனே - பொல்லாத
அக்கிரமலங்கனியைக்கிட்டிப் படுத்தோனே - நற்றிரு
ஆழியைத்தேவிகையினில்க் கொடுத்தோனே - ஆறுபோல்
மிக்கவோரத்தங்கள்வாயால்
கக்கவேராட்சதரெல்லாம்
மக்கவேசெய்யும் ருத்திரனே
முக்கியமாம்வாயுபுத்திரனே
ஆனை.

௪. தேவிசூடாமணிகையிற்த் தரித்தோனே - சொன்ன
சேதிகளெல்லாம்அங்கி கரித்தோனே - பதி
பாவிராவணனிலங்கையை எரித்தோனே - ராமன்
பக்கல்வந்துற்றசேதிகள் விரித்தோனே - இந்த
பூவுலகத்தோருந்தேவர்
கோவும்முனிக்கணமும்ப
ராவியசிரஞ்சீவியே
மேவியஎனதாவியே
ஆனை.

௫. அருமையாம்சஞ்சீவிமலையை ஏற்றோனே - பிரம்ம
அஸ்திரவேதைகளெல்லாம் தீர்த்தோனே - சீதையை
உரிமையாம்ராகவன்பக்கல் சேர்த்தோனே - பரதன்
உயிரைவிடு முன்னமேபோய்க் காத்தோனே - தலத்தில்
பெருமையார்முனிவிருந்தினில்
தருமராமனோடருந்தினனே
ஒருமையார்சஞ்சீவிராயனே
பிரமபட்டம்பெறும் உபாயனே
ஆனை. (௨)

—*—

பெருமாள்தோத்திரம்.

விருத்தம்.

அண்டர்தம்துயரந்தீர அயோத்திமாநகரில்வந்து
தண்டகாரணியம்சென்று சமுத்திரமணையாய்க்கட்டிக்
கொண்டுராவணனைமாட்டக் கோதண்டம்கையிலேந்தும்
புண்டரீகாக்ஷராமன் பொன்னடிக்கமலம் போற்றி (௩)

௩-தரு-சௌராஷ்டிரராகம். திரிபுடைதாளம்.

பல்லவி.

எனக்குன்இருபதம்-நினைக்கவரம்அருள்வாய்-ஸ்ரீராமசந்திரா
எனக்குன்இருபதம்நினைக்கவரம்அருள்வாய்.

சரணங்கள்.

௧. எனக்குன்இருபதம்நினைக்கவரம்அருள்
இனித்ததசரதன் தனக்குமகனாயும்
மனத்திலுடன்அவதரித்துமுனிவரன்
மகத்தில் அரக்கியை வதைத்தஅரசே
எனக்கு.

௨. நடக்கையிலேஅகலிகைக்குக்கிருபைசெய்து
நடத்திரச்சனகன்வில் ஒடித்துச்சனகிமாதை
பிடித்துப்பரசுராமனுக்குமமதையைப்
பிரித்துநகரில்வந்திருக்கும்அய்யனே
எனக்கு.

௩. தரிக்கும்முடிபரதனுக்குதவிநதி
கடத்திக்குகனுடன் அடுத்துச்சித்திரகூட
வரைக்குள்ச்சனகியொடிருக்கத்தானவனால்
வணக்கஞ்செயமகிழ் குணக்குஞ்சரமே
எனக்கு.

௪. அடுத்தபரதனும் ஒடுக்கமுடன்வரத்
தொடுத்தமிதியடி கொடுத்தாதரவுசெய
வடக்கில்அணையும் விடுத்தாரணியிலே
வனத்தில்வரும்விரா தனைக்கொன்றவனே
எனக்கு.

௫. விடுக்கரியசடா யுவுக்குறவுசொலி
விடுத்துக்கொண்டுபஞ்ச வடிக்குச்சென்றதுடன்
அடுத்தசூர்ப்பநகி கொடுத்தகரதூ
ஷணத்திரிசிரர்முடி அணித்தாரகலா
எனக்கு.

௬. தனித்துவருமாரீ சனைக்கொன்றொருகவ
தனுக்கருளிஅநு மனைக்கண்டொருசுக்ரீ
வனுக்குதவிவாலி தனைப்பொருதுவா
னரப்படையைஆ தரித்ததுரையே
எனக்கு.

௭. இருக்கும்அநுமன்வந் துரைக்கவிசெசர்
இருக்கைஅறிந்துபின் எரித்தகடலிலே
பெருக்கஅணைசெய்து வருக்கவருக்கமா
பெலத்தஅரக்கரைத் தொலைத்ததெய்வமே
எனக்கு.

௮. கொடியஇந்திரசித்தன் பிரகஸ்தன்முதலாக்
கொள்ளும்பலபல வெள்ள அரக்கர்தம்
முடியுங்கும்பகர்ணன் முடியுமிராவணன்
முடியும்பொடியாக விடுபுங்கவனே
எனக்கு.

௯. ஈளத்தகபடிவிபி ஷணர்க்கரசுபெற
நிறுத்திஒருபுஷ்ப ரதத்தில்வந்திலங்கு
ஜனத்தில்உயர்தரும் அயோத்தியிலேஸிமா
ஸனத்திருக்கும்ரகு குலகுமாரனே
எனக்கு.

* * *

அபசாரக்ஷமை.

விருத்தம்.

கனமானவால்மீகர்சுலோகம்செய்தார்
கம்பரும்ராமாயணத்தைத்தக்கவியாச்செய்தார்
உனதாசையாலேநாடகமாச்செய்தேன்
உனதுநிறைவன்னபலன்உண்டாமன்றால்

முனிமார்சொல்லியராமமந்திரத்தை
மூவரும்ஓதியராமமந்திரத்தை
வனவேடன்மராமராஎன்றேமுந்தி
வழிகண்டான்அதுகொண்டேமொழிகின்றேனே (௫)

௩-தரு-சாவேரிராகம்- அடதாளசாப்பு.

பல்லவி.

ஐயனே ரகுராமனே எனசொல் அபசாரம் உபசாரமாக்கிக்கொள்வாயே

அநுபல்லவி.

கையில்ஆகாதானவதேதுசொன்னாலும்
காக்கக்கடன்என்பிழையை-நீக்கக்கடன்உன்பாரம்
ஐயனே.

சரணங்கள்.

௧. உள்ளத்தனையும் குற்றம்
இல்லாதசுப சத்தம்
தெள்ளித்தெளியேன் மொத்தம்
செய்தேன்இதோ சுத்தம்
வெள்ளைக்கவி என்றும் - இதுபின்னப்
பிள்ளைக்கவி என்றும் - சொல்வதல்லால்
விள்ளத் தகுமோ - பழுதுகள்
உள்ளத் தகுமோ - சாமிநீ
தள்ளத் தகுமோ - திருவுளம்
கொள்ளத் தகுமோ - அறிகிலேன்
ஐயனே.

௨. நற்பொருள் நீதமும்
நவரச பேதமும்
வைப்புள்ள ரீதமும்
வண்ணவி நோதமும்
ஒப்புத் தெரிவேனோ - அதில்உள்ள
தப்புத் தெரிவேனோ - இலக்கணச்
சொற்பிக் கறியேன் - உன்புகழ்
கற்பிக் கறியேன் - சொல்லி
மெய்ப்பிக் கறியேன் - சாமி
ஒப்பிக் கறியேன் - எங்கள்
ஐயனே.

௩. உத்தமமுனி முன்னம்
உரைக்கக் கம்பர்சொன்ன

நற்றமிழ்தன்னைச் சின்ன
நாடகமா தென்ன
வைத்திப்படி கண்டேன் - பெரியோர்முன்
புத்திப்பிழை கொண்டேன் - என்சாமி
பித்தச்சொல வைப்போலே
சத்திக்கலு ருங்காலே
நத்திச்சொலும் எனமேலே
சித்தத்தில்இ நத்தாலே
ஐயனே.

—*—

நூற்பெருமை.

விருத்தம்.

சதிர்பெறும்ராமகாதை-சதகோடிபிரபந்தம்ஆகும்
அதில்ஓர்அக்ஷரம்சொன்னாலும் அருவினைபோகும்என்றே
விதியினால்முனிவால்மீகி விளம்பியஉறுதிகொண்டு
மதியினால்அறிந்தமாத்திரம் வகுத்தநாடகம்சொல்வேனே (அ)

ரு-தரு-சாவேரிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

மகத்துவம்உள்ளகதை ராமகதை இதுவே - கேட்கவேணும்முனி
வருக்கும்பலமளிதருக்கும் இதுபொதுவே.

அநுபல்லவி.

மிகுத்தமிகுத்தபுராணம் சொல்லும்கதை
விரும்புமோமறுநாள்ச் சொன்னால்அதை
அகத்தில்ஆநந்தம்தருமே இதைசொல்ல
அடிக்கடிசொல்லினும் வெறுக்குமோகல்ல.
மகத்துவம்

சரணங்கள்.

க-சேர்க்கும்பொருள்களில்என்ன இதைச்செவிவர்க்கும்பொருள்இதுமாத்
[திரம்
செபமும்இதுபெருந்தபமும்இதுஎன்று தெளிவதேநல்லசூத்திரம்
பார்க்குள்இதைஅறியார்க்கெல்லாம் பிறந்தெடுத்தஉடம்பவெபாத்திரம்
பத்தியால்இதுகற்றவர்க்கும் பலிப்பதுபரமபதசேத்திரம்
தீர்க்கமாஇதைக் கேட்கின்றோர்பெரும்
திருமனையில்வரு வாரோதேவரும்
எர்க்கும்இதின்குணம் யார்க்குஞ்சொல்லவரும்
இகபரங்களில்ச் சகலமுந்தரும்
மகத்துவம்

உ. தருமராசன்கைநேரும்போதினில் ஒருமையாஅதைத்தடுக்குமே
சற்றேபடிக்கினும்புத்திரபாக்கியமும் சகலபாக்கியமும்அடுக்குமே
பெருகுநவக்கிரகம்ஏகாதசப்பலனைப் பிரியமுடன்வந்துகொடுக்குமே
பேயும்பூதமும்நோயும்சூனியமும் பிணிசெய்யாதபடிவிடுக்குமே
மரணசெனனவி யாதிதமக்கின்னம்
வருந்துவார்வருந்தாத படிதின்ன
அரியமருந்திது ஆம்என்றேமுன்னம்
ஆதிசிவன்உமை காதிலேசொன்ன
மகத்துவம்.

௩. சீமைதனிற்கங்கையமுனைமுதற்பெருந் திவ்வியதெய்வாதிஸ்நானமும்
சேனைமாநிலம்யானைமுதல்ஆகச் செய்யும்பலபலதானமும்
ஆயிரம்என்றுகேதுகின்றவே தாந்தம்முதல்க்கலைக்கியானமும்
அதுவும்அல்லாமல்அநேகநாளும் உதவும்அந்நதிதானமும்
சாமிநாரத முனிவன்சொல்லிவைத்த
சரித்திரம்வால்மீகர் உரைத்தபடிகொற்ற
ராமன்அவதாரம்ஆம் முன்னேமெத்த
நயம்கொண்டாதிகாவியம்என்றேபெற்ற
மகத்துவம்.

—*—

அவையடக்கம்.

விருத்தம்.

முத்துமுதல்விலைஇல்லாமணிகள்பெற்ற
முதியகடல்ஆடுகின்றோர்அதிலேஎழு
சற்றும்உதவாதமணியாம்பருக்கை
தான்போட்டக்களிப்பானசமுத்திரம்போலக்
கீர்த்தன்னனும்ராமச்சந்திரன்கதையைக்கேட்கும்
காதிலேநாடகமாஅதனைச்சொல்லிக்
குற்றம்மிகச்செய்தாலும்குணமாக்கொண்டு
கூட்டுவீர்என்கவி பாராட்டுவீரே.

இதுவும்அது.

அரன்முடிமேல்க்கங்கைபகீரதன்கொணர்ந்தே
அந்நாள்செய்தர்ப்பணம்போல்இந்நாள்இந்த
நாரும்அந்தக்கங்கையிலேதர்ப்பணத்தை
நடத்திமுத்திபெறுகின்றார் அதுபோல்ஆதிப்

பிரமன்முகத்திலிவந்தராமகாதை
பெருமுனிவால்மீகிசொல்லக்கம்பர்சொன்னர்
விரவுதமிழ்ப்பதத்தாலேநானும்சொன்னேன்
மேல்க்கொள்வீரன்பிழைதீர்த்தாள்க்கொள்வீரே. (அ)

௬-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிழைபொறுக்கவேணும்-பெரியோரே-பிள்ளைஉமக்கு நான்காணும்

அநுபல்லவி.

மழைநிறத்தராம சாமிகதையின்ன
வகைஎன்றறிந்தும்அறி யாமலும்நான்சொன்ன

பிழை

சரணங்கள்.

௧. ஆதியில்பிரம்மதேவர்நூறுகோடிவிஸ்தாரம்
ஆதிகாவியமானதிந்தை மதித்தாரே
பேதமில்இருபத்துநாலாயிரம்ஆகப்
பிறகுவால்மீகர்சொல்லி விதித்தாரே
போதாயனர்முதல்மாதவர்இக்கதையைப்
புனைந்துவடமொழியால்த் துதித்தாரே
ஓதியகம்பர்பன்னீராயிரம்கவிஆக
உரைசெய்துதமிழிலே பதித்தாரே
காதலால்இவர்செய்ய நான்அதுக்கிப்பாலே
கருடன்பறக்க ஒரு கொசுவும்பறந்தால்ப்போலே
ஈதொருநாடகமா ஓதினேன்புவிமேலே
எட்டும்ரண்டும்தெரியா ஏழைநான்ஆகையாலே

பிழை.

௨. வாவியபெருவெள்ளம்பாயும்கடலிலே
வாய்க்காலும்பாயும்அல்லோ நில்லாமல்
யாவரும்கற்றோர்சொல்லைக்கேட்கிறநீங்களும்
என்சொல்லும்கேளும்தடை இல்லாமல்
காவியமும்பஞ்சலட்சணமும்தெரியக்
கற்றஉங்களைப்போலே சொல்லாமல்
கேவலம்நான்இதைப்பாகவதர்படிக்கும்
கீர்த்தனையாச்சொன்னேன்இ தல்லாமல்

தேவதேவராமன்பேரே உற்றது
தேடிஅந்தப்பேர்இந்நாடகத்தில் வைத்தது
பூவோடேகூடியநாரும்மணம் பெற்றது
போலேவிளங்கும்அதினாலேசொன்னேன் கற்றது

பிழை.

௩. திருத்தும்நாராயணநமசிவாயஎன்று
செபிக்கும்மந்திரம்இரண்டும் மெய்தானே
உரைக்கும்மந்திரம்இரண்டில்இரண்டாம்எழுத்திரண்டும்
ஒருராமன்ஆகிவந்த பெருமானே
அருள்ச்செய்தகதைஇதைஇலக்கணம்ஆகச்சொல்ல
அறிவேனோஇன்னம் அறியேனே
பாப்பியபாலையும்சோற்றையும்குழந்தைகள்
பாச்சிசோச்சிஎன்றும் பாடினானே
பொருத்தம்இல்லாச்சொல்லால்உரைசெய்தாலும் தள்ளப்
போமோஉங்களால்ஆமேதிருத்திக் கொள்ள
அரைச்சொல்க்கொண்டம்பலம்ஏறினால்மெள்ள மெள்ள
அரைச்சொல்லும்முழுச்சொல்லாம்ஆகையால்இதில் உள்ள

பிழை.

—*—

மங்களம்.

விருத்தம்.

மூவருக்கும்தேவியர்க்கும்தேவரோடு
முனிவருக்கும்முன்னிந்தக்கதையைச்சொன்ன
நாவருக்கும்தசரதற்கும்தேவிமார்க்கும்
நற்றம்பிமார்களுக்கும்சீதையோடு
ஆவருக்கும்கோவருக்கும்அநுமான்மற்றோர்
ஆழ்வார்கள்ஆரியர்ஐம்படைஅனந்தன்
மாவருக்கும்இதைப்படிப்போர்கேட்போர்க்கெல்லாம்
வளம்சொல்வான்ராகவன்மங்களம்சொல்வேனே (௧)

எ-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்ரீராமச்சந்திரனுக்கு செயமங்களம் நல்ல
திவ்யமுகச்சந்திரனுக்கு சுபமங்களம்

அநுபல்லவி.

மாராபிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறுநாமனுக்கு ரவிகுலசோமனுக்கு
ஸ்ரீராம.

சரணங்கள்.

க. கொண்டல்மணிவண்ணனுக்கு கண்ணனுக்குமங்களம்
கோசலை குமாரனுக்கு வீரனுக்குமங்களம்
புண்டரீகத் தாளனுக்கு
பூச்சக்கிர ஆளனுக்கு
தண்டுளவத் தோளனுக்கு
சானகிம ணாளனுக்கு
ஸ்ரீராம.

உ. கோவைமணிவாயனுக்குமாயனுக்கு மங்களம்
கோதண்டகையனுக்குமெய்யனுக்கு மங்களம்
தாவுகுண சீலனுக்கு
சத்தியவி லாசனுக்கு
தேவாநு கூலனுக்கு
தெசரதன் பாலனுக்கு
ஸ்ரீராம.

௩. பகிரண்டநாதனுக்கு வேதனுக்குமங்களம்
பரதனும்அன்பனுக்கு முன்பனுக்குமங்களம்
சகலஉல் லாசனுக்கு
திருமந்த்ர காசனுக்கு
அகிலவி லாசனுக்கு
அயோத்தியா வாசனுக்கு
ஸ்ரீராம.

*

பாயிரம்-முற்றும்.

கொச்சகம்.க-வெண்பா-உ-விருத்தம்-௩-சிந்து (க) தருக்கள் (௭)

20



ஸ்ரீராமஜெயம்.

முதலாவது

பாலகாண்டம்.

கடவுள்வணக்கம்.

விருத்தம்.

ஆதிஆய்நடுவாகிமுடிவும்ஆகி
அண்டபகிரண்டமும்ஆய்அனைத்தும்ஆகிப்
போதினைஆலினைவெள்ளிப்பொருப்பைவிட்டுப்
புகழ்பொறைகள்தருமம்எல்லாம்பொலிந்தநல்ல
நீதிசேர்அயோத்தியில்வாழ்தசரதேந்திரன்
நெடியமாதவத்தினில்வந்துதித்தஎங்கள்
சோதியாகியராமன்நாடகத்தைச்
சுயஞ்சொல்வான்மகிழ்ந்துதோடயஞ்சொல்வேனே (௧)

௧-தோடயம்-நாட்டைராகம்-சம்பைதாளம்.

சரணங்கள்.

௧. எவரும்வணங்கியரகுராமன்-எதுவும்நினைந்ததுதரும்ராமன்
ரவிகுலசுந்தரசெயராமன்-நாடகத்தைச்சொலவே-ஆ-ஆ
கவளநெடுங்கரதலசாமி-கமலதிரியம்பகம்உள்சாமி
பவனிவரும்கெசமுகசாமி-பாதபத்மம்துணையே-செயசெய

௨. துணிஉளபுசபெலராவணா-சுரன்முடிபொடிபடமோதும்நல்
அணிபெறுதசரதராமநா-டகமதனைசெயவே-ஆ-ஆ
இணிதருபுயம்இருகாதுசேர்-இசைமுகன்இசைபெறுநாவில்வாழ்
மணமிகுசரஸ்வதிபாததா-மரைஎனதுதுணையே-செயசெய

௩. கோதெறுவானவர்தேடவொரு-கோசலையாள்விளையாடவரு
ஞானகிருபாகரராமகதை-நாடகமாசொலவே-ஆ-ஆ
வானவன்ஆம்மணவாளமுனி-மாருதிநீள்கருடாதிபதி
சேனையர்கோனுடனேபதின்மர்-சேவடிகள்துணையேசெயசெய

௪. வாசவன்மாசுரரொடுலோகாந்திர-வாசிகள்பூசுரர்இவர்வசாந்த
பூசிதராகவனிடஆராய்ந்த-புகழுரைசெயவே-ஆ-ஆ
காசினிமீதினில்மிகுமூடாந்த-காரமதோட்டவேவருவேதாந்த
தேசிகர்தாமரைமலரேபோன்ற-திருவடிகள்துணையேசெயசெய

௩. திருமகள்சானகிசேரும்வாமன்- செயமொடுகோசலய்வாழும்நேமி
கருமணியேநிகர்ஆகும்ராமன்-கதையதனைசெயவே-ஆ-ஆ
குருகையில்மேவியகாரிமாறர்-குணநிதிஆகியபாஷியக்காரர்
மருளறுதேசிகர்மாசிலாத-மலர்அடிகள்துணையே-செயசெயா

௪. மைக்கடல்வாய்விண்டுபொங்கவே - வைத்தொருபாணம்துரந்தமால்
விக்கிரமராமன்பிரபந்தம்ஆம் விந்தையதுசொலவே-ஆ-ஆ
பக்குவம்ஆம்அன்புகொண்டுவாழ்-பத்தரைஆளும்திறங்கள்சேர்
சக்கரகோதண்டம்தண்டம்வாள்-சங்கம்இவைதுணையே-செயசெயா

அரசியல்.

கட்டியம்-வசனம்.

அகோரசாதிராசன் மகாதேசப்பிரகாசன்
ராசபரமேசுரன்-தேசாதீசரன்
ராசமார்த்தாண்டன்-ரணரங்கோதண்டன்
ராசகெம்பீரன்-தேசசம்பீரன்
பாஸ்கரகுலதீரன்-சிலாக்யமுள்ளவீரன்
புத்தியில்பிரகஸ்பதி-வித்தையில்சரஸ்வதி
நயகுணசீலன்-பரசனபாலன்
நல்லார்க்குமித்துரு-பொல்லார்க்குச்சத்துரு
சுசரிதகுணநேசன்-தசரதமகாராசன்
மநுநீதிகோணாமல்-சனவேதனைதோணாமல்
ஆதியில்ஒருகட்டமைகொண்டு-மாறுபடுபகையைவென்று
திங்கள்மும்மாரிபெய்ய-எங்கும்முப்போகஞ்செய்ய
செங்கோல்முகம்சாயாமல்-வெங்கோல்முகம்பாயாமல்

அறுபதினாயிரம்வருஷம் பசுவும்புலியும்ஒருதுறையில் நீருண்ணராச்சியபரிபாலனம்பண்ணின கீர்த்தியைச்சொல்லுகிற மார்க்கம். (௨)

விருத்தம்.

மகாராசன்அரமகாராசன்சன்ற
மகாராசன்மிகுசூரியவம்சராசன்
சுகாசன்கௌசலைநாயகிகைகேசி
சுமித்திரைஆம்தேவியர்கைதொட்டராசன்
மிகாசர்பணிந்திடஇந்திரனைக்காத்த
விசயதசரதராசன்அயோத்திவாழும்
செகாசன்ஒருவன்மனுநீதியாலே
தேசம்எல்லாம்ஒருகுடைக்கீழ்ச்செய்தாண்டானே (௩)

௨-தரு-சாவேரிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

ராசராசர்க்கும் - ராசன்தசரத - ராசன்இருந்தானே.

அநுபல்லவி.

தேசதிலகன்அயோத்திநகர்க்கொரு
திலகன்ரவிகுலதிலகன் ஆகவே-ராச

சரணங்கள்.

௧. மந்திரதந்திரமும் நித்தியநைமித்தமும்
மகங்களும்தினம் செழிக்கவே
வன்புலியொடு பசுவும்ஓர்துறைநீர்
உண்டுகொண்டுபயம் ஒழிக்கவே
இந்திரபதமும் குபேரதனங்களும்
எவரும்சிறிதென்று பழிக்கவே
எங்கெங்கும்முப்போகம்விளையவே
திங்கள்தோறும்மும்மாரி கொழிக்கவே—ராச

௨. நாலுவர்ணாசிரமங்களும்சொன்ன
நடைபுரண்டு பாயாமலே
நரர்க்கும்வேறுள்ளஉயிர்க்கும்வயதுகள்
நடுவிலே தேயாமலே
கோலம்ஆகியமிருகமும்பறவையும்
குறிகடந்து மேயாமலே
குடியில்ஆதியில்ஒருகட்டமைகொண்டுசெங்
கோலின்முகம் சாயாமலே—ராச

௩. மறுமங்கையருக்கும்மறுமன்னவருக்கும்
மார்பும்முதுகும் கொடாமலே
வளரும்அஷ்டலட்சுமியும்தன்அர
மனைவிட்டடியை எடாமலே
அறுபதாயிரம்வருஷமும்ஏ
காதிபத்தியம் விடாமலே
ஆரும்மனதில்விசாரத்தால்ஆ
ராய்ச்சிமணியைத் தொடாமலே—ராச

சக்கிரவர்த்திமக்கள்வேண்டிவருந்தல்.

விருத்தம்.

இருந்ததசரதராசனெடுநாளாய்ப்புவிஆண்டேன்
இனிமேல்இந்தப்
பெரும்புவியைஆள்வதற்கும்முத்தியிலேசேர்ப்பதற்கும்
பிள்ளைகாணேன்
அருந்தவனேகுலகுருவேவசிஷ்டமுனியேபிள்ளை
அதைதான்காண
வருந்துவதில்லாவகையைமொழிஎன்றான்இதற்கென்ன
வழிஎன்றானே (௫)

௧-தரு-ஜுசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிள்ளைஇல்லாதபாக்கியம்-நான்- பெற்றிருந்தென்னசிலாக்கியம்.

அநுபல்லவி

வள்ளலேசென்மமதுடன்ஏன் ஜெருகாலே
வசைகொண்டேன்தசரதன் தான்புவிமேலே
கன்னிஆனதுகெடுகவ பார்த்தாலே
காய்உண்டோகனிஉண்டோ அதுபோலே - பிள்ளை

சரணங்கள்.

௧. மறுவில்லாதஇந்தசூரியவங்கிசம்இது
வளரும்வங்கிசம் ஆச்சே-இது
மழைபெய்ந்தடிமறைந்தாற்போலஎன்
பட்டிலேநின்று போச்சே
அறுபதாயிரம் வருஷமும்இருந்தும்
அரசுதான்இனி ஆளக்கொண்டிருந்தும்
குறைவில்லாதஅந்த சஞ்சீவிமருந்தும்
கொடுக்கும்தெய்வமும்நீ தானேகிடைத்திருந்தும்- பிள்ளை

௨. பெருக்கக்காண்பதேகாண்பதல்லாமல்
பெறுவதொன்றும் காணேன்-மிகு
பிச்சர்போலநெடுநாளும்உண்டஉண்ட
எச்சிலைஉண்ணல் ஆனேன்
விருத்தன்நான்இனித் தவசிலேசெல்ல
வேறும்அல்லால்புவி ஆள்வதுசிறப்பல்ல

இருந்தும்வாழைஅடி வாழைஆய்ப்புல்ல
இவன்மகன்இவன்ஆம் என்றுபேர்சொல்ல—பிள்ளை

௩. மோந்தால்முத்தியும்வரும்பார்த்திலே
முத்தியுங்கூட வருமே - மேலே
சாய்ந்தால்உடம்பெங்குங்குளிருமே
தழுவஇன்பந் தருமே
வாய்ந்தபொன்னுல களவும்போய்ச்சனி
மண்டலமும்இருந்திக் கொண்டேன்புவிதனில்
வந்தினேன்இல்லையே ஒருபிள்ளைக்கனி
என்னவிடென்ன வாசல்எனக்கினி—பிள்ளை

* * *

பெருமாள்சந்நிதியில் தேவர்கள் முறைபாடு.

விருத்தம்.

மன்னவன்ஆம்தசரதபூபதிஇவ்வாறு
மக்கள்இல்லாத்துன்பத்தைவசிஷ்டனோடே
சொன்னஉடன்அந்தமுனிவனும்தியானித்தான்
சுரர்முதல்ஆனவர்கள்மகமேருமேலே
இன்னஅரக்கனாடுங்கிவாழ்ந்தும்போய்
சிறைக்கருடன்மீதினில்அச்சுதனும்வந்தான்
பொன்னின்மலர்அவன்பதத்தில்இறைத்தேகண்ணீர்
பொழிகின்றார்அரக்கர்துன்பம்மொழிகின்றாரே. (௬)

௨ - தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணால்இரங்கிப் பார் அய்யா - பார்த்துக்
காவாவிட்டால்இனிமேல் ஆர்அய்யா

அநுபல்லவி

அடைக்கலம்என ஓடி வந்தோமே - நாங்கள்
ஆலைக்கரும்புபோலநைந்தோமே - சாமி—கடை

சரணங்கள்.

௧. சொற்காதிபுவனம்எல் லாம்தாவிக் - கொண்டு
துரத்துக்கும்பகர்ணன் தனைஏவி - மற்ற
பக்கம்இந்திரசித்தென்னும் பெருங்கோவி - ஆளப்
பண்ணினைத்தானே ராவணன்பாவி

ந.

செக்குள்ளேஅகப்பட்ட   எள்ளுப்போலே-அரக்கர்
கைக்குள்ளேஅகப்பட்ட   எங்கள்மேலே-உனது —கடை

௨. அளகேசன்புஷ்பகம்   தனைவிட்டான் - இலங்
கையிலேசூரியன்தேரும்   வரவொட்டான் - மெத்தத்
தளரஇந்திரனைக்கூடச்   சிறையிட்டான் - அரக்கன்
சருவகொள்ளைஅடிக்கத்   தலைப்பட்டான்
எளியோர்களைஇப்படி   ஈனர்கொடுக்கல்-ஆமோ
கிளியைவளர்த்துப்பூனை   கிட்டக்கொடுக்கல்-ஆமோ—கடை

௩. பாவிஅரக்கன்பேச்சே   மேலாச்சு - நாங்கள்
படைத்தபலங்கள்எல்லாம்   மேல்ப்பூச்சு - நல்ல
பூவைவண்ணாஅரக்கன்   கைவீச்சு - வெள்ளிப்
பொருப்பேஅறியும்இனி   என்பேச்சு
ராவணன்வதைக்கிறான்   எங்கள்மேல்என்ன - கண்டோ
தேவரீகேளாவிட்டால்த்   திக்குத்திசை வே - றுண்டோ

கடை.

* * *

தேவர்களுக்குப்பெருமாள்அருளிப்பாடு.

விருத்தம்.

இசையும்வானவர்கள்கூடி இப்படிசொல்லமாயோன்,
அசையும்வாள்அரக்கர்தம்மை அகற்றுவோம்அஞ்சவேண்டாம்
தசரதன்மதலைஆகித் தாணியில்வருவோம்நீங்கள்
திசைதொறும்கவிகள்ஆகிச் சேருமென்றுரைசெய்வானே (௬)

௫-தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அவதாரஞ்செய்   திடுவீரோ - நீங்கள்
அரக்கர்பயந்தீர்த்   திடுவீரோ

அநுபல்லவி.

கவனவாலியுஞ்சுக்கிரீவனும்   ஆகிக்
கண்ணுபிரானும்கதிரோனும்   யோகி

அவதாரம்.

சரணங்கள்.

௧. அதிகம்ஆனருத்திரன்   அங்கதன்அனுமசிலன்
அக்கினியேசேனைக்   கதிபன்ஆனநீலன்

சதுர்முகப்பிர்ம்மாவே   சாம்பவன்எனும்காலன்
தரும்உபேந்திரன்வாலி   தனக்குப்பாலன் - ஆக

அவதாரம்.

௨. சங்கமும்சக்கிரமும்   சேஷனும்பரிவாகத்
தம்பியர்ஆய்வரத்   தானோநாம்பூலோகத்
துங்கன்ஆனதசரதராசன்குறை   போகச்
சுறுக்காவருவோம்வரும்அதின்முன்   ஆகப் -போய்

அவதாரம்.

௩. வானரவடிவாலும்   மானிடவடிவாலும்
தூன்அல்லாதரக்கன்   சாகானேஒருக்காலும்
ஆனபடியினாலே   அணைவரும்புலிபோலும்
கானத்திலிரும்வந்து   காக்ஷிதரமென்மேலும்-வந்து

அவதாரம்.

* * *

பெருமாள்திருஅவதாரம்.

விருத்தம்.

இவ்வகையாய்மாயவன்முன்னடந்ததென்று
எண்ணிமுனிகலைக்கோட்டுமுனிவனாலே
அவ்வகைஆம்புத்திரகாமேஷ்டிதன்னை
அயோத்திஅரசனைக்கொடுசெய்வித்தபோதில்
பைவளரும்பாம்பணைமேல்ப்பள்ளிகொள்ளும்
பரமனேதசரதன்செய்பாக்கியத்தாலே
மெய்வகைசேர்உலகெல்லாம்மனுவிக்கியான
விதிசெய்வான்அவதாரம்அதுசெய்வானே (௭)

௬-தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பரப்பிரம்மசொருபமே ஸ்ரீராமன்ஆகப் பாரில்வந்ததுபாரும்

அநுபல்லவி.

வரத்தினால்அரக்கரா வானத்தில்   ஏற்றவும்
வானத்தில்த்தேவர்கள்மலர்மாரி   தூற்றவும்— பரப்பிரம்ம

சரணங்கள்.

௧. புத்திமுனிவன்கலைக்கோட்டுமாமுனி
புண்ணியயாகபலன்   தேற

சத்தியதசரதற்கறுபதினாயிரம்
சம்வச்சரபலன்நிறை வேற
சித்திரைமாசம்நவமிகடகம்
செழும்புனர்பூசம்தேன் ஊற
ஒத்தைக்கிரகங்கள்நால்வரும் பதினொன்றில்
உச்சத்தில்ஐவரும் ஏற-ஆதி-பாப்பி

உ. சீர்ஆரும்லட்சுமணன் சத்துருக்கன்சுமித்
திரைவயிற்றில்நின்று பேர
பாரார்புகழ்கைகேசிவயிற்றில்நின்று
பரதன்வந்துபுவி சேர
ஆராலும்கொள்ளாதஆனந்தம்மேல்க்கொண்டு
அம்புவியோர்இடர் தீர
கார்ஆரும்குழல்வல்லி யருக்குமேலான
கௌசலைகண்களி கூட-ஆதி-பாப்

ங. தேவர்முனிவர்புகைதீர்ந்தோமென்று
சென்னியில்பூந்துழாய் முடிக்க
பூவுலகத்துளவேதியர்எல்லோரும்
புகழும்வேதாகமம் படிக்க
பாவிஇலங்கையின்மேல்ச் சூரியன்தேரில்உள்ள
பச்சைப்பரியேழும் நடிக்க
ராவணன்ஆதிஇருக்கின்றராட்சதர்
எவர்க்கும்இடக்கண்கள் துடிக்க-ஆதி-பாப்

*

கௌசிகர்ஸ்ரீராமனைக்குறித்துக்கேட்குதல்.

விருத்தம்.

மைந்தர்இவ்வாறுவந்துவசிஷ்டனால்பேரும்பெற்றார்
அந்தநாள்விசுவாமித்திரன்அணித்தசரதன்முன்வந்தான்
இந்தநாள்எனதுவேள்விராமனால்முடியவேணும்
தந்திடஇதுநல்வேளைதாவென்றான்காவென்றானே (அ)

எ-தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமனைத்தருவாய்-செகரட்சக-ராமனைத்தருவாய்

அநுபல்லவி.

தாமசம்செப்பாதே - தசரதேந்திரா இப்போதே—(ராம)

சரணங்கள்.

க. அரன்பக்கம் செல்வேன்
அரிமுன்னே சொல்வேன்
இரண்டும்தப்பினால்உனைவிட்
டெவரால்ப்பகை வெல்வேன்-ராமனை

உ. தாடகைப் பாவி
தவிர்த்தாள்என் வேள்வி
பீடைவாராமல்க்காத்தால்ப்
பிழைக்கும்என் ஆவி-ராமனை

ங. உம்பர்வி சாரம்
ஒழிக்கஅந் நேரம்
சம்பரனைக்கொன்றாயே
தயவாய்இந் நேரம்-ராமனை

ச. கோபத்தில் ருத்திரன்
குருவிசுவா மித்திரன்
ஆபத்துகாக்கவேணும்
அதனால்உன் புத்திரன்-ராமனை

*

சக்கிரவர்த்திஅதைமறுத்தல்.

விருத்தம்.

சொல்லிதுமுனிவன்சொல்லத்துடித்தனன்தசரதேந்திரன்
சில்லிதுவேள்விக்காக்கச்சிறுபிள்ளைராமன் என்றான்
சல்லியம்செய்யும்அந்தத்தாடகைதனைநான்கொல்வேன்
பல்பலஉடையேன்திராணிபார்என்பான்நேர்என்பானே. (கூ)

அ-தரு-ஸ்ரீராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமன்எதுக்கு-இதுக்கோஅவன்வர வேணும்
நான்வருகிறேன் காணும்

அநுபல்லவி.

பூமிஅரசன்என்றுநான் இருந்தென்னகொள்ளை
சாமிஅவன்எந்த குழந்தைப்பிள்ளை-ராமன்

சரணங்கள்.

க. என்இந்த   தோத்திரம்-தாடகை
எனக்கெம்   மாத்திரம்
வானுளோர்கள்வந்துதடுத்தாலும்   அடிக்கிறேன்
நானேவந்தன்வேள்வியை   முடிக்கிறேன் - ராமன்
உ. பேயைக்கொல்ல   தரிதோ - காரியம்
பெரிதோவீரியம்   பெரிதோ
ஆயுதம்பிடிக்கறியான்கேளாய்ஒரு   சொல்லை
வாயில்முலைப்பால்மணம்மாற   இல்லை - ராமன்
௩. கலைஞன்   கொண்டாய்-என்முன்ஒரு
காலும்வாராள்   கண்டாய்
அவ்ஊரும்படையையும்   அடிக்கிறேன்பாராய்பாராய்
இவனுள்என்னைமுந்திரு   வாராய்வாராய்-ராமன்

வசிஷ்டர் தகவுரைத்தல்.

விருத்தம்.

இனமதில்அயோத்திவேந்தன்இதுசொல்லவிசுவாமித்திர
முனிவனும்கோபம்செய்தான்முன்னின்றவசிஷ்டன்கண்டான்
உனதுமைந்தனுக்குமன்னுயோகநாள்வந்ததென்று
கனமுடன்விரித்துச்சொல்லிக்காட்டுவான்கூட்டுவானே. (௰)

௯-தரு-முகாரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மோசம்வாராதையா — நான்சொன்னவார்த்தை - மோசம்வாராதையா

அநுபல்லவி.

கோசிகன்பின்னேராமனைக் - கூட்டிவிடுவாய்சொன்னேன் - மோசம்

சரணங்கள்.

க. உப்புநீர்மேகம்சேர்ந்தால்-உலகில்பிர   வாகம்
அப்படிஉன்மகனுக்கு-அடுத்ததே   யோகம்—மோசம்
உ. மறுஉண்டோவசிஷ்டன்சொல் -வார்த்தைக்கும்   ரண்டோ
பொறுபொறுமுனைப்பாகாப் - புதைப்பாரும்   உண்டோ
மோசம்.

௩. சோதிக்கவேண்டாம்நான்   சொல்வதே   சீலம்
ஆதித்தன்குலத்துக்கின்   றனுகூல   காலம்-மோசம்

கௌசிகர்ஸ்ரீராமருக்குநீதிசொல்லுதல்.

விருத்தம்.

முனிவசிஷ்டன்இவ்வாறுசொல்லவேந்தன்
செழுமையாலேராமனைலட்சுமணனோடே
இனிதழைத்துக்கூட்டிவிட்டான்வழிக்குவேண்டி
இருவரும்மந்திரம்கொண்டார்வெயில்படாமல்
தனிநடந்தார்வேள்வியில்த்தாடகையும்வந்தாள்
சாமியும்பெண்ணெனநினைந்தான்முனிவன்அந்த
நினைவறிந்தான்பெண்இவளோஅல்லராமா
நில்லென்றான்இப்போழுதேகொல்லென்றானே. (௰௧)

௰-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பெண்இவள்அல்ல   ராமா   —தாடகை
வண்ணம்கொண்டமன்இவள்   ராமா

அநுபல்லவி.

மண்ணில்மெத்தஉயிரை   வதைத்ததிந்த   நிர்மூடக்
கண்ணில்கண்டதுகோடி   காணுதனந்தம்   கோடி—பெண்

சரணங்கள்.

க. இஷ்டமாமுனிவர்   என்றொருபேர்தரித்
திருக்கும்கடவுக்கிவள்   பெருத்தமந்தாகினி
அட்டகாசம்செய்தால்   அதுஒருபாடாவி
அண்டகூடமெங்கும்   இடியுமேஅரிகரி
எட்டுத்திசையிலும்ஓடி   முட்டுமேஇவள்   ஆதாளி
முட்டினால்மலையும்பிளந்   திட்டிடுமே   தாளிதாளி
எட்டியும்பார்க்கக்கூடுமோ   கிட்டிஒரு   காளிகூளி
விட்டுநான்சொல்லவேணுமோ   மட்டிலாப்   பாவசண்டாளி—பெ
உ. ஆசிக்குணமொருலோப   குணத்தால்த்தட்டும்
அதுபோல்இம்மருதத்தை   அழித்தாலும்அழிக்கட்டும்
மாயையிவள்போர்சொன்னால்   முனிவர்க்கும்பல்லுகிட்டும்
வற்றலன்னெய்மைத்தள்ளி   வைத்தாளோஇந்தமட்டும்

தாயதிசைஆனையெட்டும்   ஈனறும்பாய் - விழக்ககட்டி
வாயில்ஒருபல்லிடுக்கி   வேல்அடக்கு - வாளேகூட்டி
தீயவடவாக்கினிபோல்ப்   பாயுவாள்கை - கனைநீட்டி
பேயையும்பிடுங்கித்தின்னும்   பேயெனவந்தவெள்ளாட்டி

பெண்.

௩. ஒருகுமதிஎன்னும்பெண்ணைப்   பிளந்தான்இந்திரன்அப்போது
ஒருபெண்கியாதியைமாயன்   ஒழித்தானேபுவிமீது
பெருமானேஇவள்அந்தப்   பெண்ணெனவுங்கூடாது
பெண்ணென்றால்ப்பேயும்இரங்   குமேஅதிவளுக்கேது
இருடிகள்உடம்பைமெத்த   உரிசையென்று - கண்டுகொண்டோ
பெருமகம்செய்வோரைக்கொல்ல   வருகிறாள்இ - தென்னமுண்டோ
நிருதிஇவளைப்பெண்ணென்று   கருதுகிறாய்- என்னகண்டோ
ஒருகொடியில்க்கொல்லவேணும்   குருமொழித - னக்கும்ரண்டோ

பெண்.

தாடகைமுதல் ஆனவர்கள்வதம்.

விருத்தம்.

செய்திகளைஇவ்வாறுரைக்கச்சிரமேல்க்கொண்டேரகுராமன்
வெய்துவணங்கிக்குருவிசுவாமித்திரன்சொல்லேவேதச்சொல்
மையம்எனவேமகம்காக் கவரிவில்வளைத்தான்தாடகையும்
எய்தபாணம்பட்டுருவிஎழுந்தாள்மலைபோலவிழுந்தாளே (௰௨)

௰௧-தரு-நாதநாமக்கிரியைராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கொடியதாடகைபாவிவிழுந்தாள் - பொல்லாக்
கொடியதாடகைபாவிவிழுந்தாள்.

அநுபல்லவி.

கொடியதாடகைபாவிவிழுந்தாள்   செம்பொன்
முடியன்ராவணன்வெற்றிக்கொடிவிழுந்தாற்ப்போல் - கொடிய

சரணங்கள்.

௧. உரைத்ததேவர்துன்பம்   மறக்க - காலன்
ஒருக்காலுங்காணுதருகிகண்டு   பறக்க
அரக்கர்ஆதிக்கங்கள்   இறக்க - நல்ல
அநுகூலகாலங்கள்முனிவர்க்குப்   பிறக்க—கொடிய

௨. மூதண்டகோடிக்கப்   பாலே - இசை
முழுவசவிசுவாமித்திரன்சாலைக்குப்   பாலே

கோதண்டபாணிஅம்   பாலே-நிலை
குலைந்துபாண்டலறிக் கொண்டுமப்   பாலே-கொடிய

௩. நடலைவஞ்சனைமாயம்   தடுக்க-சுவாமி
நாள்க்கொண்டுமுதல்ப்பலிஅரக்கரைக்கொடுக்க
கடினசுவாகுபட்டுப்   படுக்க-ராமன்
கணையாலேமாரீசன்கடல்லோட்டம்   எடுக்க-கொடிய

அகலிகைசாபவிமோசனமும்-சரித்திரமும்.

விருத்தம்.

தாடகைதான்விழுந்தபின்புதேவர்சொல்லச்
சகலபடைகளுங்கொடுத்தேமுனிவரெல்லாம்
கூடவரக்கௌசிகையேமுதல்ஆம்தீர்த்தம்
கொண்டாடிகௌதமன்ஆசிரமம்சேர்போதில்
காடதிலேரகுராமன்பதத்தூள்சிந்தக்
கல்லுருப்போய்நல்லுருவால்விளங்குகின்ற
பாடகக்கால்அகலிகையைஇவள்ஆர்என்னப்
பரிந்துவிசுவாமித்திரமுனிபகர்கின்றனே (௰௩)

௰௨-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தேவிஇவள்ராமா-கௌதமன்-தேவிஇவள்ராமா.

அநுபல்லவி.

ஆவலினால்ப்   பண்டு
மேவல்மனம்   கொண்டு
அந்தரம்   நாடிய
இந்திரன்   கூடிய - தேவி

சரணங்கள்.

௧. மாபத்தியால்க்கங்கைஆட்டத்தை   பெற்ற
மாமுனிகண்டுவெகுண்டுபயம்   சுற்ற
கோபத்தினால்இடுஞ்சாபமொழி   மெத்த
கூறையிலேகரும்பாறைவடி   வுற்ற - தேவி

௨. வெம்பியமாமுனிகண்ணில்எதிர்ப்   பட்ட
வேளையில்க்கண்டுபொறுமல்முனி   இட்ட

ச

அம்பொற்முடிதொட்டடிஅளவும் முட்ட
ஆயிரம்கண்அந்தவாசவனுக் கிட்ட - தேவி

௩. ஞானத்திறல்உன்போலஇனிபேர்க் கெந்த
கன்மையுண்டாமோஅறியேன்இப்போ திந்த
கானத்திலேஉன்றன்பாதத்தூள்கள் சிந்த
கல்உருமாறிஅகலிகைஆய் வந்த - தேவி

ஸ்ரீராமர்சீதையைக்கண்டு ஐயுறல்.

விருத்தம்.

இடம்ஆம்விசுவாமித்திரன்இந்தச்-சேதிஉரைக்கலட்சுமணன்
உடனோடந்நமிதிலையில்ப்போய்-ஒருமாமணிமேடையில்ச்சீதை
நட்டவாள்காணத்தன்னை அந்த - மயிலைத்தானும்சுராமன்
கடல்வாய்வருசெந்திருனைவே-கண்டான்விரகம்கொண்டானே. (௰௪)

௰௩-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரோஇவர்ஆரோ-என்ன-பேரோஅறியேனே.

அநுபல்லவி.

கார்உலாவும்சீர்உலாவும்மிதிலையில்
கன்னிமாடந்தன்னில்முன்னேநின்றவர்—ஆரோ

சரணங்கள்.

௧. பண்ணிப்பதித்தாற்போல் இருஸ்தனமும்-கூடப்
பாங்கியர்கள்இனமும் துணைத்தனமும்
எண்ணத்தாலும்வண்ணத்தாலும் பங்கயப்
பெண்ணைப்போலக்கண்ணில்க் காணும்மங்கையர்-ஆரோ

௨. பாக்கியம்என்பதிவர் தெரிசனமே-அதிங்கே
பலித்ததென்னபுண்ணியமோ மனமே
மூக்கும்விழியும்தீர்க்கமாய்இன்னமும் பெண்கள்
பார்க்கப்பார்க்கநோக்கம்கொள்ளுமே கண்கள்-ஆரோ

௩. சந்திரபிம்பமுக மலராலே-என்னைத்
தானேபார்க்கிறார் ஒருக்காலே
அந்தநாளில்த்தொந்தம்போலே உருகிறார்
இந்தநாளில்வந்துசேவை தருகிறார்-ஆரோ

கௌசிகர்ஸ்ரீராமர்வரலாறுசொல்லுதல்.

விருத்தம்.

மனதில்இந்தப்படிநினைந்துமறுநாள்எழுந்துமகம்செய்யும்
கனகமணிமண்டபத்தினில்ப்போய்க்காகுத்தனும்தம்பியும்இருந்தார்
அனையகாலத்திவர்பெருமைஅருமைதெரியஉரையுமென்றே
சனகனுரைக்கக்கௌசிகனுந்தரிப்பானிவர்வம்விரிப்பானே. (௰௫)

௰௪-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆர்என்றெண்ணுமேலோரும் -இவன் - அதிசயங்களைச்சொல்லக்கேளும்.

அநுபல்லவி.

சூராதிசூரன் ராமனெனும்பேரன்
சுகுணதீரன்ரவி குலகுமாரன்—இவனை-(ஆர்)

சரணங்கள்.

௧. ஆதியில்த்தசரதன்புத்திரகாமேஷ்டி
யாகம்செய்யவென்று தொடுத்தான்-வந்த
பூதம்தந்தபரமானத்தைநான்குகப்
பொன்னின்கமலத்தில் எடுத்தான்-அதில்
சோதிகோசலைக்கொன்றும் கைகேசிக்கொன்றும்
சுமித்திரைக்கிரண்டுமாக கொடுத்தான்-மூத்த
பேதைகோசலை இடத்திந்தராகவன்
பிறந்தானென்கவலையை விடுத்தான்-இவனை(ஆர்)

௨. தலைஆம்பரதன்லட்சுமணசத்துருக்கன்
தம்பியர்இவனுக்கு நேயம்-மிகக்
கொலையாளன்சுவாகுவையும்சேனையையும்இவன்அம்பு
கொண்டுபோனதென்ன மாயம்-நான்
உலையாதென்வேள்வியை முடித்தானேஇவன்அம்பால்
உருண்டதேதாடகை காயம்-மெத்த
மலைபோலேவந்ததும் பனிபோலேபோச்சிந்த
மகாராசன்செய்தீ காயம்-இவனை-(ஆர்)

௩. நாதத்துச்சாபம்அகலிகைக்குக்காலினாலே
துடைத்தானே அவள்உடல் மாசை-சொல்லும்
பெருக்கமென்னஇவன் பிறக்கவேஉலகெங்கும்
பிறந்ததேசுகங்கள் ஓசை-உங்கள்

பருத்தவில்இவன்கைக்குப் போதுமோபோதாதோ
பார்க்கவேணும்இன்னோர் ஆசை-இங்கே
வரச்சொன்னாலும்வரக் கிடைக்குமோவழுவிலே
வந்தானேநீங்கள்செய்த பூசை-இவனே(ஆர்)

ஸ்ரீராமர்வில்வளைத்தல்.

விருத்தம்.

புங்கவன்ஆம்முனிவன்இந்தவாறுசொல்லப்
போர்வில்லைஅறப்பிறையாம்போலே
அங்குவரும்படிசெய்தான்இதைநாணேற்ற
ஆரும்என்றால்பருமகனேஆகும்என்றான்
செங்கமலனும்சனகனுடன்விண்ணவரும்மண்ணவரும்
திடுக்கிடவேஎல்லாரும்ராமன்கையால்
தாங்கருள்ள அந்தவில்லைவளைவுகாணத்
தொடக்கண்டார்இரண்டுதுண்டாய்விடக்கண்டாரே (௰௬)

௰௫-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வில்லானதுரண்டாய்-ஒடிந்து-விழுந்ததேபாரில்.

அநுபல்லவி.

கல்லியாணராமன்அனகன் கையால்மிதிலையில்வாழ்சனகன்(வில்)

சரணங்கள்.

௧. சுத்திபெறும்முனிவோர்கள்மங்கள சோபனங்கள்பலகூற
பத்துத்திசைவானவர்எல்லோரும் பனிமலர்மாரிகள்தூற
சித்தப்பிரமையாலேகால்இரு திசையானைகள்தலைசீற
கத்திப்பிடிஇடையாள்சானகிதான்எண்ணம்ஆனதுநிறைவேற(வில்)

௨. இங்காரபாகரவிகுலமே சிலாக்கியம்என்னஒளிவீச
உங்காரம்செய்தராசர்எல்லோரும் ஒருதத்தர்போலமுகம்கூச
இங்கேபெண்ணீடைதசெய்ததவப்பலன் லபிச்சுதென்றுபலர்பேச
செங்கரதன்அல்லால்ஒருவருக்கும் ஒப்பதொண்ணாதமகாப்பிரயாச(வி)

௩. திருமாகமாராஸஸ்திரகோடிகளும் சகலவேதங்களும்பாட
பெருமாமுனிவிசுவாமித்திரன்சொல் மறுவில்லாதபடிகூட
ஒருநாளனும்இந்தநிலைசதன்னை ஓர்க்கொணுமல்செவிமூட
திராமாஇனிஇவனேகோதண்ட இட்சாகுருவென்றுகொண்டாட(வி)

மிதிலைக்குச்சக்கிரவர்த்தியின்எழுச்சி.

விருத்தம்.

கண்அரியவில்லைதான்ஒடித்தபின்பு
கடைத்தூதர்கலியாணஓலைகாட்ட
அண்ணல்எனும்தசரதனும்பயணபேரி
அதுமுழங்கத்தேவியரும்படையுங்கூடத்
தண்டலைசூழ்சந்திரகிரிபிறவும்சென்றான்
சனகேசன்சதுரங்கதளத்தினோடே
என்அரியகளிப்பாகவழியேற்கொண்டே
எதிர்வந்தான்உடன்மிதிலைப்பதிவந்தானே- (௰௭)

௰௬-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராசன்ஆம்தசரதராசன் சனகமகா ராசன்பதிக்குவந்தானே.

அநுபல்லவி.

வாசவன்பணிராசக லேசங்கல்யாணஓலை
வாசகம்கண்டுவிசு வாசநேசம்உண்டாகி(ராசன்)

சரணங்கள்.

௧. கொட்டம்இடும்கெசமும்-அட்டமிடும்துசமும்
எட்டியகுதிரையும்-கட்டியதேர்நிரையும்
இட்டமுள்ளராசரும்-அட்டாளதேசரும்ஆய் கப்பணம்
பட்டவர்த்தனர்இணங்க
இட்டமற்றவர்வணங்க துலங்க
வட்டவெண்குடையும்முடிகளும் இலங்க
மகரதோரணங்கள்முறைமுறை
சட்டம்ஆனதிசைஎட்டினமேலும்பணை
பட்டில்லாமல்கூடகட்டியம்போட-பெண்கள்பாட-கொண்டாட-ராச

௨. உச்சமாணிக்கத்தாலே-ரசபல்லக்கின்மேலே
அச்சுதன்தாய்முதலா-மெய்ச்சியதேவிமாராகள்
இச்சையால்முன்னேபோ-கச்செய்துபின்னாகவே
பச்சைப்பைங்கிளிஎன்னவே பாங்கியர்
மொய்த்துக்கொண்டுதுன்னவே மின்ன
வக்கிரபாணிஎன்ன மலர்முகம் என்ன
மன்னனும்விண்ணனும்என்ன அதிசயம்

உச்சிமீதுகரம் வைச்சுமன்னவர்கள்
எச்சரிக்கைபேச-கவரிவீச-வெகுவிலாச-உலாச. (ராசன்)

௩. மெத்தப்பெருஞ்சேனைகள்-சுற்றத்துந்துமிபேரி
சத்தமேகம்போல்ஆர்க்க-அத்திசையிலேநின்று
சத்திரபதிசனகன்-நெற்றிநேர்ஆகவர
முற்றியகடல்மேலே புகுந்த
மற்றொருகடல்போலே
பத்திஆகஇருபடைகளும் கலந்து
பார்த்துரண்டுராசரும்முகம் மலர்ந்து
வெற்றிஎழிபு சத்திலேஅவனை
ஒற்றிஅணைத்துமாற்றி-மிகுத்தகீர்த்தி-படைத்தமூர்த்தி-அயோத்தி(ரா)

* * *

ஸ்ரீராமர்பவனிவருதல்.

விருத்தம்.

வந்ததசரதராசன்தன்னைமுன்னே
வந்திருந்தராமனும்தம்பியும்போய்க்கண்டார்
அந்தஇருவருந்தந்தைஅருளைக்கொண்டார்
அரசர்இருவரும்பின்னேவரமுன்சென்றார்
பந்தம்உள்ளமிதிலைவீதியிலேதேர்மேல்
பவனிவரும்ராமனைக்கண்டாரைகொண்டு
செந்திருவைநிகர்ஆனபெண்கள்பின்னே
செல்லுவார்மதிமயங்கிச்சொல்லுவாரே (௰௮)

௰௪-திபதை-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. சோதிநெடுந்தேர்மிதிலைவீதியினில்வரக்கண்டு
சுவாமிமுகங்காணவந்தார் வெகுமாதர்
பூதலந்தனில்இந்தஊர் மாதவம்என்னசெய்ததோ
புண்ணியன்இங்கேவந்தான்என்றார் வெகுமாதர்
௨. ஆடகலோகத்தமுதை ஈய்கள்மொய்த்துக்கொண்டதுபோல்
அய்யனைமொய்த்துக்கொண்டார் வெகுமாதர்
கோடைதனிலேதண்ணீர்ஓடைகண்டமான்கள்போலக்
கூடிக்கொண்டோடிவந்தார் வெகுமாதர்
௩. ஆடியும்வளையும்செம்பொன்னூலையும்மாலையும்விட்டாள்
ஆடைவிடாமல்நின்றாள் ஒருமாது

கேழ்விமுறையில்லையோ சுவாமிஉன்முன்னேஅம்பாலே ஒருமாது
கிழிக்கின்றான்மாரன்என்றாள்
௪. பெருத்தமலைபோல்வில்லை ஒடித்தாயேசீதைக்காக ஒருமாது
பெலத்தவன்நீயேயென்றாள்
வருத்தமோமாரன்கையில் கரும்புவில்லைஒடிக்க ஒருமாது
மாட்டாயோசுவாமியென்றாள்
௫. கண்ணுக்கோருருவாய்ப்பார்ப்போர்கண்ணில்எல்லாம்தோன்றும்இவன் ஒருமாது
கண்ணனேஆகும்என்றாள்
மண்ணும்விண்ணுங்கடந்தானைக் கண்ணால்வளைத்துக்கொண்டாளே ஒருமாது
வைதேகியேபெண்என்றாள்.
௬. சாய்ந்தொருவரையும்காணாள் சாமிதனையேகண்டாள் ஒருமாது
தனியனோராமன்என்றாள்
வார்த்தையும்உடைமைகளும்நூற்றுகிலும்சோர்ந்தாள்உயிர் ஒருமாது
மாத்திரம்சோராமல்நின்றாள்
௭. இங்கேஎன்உளம்புகுந்தான் கண்கதவினாலேமூடி ஒருமாது
இறுக்குவேன்இவனைஎன்றாள்
மருங்கைபோலென்மனது வள்ளல்பின்னேபோச்சுதங்கே ஒருமாது
வரக்கண்டதுண்டோஎன்றாள்
௮. தன்மருகனாகஇந்தமன்னனைப்பெற்றசனகன் ஒருமாது
தர்மவான்என்றுசொன்னாள்
கன்மனதுக்காரன்இவன் தன்மகளுக்காகவில்லை ஒருமாது
ஏன்வளைக்கச்சொன்னான்என்றாள்

* * *

சீதைசபாமண்டபத்துக்குவருதல்.

விருத்தம்.

பாவையர்இப்படிஉருகப்பவனிவந்தான்
படையாசர்தசரதனும்பலரும்வந்தார்
மாவிசுவாமித்திரனுடன்தம்பிமாரும்
மங்கிருக்கராகவனும்இருந்தான்இப்பால்
தாவுபுகழ்வசிஷ்டமுனிவார்த்தைகொண்டே
சனகன்உலாகொண்டுமணிமண்டபத்தில்
பூவுலகில்தேவர்நிறைமிகவந்த
பொருளி[illegible]யுந்தருளினாளே (௰௯)

௰அ-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அன்னைசாளகிலங்காளே-ராசாதிராசர்-அனைவர்க்குங்காட்சிதந்தாளே

அநுபல்லவி.

கன்னிமார்என்னும்தாரா-கணத்தில்ச் சந்திரனைநேரா
பொன்னின்ஒளியும்பூ மணமுங்கொண்டு தொடர்ந்து
மன்னன்சனகன்மகளி மண்டபத்தில்நடந்து—அன்னை

சரணங்கள்.

௧. சுந்தரபாதம்வைக்கவே ரத்தினச்சிலம்பின்
சோதிநிலத்தில்மொய்க்கவே பூமிஆகிய
தன்தாய்மகளுக் கென்னவே விரித்ததேமாந்
தளிர்போல்எங்கெங்கும் மின்னவே
அந்தஅமுர்தம்கண்ட இந்திரன்போலே தாரகம்
ஆகியராமன்முன்னே தோகையர் நடுவாக
கந்தமலர்க்கைவளைச்சோதியி னாலேரண்டு
கடைக்கண்கள்கொண்டுராமன் வடிப்பங்கள்கண்டுகொண்டு—அன்னை

௨. வீரராமன்கைதீண்டியே தொடும்போதவன்
மென்கைபிடிக்கவேண்டியே அம்மன்கைஆல்
வாரிசமலர்விரித்துக் காட்டும்சூரியன்போல்
மாணிக்கக்கங்கணம்தரித்து
சோரநடைகண்டு நோஆகாமல்மெத்தத்
துவளும்அன்னங்கள்போலக் கவரின்மங்கையர்சுற்ற
சீராமனைவிடுத்து ஆர்ஆருக்கும்துய்ய
தெய்வம்இவள்என்றெண்ணிக் கைகள்அஞ்சலிசெய்ய—அன்னை

௩. சீவியகூந்தல்மேலே பூரணச்சந்திரன்போல்
தெரிந்திடஒருக்காலே மாலிகைசூடி
தாவில்லாமல்முன்னாலே தேவர்கள்செய்த
தவம்வெளிவந்தால்ப்போலே
மூவுலகும்செலுத்தும் ராவணனுக்குப்பண்டு
முத்திகொடுக்கவந்த சித்திரவடிவைக்கண்டு
தேவிஇவள்என்றால் ராகவன்இந்தச்சின்ன
சிலையோஒடிப்பான்எழு மலை[illegible]ப்பான்என்ன—அன்னை

௪. தெரிசனம்காணப்போகுமோ சொல்லஎன்றாலும்
சேஷனாலேயும்ஆகுமோ இந்திராணிமுதல்
அரிவையர்க்குமெய்நாணுமே ராமனும்காண
அனந்தம்கோடிகண்வேணுமே
பிரமன்முதல்எதுவும் பெற்றவனுக்குநல்ல
உருவினில்இனிவேறு உடமைகள்என்னசொல்ல
அருமையாஉலகில்க்கல் யாணதினத்தில்பெண்கள்
திருமங்கில்யத்தில்இடும் திருஆகியஎங்கள்—அன்னை

ஸ்ரீராமர்மணக்கோலம்கொள்ளுதல்.

விருத்தம்.

சீலம்கொண்டிப்படிவந்த சீதைமாதரொடும்சென்றாள்
மூலம்கொண்டகௌசிகனும் முகுர்த்தம்நாளைஎன்றுசொன்னான்
ஞாலம்கொண்டவேதன்முதல் ஓராயிரத்தெட்டண்டமும்தன்
கோலம்கொண்டராமன்மணக் கோலம்கொண்டான்கொண்டானே.(௨௰)

௰௯-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமசாமிகொண்டகோலம்-என்-னாலேசொல்லப்போமோ

அநுபல்லவி.

கோமிஇலோராசன்முன் அனேக-கோடிமன்மதனேகிர்ஆக—ராம

சரணங்கள்.

௧. பாதகடகம் சேர்த்தி-மருங்கினில்
பசும்பொன்ஆடை போர்த்தி-மார்பின்
மீதுபொன்நூல் ஏற்றி-தன்நாமமும்
விளங்கவே சாத்தி
சீதைஆசைஇது எனப்பாராட்டி
தெரிந்தசந்திரசூரியர் அதைநாட்டி
ஓதிமாறுகா திலேஒளிகாட்டி-குண்டலங்கள்பூட்டி
ராம.

௨. சுமுகப்பட்டம் வரித்து-நவரத்தின
தொங்கல்மாலை பரித்து-முடிமேல்
விமலமகுடம் தரித்து-பீதாம்பரம்
மேனிமேலே விரித்து
கமலமா[illegible] ஆன்ஞாநாண

டு

கங்கணங்கள்செங் கையினில்ப்பூண
அமுர்தகிரணச்சந்திரன்போல் முகம்காண - யோக்கல்யாண
ராம.

௯. ஆகமிது வன்ன - வன்னம்
ஆனபணிகள் மின்ன - பச்சை
மேகம்போலே காந்தி - விளங்கும்
மேனியில்க்கலவை சந்தி
வாகுமந்தர கிரிமுறுக்குண்ட
வரகிரண மணிவகைகொண்ட
நாகரீகனே பூரம்ஜொலிமண்ட - வீரகோதண்ட
ராம.

கலியாணச்சடங்குசெய்தல்.

விருத்தம்.

சக்கிரபதியாகியராகவன்இவ்வாறு
சமைந்தநல்லமணவாளக்கோலம்கொண்டான
அக்கணமேதம்பியரும்கோலம்கொண்டார்
அரசர்களும்தசரதனும்மந்திரிமாரும்
திக்கில்உள்ளமுனிவரும்வேதியருங்கூடித்
திரைகடல்போல்மிகப்பொங்கிமிதிலைதன்னில்
முக்கியம்உள்ளபலசடங்கின்விதிகளெல்லாம்
முறைசெய்தார்கலியாணத்துறைசெய்தாரே. (௨௧)

௨௨-திபதை-மோகனராகம்-அடதாளசாபு.

கண்ணிகள்.

௧. கல்லியாணபேரிகை அடித்தார் - சனகன்
சொல்லியவார்த்தையைப் படித்தார்
எல்லாரும்ஆனந்தம் கூடினார் - அவர்
எங்கெங்குமின்றாசூடத் தாடினார்

௨. வாழைகமுகுகள் நாட்டினார் - நெடு
வானம்மட்டும்பந்தல் பூட்டினார்
ஆழிபோலேதிரை அமைத்தார் - அலங்
காரவேதிகை சமைத்தார்

௩. தாறுக்குத்தாள்உறை காட்டினார் - சந்திர
சூரியர்போல்க்கண்ணாடி

சாணுக்குச்சாண்மாலை தொடுத்தார் - தங்கத்
தாலமும்குடமும் எடுத்தார்

௪. பொன்னரிமாலைகள் வீக்கினார் - முத்தும்
பொன்னும்பவளமும் தூக்கினார்
கின்னரிவீணைகள் பாடினார் - மெத்த
கேளிக்கைமாதர்கள் ஆடினார்

௫. பூரணகும்பங்கள் பதித்தார் - முக்கிய
பூசுரர்வேதத்தால் துதித்தார்
தோரணத்தால்வெளி மறைத்தார் - எங்கும்
சொர்னவருஷமா இறைத்தார்

௬. மாணிக்கதீபங்கள் ஏற்றினார் - நல்ல
வாடைகஸ்தூரிகள் தேற்றினார்
ஆணிப்பொன்ஆடைகள் சாற்றினார் - பனிநீர்
ஆகத்தெருவெங்கும் ஊற்றினார்

௭. சந்தனத்தால்க்கோலம் தீட்டினார் - பஞ்ச
தருவையும்நன்றாக நாட்டினார்
சுந்தரப்பாலிகை கூட்டினார் - நறுந்
தூபமும்தீபமும் காட்டினார்

௮. பொனாலவட்டமும் பட்டமும் - திவ்விய
புஷ்பமும்கந்தமும் சந்தமும்
நன்னாவண்ணமாக கட்டினார் - எங்கும்
தங்கப்பொடிகளாக் கொட்டினார்

௯. மத்தளம்மல்லரி தாளங்கள் - பஞ்ச
வாத்தியம்ரசெக மேளங்கள்
திந்திகளார்ச்சகிர வாளமும் - இசை
செவிடுபடுமேஅண்ட கோளமும்

௰. சனகனும்தசரத ராசனும் - வா
சவனுடனேஅள கேசன்போல்
களிஅளசக்கோஷம் மீறினார் - வந்து
கலியாணமண்டபம் ஏறினார்

௰௧. வெள்ளைவிடையினை ஊர்ந்தார் - உமை
வேணிஅரன்வந்து நேர்ந்தார்
வள்ளியுங்கந்தனும் சேர்ந்தார் - மூத்த
மைந்தன்வல்லபையும் சார்ந்தார்

௰௨. வேதனும்வாணியும் நாடினார் - தே
வேந்திரன்இந்திராணியுங் கூடினார்
மாதவர்தேவர்மென் மேலே - அந்த
மண்டபம்சேர்ந்தார்இப் பாலே

௰௩. மங்களம்ஆம்ராமச் சந்திரன் - சூரிய
வம்சமணிஆன தந்திரன்
கங்கைமுதல்தீர்த்தம் ஆடினான் - மிகக்
கலவைச்சலவைகள் சூடினான்

௰௪. மாலைமகுட முகத்தணி - பட்டம்
வாகுவலயம் சரப்பணி
காலணிகைவளை பாரித்தார் - பதக்
கங்கள்முதல்அலங் காரித்தார்

௰௫. தனதாம்பரதன்கை நீட்டவே - மற்ற
தம்பியர்சாமரை ஆட்டவே
கனகரதம்கண்டு தாவினான் - ராமன
கலியாணவேதிகை மேவினான்

௰௬. எப்பொருளும்பெற்ற கோதையை - அஷ்ட
லட்சுமியும்ஆன சீதையை
ஒப்பனைசெய்யவும் தேடுமோ - என்
ஒருத்தனாலேசொல்லக் கூடுமோ

௰௭. பூமிஉள்ளோர்க்கெல்லாம் ஆவியை - நல்ல
பூவையெனும்சீதா தேவியை
சாமிஅருகினி லேதந்தார் - வசிஷ்
டரும்தருப்பைகொண்டு வந்தார்

௰௮. முத்தானதண்டுலம் விரித்தார் - வேத
முறைபோடங்கெல்லாம் தரித்தார்
உத்தமமந்திரம் விளைத்தார் - முனிவர்
ஓமாக்கினியை வளர்த்தார்

௰௯. தான்தருமங்கள் ஓங்கவே - ரா
க்ஷதர்போய்ப்பூமிபாரம் வாங்கவே
வானவர்க்கின்பம் சுற்றவே - ஓமம்
வலம்கொண்டெழுந்தது மெத்தவே
௨௰. சல்லாபன்ஆகிய நேசன் - சீதை
தன்னைஅந்தமிதி லேசன்
எல்லாருங்காணமுன் னாலே-சொல்லி
ஈய்ந்தானேராமன்கை மேலே
௨௧. அய்யனும்தையல்கை பிடித்தான் - கலி
யாணவிதியெல்லா முடித்தான்
செய்யவளும்திரு மாலும் -போலச்
சேர்ந்தெழுந்தாரேமென் மேலும்

* * *

ஸ்ரீராமர்அக்கினிவலம்வருதல்முதலியதுகள்.

விருத்தம்.

ராகவன்சீதையைப்பாணிக்கிராணம்செய்து
நற்றீயைவலம்வந்தான்சீதைபாதம்
மோகமுடன்பற்றிஅம்மிமீதில்வைத்தான்
முக்காலும்அருந்ததிமுன்காட்டினான்பின்
ஏகமனதுடன்முனிவர்தந்ததாய்மார்
எல்லார்க்கும்சேவித்தான்அப்பால்இன்பம்
ஆகஒருநன்மனையில்ச்சீதையோடும்
அமர்ந்திட்டான்அண்டம்எல்லாம்சுமந்திட்டானே. (௨௨)

—*—

சோபனம்பாடுதல்

இதுவும் அது.-

மணம்உள்ளமலர்மாரிஅந்தவேளை
வானவர்கள்பொழிந்திட்டார்முனிவர்எல்லாம்
கணம்உள்ளஆசீர்வாதங்கள்சொன்னார்
காவலர்கள்பொன்மலர்கள்சொரிந்தார்தாய்மார்

பணம்உள்ளநல்வரிசைபலவும்ஈய்ந்தார்
பத்திஉள்ளபந்துக்கள்எல்லாம்மெய்த்தார்
குணம்உள்ளசுமங்கிலிகள்அங்கேவந்து
கூடினார்சோபனங்கள்பாடினாரே (௨௧)

௨௧-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சோபனம் சோபனம் - ராம - சுவாமிக்கும்சீதைக்கும்
சோபனம் சோபனம்.

அநுபல்லவி.

பூபன்தசரதமகிக்கும் சோபனம்
புண்ணியசனகபூபதிக்கும் சோபனம் (சோபனம்)

சரணங்கள்.

௧. நாமம்மேவியரதிக்கும்ரதிசுந் தரனுக்கும்-சோபனம்
சீர்மகள்இந்திராணிக்கும்இந் திரனுக்கும்-சோபனம்
மாமதிபெருகும்வாணிக்கும்அவள் வானுக்கும்சோபனம்
தாமரைமலர்த்திருவுக்கும்தாமோ தரனுக்கும்-தேவிக்கும்
[அரனுக்கும்-சோபனம்—(சோபனம்)

௨. நேர்வருசுமந்திரன்முதல்மந்திரி நேசர்க்கும்-சோபனம்
பேர்பெறுவசிஷ்டன்கௌசிகன்முதல்ஆம்யோகீசர்க்கும் - சோபனம்
வார்முலைஅரம்பைமாதர்க்கும்எண்டிசை வாசர்க்கும்- சோபனம்
சேவைசெய்துமகமகிழும்ஐம்பத்தாறு தேசர்க்கும்-ராசாதி
[ராசர்க்கும்-சோபனம்—(சோபனம்)

௩. உருகௌசலைகைகைசுமித்திரைஎனும்தாய் மாருக்கும்-சோபனம்
பெருகுபரதன்முதல்ஆகியமூன்று பேருக்கும்-சோபனம்
ஒருமையாஇதுசொன்னவால்மீகர்கம்பர் இருவோருக்கும்சோபனம்
அருணாசலகவிநாடகம்இதுபடிப் பாருக்கும்கேட்கும்
[எல்லாருக்கும்-சோபனம்—(சோபனம்)

—*—

ஸ்ரீராமருக்கும்பரசுராமருக்கும்சம்வாதம்.

விருத்தம்.

திருமகள்ஆம்சானகிகல்யாணம்செய்து
செயம்உளதம்பியர்க்கும்விவாகங்கள்செய்து
வரும்வழியில்சகுனவிரோதத்தினாலே
மலைபோலேமுனிபரசுராமன்வந்தான்

பெருகுதசரதன்கண்டுநிற்கும்போது
பிரசண்டகோதண்டகுருராமன்தானும்
ஒருவரும்நேர்இல்லைஎனவில்லேந்தி
உரம்சொல்வான்உடனேஉத்தரம்சொல்வானே (௨௨)

௨௨-திபதை-கலியாணிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மண்ணில்அரசர்போலக் காணுகிறாயேஆசே
வாதமாகு ராம
கண்ணில்வேதியர்போலத் தோணுகிறாயேமல்க்
காரம்பாகு ராம

௨. தாடகைஎனும்பெண்மேல் சண்டைகொள்ளராசர்க்குத்
தான்விதியோ ராம
வேடர்தன்தொடுக்கும்வில்லைப் பிராமணர்தொடத்தில்
விதியோபாகு ராம

௩. ஆணல்பெண்கொலைசெய்யல் ஆமோஉனக்கிது
அடாதோராகு ராம
தான்ஆகப்பெற்றெடுத்த தாயைக்கொலைசெய்தாயே
தருமோபாகு ராம

௪. தருமமானென்னைப்பெற்ற தகப்பன்சொற்படிசெய்தேன்
தாய்க்கொலையோ ராம
குருவார்த்தைதடுக்காமல் நானும்செய்தேன்பெண்
கொலையோபாகு ராம

௫. சொத்தைவில்ஒடித்தத்தை மெத்தமெத்தவெண்ணிக்
கொள்ளாதேராகு ராம
கற்றவேதியன்என்று பொறுத்தேன்பொறுத்தேன்குதிக்
காதேபாகு ராம

௬. அந்தவில்லைவிட்டாயே இந்தவில்லையிந்தா
அடடாராகு ராம
இந்தவில்லேத்தேன்இதில் வைத்தஅம்புக்குவழி
எங்கேபாகு ராம

௭. அம்புக்குவழியில்லை நான்பிராமணன்இனி
அனுக்கிரகம்செய் ராம

பின்புத்திக்காரன்இரு பிறப்பன்உன்னோடேஎன்ன
பேச்சுபாரு ராமா

அ. சக்திசெபதபங்கள் எல்லாம்உன்சாத்துக்கே
தந்தேன்ராகு ராமா
வந்தவழிபார்த்துக்கொண் டோடிப்போவதேநல்ல
மார்க்கம்பாரு ராமா

ஸ்ரீராமர்அயோத்தியைச்சேர்தல்.

விருத்தம்.

இன்னவகைசொன்னாரகவனைவாழ்த்தி
இனியதவம்செய்யப்பரசுராமன்போனான்
அன்னவன்கைக்கொண்டவில்லைவருணராசன்
அடைக்கலமாகவைத்துவிட்டுராமச்சந்திரன்
மன்னவரும்தம்பியரும்தேர்மேல்க்கொண்டு
வாஅருகேதானும்மணித்தேர்மேல்ஏறி
மின்அனையசீதையுடனேசந்தோஷம்
மிகவந்தான்அயோத்திமாநகர்வந்தானே. (௨௫)

பாலகாண்டம் - முற்றும்.

*

வசனம்-௧-விருத்தங்கள்-௨௪-ஆக ௨௫.
தோடையம்-௧-திபதைகள்-௩-தருக்கள்-௰௮ ஆக ௨௨.

ஆக பாயிரம்-௧-றும்-காண்டம்-௧-றும்-கூடிய
கொச்சகம்-௧-வெண்பா ௨-வசனம்-௧-விருத்தம்-௩௰-ஆக ௩௪.

*

தோடையம்-௧-திபதைகள்-௩-தருக்கள்-௨௫ ஆக ௨௯.

*

ஸ்ரீ சக்கிரவர்த்தித் திருமகனார்
திருவடிகளேசரணம்.



ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது.

அயோத்தியாகாண்டம்.

சக்கிரவர்த்திமுடிசூடஸ்ரீராமனைவேண்டுதல்.

விருத்தம்.

வனிதைமணிச்சனகியுடன் அயோத்திமேவி
மணவாளராமன்என இருக்கும்நாளில்
கனிவுபெறப்பரதனைச்சத் துருக்கனோடே
கைகேயன்பால்விடுத்து சின்னாள்கழிந்தபின்பு
இனியதசரதன்வசிஷ்டன் மந்திரிமாரும்
இசைந்தபடித்தூறந்திடா கவனைக்கூவித்
தனிமகுடம்புனைஎனவே அவனுக்கன்பாய்ச்
சாற்றுவான்தன்கவலை ஆற்றுவானே. (க)

க-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தமனுத்தரவேணும்மகனே - ராமா - இந்தமனுத்தரவேணும்மகனே.

அநுபல்லவி.

இந்தமனுத்தரவேணும் மகனே-ராமச்
சந்திரனேபுவிஆளத்தகும்நீ - உத்தமனே—இந்த

சரணங்கள்.

க. அறுபதினாயிரம்வருஷ காலம் - வாழ்ந்தேன்
அதிலேகாணுதெலாம்கண்டறிந்தேன்இந்திர-சாலம்
பறவைதமோஎன்காய ஸ்தூலம் - இனிப்
பார்க்கவேணும்என்கண்ணால்நீபாராளும் கோலம்—இந்த

உ. முடியாதமோகாந்த காரம் - இச்சை
முதுமையிலும்அறவாமல் இருந்தென்ன-சாரம்
குடிதாங்கிஎனக்கொரூப காரம் - இந்தக்
குவலயம்தனைக்கொண்டுமுத்திகொடுப்பதுன்தன்-பாரம்—இந்த

௩. ஒருவன்அறுபதினாயிரத் தோளா - கங்கை
உதவிமுந்திகொடுத்தானே பகிரதன்முன்னோனா
இருநிலத்தில்அதுபோல்உன் பேணா - உதவ
எனக்குமுத்திதா ஆள்வாய் இனிஇந்தப்பாரை—இந்த

௪. உள்ளத்தைஉன்னோடேசொன் னேனே - முன்னாள்
ஊமைகண்டகனவாக உள்ளடக்கி-னேனே
பிள்ளைக்கலிதீர்த்தபெரு மானே - இந்தப்
பெரும்புவிநீகொள்ளமுத்தி பெறவேணும்-நானே—இந்த

௫. மலர்க்கையால்பிடிப்பாய்செங் கோலே - என்தன்
வார்த்தைதடுக்காய்எனவே உரைத்தேன்ஒரு காலே
தலைச்சுமைதந்தான்என்றென்தன் மேலே - சற்றும்
தாழ்வாய்எண்ணாதேஇனித் தாங்காதென்-னாலே—இந்த

௬. வாழைஅடிவாழையதா போலே - இந்த
மண்டலத்தைஆண்டாண்டு மன்னர்ஒரு காலே
சூழ்மதில்அயோத்தியைஅது போலே - நீயும்
சுமந்தாளவேணும்என்தன் சொல்வழியி-னாலே—இந்த

௭. குலத்தில்உள்ளகுறைஎல்லாம் வாங்கும் - உன்தன்
குணத்தாலேஉலகெல்லாம் மென்மேலே-ஓங்கும்
மலைக்குமலைஅல்லவோ தாங்கும் - இந்த
மண்டலத்தைநீதாங்கினால் என்கவலை-நீங்கும்—இந்த

ஐம்பத்தாறுதேசத்துராசர்கள்வருதல்.

விருத்தம்.

ஈங்கிவைஇப்படிமகனை இசையக்கூறி
இனியதசரதராஜன் கனிந்துசொல்லப்
பாங்குபெறுதேசராஜர்க்குராமன்
பட்டாபிஷேகம்இன்றைக் கறிவீரென்றும்
நீங்கள்எல்லாம்அயோத்திநகர் வருவீரென்றும்
நினைப்பினால்தன்ஓலை அனுப்பிவிட்டான்
ஆங்கவரும்மிகமிகச்சந் தோஷம்மீறி
அந்தந்ததேசம்விட்டே அணுகினார். (உ)

௨-தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

வந்தனரெங்கள்கல்யாண-ராமச்-சந்திரன்திருமுடி-காண.

சரணங்கள்.

௧. வந்தனர்அந்தந்த தேசத்துள்ளோர் நாடும்
மன்னன்இராமனைச் சொன்ன முடி-சூடும்
மந்திரிகளவையைக் கண்டெதிரே கொண்டு
தம்தலைமேல்வைத்துக் கண்களிலே ஒற்றி-(வந்த)

௨. வங்களர்சிங்களர் மாளவர் சோளர்
மராடர்கர்னாடர் மகதர் குருதர்கள்
கொங்கணர்டங்கணர் குச்சரர் மச்சர்
குலிங்கர்கலிங்கர் தெலுங்கர் முதலாக-(வந்த)

௩. சேரலர்சாளுவர் உற்களர் பப்பரர்
சேதிபர்குந்தளர் சிந்தர் அவந்திகர்
ஆரியர்சீனர் விதர்ப்பர் விதேகர்கள்
ஔட்டர்பராஷ்டிரர் சுராஷ்டிரர் முதலாக-(வந்த)

௪. புண்டரீகக்கண் இராமனுக்கு முடி
புனைச்செய்தான்இது காணப்பெற்றோம் என்று
மண்டும்ஐம்பத்தாறு தேசத்து ராசரும்
மன்றாடிமன்றாடிக் கொண்டாடிக் கொண்டாடி-(வந்த)

திருஅயோத்தியைஅலங்கரித்தல்.

விருத்தம்.

தேசதேசத்தில்வந்த ராசரெல்லாம்
தசரதராசன்சமுகம் தனிலேகூடி
நேசமுடன்ராமனுக்கு மகுடம்சூட்ட
நினைந்தபடிசெய்எனவே மகிழ்ந்துகூற
ஆசகலும்அயோத்திமா நகரில்வேந்தன்
ஆனைமேல்த்துந்துமிகள் அடிப்பீரென்னப்
பூசுரரும்ராஜர்களும் அறிந்துகொண்டு
பூரிப்பார்நகரம் அலங்கரிப்பாரே. (௧)

௧-இபதை புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

விசயதுந்துமி அடித்தார்-நகரெங்கும்
தசரதன்அருளியமொழி படித்தார்
திசைதிசைசொல்லி விடுத்தார்-வாசலில்
அசையும்விசயகேதனம் எடுத்தார்

௨. பூரணகும்பம் அமைத்தார்-தெருவெங்கும்
தோரணம்அழகுடனே சமைத்தார்
வாரணம் அலங்கரித்தார்-முனிவர்கள்
ஆரணம்முறைமுறை ஆர்ப்பரித்தார்

௩. மாலிகைதொடுத்து வைத்தார்-முத்துமுளைப்
பாலிகைபலபலபடுத்து வைத்தார்
ஆலயம்விளக்கு வித்தார்-பூமலர்ச்
சோலையும்சாலையுந்துலக்கு வித்தார்

௪. அத்திகள் பொருவாரும்-வெள்ளைவட்ட
முத்துக்குடைபிடித்து வருவாரும்
சித்திரம் புனைவாரும்-சந்தன
கஸ்தூரிகளபத்தால் நனைவாரும்

௫. சிந்தூரம் எழுதிடுவார்-பரிமளச்
சந்தனத்தால்த்தரை மெழுகிடுவார்
கந்தப்பொடிகள் இறைப்பார்-மாவணைப்
பந்தல்இட்டந்தரவெளி மறைப்பார்

௬. வானவர் வந்துதிரிவார்-அடிக்கடி
மேனகைஊர்வசி நடம்புரிவார்
கானவித் தைகள்படிப்பார்-அநேகினம்
ஆனகோகிலம்போல் சுதிபிடிப்பார்

௭. அங்கே எதிர்செல்லுவார்-இடம்காட்டி
இங்கேஇரும்இரும் எனச்சொல்லுவார்
சிங்கா சனம்அணிவார்-கௌசலை
கண்காணவேஇணை அடிபணிவார்

௮. சடங்குகள் செய்வாரும்-சமித்துகள்
இடம்படுதருப்பைகள் கொய்வாரும்
உடன்தையாத் திரிவாரும்-பொன்மழை
இடம்கண்டவாக்கெல்லாம் சொரிவாரும்

௯. ரம்பையர் நடமாட-வீணையில்
தும்புருநாரதர் இசைபாட
செம்பொன் மவுலிசூட்-ராமற்குச்
சம்பிரமம்சொல்லமன்னர் எழுந்தோட

௰. சல்லரி பேரிதாளம்-துந்துமி
மல்லரியொடுரை கெசமேளம்
சொல்லிய அண்டகோளம்-கிழிபட
எல்லையும்குமுறிடு மேகீளம்

௰௧. இப்படி கொண்டாடி-ராமனுக்கு
ஒப்பனைசெய்வதே தெனநாடி
அப்போது தோய்ப்பாடி-கூனியும்
வெப்புடனேவந்தாளே குடிகேடி.

* * *

கூனிகைகேசியைக்கலைக்கவருதல்.

விருத்தம்.

துதித்திடும்அயோத்திஆளும்-சொர்ன்னமாமுடிராமற்கே
பதித்திடவேணும்என்று-பலரும்ஆர்ப்பரிக்கக்கண்டாள்
இதைக்கலைத்திடுவேன்என்று-ராமன்வில்உண்டையாலே
கொதித்திடும்மனத்தாள்ஆன-கூனியும்தான்வந்தாளே (௪)

௩-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கூனிவந்தாளே-பொல்லாத-கூனிவந்தாளே

அநுபல்லவி.

போனநாள்ராமன்செய்த-பகையால்க் காய்ந்து
பூனைபோல்இருந்து-புலிபோல்ப் பாய்ந்து—(கூனி)

சரணங்கள்.

க. அடுக்குமோராமனுக்குஅரசொருக் காலே
ஆர்கொடுக்கிறார்அதனைஅறிகிறேன் மேலே
கெடுக்கிறேன்நானென்றுபுரக்கடத் தாலே
கிணறுவெட்டப்பூதம்புறப்பட்டால்ப் போலே—(கூனி)

௨. பூமிபரதனுக்குத்தகும்என உரைக்க
பூவைகைகேசிதன்மனமதைக் கரைக்க
ராமன்பகையைநினைந்திடிவாய் நுரைக்க
நடுங்கிவிழுந்தலைந்துபெருமூச் சிரைக்க—(கூனி)

௩. கொட்டியபஞ்சுபோல்உடம்பெல்லாம் தளர்ந்து
கூனிகுறுகுறுத்துவில்லைப்போல் வளைந்து
பட்டம்கட்டஒட்டுவேனோஎன் றலைந்து
பழையபகையைஎண்ணிப்பழமுள்ளு கலைந்து—(கூனி)

௪. சந்தானதுபோய்முடங்கிய காலி
சண்ணபோரலகாத்துக்கிரங்கிய தோலி
இந்திராதிதேவருக்கனு கூலி
இலங்கைராக்ஷதர்கள்குடிக்கொரு நீலி—(கூனி)

* * *

கைகேசிகூனியைக்கோபித்தல்.

விருத்தம்.

வந்ததொருகூனிமனதெரிச்சலாலே
வல்லிஎனும்கைகேசிதனைஎழுப்பி
இந்தமன்னன்ராமனுக்குமகுடம்சூட்ட
எண்ணினான்என்னும்மொழிசொல்லும்முன்னே
விந்தைமுகம்மலர்ந்துநவரத்தினமாலை
வெகுமானம்செய்திடவும்அவமானித்துச்
சிந்தைவஞ்சத்தொடுகலைத்தகூனிநாக்கைச்
சேதிப்பேன்என்றுகைகைபோதிப்பாளே. (௫)

௪-தரு-ஆநந்தபைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமனுக்குமன்னன்முடிதரித்தாலே-நன்மைஉண்டொருக்காலே

அநுபல்லவி.

பாமரமேஉனக்கென்னடி பேச்சே
பழம்நழுவிப்பாலில்விழுந்தால்ப்போல் ஆச்சே—ராமனுக்கு

சரணங்கள்.

க. இந்தவார்த்தைசொன்னாய் எனக்கெவர்நேரடி
பிரம்மாதிகளும்வரு வாரடி
இதுவேநல்ல சீரடி
வாயாடாதே பாரடி
ஆரடி எனக்குச்சரி—ராமனுக்கு

௨. பரசுராமன்கெர்வம் தீர்த்தவன்டி
நம்மையெல்லாம் காத்தவன்டி
பட்டங்கட்ட ஏத்தவன்டி
நாலுபேரில் மூத்தவன்டி
அவன்டி என்கண்மணி—ராமனுக்கு

௩. பரதன்பட்டங்கட்டாவிட்டால் நட்டியோ
அவன்சர்க்கரைக் கட்டியோ
என்பிள்ளைராமன் எட்டியோ
நான்தானென்ன மட்டியோ
வெட்டிப் போடுவேன்உன்னை—ராமனுக்கு-டு

*

இதுவும் கைகேயியைக்கூனியலைத்தல்.

விருத்தம்.

தங்கம்ஆம்அயோத்தியாளச் சொல்லியராமனுக்கே
தங்கமாமுடிகொடாமல் சடைமுடிகொடுப்பேனென்று
பங்கம்ஆம்கூனிமுன்னாள் பகையினாலேகைகேசி
மங்கையாள்எதிரேயின்னும் வார்த்தையால்கலைக்கின்றாளே (௧)

உ-திபதை-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. ராமன்முடிசூடும்என்ற பேய்மதிஉனக்குவந்தது அடி
ஏதம்மா - என்ன - வாதம்மா
சீமாட்டிஉன்பிள்ளைபரதன் - நாமாட்டி ஆனானென்ன
செய்கையே-அம்மா - கைகையே

௨. உன்மகன்ஊர்க்கில்லாவேளைத்-தன்மகனைமுடிசூட்ட அந்த
உன்னினள்-கோசலை-எண்ணினள்
மன்னவனும்அவள்சொன்ன-வார்த்தைகடவாமல்உன்னை
வாதித்தான்-ஏதோ-போதித்தான்

௩. கண்உள்ளபோதல்லவோகண்-காட்சிஎன்பதறியாயோ ஆர்க்கும்
கன்னியே-என்ன-உன்னியே
பண்ணிப்பயிரில்அல்லவோ-புண்ணியம்தெரியும்அடி
பாவியே-என்தன்-ஆவியே

௪. இடம்விட்டாதுயர்அடிச்-சுடும்என்றுசொல்லும்வார்த்தை அதுபோல்
உள்ளதோ-பெண்ணே-இல்லதோ

39

சடமிருந்தன்தாய்தந்தைமார் உன்னைவந்தடைந்தபோதில்
என்செய்வாய்-எனைக்-கெடுக்குவாய்

௫. ஊருக்கோபால்வார்த்துண்பது உடம்புக்கோபால்வார்த்துண்பது
ஓதடி-செய்வ-தேதடி
ஆருக்கும்பெண்ணைமண்பிள்ளை - ஆறுலும்தன்பிள்ளைஎன்ப அடி
தறியாயோ - ஒன்றும் - குறியாயோ

௬. கவுசலைபிள்ளைக்குப்பட்டம் - கட்டினால்உன்பிள்ளைக்கென்ன
கட்டுவாய் - எனைக் - கெட்டுவாய்
தவசிஆச்சங்கியாசிஆகிப் - பரதேசம்போவதேதல்ல பரதன்
சமர்த்தடி - கோபத்தை - அமர்த்தடி

௭. சீர்அனகோசலைவீட்டுச் - செழுக்கிக்கும்சிறுக்கிஆகச்
செகுத்தாயோ-என்னை-வகுத்தாயோ
யார்யார்கையில்என்னென்னபட-வேணுமோஅதெல்லாம்பட அடி
லபித்ததே-தெய்வம்-சபித்ததே

௮. பலகாலும்உன்னோடேநான்தான் - பாடுபட்டதெல்லாம்வீணா
பாதகி-அடி-தோதகி
இலவுகாத்தகிளிபோலே - போகலானாளஉன்னைநம்பி அய்யோ
எண்ணினேன்-வீம்பு-பண்ணினேன்

௯. கன்னும்தன்மகன்மேலேபோல்-உன்மகன்மேலேகோசலை
வைவாளோ-பட்சம்-செய்வாளோ
கண்ணில்என்னையேகரிக்கும்-பிடாரியிவளன்னைதானென்ன அடி
கரிக்குமோ - அன்பு - தரிக்குமோ

௰. நாயகன்கோசலைபிள்ளை - ஆனால்உனக்கென்னவரும்
நன்மையே - சொல்வாய்-உண்மையே
தாய்கையில்பசும்பொன்னிலும் - தன்கையில்த்தவிடேமேல்ஆம் ஆர்க்கும்
தையலே - இதென்ன - மையலே

௰௧. என்னசெய்வேனென்றயர்ந் - முன்னேகொண்டவரம்ரண்டும்
இல்லையோ-தாச-சொல்லையோ
மன்னவன்உனக்குச்சொன்ன - வார்த்தைக்குரண்டுசொல்வானோ அந்த
வாங்கடி-இதுவே-பாங்கடி

௰௨. ஒருவரம்பரதன்நாடாள-ஒருவரம்ராமன்காடாள
ஓதடி-இதே-சூதடி
இருவரும்கொண்டால்உனக் - கேடேசொல்லேன்டிமக இந்த
ராசியே-என்தன்னை-கேசியே

எ

கைகேசிக்கும் சக்கிரவர்த்திக்கும் சம்வாதம்.

விருத்தம்

அந்தவகைகூனி சொல்லமனதுவேறாய்
  அப்படியேசெய்வெனனமானர்செய்து
கொந்தளகம்சோரவினைசோரமண்மேல்
  குப்புறவேவிடந்திடுங்கைகேசிதன்னை
வந்ததசரதராசன்கையால்த்தூக்கி
  மலர்மேனிதுடைத்தெனதுமானேதேனே
பைந்தொடியேஉன்குறையதெனப்பட்டோலை
  படிக்கின்றாள்தசரதனும்நடுக்கின்றானே (௭)

ஏ-இபதை-நீலாம்பரிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. இந்தஅலங்கோலமும் இந்தமனோதுக்கமும் — மின்அரசே-உன்தன்
  வவைவந்ததோராகைகை
சிந்தையில்நினைத்ததை உள்ளபடிசெல்லிக்கிளிபோல் — மின்அரசே
  தெரியச்சொல்லாய்கைகை

௨. மருவும்மலரும்போலப் பாலும்நீரும்போலே — மன்னவரே-உந்தன்
  மானம்வைத்தாண்டீரோ
கருவிழிமணிபோலக் கரிசனம்ஆகஎன்னைக் — மன்னவரே
  கண்ணுண்டாய்க்காத்தீரோ

௩. காத்ததற்கென்னகுறை இப்போதும்என்னைஉன்னைக் — மின்அரசே - நீ
  கைகூடவிட்டேனோ
பார்த்தெதுகேட்டிலும் பந்தவரம்ஆனாலும் — மின்அரசே
  பரிந்துதருகிறேன்காண்

௪. மற்றொன்றும்இல்லைவரம் எனக்குமுன்நீர்கொடுத்த — மன்னவரே-என்றும்
  வரம்இரண்டும்கேட்கிறேன்
உற்றதுசொன்னால்அல்லோ அற்றதுபொருந்தும்நான் — மன்னவரே
  உள்ளதுசொன்னேன்காணும்

௫. அந்தவரம்இரண்டும் தந்தேன்இனிஉனக்கு — மின்அரசே - உன்
  அட்டிசொல்வேனோகைகை
மைந்தன்இராமன்ஆணை வார்த்தைபிரட்டுவியேன் — மின்அரசே
  வாங்கிக்கொள்வாய்கைகை

௬. முன்ஒருவரம்பரதன் நாடாளமாணிக்க — மன்னவரே - அதின்
  முடிபெறவேணும்அய்யா

பின்ஒருவரம்ராமன் காடாளச்சடைமுடி
  பெறவேணும்தாரும் அய்யா — மன்னவரே

௭. மலைப்போஒருவர்செய்த வஞ்சனையோஎன்ன — மின்அரசே - அந்த
  வார்த்தைசொன்னாய்கைகை
கலைப்பார்கலைத்தாக்கால் கல்லும்கரையுமென்ற
  கதைபோல்ஆச்சுதேகைகை — மின்அரசே

௮. கலைப்பாள்கவுசலை உமக்குண்டெனக்குவேறே
  கலைப்பார்ஒருவர்இல்லை — மன்னவரே - நீர்
சலத்தால்சொல்லுகிறீரோ சொன்னதேசொன்னதுநான்
  தடுமாறிச்சொல்அறியேன் — மன்னவரே

௯. மூத்தவனைத்தள்ளிவிட்டு இளையவனைப்பட்டங்கட்டல்
  முறைமைஅல்லவேகைகை — மின்அரசே-யாரும்
எத்தும்மனுநீதியான சாஸ்திரத்தினில்முன்னம்
  இசைத்தபடிஇதுவே — மின்அரசே

௰. மூத்தவன்இந்திரனோமாயனோ அகிலாண்டம்
  முழுதும்செலுத்துகிறான் — மன்னவரே - வெகு
நேத்திஇதுமுன்சொன்ன வார்த்தையைவிட்டுசாஸ்திர
  நெறிகள்போதிக்கல் ஆமோ — மன்னவரே

௰௧. ஆனைஇருந்துகொண்டு அரசாளும்மண்டபத்தில் — மின்அரசே - இது
  அறியாப்பிள்ளைபரதன்
பூனைஇருந்துகொண்டு புலம்புறதுபோலப்
  புலம்பல்ஆமோகைகை — மின்அரசே

௰௨. ஆனையும்பூனையும் நீர்பெற்றபிள்ளைஅல்லால் — மன்னவரே - நீர்
  அசலார்பெற்றபிள்ளையோ
மானம்வைத்தால்போதும் அனுவும்பயமில்லைஅந்த
  வகையைநான்அறியேனோ — மன்னவரே

௰௩. ஆயிரம்ஆனாலும் பெண்புத்தியைஅறிய — மின்அரசே-நல்லது
  ஆராலும்முடியுமோ
பேரினதுபோகட்டும் ராமனைநாட்டைவிட்டேன
  போச்சொல்லக்கிறாய்கைகை — மின்அரசே

௰௪. எதுக்குராமனைநாட்டைவிட்டுப்போவென்று — மன்னவரே-நம்பி
  என்றுகேட்கவந்தீரோ
பாதிக்குள்பரதனை ஊரில்த்தங்கவொட்டாமல்
  பண்ணிட்டான்ராத்திரிமா — மன்னவரே

௰௫. அவனும்சம்மதிக்கவேமாட்டான்வர்போஎன்றேன்
அநியாயஞ்சொன்னேனே மின்அரசே-உனக்கு
கவனம்இல்லையோஎன்ன காரணமோஇந்த
கபடம்பேசாதேகைகை மின்அரசே

௰௬. கவனமும்உண்டொரு காரணமும்இல்லை
கபடமும்பேசஇல்லை மன்னவரே-இன்று
இவனும்சம்மதிக்கவேஊர்விட்டுப்போம்என்றேன்
என்னதப்பிதம்சொன்னேன் மன்னவரே

௰௭. பூமியும்தருகிறேன் பரதற்குப்பொன்முடியும்
பூட்டுகிறேன்கைகை மின்அரசே-என்
சாமியைச்சொன்உயினா ராமனைப்பிரிந்தால்நான்
தரிக்கறியேன்கைகை மின்அரசே

௰௮. என்னுயிர்அவன்போனால் இருக்கவியாதென்றீர்
என்னசத்தியம்இது மன்னவரே-அவனை
சின்னஞ்சிறுவயதில்முனிபின்போகச்சொன்னீர்உம்
சீவனுக்குண்டோதுன்பம் மன்னவரே

௰௯. கும்பிடுகிறேன்உன்தன் காலையும்பிடிக்கிறேன்
கோபம்செய்யாதேகைகை மின்அரசே-நீ
எம்பெருமானைஎன்தன் கண்மணிராமனைஇவ்
இருக்கச்சொல்லென்பாய்கைகை மின்அரசே

௨௰. தாரைநீர்வார்த்தபோதே என்சரீரம்உமது
தச்சரீரம்அல்லவோ மன்னவரே-நீர்
ஆரைக்கும்பிடுகிறீர் ஆர்காலில்விழுகிறீர்
ஆர்லார்என்றெண்ணலாமோ மன்னவரே

௨௧. அடியில்விழுவேன்என்றும் அடங்கிஒடுங்கியேனான்
அனந்தம்வார்த்தைசொல்லியும் மின்அரசே-சற்றும்
கடினம்இல்லாதபோலே ஈரச்சேலையைப்போட்டு
கழுத்தைஅறுக்கலாமோ மின்அரசே

௨௨. காட்டுப்புறவுக்காகச்சதைஅரிந்தமன்னனைக்
கதையிலும்கேட்டிலீரோ மன்னவரே-உந்தன்
வீட்டுப்பெண்சாதிக்காக இத்தனைசகசமும்
வேணுமோபோதும்போதும் மன்னவரே

௨௩. கண்ணும்கருத்தும்ராமன்கண்ணுள்ளும்ராமன்
காப்பாகும்ராமனே மின்அரசே-நான்

என்னும்தெய்வமும்அவன்அவன்போனால்என்உயிர்போம்
இருக்கச்சொல்என்பாய்கைகை மின்அரசே

௨௪. எனக்குப்பொய்வாராது பொய்சொன்னால்தோஷம்என்றீர் மன்னவரே-நான்
எந்தமதியால்சொன்னீர்
வனத்தில்போச்சொல்லும்என்றசொல்லைத்திருப்பிவிட்டால்அது மன்னவரே
மகத்தானபொய்அல்லவோ

௨௫. ஆனால்ராமனைவனத்தில்போகச்சொல்வதால் மின்அரசே-அருள்
ஆவதுண்டோகைகை
கானிலேராமனைப் போகச்சொல்வதிலும்என் மின்அரசே
கண்கேட்கிலும்தருவேன்

௨௬. நானாகச்சொல்லஇல்லை தெய்வம்சொல்லியதுக்கு மன்னவரே-ராமன்
நான்என்னசெய்வேன்காணும்
போனாலும்கானகத்திலேஅவனுக்குவரும் மன்னவரே
பொல்லாங்குஉண்டோசொல்லீர்

௨௭. போஎன்றுசொன்னவுடன்பொறிகலங்கிஎன்சீவன் சண்டாளி-நான்
போய்விடுமேகைகை
ஆன்றுபோனபின்னை அள்ளிஇடுவார்உனக் சண்டாளி
காரடிகைகேசி

௨௮. ஒட்டாரம்கட்டுகிறாய்ராமன்போனால்என்சீவன் சண்டாளி-நீ
உடனேபோமடிகைகை
கட்டியதாலிக்கயிற்றை உன்மகற்குப்பட்டங்கட்ட சண்டாளி
காப்புகட்டடிகைகை

௨௯. வரதமுனிவன்ஆனவசிஷ்டமுனியேஉன்னை தெய்வமே-அந்த
வரம்கேட்கிறேன்தாராயென்
பரதன்வந்தால்அவன்உற்றுரிமைசெய்யாமல் தெய்வமே
பத்துதரமாச்சொல்என்

௩௰. அண்டர்முனிவர்அல்லபக்ஷயாளிகள்அல்ல தெய்வமே-நீமுன்
அசலார்ஒருவர்அல்ல
கொண்டபெண்சாதிதானேதசரதன்ஆவிக்கு தெய்வமே
கூற்றுவன்ஆய்வந்தாளே

௩௧. ஓரிவாய்இருந்துகொன்ற பிள்ளைப்பழிக்குமுனி தெய்வமே-உலகம்
உரைத்தசாபம்இதுவோ
எளியாரைவலியார்அடித்தால் வலியாரைத்தெய்வம்கேட்கும் தெய்வமே
என்பதும்இதுதானோ

௧௨. பண்ணிட்டனும்புக்காபுருஷனைக்கொல்லவந்த
பாவிதன்பெண்இவள்அல்லோ — தெய்வமே-இந்த
மண்ணுக்குள்த்தாயைப்பார்த்துப் பெண்ணைக்கொள்யென்றுசொல்லும்
வசனம்பிசகுவருமோ — தெய்வமே
௧௩. உயிர்க்கும்கண்போனாலென்ன உயிர்போனாலும்என்ன
உத்தமன்ராமன்மர்த்திடம் — தெய்வமே-அயோத்தி
பதிக்குப்பதிஆகியேஇருக்கிறான்என்றுகாணைப்
பாவிநான்ஆயினேனே — தெய்வமே

*

கைகேசிஸ்ரீராமரை வனத்துக்கு ஏவுதல்.

விருத்தம்.

கொன்றவன்போல்த்தசரதன்இப்படிபுலம்ப
கூற்றுவன்போல்க்கைகேசிராமன்தன்னை
நின்றநிலைக்கழைத்துவரஎன்னவந்து
நெடுமனைவாசலுக்குள்ளேபுகுந்தபோதில்
கன்றும்அரசன்சொல்லான்நானேசொல்வேன்
என்றீரேழ்வருஷம்ராமாநீகாட்டில்
சென்றுதவம்செய்பரதன்உலகைஆள்வான்
செல்என்றாள்இதுவேந்தன்சொல்என்றாளே (௮)

*

ஸ்ரீராமர் வனம்ஏகக் கைகேயியின் விடைபெறல்.

இதுவும் அது.

உளம்மகிழ்ந்தொருகைகேசிஉரைத்தவாய்மொழியைக்கேட்டு
களங்கம்இல்லாதராமன்கானகம்செல்லநானே
தெளிந்தபார்பரதன் ஆளச்செய்ததேமேன்மைஎன்று
தளர்ந்திடாத்தாயைவாழ்த்திதாழ்ந்துபின்விடைகொண்டானே. (௯)

௮-தரு-சுருட்டிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

என்பாக்கியமேபாக்கியம்-எவர்க்குண்டிந்தசிலாக்கியம்

அநுபல்லவி.

அன்பாகவனம்போக-அநுக்கிரகம்செய்தாயே — (என்)

சரணங்கள்.

௧. குழியில்ப்பயிர்தனைவிதைத்துக்கடாரமெல்லாமழித்திட்டு
வழுவாமலேமாற்றிவளர்க்கிறவர்போலே

சுழலும்இந்தராச்சியத்துக்குச்சூடுமணிமுடிமாற்றி
தருவும்முத்திராச்சியத்துக்குச்சடைமுடிதந்தாயே (என்)
௨. கொக்கரித்தபேர்எல்லாம்கூடத்தீப்பாய்வாரோ
பக்கம்உள்ளபேர்என்னைக்காப்பாற்றிவைப்பாரோ
இக்கும்இந்தவலைநீக்கித்தேடும்பரகதிசேரத்
தக்கதவம்செய்யென்றுநீ தயவுசெய்தாயே (என்)
௩. ஒருபிள்ளைராமன்பரலோகசாதகம்செய்ய
ஒருபிள்ளைபரதன்இந்தஉலகம்தன்னைஆள
இருபிள்ளையாலும்கைகைஇகபரம்பெற்றாள்என்ன
வருசொல்உண்டாச்சுதென்னமாதவம்செய்தேனோ (என்)

ஸ்ரீராமர் வனம்ஏகுதற்காகக்கோசலைபுலம்பல்.

விருத்தம்.

இப்படிசிறுதாயாரைஇறைஞ்சியேஅனுப்பிக்கொண்டு
மைப்படிவண்ணராமன்வந்துகோசலை அம்மைக்குத்
தப்பிலாதடிவாறெல்லாம்தான்சொல்லக்கன்றைத்தேடி
வெப்புறும்பசுப்போல்அன்னைவிழுகின்றாள்அழுகின்றாளே. (௰)

௯-திபதைமுகாரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அய்யையோரகுராமா-வனம்போக - தெய்வம்சம்மதிஆமா-உனைநான்
எவ்வகைபிரிவேனோ-நான்இது-செய்குவதறிலேனே
௨. என்ஒருநாயகமே-ரவிகுல-மன்னவர்நாயகமே-அரசன்
உன்னையும்வெறுத்தானோ-வெறுத்தும்-தன்னுயிர்பொறுத்தானோ
௩. சுடர்மணிமுடிபோச்சோ-தலைமேல் - சடைமுடிவரலாச்சோ-கேட்க
உடல்பதறுதேமகனே-மனம்விட-விடஉதறுதேமகனே
௪. தாய்வரம்அதுகொண்டு-பூமியை-காவல்பரதன்கொண்டு-ஆளட்டும்
நீவனம்போவானேன்-இப்படி-தீவினைஆவானேன்
௫. கலியுகம்மேலிட்டதோ-சூரிய-குலமுறைபோய்விட்டதோ-நீஇந்த
நிலைமைகண்டிடல்ஆமோ-பரதன்-தலைமைகொண்டிடல்ஆமோ
௬. எப்படிநான்சகிப்பேன்-உனைப்பிரிந்து-எப்படிநிதம்வசிப்பேன்-ராவினி
எப்படிகண்விழிப்பேன்-உயிர்கொண்டு-எப்படிநாள்கழிப்பேன் [ல்

௭. பொன்அடிகசங்காதோ-மேனியில்-வன்னமும்மசங்காதோ-வெயில்
பட்டால், என்னென்றுருகிப்பாயோ-கல்லும்முள்ளும் - என்னென்றுமிதிப்
[பாயோ
௮. நீசெலும்வனம்தானே-உன்னுடனேசெலுவேன்நானே-என்னிட
ஆசைஎல்லாமறந்தேன்-இதுக்கோ-கோசலைபெண்பிறந்தேன்.

ஸ்ரீராமர் கோசலையைத்தேற்றி விடைகொளல்.

விருத்தம்.

தாய்வருந்திடஇவ்வாறுதளருவாள்தன்னைநோக்கிப்
பாய்வரும்பதினால்ஆண்டும்பதினாலுநாளேஅம்மா
நீவருந்திடுவதேனோநின்கிருபையாலேகானில்ப்
போய்வருவேன்கேள்என்றுபோற்றுவான்தேற்றுவானே. (௰௧)

௰-தரு புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வனம்போய்வருகிறேன்அம்மா-கோசலைஅம்மா
வனம்போய்வருகிறேன் அம்மா.

சரணங்கள்.

௧. வனம்போய்வருகிறேன்நானே-பெற்ற-மாதாபிதாவசனம்தானே
தனம்தனிமந்திரமும்அது சகலதந்திரமும்அது
சத்தியமும்அதுபர முத்தியும்அதுதானே—வனம்

௨. கானகம்நான்போகவேணும்-நீர்-கணவனைக்காப்பாற்றும்காணும்
நாவிலம்பரதனுக் கல்லஎன்னப்போமோ
நான்இருந்தரசனைப் பொய்சொல்லச்சொல்லலாமோ—வனம்

௩. ஆதிகதைஅறிவீர்நீரும் சகரர் அறுபதினாயிரம்பேரும்
தாதைசொல்படிதங்கள் உயிர்கொடுத்தாரோமுனம்
தகப்பன்சொல்படிக்குநான் தவம்செய்வதோகடினம்—வனம்

௪. என்றவன்சொல்வேதம்தானே-பரசு-ராமன்தாயைவெட்டினானே
ஆண்டுபதினாலும்போய் வருவான்எனக்கண்டோ
அரசன்மனைப்பேரென்றால்இருவாய்க்கெதிர்வாய்உண்டோ-வன

ஸ்ரீராமர் வனம் ஏகலைப்பற்றி லட்சுமணர் கோபம்.

விருத்தம்.

சிந்தையைக்கவுசலைக்குத் தேற்றியராமன்மீண்டு
சுந்தரிசுமித்திரைதேவி துணைஅடிவணங்கும்போதில்
இந்தமாமகுடம்சாயிக் கிகிறேன்இப்போதென்ன
அந்தம்ஆம்லட்சுமணன்தான்ஆக்கிரகம்செய்கின்றானே (௰௨)

௰௧-தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

நானேலட்சுமணன்-ஆனால்க்கொடுக்கிறேன்-ராமனுக்குமகுடம்.

அநுபல்லவி.

சேனைபேர்என்னோ எதிர்க்கட்டும்குதிக்கட்டும்
சித்திரக்கணையால்வென்று அத்தனைபேரையுங்கொன்று—நானே

சரணங்கள்.

௧. குருடன்ராஜமுழி முழிக்கிறல்ப்போலேபட்டம்
கொள்ளுமோபரதற்கு முடிசூட
தரணியில்சர்க்கரையும் மாவும்சரியாஎன்னும்
தசரதனும்கிடந்து மனம்வாட
இரவிமுன்பனிபோலே என்னெதிர்த்தமன்னர்
எவரும்பயந்துவிரு துகள்போட
அரசிட்டசாமிக்குத் தவசிட்டநீலிமகன்
ஆட்டுக்குட்டிபோலேஓடகேட்டுக்கலகனையும்தள்ளாட— நானே

௨. தொகுத்தகாளிநடிக்க கூளிதாளம்பிடிக்க
துண்டங்கள்திரக்கப் படமாட்டி
பகைத்தராசர்தலை பனங்குலைபோல்உதிர
படுகளம்எங்குரத்தக் கடல்மூட்டி
இகத்தில்நானேஅடிமை ராமனேஆண்டவன்
என்பதெல்லார்க்கும்தெரி வுறக்காட்டி
வகுத்தபிர்ம்மாதிதேவர் வந்தாலும்அவர்அவர்
மர்மம்எல்லாத்தையும்ஓட்டி தர்மத்தைநிலைக்காட்டி—நானே

௩. சுட்டமண்ணும்பச்சை மண்ணும்ஒட்டுமோசாமி
துணைஅல்லால்எனக்குண்டோ உபகாரம்
எட்டிப்பறந்தாலும்ஊர்க் குருவிகருடன்ஆமோ
இந்தப்பரதனுக்கேன் அதிகாரம்

வெட்டித்தலைதலையாய்க் குவியாவிட்டால்என்கை
வில்லாலேஆவதுண்டோ வீரம்
பொட்டெனவேஅயோத்திப் பட்டணம்எல்லாம்வந்து
போர்கொடுத்தாலும்விட்டேன் ஆர்தொடுத்தாலும்இங்கேநாம்-நானே

* * *

ஸ்ரீராமர்லட்சுமணர்கோபத்தைத்தணித்தல்

விருத்தம்.

சினம்கொண்டஇளையோன்இங்கே சீறியேசொல்லும்ஓசை
கனம்கொண்டராமசந்திரன் காதிலேவிழக்கண்டேபோடி
இனம்கொண்டதந்தைவார்த்தைக் கெதிர்உண்டோதம்பிஎன்று
மனம்கொண்டுதேற்றிக்கோபம் மாற்றுவான்ஆற்றுவானே (௰௩)

௰௨-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இத்தனைகோபமும்நல்லாய்-வந்தது-ஏதடாதம்பிஇதுசொல்லாய்

அநுபல்லவி.

தத்துவம்ஆகஉன்தன் புத்திஎல்லாம்வெள்ளை
தகப்பன்போல்விளங்கிற பிள்ளைஅல்லவோபிள்ளை—இத்தனை

சரணங்கள்.

௧. இரும்போதாம்மனம் காட்டிலேபோய்த்திரி
என்னவும்வாய்வருமோ நீஅத்தைப்பரிகரி
கரும்புகசப்பதெல்லாம் வாய்க்குற்றமேசரி
காலம்செய்ததல்லாமல் ஆர்செய்தார்அரிகரி—இத்த

௨. தகப்பனைச்சத்தியவாக்கியன் அல்லனென்றுகழிக்கவோ
தாய்கொண்டவிரதத்தை முடியாமல்அழிக்கவோ
ஆகத்துணைஆம்பரதன் செல்வத்தைஒழிக்கவோ
அப்புறம்உனைக்கண்ட பேர்எல்லாம்பழிக்கவோ—இத்த

௩. உராம்ஆகும்தபம்செய்தால் உனக்குநல்லதோதீதோ
ஒன்றும்பேசாதேகோட்டைக் குள்ளேபடைவெட்டதோ
அரசுபரதன்கொண்டால் நமக்கினிமேல்வாராதோ
ஆக்கப்பொறுத்தாமக் காயும்மட்டும்பொறுதோ—இத்த

சுமித்திரை லட்சுமணருக்குப் புத்திசொல்லல்.

விருத்தம்.

அற்புதத்தம்பிகோபம் ஆற்றியோர்மன்தாயார்
பொற்பதம்வணங்கும்போது பூவைகைகேசிஎவ
வற்கலைமாதர்காட்ட வாங்கிலட்சுமணனைஎன்
சொற்படிகொடுபோஎன்று சுமித்திரைகூறுவாளே (௰௪)

௰௩-இபதை-பைரவிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. இந்தமாவுரி அந்தவனத்தில்கோன்
டேகுடென்றென்வார்த்தை லட்சுமணா
அந்தவார்த்தையே மந்திரமாஅண்ணன்
அடிபூசைசெய்அடா லட்சுமணா

௨. அண்ணன்இவன்மணி வண்ணனேஎன்றெண்ணி
அரைநொடிபிரியாதே லட்சுமணா
கண்ணின்இமைபோலே எண்ணம்எல்லாஞ்செய்து
கட்டிக்காத்திருடா லட்சுமணா

௩. வெம்பியகாட்டினில் அரக்கர்வந்தால்அண்ணன்
முன்போய்நில்அடா லட்சுமணா
தம்பிஉடையவன் படைக்கஞ்சான்என்னும்சொல்
சாதித்துக்கொள்அடா லட்சுமணா

௪. அலைஆழிபுரண்டாலும் அண்ணன்இருக்கஉன்னை
ஆரால்என்னசெய்யல்ஆம் லட்சுமணா
மலைமீதில்இருப்பாரைப் பன்றிபாய்வதுண்டோ
மயங்காதேதியங்காதே லட்சுமணா

௫. உளம்கொண்டுஅண்ணன்எப்படிசொல்வான்அப்படி
ஊழியம்கேள்அடா லட்சுமணா
இளங்கன்றுபயம்அறியா தென்றால்போலநீ
எதிர்த்தொன்றும்சொல்லாதே லட்சுமணா

௬. தாயேசீதைஉன் தகப்பன்ராமன்இந்த
தலமேவனம்அடா லட்சுமணா
ஆயாசம்பாராதே எள்என்னும்முன்எண்ணெய்
ஆகச்செய்துவாடா லட்சுமணா

௭. பின்னுஞ்சடையும்மர வுரியுங்காணவோராமன்
பிறகேவந்தேன்என்று லட்சுமணா

குன்னமாய்என்ருதே தெய்வம்பண்ணியதிருக்
  கூத்துக்கென்செய்யலாம் லட்சுமணு
௮. கர்த்தன்ஆனராமன் சித்தத்திலேஎன்றும்
  கட்டளைப்படிதானே லட்சுமணு
புத்தியாகச்செய்தால்அப்போதல்லோஎன்தன்
  புத்திரன்நீபோய்வாடா லட்சுமணு

———*———

ஸ்ரீராமர் பிரிதலைக்குறித்துச் சீதைஇரங்கல்.

விருத்தம்.

மண்ணும் இரங்கமரம்இரங்கமயுதாயாரைஅனுப்பிக்கொண்
டெண்ணும்இரங்கும்லட்சுமணன்இசைந்துவரவைதராமன்
கண்ணும்சனகிதனைப்பார்த்துநான்போய்வருவேன்சரோரூ
பண்ணும்பருவம்எனம்என்ருன் பரந்தாள்சீதைகரைந்தாளே. (௰௮)

௰௪-தரு-உசேனிராகம்-ரூபகதாளசாப்பு.

பல்லவி.

எப்படிமனந்துணிந்ததோசாமி-வனம்போய்வருகிறேன்
என்ருல்இதையார்க்குமோபூமி

அநுபல்லவி.

எப்பிறப்பினும்பிரியவிடேன் என்றுகைதொட்டீரோ
ஏழைஆனசீதையைஇட்டாற்றிலே விட்டீரோ-எப்படி

சரணங்கள்.

௧. கரும்புமுறித்தால்ப்போலேசொல்லல் ஆச்சுதோ-ஒருக்
  காலும்பிரியேன்என்று சொன்னசொல்லும்போச்சுதோ
வருந்திவருந்தித்தேவரீர் வெல்ல
  வார்த்தையால்க்கொல்லாமல்க் கொல்ல
இரும்புமனதுண்டாச்சு தல்லோ
  என்னைவிட்டுப்போகிறேனென்று சொல்ல-எப்படி
௨. அன்னைகொண்டவரம் என்னைஎன்னைத் தள்ளவோ-நீர்
  அழகுக்கோவிலெடுத்துமேலேட்டூன்றிக்கொள்ளவோ
குன்னமோஉமக்கென்னைத் தாரம்
  கொடுத்தவன்மேல்அல்லோ நேரம்
என்னைவிட்டுக்கொண்டுபோவதோ பாரம்
  இதுவோஆண்பிள்ளைக்கு வீரம்-எப்படி

---

௩. நாடிநீர்போய்இருக்கும்வனத்தின்போ- சொல்லவேணும்அந்தத்
  நான்நினைத்துக்கொண்டிருந்தால் அங்கேபிறக்கலாம்காணும்
கூடிநாமுடனிருக்கும் காடு
  குறைவில்லாஎனமிதிலை நாடு
காடுநீர்இல்லாத வீடு
  கால்லையும்தெரியுமென் பாடு-எப்படி

ஸ்ரீராமர் வனம்வகலால்பிரசனங்கள் புலம்பல்.

விருத்தம்.

ஆவதனால்சீதைமனதறிந்தராமன
  அப்படியேவருகவென்ருன்வெளியேவந்தாள்
தேவர்களும்முனிவர்களும்கலங்கிநின்ருர்
  செயராமன்லட்சுமணன்சீதைஎன்னும்
மூவர்களும்மரவுரியைஉடுத்திக்கொண்டார்
  முறையாலேஅயோத்திக்காத்தெருவின்மேலே
போவதுகண்டவ்வூரில்ஆணும்பெண்ணும்
  புலம்பினார்கண்ணீர்விட்டலம்பினாரே (௰௯)

௰௫-இயதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அரசுமணிமுடியொடும்ஆனைமேல்
  வருகிறதிருக்காட்சியைக்காணுமல்
  அந்தந்தத்தெருவீதியிலேவந்து நொந்தார்சிலபேர்கள்
மரவுரியும்சடைமுடியும்காணு
  வதற்கோகுதிகுதித்தோமெனத்தங்கள்
  வாயொடுவாய்பேசாமலேமனம் மடிந்தார்சிலபேர்கள்

௨. அய்யோஇந்த அருமைத்திருமகன்
  மெய்யேவனம்போனால்நமக்கினி
  ஆறுதலேதெனக்கண்பிசைந் தழுதார்சிலபேர்கள்
செய்யாவினைசெய்திடும்பாதகி
  கைகேசிக்குஇன்றைக்குநெஞ்சுக்கல்
  இடுக்கெனவேவிழுந்ததோஎனமனம் திகைத்தார்சிலபேர்கள்

௩. கண்ணுக்குக்கண்அருகேஎண்ணின
  எண்ணம்எல்லாம்போச்சேநாம்அந்தக்
  காட்டேகதியாய்ப்போவோமென்று கரைந்தார்சிலபேர்கள்

பண்ணினதவம்இருக்கோதசரதன்
புண்ணியவான்ஆனால்ஒருதரம்
பழிகாரிசற்றுழையாளோவென்று பதைத்தார்சிலபேர்கள்

௪. சொல்லியவார்த்தான்றணைவனைக்
கொல்லவேவழிபார்த்தாள்அல்லாமல்
அராதிஷ்டியாய்ப்பார்க்காளோவென்று துடித்தார்சிலபேர்கள்
கல்லுருகவும்புல்லுருகவுங்கண்ட
கைகேசிக்குந்தன்மகன்மாத்திரம்
கரும்போஇவன்வேம்போவனமகம் கசிந்தார்சிலபேர்கள்

௫. முறையோஎன்னமுடப்பிள்ளையாகிலும்
முந்தினபிள்ளையென்றுசொல்லும்படி
மொழிஆனதும்ராமனுக்கில்லையோவென் அழுதார்சிலபேர்கள்
குறையாமலேஇருக்கின்றசூரிய
குலத்திலேகல்லமாத்தில்புல்லுருவிபோல்
குடிகேடிஎங்கிருந்தாள்என்றகுலை குலைந்தார்சிலபேர்கள்

௬. மைஆர்கண்ணிஇளையவள்சோர்தக
வல்லியேசெய்ததிலமகன்ராமனை
மன்னவன்செய்ததென்ன சொல்வோம்என்று கவதார்சிலபேர்கள்
கைகேசியும்பிள்ளையும்கூடியும்
கட்டாந்தரைஅட்டையைப்போல்மன்னனைக்
கட்டிக்கொண்டிளிப்புரட்டுமெனக்கூடி கலந்தார்சிலபேர்கள்

௭. சானகிஎன்னும்லட்சுமிபோனபின்
மாநகரத்தில்ஆர்இருப்பார்அவள்
சமங்கைகளுல்லோஇருப்பாள்எனத்தவி தவித்தார்சிலபேர்கள்
கானகம்புகுவதுமுன்னேதசரதன்
வானகம்புகுவதில்லையாமென்று
கனகாணுக்கப்பலோர்போலவே பரிந்தார்சிலபேர்கள்

௮. சத்தியமாராமனைவரச்சொல்லி
மற்றொருவர்க்குமுடிகொடுத்தான்இந்த
தசரதன்மெத்தநல்லவனென்று சோர்ந்தார்சிலபேர்கள்
எத்தனைபேர்களைக்குலக்காலும்
எல்லாரும்துணைஆவாரோராமனுக்கு
இளையவனேதுணைஇக்கணமென்று இரந்தார்சிலபேர்கள்

---

௯. மணிமுடிவரச்சொல்லியமுகூர்த்தத்தில்
சடைமுடிவரச்சொன்னானேஇந்த [ர்கள்
வசிஷ்டனைப்போலவசிஷ்டன்உண்டோவென்றுவைதார்சிலபே
துணியுமோமனம்அடடாஉண்கிற
சோற்றிலேநஞ்சுகலந்தால்போலவே [கள்
தொடுத்தான்பழிகொடுத்தாள்கைகேயியென்று சொன்னார்சிலபேர்

௰. பாவமும்வரும்பழியும்பிசகும்
தீபம்இல்லாமனைபோலேஇந்த
பட்டணம்பாழ்போமேயென்றும் படர்ந்தார்சிலபேர்கள்
ஸ்தாவரம்இல்லாஇளங்கொடிபோலவும்
பாய்மரம்இல்லாமரக்கலம்போலவும்
தாமரைஇலைத்தண்ணீர்போலவும் தவித்தார்சிலபேர்கள்

—*—

சுமந்திரன்புலம்பல்.

விருத்தம்.

மாநகர்இப்படிபுலம்பத்தேர்மேல்கொண்டு
வழியில்ஒருசோலையில்போய்ப்பாதிச்சாமம்
ஆனதிலவர்தவரோஉறங்கிவிட்டார்
அயோத்தியிலேஅவர்போகவேணும்தேரைத்
தான்உருவவடதிசையில்விட்டால்என்னைத்
தான்மீண்டானெனப்பலரும்அங்கேமீள்வார்
வன்இனித்தாமதம்என்றுராமன்சொல்லி
எழுந்தென்றான்சுமந்திரனொந்தழுகின்றானே (௧௨)

ஒசு-இபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. செகம்மகிழும்ராமச் சந்திரன்-போகாமல்தேரைத்
இருப்புவான்அல்லோ சுமந்திரன்-என்தன்
மகன்வருவான் என்றிருப்பானே-ராசனுக்கெந்த
வாய்கொண்டுசொல்ல இருப்பேனே

௨. ஊரில்என்னைக்கண்டபேர் சொல்ல-தசரதனுக்
கோர்உடம்பிரண்டாம் அல்லோ-உன்பிள்ளைகளை
தேர்இறக்கிவிட்டேனென பேனோ-முகம்அறியாத்
தேசத்திலேவிட்டேன் என்பேனோ

௩. மக்களைவிட்டோடி வந்தானே என்றவுடனே
மன்னவனுயிர் வந்தானோ-இப்போதான்

தெற்கிலேயின்றல்லோ   போகுவேன்-மான்விடுத்த
சேவகன்போல்அல்லோ   ஆகுவேன்
௩. இன்னமுன்னைக்கூட்டிக்   கூடி-தசரதனுக்
கிருக்குமேகல்உயிர்   மேவி-நான்இந்தவார்த்தை
சொன்னவுடன்போமே   ஆவி-இந்தப்பழியை
சுமக்கவோநான்வந்தேன்   பாவி

* * *

ஸ்ரீராமர் சுமந்திரனுக்கு நீதிஓதுதல்.

விருத்தம்

மந்திரிசுமந்திரன்றந்த வண்ணமேகூறராமச்
சந்திரன்அவனைநோக்கிச் சகலமுந்தெரிந்தநீரோ
எந்தன்தாய்சொன்னவார்த்தைக் கிரண்டுதான்செப்பல்ஆமோ
சிந்தைதான்இனிமேலென்றுதெளிவிப்பான்தெளிவிப்பானே (௫௮)

௫௯-தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சொல்லும்சொல்லும்-சுமந்திரரே-நில்லும்நில்லும்.

அநுபல்லவி.

கல்லராத்திரிஇதுபோல்   இல்லைகாணும்
நகர்உள்ளோர்களும்நீரும்   போகவேணும்
அல்லநீர்வேறே   சொன்னால்விருப்புமோ
அணைகடந்தவெள்ளம்   அழைத்தால்திரும்புமோ — சொல்

சரணங்கள்.

௧. வீரம்பேசிக்கொண்டெழுந்தசேவகன்
வெட்டுங்களம்கண்டுமுதுகு   இடல்ஆமோ
ஆரும்காணவேதபசுக்கென்றுவந்து
அதைக்கொல்லாம்பயந்துச்சப்   படல்ஆமோ
வாரும்காணும்பெற்றதாய்சொல்விரதத்தை
மறந்துபின்னொருவிரதத்தைத்   தொடல்ஆமோ
சூரியகுலத்திலேபிறந்துமுந்திறந்து
தொடுத்தகாரியத்தைநடுவே   விடல்ஆமோ — சொல்
௨. மன்னன்பரதற்குநான்இருக்கிறேன்
வருகிறேன்இளக்கிப்ப   தேன்என்றும்
பின்னும்அதிக்கயோத்திக்குமன்னன்
பெரியஉதவியேஉமது   தான்என்றும்
என்இடத்தில்வைத்தஅன்புபோல்கைகேசி
இடத்தில்வைக்காவிட்டால்பாவம்   போதேன்என்றும்

அன்னைமார்க்கும்மன்னனுக்கும்பதினறு
ஆண்டும்போய்வந்துவணங்கு   வேன்என்றும் — சொல்
௩. உலகிலேஒருவன்மைசெய்யஇடை
யூறுமெத்தவரும்ஆகை   யால்அதை
நினைப்பதென்னல்ஆமோகாலம்போம்வார்த்தை
நிற்குமேபின்னைவேறே   உண்டோவதை
பலரும்தவிக்கிறார்என்றுதாய்மொழி
பழிக்கவோநான்வந்தேன்   என்னகதை
மலைவிழுந்தாலும்தலைபோதாங்கவேணும்
மதித்தவர்க்குப்பலன்பலிக்கு   மோஇதை — சொல்

* * *

ஸ்ரீராமனைநினைந்துசக்கிரவர்த்திபுலம்பல்.

விருத்தம்.

வீரம்எனும்ராமன்உரைசுமந்திரன்கொண்டான்
மீண்டதேர்வழிப்பலரும்மீண்டார்சேதி
ஊரதிலேவஷிஷ்டமுனிஉடன்போய்ச்சீவன்
உண்டிலைஎன்றிடும்வேந்தனுடனேசொன்னான்
சூள்எரியிலேவிழுந்தவெண்ணெய்போலும்
கொதித்திடும்கொப்பரையில்விழும்புழுவைப்போலும்
சீருளதன்மகனைநினைத்தேங்கிச்சிந்தை
தெறிஞன்தசரதனும்கதறினனே (௬௧)

௬௨-இபதை-கண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. சின்னம்சிறுதாமரைபோல் பொன்ஆனபாதங்கள்நோவ
தேடிவனம்ஓடிவிட்டாய்   ரகுராமா-ராமா
என்னைஇந்தவேளைவிட்டுத்-தண்ணீரில்கைவிட்டாப்போலே
எப்படிதுணிந்துவிட்டாய்   ரகுராமா-ராமா
௨. முடிக்குமகுடஞ்சூட்டிமுகம்பார்க்கஇருந்தேனே
மோசம்கைகேசிசெய்தாள்   ரகுராமா-ராமா
உடுத்தபுடைவைதானேபாம்பாய்க்கடிக்குமென்றும்
உளவறியாமல்போனேன்   ரகுராமா-ராமா
௩. மாலைஇட்டகைகேசிதான் காலனைப்போலவேவந்தென்
வாணுளைக்கொண்டாள்அய்யோ   ரகுராமா-ராமா
வேலிக்குமுள்இடவேமன் காலுக்குமுள்ஆகவந்து
விளைந்ததென்விதிவசம்   ரகுராமா-ராமா

௪. ஆனைமேல்பவனிஆக அபிஷேகமுடிசூடும்
அலங்காரம்என்றுகாண்பேன் ரகுராமா-ராமா
நான்ஒன்றுநினைக்கத்தெய்வம்தான்ஒன்றுநினைத்ததுவோ
நான்செய்தபாவம்ஈதோ ரகுராமா-ராமா

௫. தாயும்நீதந்தையும்நீ சற்புத்திரமாணிக்கமும்நீ
சகலபாக்கியமும்நீயே ரகுராமா-ராமா
நீஇல்லாநாடதெல்லாம் நிலவில்லாமுற்றம்போலே
நெடும்பாழ் அடைந்ததையோ ரகுராமா-ராமா

௬. படித்துப்படித்துச்சொல்லிக் காலும்பிடித்துக்கொண்டேன்
பாவிகைகேசிஅய்யோ ரகுராமா-ராமா
அடிக்கடிக்கப்பந்து விசைகொண்டெழுந்தாற்போல்என்
ஆயுசுக்குலைவந்தாளே ரகுராமா-ராமா

௭. குடைமகுடந்தரித்துக் குவலயந்தன்னைஆளும்
கோலம்காணும்முன்ஆக ரகுராமா-ராமா
சடைமகுடந்தரித்துக் காட்டிலேபோனவனே
சண்டாளன்என்போல்உண்டோ ரகுராமா-ராமா

௮. தேறுதல்எங்கும்காணேன் திக்குத்திசையும்காணேன்
தெய்வமும்துணைகாணேன் ரகுராமா-ராமா
ஆறுதல்எங்கும்காணேன் அந்தகாரத்தில்கோல்எறிந்த
அந்தகன்போல்ஆனேன்அய்யோ ரகுராமா-ராமா

௯. பார்எல்லாம்பரதன்கொள்ள உன்னையும்என்கண்ணின்முன்னே
பறிகாட்டிப்போனன்றோ ரகுராமா-ராமா
கொக்குப்புல்லுருவி நெடுமுளைத்தாற்போலே
கெடுகாலியிங்கேவந்தாள் ரகுராமா-ராமா

௰. சேனைகாவலர்கூட நான்கூடமுடிசூட்டி
சிங்காசனம்வைக்கும்முன்னே ரகுராமா-ராமா
ஆனைநிழலைப்பார்க்கத் தவளைகலங்கிற்றுப்போல்
ஆனாளேகூனிஅய்யோ ரகுராமா-ராமா

௰௧. சற்றேபொறுத்துச்சென்றால் சகுனதோஷம்என்றோநான்
சாவேன்என்றறிவாயோ ரகுராமா-ராமா
சுற்றமும்அழுகைக்குரல் கேட்டிறத்துக்குமுன்னே
சுடுக்காடடைந்துவிட்டாய் ரகுராமா-ராமா

௰௨. குலத்தைவிளக்கவந்தமகனைஎனக்குப்பட்டம்
கொடுத்துவாழ்விக்கொண்டது ரகுராமா-ராமா

களத்திலேசோற்றைஇட்டுக் கைப்பிடித்தாற்போல்ஆச்சே
காலம்இப்படிஆமா ரகுராமா-ராமா

௰௩. பாயும்அமுதமும்பொன்-பள்ளயமும்இங்கிருக்க
பறிகாட்டிலேநடந்தா ரகுராமா-ராமா
காயும்கிழங்கும்இன்னல் ஆச்சோதெய்வத்துக்கும்
கண்இல்லையோமகனே ரகுராமா-ராமா

௰௪. வீசும்நெருப்பைப்போலே கடுங்கோடையும்கானலும்
வெய்யிலும்மேல்படுமே ரகுராமா-ராமா
காசாம்பூமேனியெல்லாம் வேர்வைமுத்துமுத்தாகக்
காண்பாளோகவுசலை ரகுராமா-ராமா

௰௫. பூமேலேவிழுந்தாலும்கழுப்புபடுமேஉன்தன்
பொன்ஆனமேனிஅய்யோ ரகுராமா-ராமா
மாமலையும்கொரடியும் செடியும்பொடியும்தாக்க
வழிநடந்தறிவாயோ ரகுராமா-ராமா

௰௬. முடிக்கபிஷேகம்செய்துன் அடிக்கீழேஓடும்தண்ணீர்
முந்திக்கொண்டாராலும் ரகுராமா-ராமா
பிடித்தொருபடிதந்தால் குடிக்கேனேகுடித்தென்தன்
பெருந்தாகம்தணியேனே ரகுராமா-ராமா

௰௭. இழைஆயிரம்பொன்பெற்ற பீதாம்பரம்உடுத்த
இடைமீதிலேமகனே ரகுராமா-ராமா
பழிகாரிதான்கொடுத்த மரவுரிதான்உடுக்கப்
பார்த்தாரோஊர்உள்ளோர்கள் ரகுராமா-ராமா

௰௮. பார்த்தாலும்பசிபோமே பால்வடியுமேஉன்தன்
பவளவாய்முகந்தன்னை ரகுராமா-ராமா
காற்றோட்டம்ஆகவந்து சற்றேநீகாட்டிஎன்னைக்
கரையேற்றிவிடஒண்ணாதோ ரகுராமா-ராமா

௰௯. பிள்ளைதன்தொடைமேலே பெற்றவன்சீவன்விட்டால்
பெருங்கதிஉண்டென்பாரே ரகுராமா-ராமா
கள்ளக்கைகேசிகையில் காட்டிக்கொடுத்துவிட்டு
கடக்கப்போய்நிற்கல்ஆமோ ரகுராமா-ராமா

௨௰. கண்ணும்இருண்டதையோ கருத்தும்அழிந்ததையோ
கைகாலும்ஓய்ந்ததையோ ரகுராமா-ராமா
எண்ணம்குலைந்ததையோ என்றுநான்காண்பேன்உன்தன்
எழுதருமுகந்தன்னை ரகுராமா-ராமா

ஸ்ரீராமனைக்குகன்தன்வூரில்இருக்கவேண்டல்.

விருத்தம்.

புலம்பியமன்னவன்இவ்வாறிறந்துசிவன்
போயினான்வைகுண்டபுரத்தைச்சேர்ந்தான்
பெலம்தருமன்னவர்அவனையெடுத்தார்எண்ணெய்ப்
பெருந்தோணியில்இட்டார்இப்பால்ராமன்
நலம்தரும்லட்சுமணன்சீதையுடனேகங்கா
நதிஅடைந்தான்முனிவரோடும்கலந்தான்அந்த
சலம்தனையும்குகன்விடுத்ததோணியாலே
தாண்டினான்அவன்இருக்கவேண்டினானே. (௨௰)

௰௯-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இங்கேஇருங்காணும்-தரிசனம்தந்-தென்னைரட்சிக்கவேணும்.

அநுபல்லவி.

மங்கைஆம்என்தாயும்-ராமராசியும்இந்த
வரிசைத்தம்பியும்அய்ய - உருபத்தன்குகன்உய்ய(இங்கே)

சரணங்கள்.

௧. பூவுண்டுகனிவுண்டு ஊன்உண்டுதேன்உண்டு
புதுமரஉரிகளும் போர்வைஉண்டு
தாவுண்டுதடம்உண்டு கங்காநதிஉண்டு
தான்வேணபட்சணம்உண்டு நானேசெய்ரட்சணம்கண்டு(இங்கே)

௨. எட்டுத்திக்கிலும்செல்லுவேன் கிழங்குவகைகெல்லுவேன்
எதிர்த்தவரைவெல்லுவேன் வழிசொல்லுவேன்
கட்டிக்காத்தநானே கண்இமைபோலேதானே
காலாலேகாட்டினதெல்லாம் கையாலேசெய்குவேனே(இங்கே)

௩. நித்தியம்உம்மைப்பிரியேன் மற்றொன்றையும்குறியேன்
நினைவுமறக்கறியேன் நான்சிறியேன்
முற்றிலும்நிறைதிங்கள் எனவேவிளங்கும்உங்கள்
முகம்கண்டால்பசிபோமே முக்திமோட்சம் உண்டாமே(இங்கே)

ஸ்ரீராமர்குகனைச்சிநேகம்கொள்ளல்.

விருத்தம்.

தனதுபுகலும்குகனேஎன் தம்பிஉனதுதம்பிகண்டாய்
எனதுதுணைவன்நீகண்டாய் இச்சீதையும்உன்மதனிகண்டாய்
மனதுபொருந்தத்தாய்சொன்ன வரத்தால்காட்டில்இருப்பதல்லால்
உனதுநாட்டில்இருப்பாமோ உரைப்பாய்இதைஆதரிப்பாயே. (௨௧)

௨௰-திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. காட்டில்இருக்கவந்துகாட்டுக்கருகான குகனே
நாட்டில்இருக்கல்ஆமோ
பூட்டகமோஇதுகுளிக்கப்போயும்சேறு குகனே
பூசிக்கொள்ளல்ஆமோ

௨. பதினாலுவருஷம்போய்நாமெல்லாம்ஒருமிக்கப் குகனே
பதியில்இருக்கல்ஆமே
மதிமோசமோஆனைஎறியும்திட்டி குகனே
வாசலில்நுழைவானேன்

௩. உன்பரிசனம்என்னது உன்ஊரும்என்னதுஉன் குகனே
உறவும்என்உறவாச்சே
என்பிறகேநீவந்தால் இந்தவுறவைக்காக்க குகனே
எவர்உண்டுநீசொல்லுவாய்

௪. பொறுத்தனதுதவம்முடிக்கவேணும்அந்தப் குகனே
பொறுப்புஉனக்கில்லையோ
குறுக்கப்பேசாதேமுதல்கோணினால்முட்டக் குகனே
கோணும்தடைசொல்லாதே

௫. ராமன்பாதன்லட்சுமணன்சத்துருக்கனென்ன குகனே
நால்வர்பிறந்திருந்தோம்
ஆம்உன்உடனேஐந்துபேர்ஆனோம்சீர்ஆனோம் குகனே
அதிகபலவான்களானோம்

௬. குருவியின்தலைமேலேபனங்காய்ப்போற்புவிஆளக் குகனே
குழந்தைபரதனடா
அருகில்இருக்கிறயேநான்இருக்கிறப்போலே குகனே
அடிக்கடிபார்த்துக்கொள்வாய்

௭. உடன்ஆனதம்பியிவன்உனதுமதனிஇவள் குகனே
உனதுதுணைவன்நானே

இவர்என்பெருமானென்றும்நீஎன்றும்
இரண்டாகஎண்ணாதே குகனே
அ. சற்றேநாளுமுன்னேகங்கைக்கரையேற்றிஎன்
தன்னையுங்கரைஏற்றின குகனே
சித்திரகூடத்துக்குவழியெங்கேநீஇங்கே
திரும்பஒன்றும்பேசாதே குகனே

ஸ்ரீராமர்சீதைக்குச்சித்திரகூடவளங்காட்டல்.

விருத்தம்.

வாசன்னனுஞ்சுகுமாரன்குகனைஇந்தவகைதேற்றிப்பரத்துவாசக்
குரவன்அனுமதியாலேதம்பியுஞ்சீதையுந்தானுங்கூடிப்போனன்
பரம்பெறசித்திரகூடமலைசேர்ந்தான்முகமலர்ந்துபார்த்தான்அங்கே
கரதலத்தைச்சீதைமுன்னேநீட்டுவான்மலைவளங்கள்காட்டுவானே. (உஉ)

உ௧-தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

பாராய்பெண்ணே-பாராய்பெண்ணே-பாக்கியசனகன்கண்ணே

அநுபல்லவி.

சீர்ஆகமக்குநேர்ஆமிதுஇந்தச்-சித்திரகூடமலைரத்தினபீடம்போலே - பா

சரணங்கள்.

௧. மாதவர்முனிவர்சொல்-வேதங்களைக்கிளி
வாடிக்கையாய்க்கற்றவளமொருங்கும் படிப்பதும்
கோதும்பினைக்கொல்லையினிற்-பம்பைகள்எடுத்து
குரங்குகள் அடிப்பதும்
ஆதவன்குதிரைபோற்பசும்பாறைஒளிபாய்ந்த
ஆடுகள்பசுமையாக்சோடேறி நடிப்பதும்
பேதகம்இல்லாமல்-மேல்ஓடும்மேகத்தைப்
பெண்ஆனைஎனக்கையால்ஆண்ஆனை பிடிப்பதும்(பாராய்)
௨. மூலமுனிவர்க்குமலை-ஏற்பாடுபோலே
முடங்கிஅடங்கிக்கொண்டுமலைநாகம் கிடப்பதும்
காலில்அழுந்தாமல்-புல்எல்லாம்கொம்பாலே
கருப்பன்றி இடப்பதும்
கோலஅயோத்தியில்இட்டகொடிபோலே
கோல்மூங்கிலிற்பாம்புத்தோல்பட படப்பதும்
கைலாப்பிடிகொடுத்துக்குரங்குகள்முனிவர்க்கு
மந்திகள்அங்கங்கேவழிகாட்டி நடப்பதும்(பாராய்)

௩. அருவிநீரைமொண்டுதுதிக்கையால்யானைகள்
அருந்தவர்பெருங்கமண்டலந்தனில் விடுப்பதும்
குருவிகள்தினைக்கதிர்மூக்கினால்மடத்திற்
கொண்டுபோய் கொடுப்பதும்
பரவுஓமகுண்டத்தெரிவளர்த்திடமயில்
பசுமைஆம்சிறகைவிசிறிபோல் எடுப்பதும்
திருமாமுனிவர்முப்புரிநூல்அணிவதற்குச்
சிலந்திநூல்கொண்டுபோய்குரங்குகள் கொடுப்பதும்(பாராய்)

சக்கிரவர்த்தியைக்குறித்துப்பரதர்புலம்பல்.

விருத்தம்.

தூயமலைவளங்களைஇவ்வாறுகாட்டித்
தோகையுடன்சாமிலட்சுமணன்தான்செய்த
செய்யபர்ணசாலையினில்இருந்தான்இப்பால்
செயம்உளகேகயநாட்டில்வசிஷ்டன்ஓலை
மையறஅறிந்துடன்மீண்டான்தாய்கைகேசி
பதத்தினிற்சத்துருக்கனுடன்பரதன்வீழ்ந்தான்
அய்யன்எனுந்தசரதன்சீர்அறிந்தான்தேம்பி
அழுகின்றான்அழுதழுதுவிழுகின்றானே (உ௩)

உ௨-திபதை-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அரசேஎன்னையனேஎனதப்பனேஎங்கே நடந்தாய்
உனைசேரும்விண்ணவரோடேநீஉறவாடவோ தொடர்ந்தாய்
௨. முறையும்உன்தன்நிறையும்எக்கியத்துறையும்எல்லாம் தானே
பிறகேகொண்டுபோனதென்னகுறையோஅறி யேனே
௩. சத்தியமும்சுபசித்தியமும்நித்தியமும்அல்லோ இறந்தாய்
மித்திரனைதர்மபுத்திரனைராமபத்திரனைஎங்கே மறந்தாய்
௪. அழகாஉன்னைத்தொழ ஆசைகொண்டடுத்தேன்இது பொய்யோ
எழுதாப்பொறிக்கழுதால்இதில்என்னதான்வரும் அய்யோ
௫. சீராகவேமேலேயாமுடிகோலிநீவைக்கும் முன்னே
காலம்செய்திடும்கோலந்தன்னை என்றால்என்னசெய்யல்ஆம் மன்னே
௬. அம்பரந்தனில்சம்பராசுரன் துன்பமேசெய்த நாளே
உன்பிராணனைராமன்மேல்வைத்தஅன்பெல்லாம்இது தானே

௭. அய்யன்முனிவசிஷ்டன்விட்ட கையோலையின்   பேச்சே
மெய்யென்றிருந்தேனோநான் விழித்தேன்கன   வாச்சே
௮. என்னவிருந்தென்ன அண்ணன்ராமன் இங்கிருக்கின்றானோ   இந்நேரம்
புண்ணியவானைஎன்கண்ணிற்காணவேபோமோஎன   விசாரம்

* * *

பரதர் கைகேசியைக்கோபித்தல்.

விருத்தம்.

வருதுயரம்ஒருவிதத்தால்பரதன்தேறி
மன்னன்இறந்தாலும்என்ன அண்ணன்ராமன்
திருமுகம் கண்டாற்போதும்எங்கேஎன்றான்
தேசம்எலாம்ஒருவரத்தால்உனக்கேசொன்னேன்
ஒருவரத்தால்அவனைவனம்போகச்சொன்னேன்
உள்ளபடிஇதுமகனேபின்னோர்நீங்கப்
பெரியமன்னன்இறந்தானென்றுரைத்தாள்கண்ணீர்
பெருகிஅன்னைகைகயிகொர்தருகின்றானே.   (௨௪)

௨௩-தரு-கமாசுராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்அடிபாவிகைகேசி - என்னடிசெய்தாய் - நீ
என்அடிபாவிகைகேசி - என்னடிசெய்தாய்

சரணங்கள்.

௧. மன்னனைக்கொன்றண்ணன்வனம்   போகவிடுத்தாய்-இன்னம்
இன்னம்உண்டோபாவிஎன்னை   வஞ்சிகெடுத்தாய் —(என்)
௨. என்றுபாவிஉன்வயிற்றி   னில்வந்தேனோ - நான்
அன்றுதாயேஅன்றுபேயென்று   நொந்தேனோ—(என்)
௩. அய்யன்ராமன்காய்கிழங்கு   தின்றல்ஆமோடீ - நாம்
நெய்யும்பாலும்சோறும்வாரித்   தின்றல்ஆமோடீ—(என்)
௪. உன்னைக்கொன்றன்பழியைப்   பின்னைத்தீர்க்கிறேன்- எங்கள்
மன்னவன்ராமன்வைவானென்   றெண்ணிப்பார்க்கிறேன்—(என்)
௫. இன்றல்அல்லோநஞ்சுகொல்லும்   என்பதுபொய்யோ-நான்
ஒன்றும்அறியேனேஇதற்கென்செய்வேன்   அய்யோ—(என்)

௬. மன்னவன்பின்னேபோடீ   போகல்லோவேணும்-இனி
என்னையுங்கொன்றுகிடும்நீ   சாகல்லோவேணும்—என்
௭. தரமோநான்புவிஆளத்   தரமோகண்டாய்-ரண்டு
வரமோகழுத்தறுக்க   அரமோகொண்டாய்—என்
௮. நாயகன்ராமனுக்கிணை   சொல்லப்போமோடீ-ஓர்
ஆயிரம்நட்சத்திரம்ஒரு   சந்திரனாமோடீ—என்

* * *

பரதர்கோசலாதேவிக்குச் சத்தியங்கூறுதல்.

விருத்தம்.

கோபித்தபரதன்அந்தகைகையைவிட்டப்புறம்கோசலையைக்கண்டான்
சேவித்தான்கைகைசெய்ததறிந்திலையோஎன்றந்தத்தேவிகேட்டாள்
ஆவிக்கும்ஆவிஅண்ணன்ராமனைவஞ்சித்ததறியேன்அறிந்தேன்ஆகில்
பாவிக்கும்பாவியாய்விடுவேனென்றுசத்தியங்கள்பண்ணுவானே.   (௨௫)

௨௪-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சேரும்கதியில்சேருவேன் அம்மா - இந்தராமத்துரோகம்
தெரிந்தால்அனுபவிக்கிறேன்அம்மா.

அநுபல்லவி.

தீராதநெஞ்சுக்குத்தெய்வமேசாட்சிஇரும்பத்திரும்பஎன்னக்கண்காட்சி
ஓரிபோல்பெரியோரைவைதவன்உண்டவீட்டுக்குரண்டகஞ்செய்தவன்
சேரும்.

சரணங்கள்.

௧. அப்பம்இட்டுஉண்ணுதவன்குடிகெடுத்தவன்   அபவாதகன்
அறத்தில்ஒன்றும்புறத்தில்ஒன்றும்செய்யும்துர்க்குண   போதகன்
செய்தநன்றிவிடுத்தவன்தீக்கெடுத்தவன்   பிரம்மகாதகன்
செய்யும்அவரைக்குழக்கேதடைசெய்தவன்   கொலைபாதகன்
அய்யம்தீர்த்தநெஞ்சை   உறந்தவன்
அசல்உடைமைக்குப்பேயாய்ப்   பறந்தவன்
கைஅடித்துக்கொண்டாளை   மறந்தவன்
கன்றுக்குப்பாலைவிடாமல்க்   கறந்தவன்—சேரும்
ம

உ. தீர்த்தக்கரைப்பாவியும் கடுங்கோபியும்சென்றதுரோகியும்
செபதபவிரதானனும் பரஸ்திரீசெனஅநுபோகியும்
பூர்த்தியாம்மதுபானியும் அக்கியானியும்அவிவேகியும்
பூமிக்குச்சுமைஆகவந்த புகழ்இல்லாததேகியும்
வார்த்தையால்ப்பிரட்டும் படுகோளனும்
வழக்கழிவுசொல்லும் அசட்டாளனும்
அர்த்தவிர்த்திவிடா மிண்டாளனும்
சோற்றிலேநஞ்சிடும் சண்டாளனும்—சேரும்

௩. ஆறுகுளத்திலொடைஇல்லாமல் அம்பணத்துடன்கடந்தவன்
அன்னைவார்த்தைதந்தைவார்த்தைகுருவின்வார்த்தை கடந்தவன்
தேறும்நல்லோர்பெரியோரைக் கண்டெழுந்திராமல்கிடந்தவன்
திருடனுக்கிடங்கொடுத்தவன் இடங்கொடுத்தவன்பின்னேதொடர்ந்தவன்
வேறில்லாரைப்பகைத்து விண்டவன்
வேட்டகந்தன்னிலே இருந்துண்டவன்
சிறும்படையைப் பயந்துகண்டவன்
செடியிலேதலைநுழைத்துக் கொண்டவன்—சேரும்

* * *

குகன் பரதர்சேனையைக்கண்டுகோபித்தல்.

விருத்தம்.

சத்தியஞ்செய்துடனேசத்துருக்கனோடே
தசரதன்செய்கடன்முடித்துநானேராம
பத்திரனைஅழைப்பேனென்றெழுந்தாரரும்
படைகளுந்தாயரும்வசிஷ்டமுனியுஞ்சூழ
சுற்றுசடாமுடிமுடித்துப்பரதன்கங்கைத்
துறைக்குவடகரைக்குவந்தான்வரக்கண்டாங்கே
இத்திசையில்ராமன்மேல்ப்பகைகொண்டன்றோ
வந்தானென்றுகுகன்சீறினனே. (௨௬)

௨௫-தரு-காபிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னத்துக்குப்பரதன்படைவந்ததுஎன்றிராணியாருங்கள்வேடரே.

அநுபல்லவி.

மன்னவனுக்கடிமை நானென்றுதெரியாமல்
வனத்தில்வந்தும்நாத்திப்பிடிக்கவந்தாரோ—(என்னத்துக்)

சரணங்கள்.

௧. ஆழநெடுந்திரைக்கங்கை ஆறுகடந்தாலுமென்ன
தோழனென்றுராமனென்னைச் சொல்லியருளியதொரு
சொல்லலேனோ-சொன்னபடிக்கு
நில் லலேனோ-நான்பிடித்ததை
வில் லலேனோ-இவரைக்
கொல்லலேனோ—(என்னத்துக்கு)

உ. அடிஒட்டின்மேல்க்கரணம் போடவந்ததுபோலே
முடியத்தரத்தினன்ன மோசஞ்செய்யவந்தாலும்
முறியேனோ-வலைகடிகொண்
டெறியேனோ-தலைதலையாய்ப்
பறியேனோ-கொல்ல
அறியேனோ—(என்னத்துக்கு)

௩. ஆனைகட்டச்சங்கிலிதான் எடுத்துக்கொடுத்தாற்போல்
என்னைநிர்த்துக்கொண்டாரென்னை இவரைப்பொடிபொடியா
இடியேனோ-வாளோட்டாமல்
அடியேனோ-வந்தமன்னரைப்
பிடியேனோ-என்சொல
முடியேனோ—(என்னத்துக்கு)

* * *

லட்சுமணர் பரதர்சேனையைக்கண்டுகோபித்தல்.

விருத்தம்

இடம்பெருகுகுகன்இவ்வாறெண்ணிஐயம்
தெளிந்துதெரிசிக்கவந்தான்பரதன்அன்பால்
நடந்ததெல்லாங்குகனுக்குச்சொன்னான்கங்கா
நதிகடந்தான்சேனைகளைப்பார்த்துவாசன்
மடந்தனிலேஇளைப்பாறிச்சித்திரகூட
மருங்குவந்தான்அவனைலட்சுமணன்கண்டிங்கே
தொடர்ந்துகொல்லவரும்இவனைக்கொல்வேனென்று
துடிக்கின்றான்ராமன்முன்னேபடிக்கின்றானே. (௨௭)

௨௬-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி - எனக்குத்தரம்
ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி.

அநுபல்லவி.

பரதன்சேனைஇதானம்மா   எதிர்ப்
பார்க்கத்தெரிந்ததையாபழி   காரி
வரவிடுக்கவந்தானம்மாச்   சீறி
வாட்டும்ஒருமைபார்க்கிறேன்ஜானகித்   தேவி—ஒருமொழி

சரணங்கள்.

௧. வஞ்சகன்பரதன்செய்த   கோரம் - தீர்த்தால்அல்லாமல்
வாங்குமோமானதுவங்கை   வாரம் - தேவரீர்இந்த
வஞ்சியுநீரும்போய்ச்சற்றே   தூரம் - இருப்பீர்இந்த
மட்டுமேசெய்திடும்   உபகாரம்
கொஞ்சநேரத்திலே   என்கிலேபூட்டி
குனாக்கும்சரிக்கு   இணைஜோகவேகாட்டி
பிஞ்சிடாமல்இந்தச்   சேனையைக்கூட்டி
பிரளயகாலருத்திரனைப்   போல்மாட்டி
நஞ்சுகஞ்சுபஞ்சுபஞ்சா   மலர்க்கும்
நெஞ்சிரங்கவெஞ்சரங்களைத்தொடுக்கிறேன்—ஒருமொ

௨. வண்டிதும்தேரும்   கப்பல்போல்ஆட - அதிலேரத்த
வாரிவெள்ளம்   கரைபுரண்டோட - எதிர்த்தமன்னர்
மண்டைகள்மலை   மலைபாய்போட - பேயும்பூதமும்
மகிழ்ந்துகொண்டு   தலைகள்பந்தாட,
அண்டொணாதபெரும்   படைகள்மென்மேலே
ஆர்க்காற்றில்விழும்   சருகுகள்போலே
சண்டவார்களைகள்   தொடுக்கிறதாலே
சரிக்குசரிக்குவிலே   குலைக்கொருகாலே
விண்டுவிண்டுவிண்டுவிண்டு   விழவிழ
கண்டகண்டதுண்டதுண்டம்   ஆக்கிறேன்—ஒரு

௩. ஆள்அடிமை   மட்டமண்ணிலோட்ட - அம்புகள்பாய்ந்து
ஆனைமத்தகம்   பிளந்துகொட்ட - அதில்வந்தபேர்
வாளைமீன்போல்   புகுந்துவிட்ட - அந்தச்சேனையை
வாரிக்கொண்டு   ரத்தம்கடல்மூட்ட
தோளும்தாளும்அறுந்து   துடிதுடிக்கத்
துள்ளித்துள்ளிச்   சிலகலந்தயங்கள்தடிக்க
மூளைச்சேற்றில்விழுந்   நிறைப்பரள்மொய்க்க
முகமண்டைவாக்கெல்லாம்   குமரிகள்படிக்க

வாளிஆடகாளிஆட   பலபல
கூளிஆடதூளிஆட   அடிக்கிறேன்-ஒருமொ

ஸ்ரீராமர் சக்கிரவர்த்தியைக்குறித்துப் புலம்பல்.

விருத்தம்.

இந்தவகைசொல்லதம்பீஉனக்குலோகம்
ஈரேழும்நேர்ஆமோநமக்குப்பூமி
தந்திடவும்வணங்கிடவும்வந்தான்கண்டாய்
தம்பிபரதனும்எனைவிரோதிப்பானோ
அந்தமதிவிடுவிடென்னப்படையைநீக்கி
அண்ணல்முன்னேபரதன்வந்துபணிந்தபோது
தந்தைஉளனோஇலனோஎன்றுகேட்டான்
தயங்கினான்ரகுராமன்மயங்கினனே.   (௨௮)

௨௭-இபதை-கண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மெய்யைநிலைநிறுத்திஉன் மெய்யைவிட்டுப்போனதென்ன
மெய்த்தவனே-என்னைப்-பெற்றவனே
கையிலேவளர்த்தஎன்னை இப்படிகண்கலங்கங்கள்
கண்டாயோ-என்னை-விண்டாயோ.

௨. வீட்டில்இருந்துமுகத்தை காட்டுவாய்என்றிருந்தேனே
வெறுத்தாயோ-என்னை-ஒறுத்தாயோ
காட்டிலேபோம்முன்ஆகவின் நாட்டிலேபோனதென்ன
காரியமோ-இது-வீரியமோ

௩. தத்தளிக்கும்பரதற்குப் புத்திமதியோசனைகள்
சாற்றுவையே-பயம்-மாற்றுவையே
எத்தனைகாரியத்துக்கும்என் கர்த்தன்இருக்கிறான்என்றே
எண்ணினேனே-அவம்-பண்ணினேனே

௪. எண்ணும்என்உயிர்இருக்க உன்உயிரைமாத்திரம்
இறந்தாயோ-என்னை-துறந்தாயோ
கண்ணுக்குற்றம்கண்ணுக்குத் தெரியாதென்றுசொன்ன
கதைஆச்சே-நல்ல-வதைஆச்சே.

௫. இந்திரன்பழையபோலே வந்துனதுமுன்னேமுறை
இட்டானே குறை-பட்டானே

அந்தர்த்திலேசென்றாலும் என்தாய்இங்கேஇருக்க
ஆர்ப்டுவார்-தேர்-ஆர்விடுவார்

௬. என்இரண்டுகால்மிதித்த உன்னிடமார்புமயிறும்
இருதாளும்-உன்-இருதோளும்
வன்னிநின்னக்கண்டேனே என்னைப்போல்ஒருபிள்ளை
வாய்ச்சுதல்லோ-பேய்-ஆச்சுதல்லோ

௭. தன்அரிபத்ராயவந்து தாய்வாழையைக்கெடுத்த
சதிதானோ-தலை-விதிதானோ
பிள்ளையென்றுநான்பிறந்து பெற்றவளைக்கொன்றானென்று
பேர்எடுத்தேன்-நல்ல-சீர்படுத்தேன்

௮. கண்ணில்எண்ணெய்குத்திஎன்னைக் காத்துக்கொண்டிருந்துபட்டம்
கட்டும்முன்னே-பலன்-கிட்டுமுன்னே
வெண்ணெய்திரண்டுவரச்சே தாழிஉடைந்தாற்போலே
விடுத்தாயே-என்னைக்கெடுத்தாயே.

௯. நாலுபேர்பிள்ளையிலும் என்மேல்உன்மானம்எல்லாம்
நாட்டினையே-பா-ராட்டினையே
காலிலேதைத்ததுஉன் கண்ணிலேதைத்ததுபோல
காத்தாயே-இன்று-தீர்த்தாயே

௰. வெந்தவனம்கடந்துஉன் ஊரினில்வந்தால்முகத்தின்
விழிப்பேனோ-ஆரை-அழைப்பேனோ
என்தன்முகம்நிறுத்தி உச்சிமோந்துதழுவி
எடுப்பார்ஆர்-முத்தம்-கொடுப்பார்ஆர்

௰௧. மாமந்திரசாலையும் சிங்காதனமும்ஒளி
வாங்காதோ-கண்டால்-ஏங்காதோ
பூமண்டலாதிபர்கள் தாம்வந்துபணியும்அம்
புரபதனே-அய்யோ-தசரதனே.

* * *

ஸ்ரீராமனை வசிஷ்டர் தேற்றுதல்.

விருத்தம்.

அரசனைஎண்ணிஇவ்வா றழும்இராகவனைநோக்கி
வரமுனிவசிஷ்டன்அங்கே மலர்க்கையால்கண்ணீர்மாற்றி
விரிநீருள்ளவர்ஆருனும் விதியினைவெல்வாரன்றோ
புரவலர்கேளாய்என்று போற்றுவான்தேற்றுவானே

56

௨௮-தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமா!நீயும்இப்படி-யோசிக்கல்-ஆமோஎன்சாமீ

அநுபல்லவி.

பூமான்எனும்தசரதன் போகையினாலே
புலம்பிப்புலம்பிக்கொண்டு குழந்தைப்பிள்ளையைப்போலே—ராமா

சரணங்கள்.

க. கனிந்துகண்ணீர் இறைத்தாவதுண்டோசாரம்
கையால்எள்ளும்நீரும் இறைக்கவேணும்இந்நேரம்
நினைந்துபார்க்கில் இதுமகன்செய்யும்உபகாரம்
நீஅறியாததுண்டோ உனக்கேன்இந்தவிசாரம்—ராமா

உ. புண்ணியபாவம் இரண்டும்செய்என்றுமனஸ்க்கரி
பூட்டும்வாளுள் அதில்போட்டுவைத்ததிரி
ஏண்ணாறும்இவ்விரண்டிலும் உயிர்விளக்கேசரி
இரண்டும்போனால்விளக் கிருக்குமோஅரிகரி—ராமா

௩. பெறுவதன்முன்எவர்க்கும் அடிக்கடிமேதினி
பிராணபயம்உண்டென்று சொல்லுமேபெருந்தொனி
அறுபதாயிரம்ஆண்டு அரசிருந்தான்தனி
அதுவும்போதாதென்று அழல்ஆமோஅவற்றினி—ராமா

* * *

ஸ்ரீராமர் முன்னேபரதர்புலம்பல்.

விருத்தம்.

அலகிலாக்குறைநீக்கிவசிஷ்டன்தேற்ற
அறிந்துகங்காநதிமூழ்கித்தந்தைக்குள்ள
குலவிதிஎல்லாம்செய்தான்சீதைதானும்
குளிர்ந்தகங்காநதிமூழ்கித்தெளிந்தபோது
தலம்அதனைஆளும்முடிதரிக்காயதம்பி
சடைமுடியேன்தரித்தாய்என்றுவாருங்கண்ணீர்
பலபலெனஉதிர்ந்திடத்தன்மனதில்உள்ள
படிராமன்முன்பரதன்பகருவானே.

௨௧ திபதை-எதுகுலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மன்னவன்தன்னையும்கொன்று உன்னையும்இந்தப்படி-
வைத்தாள்வயிற்றுக்குள்ளே அவம்
சென்மித்தான்அல்லோ மாதவம்செய்யவேணும்
தேவாஉனக்கேன்இந்த மாதவம்

௨. உறவுபோலேஇருந்து குளவிபோலேகொட்டி-
உன்னையும்போகச்சொன்னாளே படுபாவி
மறுபடியும்வந்து சந்தோஷம்சொன்னாளே
வைத்திருக்கவேணுமோ என்ஆவி

௩. உடன்ஆம்துணைபிரிக்க தந்தைஉயிர்மரிக்க
ஊரும்பிரிக்கவரம் கொண்டேனோ
இடறினகாலிலே இடறும்என்பதெல்லாம்
என்இடத்திலேதானோ கண்டேனோ

௪. அருந்துணையேஎன தையாவேஎன
தரசேகீபர தேசியோ
பிரிந்தென்னைப்போஎன்றாய் பழிகாறனோநான்
பிள்ளைபிறந்தநேர் வாசியோ

௫. உலகம்எல்லாத்தையும் நீஆளவேணும்பின்
ஒருவர்ஆண்டுகுறை வாங்குமோ
மலைதாங்கும்பாரத்தை மலையேதாங்கவேணும்
மண்ணாங்கட்டிஎன்ன தாங்குமோ

௬. ஆனைமேல்இட்டபாரம் பூனைமேல்இட்டால்போலே
அரசாளுவதென்ன கோலமோ
கானகம்நீஇருக்க நான்போய்அரசிருக்கல்
கதையோஇதுகலி காலமோ

௭. தன்இனம்தன்னைக்காக்கும் வேலிபயிரைக்காக்கும்
தப்பிதம்இல்லைஇந்தப் படிதானே
உன்இனந்தன்னைநீயே வந்துகாத்தருள்என்றால்
ஒன்றும்ஆகாதுசொன்னேன் அடியேனே

௮. தேவேந்திரனுக்கும் மகுடம்தரித்துவைத்த
தெசரதமகாராசன் பூமியே
நீவேறென்றெண்ணல்ஆமோ நீயேவரவேணும்
நீஆளவேணும்என் சாமியே

ஸ்ரீராமர்பரதருக்குப்புத்திசொல்லுதல்.

விருத்தம்.

பரதன்இவ்வாறுகூறப்-பரிந்துஸ்ரீராமன்தாயார்
விரதம்ஏன்விட்டாய்இந்த-விரதம்ஏன்கொண்டாய்நான்போய்த்
தரமுடன்பதினால்ஆண்டும்-தவம்செய்யவேணும்நீபோய்த்
திரமுடன்புவிஆள்என்று-தெரிவிப்பான்விரிவிப்பானே (௩௩)

௨௮-தரு-சுருட்டிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இன்னம்செறுபிள்ளைபோலே என்னைஅழைக்கிறாய்உன்னை
என்னசொல்வேன்பரதாஎன் கண்ணின்மணியே

அநுபல்லவி.

அன்னைதந்தபணிவிடையே தன்மம்என்று-மதித்தேனே
அப்படிநீமதிக்காமல் இப்படிவந்-இதில்த்தானே-இன்ன

சரணங்கள்.

௧. வாய்த்தமழைவிட்டுமது வானம்விட்டஇல்லைராமன்
வனத்தில்வந்தபின்னும்என்ன சொல்லையா
தேத்தியாப்பதினாலு-வருஷமட்டும்சொன்னபடி
நில்என்றால்நில்லாமல்என்ன தொல்லையா
எத்ததகப்பன்சொன்ன வார்த்தைகொண்டுபுவிஆள
இசைந்தேனே அந்நாள் அறிந்தாய் அல்லையா
மூத்தவனும்ஒருவிதத்தில் தகப்பன்ஆமேசொன்ன
மொழிகொண்டுபுவிஆளொணாதோவல்லமை இல்லையா - இன்னம்

௨. மத்தர்போல்பொய்உரைத்துத்-தகப்பன்வினைகட்டிக்கொள்ள
மகன்இருந்துபட்டம்கட்டிக் கொள்ளல்ஆமோ
சத்தியமாலேதாம்எல்லாம் கண்கண்டதெய்வம்என்றும்
தாய்தகப்பன்உரைகடந்து தள்ளல்ஆமோ
பத்தியாத்தவம்எனக்குப் புவிஉனக்கும்பிறித்திருக்கப்
பங்கல்லாப்பங்கைவிழுந்து அள்ளல்ஆமோ
பித்தன்அல்லடாதம்பி நீ-சமர்த்தன்என்றிருந்தேனே
பேய்ஆகிலும்பெற்ற தாய்வார்த்தை தள்ளல்ஆமோ(இன்ன)

௩. முன்ஆகநான்கொண்டுபின்ஆகஅரசனுக்கு
முறையாலேதந்தேன்என் உரைபொய்யாமல்

உன்றனும்என்றனும் சொன்னபடிநடக்கும்என்று
உசாப்போனதசரதற்கு வசைவையாமல்
பின்னுமின்னங்களாக பட்டணமும்பரிசனமும்
சேற்றில்நட்டகம்பம்போலே தொய்யாமல்
என்னாணைதம்பிநீ உன்நாட்டையாளடா
எப்படிநான்சொன்னாலும் அப்படி நீசெய்யாமல்(இன்ன)

—*—

பாதுகைக்குப்பரதர் பட்டாபிஷேகஞ்செய்தல்.

விருத்தம்.

பதினாலும்ராகவன்இவ்வாறுரைக்கக்கேட்டான்
பரதனும்சம்மதிகொண்டான் பதினால்ஆண்டாம்
அதில்வராவிடில்முடிவேன் என்றுகொண்டான்
அண்ணன்மிதியடிகொண்டான்அனுப்பிக்கொண்டான்
அதிஅயோத்தியில்புகுதாமல்நந்திக்கிராமம்
அதனில்நின்றுசுமந்திரன்அதிகாரஞ்செய்ய
மிதியடிக்குமுடிதரித்தான்தெற்கேநோக்கி
விழித்துநின்றான்தன்பதியைக்கருதிநின்றானே

அயோத்தியாகாண்டம் - முற்றிற்று.

—*—

விருத்தம் - ௩௫

திபதைகள் - ௰௨ - தருக்கள் ௰௮ - ஆக ௩௰.

பாயிரம்-௧-க்கும் - காண்டங்கள் ௨-க்கும்-கூடிய.

கொச்சகம்-௧-வெண்பா-௨-வசனம்-௧-விருத்தம்-௯௨-ஆக ௯௬.

தொடையம்-௧-திபதை ௰௬-தருக்கள்-௩௰-ஆக ௪௭.

ஸ்ரீ சக்கிரவர்த்தித்திருமகனார்

திருவடிகளேசரணம்



ஸ்ரீராமஜெயம்.

—*—

மூன்றாவது.

ஆரணியகாண்டம்.

ஸ்ரீராமர் அத்திரியைக்கண்டு தண்டகஞ்சேர்தல்.

விருத்தம்.

துதிபெறுதம்பியர் தாயர்மந்திரிமார்கள்
தொல்முனிவர்நகரங்கள் முதல்போனதும்
பதியுமங்கம்இருப்பிடத்தைக் கண்டுகொண்டார்
பரிவினுல்வந்துதினம் சூழ்வாரென்று
சதியெனுஞ்சானகிபின்னும் தம்பிமுன்னும்
தான்வரச்சித்திரகூட மலைக்கப்பாலே
உதயரவிமுன்பனிபோல் முனிவர்துன்பம்
ஒழிக்கின்றான்ஸ்ரீராமன் வழிக்கொண்டானே. (க)

க-த்விபதை-தோடிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. வழிகொண்டிராகவன் விண்டான் - அத்தி
வழியில்அத்திரிமுனியைக் கண்டான் - முனி
பொழியும்ஆசிர்வாதம் கொண்டான் - தந்த
பூங்கனிகிழங்கும் உண்டான்

உ. அழுக்கில்லாதசொர்ணச் சாயை - ஆன
ஆடைபணிகள்வெகு வாயே - அன்பு
செழிக்கும்சீதைக்கொரு தாயைப் - போலே
செய்தாளேமுன்அநு சூயை

௩. அதுகொண்டம்முனிவனவ் அன்பிலே - இடத்
தனுமதிகொண்டவர் முன்னே - நல்ல
முதுதண்டகாரணியம் தனைக் - கண்டு
மூவருஞ்சென்றார் பின்னே

விராதன்வதையும் துதியும்.

விருத்தம்.

பொய்கலந்தவிராதன்அந்த வனத்தேவந்தான்
பூவைசானகியைஎடுத்துக் கொண்டான்ராமன
மெய்கலந்ததம்பியுந்தானும் போர்செய்தான
விட்டிலன்என்றவர்களையும் எடுத்துக்கொண்டான்
மைகலந்ததோளைஇரு வோருமவெட்டி
மாய்த்திட்டார்பதம்படலால் அரக்கன்அங்கே
கைகலந்ததிவ்வியதேகத்தைப் பெற்றான்
கதிசெல்வான்ஞானமுள்ள துதிசொல்வானே. (உ)

க-தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அறிவார்ஆர் - உன்னை - அறிவார்ஆர்.

அநுபல்லவி.

அறிவார்ஆர்மாணிடன்போலே - குறியாவேஷம் கொண்டதாலே
நெறியேன்செய்தபிழைதன்னைக் - குறியாதேராகவா உன்னை —(அறி)

சரணங்கள்.

க. எடுப்பானும்எவர்க்கும் இன்பங்-கொடுப்பானுங்குட்டியினிலே
விடுப்பானும்ஆலிலைமேலே-படுப்பானும்நீஆகவேபா
ராட்டுவாய்-கதியைக்-காட்டுவாய்-உலகைச்
சாட்டிஇல்லாப்பம்பரம்போல்-ஆட்டுவாய்உன்மகிமையை—அறிவா

உ. தாய்அறியும்பிள்ளைதன்னைத்-தாயையும்பிள்ளைஅறியும்
நீஅறியும்உயிர் உன்னை-ஆயறியாதென்னஇந்த
சாலமோ-இதென்ன-கோலமோ-உனது
காலாலேமுடிந்ததனைக்-கையாலேஅவிழ்க்கப்போமோ—அறிவா

௩. அரவம்ஆதிமேல் உகந்தாய்-ஒருகொம்பினுலேசுமந்தாய்
சரணம்அதினுல்அளந்தாய்-பெருநிலமங்கைமேல்வைத்த
தாகமோ-இனியாள்-மோகமோ-உன்மார்பில்
ஏகமாய்இருக்கின்றவள்-வேகமேசெய்யாளோஉன்னை—அறிவா

௪. உள்ளசராசரம் எல்லாம்-வள்ளலேஉன்நாபிமலர்ப்
பொள்ளலில்வந்துமொருவர்-பிள்ளையானதீவந்தது

ஞாயமோ-இதென்ன-மாயமோ-சேற்றிலே
மேயும்பிள்ளைப்பூச்சிபோலே-நோயவுந்தோயாதவுன்னை—அரி

௫. வேதத்தின்மேலே வேதாந்த-நாதத்தின்மேலேஞானிகள்
போதத்தின்மேலேவிளங்கும்-பாதத்தைஎன்மேலேவைத்தாய்
யோக்கியனே-அடியேன்-சிலாக்கியனே-சுருதிசொல்
வாக்கியனேசுவாமி-உனது-பாக்கியமேபாக்கியம்உன்தன்னை—அரி

௬. பாதகண்டுசொல்லாலே இந்த-நாய்கண்டதென்றுகொள்ளாதே
தாய்கண்டுபொறுக்காததை-சேய்கண்டுபொறுக்குமலர்த்
தாமனே-பன்னிரு-நாமனே-எவர்க்கும்
வாமனனாகும்ஸ்ரீராம-ராமனேஉன்பெருமையை—அறிவார்

* * *

தண்டகவனரிஷிகள்ஸ்ரீராமரோடுமுறையிடல்.

விருத்தம்.

நாடிவிராதன்வணங்கி உபரம்போனான்
சுவாமிசரபங்கன்ஆசிரமத்திற்போனான்
அதில்அதிர்கண்டிந்திரனும் போனான்ராமன்
அருள்முனிதம்பதியோ டனலிற்போனான்
கதிதருதண்டகவனத்து முனிவர்தம்மைக்
கண்டிசைவிஅருளுதயன் மண்டிருந்தான்
சதிசெயும்ராக்ஷதராலே கொடுஞ்சகித்வன்
தரிக்கொண்ணார்அவர்கள்சுகவீ விரிக்கின்றாரே. (௧)

௨-த்விபதை-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. ராமபத்திராராமச்சந்திரா - ராமராஜ ஸ்ரீராம்
பூமிச்சுமைதீர்க்குங்காம - புத்திராஜ ஸ்ரீராம்

௨. அரக்கர்கையால்நெருக்கிப்பட்டு-ஆலைக்கரும் பெனத்தானே
நெருக்கிடைஆய்வருந்தும்எம்மை-நிலைநிறுத்தாய் எங்கோனே

௩. விழல்எனராட்சதநெருப்பால் வெந்தோம்புகலோம்ஒருகாலே
மழைமுகம்கண்டபயிர்போல் மகிழ்ந்தோம்-நீவரலாலே

௪. புனைசேரும்ராட்சதரால் பூனைகளாய்ப்-போனோமே
அனைசேரவரசுகளன்போம் ஆனைகள்போல்-ஆனோ

---

௫. வள்ளல்தசரதன்மகனே மனக்கவலை-தீராயோ
எள்ளளவுன்கிருபைக்கண்ணால் எங்கள்முகம்-பாராயோ

௬. பஞ்சுபறந்தாலும்ஐயா படியும்அல்லோ-ஒருதேசம்
நெஞ்சுபறந்திடுமதற்கு இல்லாதேனும்-லவலேசம்

௭. உத்தமனேஅரக்கரைவே ரொடும்பிடுங்கி-எறிவாயே
இத்தனைபேர்செயும்தவங்கள் எல்லாமுநீ-பெறுவாயே

௮. புலிக்கூட்டம்இரிகாட்டிற் புகுந்திடும்மான்-எனநாமே
கலிக்கிராட்சதர்இரியும் காட்டில் இருக்கின்றோமே

௯. இயற்கைகுலைந்தராக்கர்களால் இறந்துவிட்டோம்-பேர்நாமம்
வயிற்றினில்வாள்கட்டிக்கொண்டுமறந்துவிட்டோம்செபநேமம்

௰. உங்காரம்செயில்அரக்கர் உலகில்என்ன-படுவாரோ
இங்கேநீஇருக்கில்அவர் எட்டியும்பார்த்-திடுவாரோ

—*—

ஸ்ரீராமர் தண்டகவனரிஷிகளுக்கு அபயமீதல்.

விருத்தம்.

தருக்களும்மலையும்சூழ்ந்த தண்டகவனத்தோர்சொந்த
வருத்தம்ஆம்மொழியைக்கேட்டான் வணங்கியேராமன்நீங்கள்
செருக்கியேதவங்கள்செய்வீர் தேவரீர்க்கேவல்ஆளா
இருக்கிறேன்அரக்கர்துன்பம் இனிவிடும்எனச்சொல்வானே (௨)

௨-தரு-கலியாணிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அஞ்சாதிருங்கள்சந்நியாசிகளே-தண்ட—காரண்ணியவாசிகளே

அநுபல்லவி.

அஞ்சாதிருங்கள்உங்கள் ஆசீர்வா தம்தனை
அப்புறம்ராட்சதர்க் குண்டென்கை வில்கணை
செஞ்சாமாருதம் போலேவொ டிக்கிறேன்
பஞ்சாகப்பறந்தோட டிக்கிறேன்—அஞ்சா

சரணங்கள்.

௧. கண்டோரைக்கொல்லுவேன் கொல்லாமல்-விட்டான்
காகுத்தனென்றுநீர் சொல்லாமல்
மண்டிலத்திர்த்துமுன் நில்லாமல்-காலில்
வந்துவணங்கினோர் அல்லாமல்
மண்டிடைசமேல்அவ ராலேஆனமட்டும்

ராட்சதசேனைகள் வந்துபோராடட்டும்
அண்டபகிரண்டம் ஆடிக்கெட்டும்
அப்புறம்போனாலும் என்னையேவிட்டும்—அஞ்சா
௨. அந்தணராலே பசுவாலே-தங்கள்
ஆவிகொடுத்தவர் விண்மேலே
மூந்தியதேவர்க்கும் அப்பாலே-சொல்லும்
மூர்த்திகள்மூவர் அதனாலே
இந்திரன்முதலாதேவர் வந்தடுக்கிறேன்
என்றாலும்ராட்சதர் போரில்அடுக்கிறேன்
சந்த்ரோதயன்கண்ட வாளிவிடுகிறேன்
சூரியனைக்கண்ட பனிபோல்ஒடுக்கிறேன்—அஞ்சா
௩. மங்கையேதாயார் நிலம்பேற-முடி
மன்னவன்உயிரும் தடுமாற
எங்கள்பரதனும் வேசாற-நான்
என்வந்தேன்என்செண்பகம் உடற
உங்கள்பகைவிட்ட காடேபொறுக்கிறேன்
உக்கிரகோதண்டத்தில் நாணிறுக்கிறேன்
எங்கெங்கும்பகைகளை வாலேநொறுக்கிறேன்
ராட்சதருண்டெல்லாம் வேரோடறுக்கிறேன்—அஞ்சா

—*—

ஸ்ரீராமர் பஞ்சவடிபிரத்தைக் காணுதல்.

விருத்தம்.

அந்நன்முனிவர்க்கிந்தவகைதேற்றித்தண்ட
காரணியத்தனில்பத்துவருஷம்நீக்கி
மறுமுனிபின்சுதீக்ஷ்ணமுனிதவமுங்கொண்டு
வந்தகஸ்தியமுனிவரனைவணங்கிஅன்றுள்
தருவில்லும்அம்புமெரிக்குங்கணையுங்கூடும்
சங்கையிலாதேதரித்துமங்காராமன
பரிவுடன்தம்பியும்ஜானகிதாயும்செல்லும்
படிகொண்டால்பிறகுபஞ்சவடிகண்டானே

—*—

ஸ்ரீராமர் சடாயுவைக்கண்டு பஞ்சவடிதங்கல்.

விருத்தம்.

அகஸ்தியமுனிவனைஅனுப்பிக்கொண்ட-வந்தவழியில்சடாயுவானும்
தகப்பன்உறவுகொண்டவன்காட்டத் தருசோலைகோதாவிரிதாண்டிச்

தங்கும்இளையோன்செய்தபர்ணசாலைதனிலேசனகியுடன்
மிகுந்தோர்பஞ்சவடியில்உள்ளோர் விருந்தாய்ராமன்இருந்தானே (௬)

௩-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இருந்தானேராமச்சந்திரன்-பஞ்சவடியில்-இருந்தானேராமச்சந்திரன்.

சரணங்கள்.

௧. இருந்தானேராமசந்திரன்-ரிஷிகளைக்காக்கும் தந்திரன்
வருந்தராட்சதர்கூடி-வரும்வழிதன்னை நாடி—இருந்தா
௨. நிருதர்கள்பரிபார்த்து-நிரைநிரையாக கைகோர்த்து
வரும்விகாதத்தைத்தீர்த்து-மாமுனிவோரைக் காத்து—இருந்தா
௩. அலைந்தமுனிவர்சோகம்-ஆகுலம்எல்லாம் போக
இலங்கையில்அனுபோக-ராட்சதர்க்கொடன் ஆக—இருந்தா
௪. பலத்தராட்சதர்ஆட்ட-பாட்டங்கள்எல்லாம் மாட்ட
சலித்தபேர்துன்பம்ஓட்ட-தர்மத்தைநிலை நாட்ட—இருந்தானே

—*—

சூர்ப்பநகைஸ்ரீராமனைக்கண்டுமோகித்தல்.

விருத்தம்.

இருந்தராகவன்பூமேனி-எழில்எல்லாம்நோக்கிஆசை
புரிந்தசூர்ப்பநகைலங்கா-புரிஇராவணற்குத்தங்கை
அருந்தும்மோகத்தால்அய்யன்-அடிமுடி-அளவும்கண்டு
தெரிந்துள்ளேஎண்ணிநெஞ்சம்-இருகுவாள்உருகுவாளே. (௭)

௫-திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. தேவனோமனிதன்தானோ-யாவனோயௌவனம்உள்ள
சித்தனோ-இவன்-கர்த்தனோ-பிரமன்
பாவனையால்க்கண்டபெண்கள்-ஆவியைக்கொள்ளைகொள்ளென்று
படைத்தானோ-என்னை-உடைத்தானோ
௨. எட்டாக்கையும்இவன்கை-மட்டாமோசொரசொன்ன
இருக்குமே-உள்ளே-சுருக்குமே-முன்னே
பட்டமன்மதன்தவம்செய்-திட்டிந்தஉருவாய்ப்புறப்
பட்டானோ-தவசு-தொட்டானோ

௩. ஈசனுக்குமுக்கண்இந்திர-ராசனுக்கோர்ஆயிரம்கண்
எண்ஆச்சே-இவற்கிரு-கண்ஆச்சே-இவனைப்
பேசினால்என்சாமிஇவன்-கேசவன்தானோநான்ஒன்றும்
அறியேனே-ஆரோ-அறியேனே

௪. புந்திபவளத்தைஇவன்-செங்கனிவாய்க்கொப்புசொல்லப்
போகுமோ-நிகர்-ஆகுமோ-அய்யோ
அந்தவார்த்தையைத்தப்பென்ற-நிந்தையால்பவளம்துப்பென்
றாச்சுதே-உவமை-போச்சுதே

௫. முடிவைத்தகுழல்ச்சடையா - முடியாவிட்டால்பெண்கள்எல்லாம்
முடியாரோ-மனம்-மடியாரோ-இவன்
அடிவைத்தபூமிப்பெண்யேவி-புளகித்தால்ப்போல்அல்லோபுல்லை
அரும்பினாள்-மெத்த-விரும்பினாள்

௬. மரவுரிசேர்இடையிதாம்-பரமதைச்சேராததென்ன
மாயமோ-இது-ஞாயமோ-சந்
திரன்இவன்முகம்என்றாலும்-வரவர-அதுக்கும்கலை
தேயுமே-களங்கம்-தோயுமே

௭. நவம்செய்ததாமரைப்பெண்ணும்-செவம்செய்கிறாள்இவன்மார்பை
நாடவோ-வந்து-கூடவோ-அய்யோ
தவம்செய்யவந்தானோநான்முன்-தவம்செய்ததற்காகக்காட்சி
தந்தானோ-தேடி-வந்தானோ

௮. எதும்இவன்இலக்கணம்-எல்லாம்செய்தஅயனைமோசம்
இட்டானோ-மதி-கெட்டானோ-இவன்
காலில்த்தூளுங்கொவ்வாஇந்திரன்-மேல்உலகைஆள்வதென்ன
கர்மமோ-இது-தர்மமோ

௯. எடுத்திவன்சுந்தரத்துக்காம் அடுக்காளபூலோகம்பூரா
இருப்பானென் அரு-வருப்பானென்-சும்மா
விடுத்தவன்அல்லவேபொன்னின் குடத்துக்குப்பொட்டிட்டுப்பார்க்க
வேணுமோ-அதிகம்-காணுமோ

௰. தப்பில்லாஇவனைச்சேர-இப்படிபிர்ம்மாஎனக்குத்
தந்தானோ-இவனும்-வந்தானோ-ஓகோ
எப்படி-ஆனாலும்இவன்-பொற்புயம்தன்னைச்சேராமல்
இருப்பானோ-ஆவி-தரிப்பேனோ

௰௧. இந்தவிதம்கண்ணிமலர்ச் செந்திருப்போல்மாயவேஷம்
இட்டாளே-நாணம்-விட்டாளே-நல்ல

60

பைந்தொடி-ஆய்ச்சூர்ப்பநகை வந்துராமச்சந்திரன்முன்னே
படர்ந்தாளே-கிட்ட-நடந்தாளே

ஸ்ரீராமர்பக்கல்சூர்ப்பநகைவருதல்.

விருத்தம்.

அட்டிசொல்லாதன்னைஉனாகொண்டராமன்
ஆனைவருகிறவழியைப்பார்க்கும்சிங்கக்
குட்டியைப்போல்அரக்கர்வரும்வழியைப்பார்த்துக்
கொண்டிருந்தான்அவன்இருந்தசாலைமுன்னே
கட்டிஇடும்பிணிஉள்ளேஅடங்கிநாச
காலம்வரவெளிவந்தால்ப்போலேபொல்லா
மட்டிஇராவணன்குடியைநாசம்செய்யும்
வகைவந்தாள்எனச்சூர்ப்பநகைவந்தாளே. (அ)

௪-தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாளே-சூர்ப்பநகை-வந்தாளே.

அநுபல்லவி.

வந்தாளேமன்மதசதகோடி-வடிவுள்ளராமன்மேல்மயல்மிகநாடி
பந்து முலையை மூடி   பஞ்சவடியைத்தேடி
பாவம்செய்யும்நீர்மூடி   ராவணன்குடிகேடி—வந்தா

சரணங்கள்.

௧. ராவணன்குபேரனுக்குந்   தங்கை-பகைஇல்லாத
தன்மைத்துனர்கொண்டுவந்த   நங்கை
தேவரீருக்கிவள்பெண்   டல்லநீலி
சீதைக்குத்தெரியுமே   ராட்சதசோலி
எவனுக்கெளியவள்நான்   அநுகூலி
என்றுசொல்லிஅரக்கனாத்   துடைகாலி-(வந்தாளே)

௨. மானிடப்பெண்கொண்டீர்   என்னகண்டோ-என்உடன்
மருவிவாழ்ந்தால்உமக்குப்   பயம்உண்டோ
ஆனாலும்என்னபாவி   கருப்புவில்லி
ஐங்கணைபிளக்குதே   என்உடல்கெல்லி
சேனைவிலைசெய்வேன்   நான்காமவல்லி
இரட்டுப்பால்குமட்டுதோ   உமக்கென்றுசொல்லி—வந்தா

௩. எதிரிலேவந்தேனுமது — யோகம்-நாம
இருவோரும்இசைந்தேகாந்தர்வ — விவாகம்
சதிசெய்வேனுமக்கும் — எனக்கும்ஏகராசி
சம்மதிஆனதேநல்ல — முகூர்த்தவாசி
கதாகதென்றெரியுதே — காமாக்கினிவீசி
கட்டிக்கொள்ளுமென்றுதில்லும்முல்லும்பேசி — வந்தாளே.

* * *

ஸ்ரீராமருக்குஞ்சூர்ப்பநகைக்குஞ்சம்வாதம்.

விருத்தம்.

வந்தசூர்ப்பநகைதன்னை மதித்துராகவனும்நோக்கி
அந்தமானிடவர்பெண்ணோ அரம்பையோஅறிவோமென்றும்
நொந்தமாதவத்தோர்க்கான சொல்அறிந்துரைப்பாளென்றும்
தந்தவார்த்தைக்குவார்த்தை சரிசரிஎதிர்சொல்வாளே. (௧)

௮-திபதை-மோகனராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. செம்பவளவல்லிபோல் எங்கேவந்தாய்வந்த
சேதிஎன்னசொல்வாய் — பெண்பாவாய்
கும்பிடப்போனதெய்வம் எதிர்வந்ததென்றுனை
கொண்டுபோகவந்தேன் — என்கோவே

௨. ஆசைவில்லின்மேலோ மாவுரிமேலோஇன்னும்
அரும்கனிமேலோசொல் — பெண்பாவாய்
ஆசைவில்லின்மேல்இல்லை மாவுரிமேல்இல்லைஉன்
அதரக்கனிமேல்எண்டு — என்கோவே

௩. அதரக்கனிகொடுக்கத் தவசிகட்கடுக்குமோ
அநிக்கதவார்த்தைசொன்னாய் — பெண்பாவாய்
அதரக்கனிவசிட்டர் அருந்ததிக்கீயலேபோ
அவர்தவசிஅல்லவோ — என்கோவே

௪. தவசிஅதுசெய்தாலும் பிரம்மகுலமென்குலம்
க்ஷத்திரியகுலம்என்குலம் — பெண்பாவாய்
இவைஅனைவரிதென்ன காமுகருக்குக்கண்ட
இடத்திலென்பதுபொய்யோ — என்கோவே

௫. உன்வீட்டில்அண்ணன்ஆன ராவணன்அறியாமல்
உன்னைப்பிடிக்கஆமோ — பெண்பாவாய்

என்வீட்டில்அண்ணனும்நான் உன்னவள்ஆனபின்பு — என்கோவே
இசைவுதங்கையும்இல்லை

௬. தன்வீட்டுவிளக்கென்று-முத்தம்இடுவாருண்டோ — பெண்பாவாய்
தகுதிஅல்லவேஅது
என்வீட்டுக்காரன்ஆனால்-அரக்கர்உறவும்உண்டாம் — என்கோவே
இந்திரபட்டமுமாவேன்

௭. அரக்கர்உறவும்பெற்றேன் உன்போகமும்பெற்றேன் — பெண்பாவாய்
அருந்தவம்பலித்ததே
பெருக்கம்என்னசொல்ல-உன்சுகம்பெற்றபின்பு — என்கோவே
பெறும்பாக்கியம்வேறும்உண்டோ

௮. தவசிகளுக்கெல்லாம்-எனக்குக்காட்டினில் — பெண்பாவாய்
தவசேபெரும்பாக்கியம்
தவசிதவசிஎன்று-மெள்ளமெள்ளச்சொல்லி — என்கோவே
தள்ளிவிட்டிடல்ஆமோ

௯. தனிஆகஉன்னைநான்-கைபிடித்தால்உன்தன் — பெண்பாவாய்
சாதியார்என்செய்வாரோ
தனிஆய்முருகன்வள்ளி-கைபிடித்தானேஅந்த — என்கோவே
சாதியார்என்னசெய்தார்

௰. அநியாயகாரியத்தைப்-பயம்இல்லாமல்செய்தால் — பெண்பாவாய்
ஆர்க்கும்சம்மதிஆமோ
இனிஇருவரும்ஒத்தால்-ஒருவர்க்குப்பயம்இல்லை — என்கோவே
எவர்க்கும்சம்மதிஆமே

௰௧. ஆனால்மனுஷகணம்-ராட்சதகணத்தோடே — பெண்பாவாய்
ஆடுமோகூடுமோ
நான்ஆனால்எப்போதும்-தேவருக்சேவல்செய்வேன் — என்கோவே
ராட்சதசங்கை இல்லை

௰௨. சங்கைஎன்னென்றாய்-போனாலுனக்கொரு — பெண்பாவாய்
தமையன்என்றாய்அல்லோ
தங்கைஆனாலும்என்ன-தமையன்ஆனாலும்என்ன — என்கோவே
சந்தேகம்உனக்கென்ன

௰௩. அங்கவன்பகைவந்தால்-சங்கரன்பகைவரும் — பெண்பாவாய்
என்றும்பகைஆகுமே
திங்கள்சூடியும்மாலும்-நான்முகனும்நீஎன்றேன் — தென்கோவே
இப்படிக்குக்காணுகின்ற

௰௪. கிஞ்சிக்குக்கண்டாலும்-ஒருத்திஇருக்கவேறே
  தேவையென்னசொல்லாய் பெண்பாவாய்
மட்டுச்சொல்லுகிறாயோ-பெருமரஞ்சுற்றிய
  வள்ளிவிடுவதுண்டோ என்கோவே

௰௫. விட்டிடுமோஎன்றாய்-விளையாட்டுப்பூசல்இது
  வினைப்பூசல்ஆகுமே பெண்பாவாய்
தட்டுதலைசொல்லி-என்னைப்பயமுறுத்தி
  தடுத்துவிட்டிடல்ஆமோ என்கோவே

௰௬. ஒட்டாரம்கட்டாதே-இளையோன்அறியாமுன்னே
  ஓடிப்பிழைத்துப்போவாய் பெண்பாவாய்
அட்டாதுட்டிகள்பேசி-அகற்றுகிறாயோநல்ல
  நாகட்டும்பார்க்கிறேன் என்கோவே

* * *

சூர்ப்பநகை தன்உறவைநினைந்து புலம்பல்.

விருத்தம்.

வாதாடும்சூர்ப்பநகிதன்னைநோக்கி
  மணிவண்ணனெனக்கிந்தப்பிணையாள்சீதை
போதாதோஓர்உறையில்இரண்டுவாளோர்
  புறங்காக்கும்தம்பிக்குமனையாள்இல்லை
நீதானேபோஎனவேசிலைதமேலே
  சேர்வாளைலட்சுமணன்கூர்வாள்வாங்கி
காதோடுமூக்கரிந்தபின்னும்பல்லுங்
  கருகுவாள்உறவைநினைந்துருகுவாளே (௰)

இ-இயலத்-கண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அருமைப்பிறப்பேதுணைவோன் ராவணனே-என்னை
  அருமைத்தங்கைச்சியென்ற ராவணனே-உன்றன்
கருவிழிபோலேகாத்த ராவணனே-என்றன்
  கண்ணாவினென்னசொல்வேன் ராவணனே

௨. இங்கும்இருக்கக்குட்டிவசம் ஆமோ-உன்றன்
  செல்வத்தங்கையைஒருவர் தொடப்போமோ-என்னை
அங்கப்பழுதுமனிதன் செய்வானோ-செய்தும்
  அஞ்சாநெஞ்சுபடைத்தும் உய்வானோ

௩. சுரர்க்குருவேசரப் பறந்தாலும்-அது
  உசந்தகருடன்ஆமோ ஒருநாளும்-இந்த

பார்க்குள்ளேமனிதர் யிருந்தாலும்-உன்றன்
  பாதத்தாளுக்கொப்பாரோ எக்காலும்

௪. எட்டுத்திக்கும்உன்பேரைப் பழித்தானே-மனிதன்
  என்னையும்கொண்டையைபிடித் திழுத்தானே-அப்பேர
கிட்டிச்செவிஅரிந்து முனிந்தானே-உன்னைக்
  சின்னக்கிளைஆக்கவே நினைந்தானே

௫. அனைரும்பகற்றுஇங்கே மேவாயோ-என்றும்
  ஊக்கப்பேய்பிடித்தநீ ஆவாயோ-அடா
மீனமேகசாதத்தை வாரீரோ-நான்
  பெண்பிறந்துபட்டதைநீர் பாரீரோ

௬. அத்தைமருகனெம்ப திருதானோ-பிரம்ம
  அஸ்திரம்விட்டால்மனிதன் அழியானோ-இந்த
சித்தேஎன்போலஉன்றன் மூளைபோச்சோ-தேவேந்
  திரனைச்செயித்ததெல்லாம் விழல்ஆச்சோ

௭. குட்டிமனிதனென்னை வதைத்தானே-என்றன்
  குலைகலங்கிடவேபோட் டுதைத்தானே-மெள்ள
எட்டிப்பார்த்திவன்அண்ணன் சிரித்தானே-இவனை
  ஏவிவிட்டறியாதபோல் இருந்தானே

௮. இந்திரசந்திராதியர்கள் பணிகேட்க-உலகில்
  எந்தெந்தவீரர்களும் முடிதாழ்க்க-வந்து
பந்தியிருக்கும்உங்கள் சபைகேடோ-மூக்குப்
  பதிபோய்காண்வருவேனோ துரைமாரே

* * *

சூர்ப்பநகை ஸ்ரீராமருக்கு மீளவும் இதவுரைத்தல்.

விருத்தம்.

பேய்வடிவாம்அரக்கிஇரத்தப் படிஅழுதாள்ராமன்இடம்
  பின்னும்வந்தாள்
தேவரீர்அறியாரோ இளையவன்இப்படிசெய்தான்
  செய்தாலென்ன
கோவம்உள்ளஇடத்தில்அல்லோ சந்தோஷம்உண்டுஎன்னைக்
  கூட்டிக்கொண்டால்
ஆவதுமெத்தவும்உண்டுகேள்என்பாள்மருவிஎன்னை
  ஆள்ராமனே. (௰௧)

இ-தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்உருவில்கொஞ்சம்கொய்தீர்-எனக் கென்னதாழ்ச்சிசெய்தீர்

அநுபல்லவி.

அன்னியன் ஆகன்னேப் பிரியவிடாமல் என்
அழகுகண்டொருவர் கண்ணேறுபடாமல்—என்

சரணங்கள்.

௧. நடுப்படையிற்போனாலும் நடுப்படாமல்உம்மை
நானேசுமந்துகொண்டு ஓட்டவோ-ஆரும்
இடுக்கிடவேஉம்மை அடித்தபோர்களைத்
இருபுடைமலையாக் கொட்டவோ-நல்ல
குடித்தனத்துக்கினி ஆரும் ஆகாதென்று
குவிப்பதினம்மூட்ட மூட்டவோ-கேட்டால்
இப்புசிதைக்குங்கொஞ்சம் மூக்கிலருக்குக்கொஞ்சம்
என்றெனக்கும்சரிக் கட்டவோ எண்ணி—என்

௨. குற்றம்போலேசெய்து குணம்செய்தீர்என்னைச்சோட்டிக்
கொன்றும்சர்ப்பேனைக் கொல்லவோ-நல்ல
பந்தியாகின்றசாமல் நாய்கனிகளைப்
பறித்துக்கொண்டுவாச் சொல்லவோ-உமது
அஸ்தம்பட்டபோதே சொர்க்கம்ஆனேன்இனி
அரக்கரைவேரோடுங் கெல்லவோ-நல்ல
புத்திபன்னியைவைத்துக் கொண்டுபோங்கியம்பால்
புறப்போகல்ஆகாதென் றல்லவோ-சாமி—என்

௩. பதிக்குப்போகும்போது சீதைக்கும்மேலான
பருவப்பெண்ணைமுன்னே நிற்கல்-ஆம்
கதிக்குப்பழுதுகண்டால் அடங்காதவளைசும்
கண்டித்தோம்என்றுறைப் பிக்கல்ஆம்-நல்ல
இதுக்கென்னகாண்மூட்ட நினைந்தார்க்கிசம்இல்லை
எனக்கும்அப்படியேமெய்ப் பிக்கல்ஆம் சாமி
அதுக்கல்லவென்றாலும் அரக்கர்மாயைகள்ஆகித்
தவள்ளவேவிட்ட வைக்கல்ஆம்-என்றே—என்

சூர்ப்பநகை கரனோடே முறையிடல்.

விருத்தம்.

பன்னியசூர்ப்பநகை இந்தப்படிக்கேசொன்னாள்
பாராமல்ஸ்ரீராமன் துரத்திவிட்டான்

அந்நிலையேமூக்கறைச்சிமூளிஆகி
அரக்கிசென்றேஅண்ணனுக்காப்பாடுபட்டேன்
பின்னேஒன்றுசொல்லப்பட்டதில்லைஉங்களோடே
பெண்பிறந்துபட்டபிழைஇதுதானென்று
மின்னிலேவேல்க்காரன்காலின்மரம்போல்சாய்ந்து
விழுந்திட்டாள்அவன்கேட்டமொழிந்திட்டானே. (௫௨)

௯-தரு-கல்யாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பட்டபாடுகேளாய்-கரனேநான்-பட்டபாடுகேளாய்.

சரணங்கள்.

௧. பட்டபாடுகேளாய்-பிணைந்ததோளாய்-மிடுத்தவாளாய்
குட்டிமனிதனென்னைக்-கட்டிஇழுக்கப்பின்னை
பெட்டிப்பாம்புபோலே-ஒட்டிஅண்ணனுலே—பட்ட

௨. எமக்கும்பெண்ணைக்கண்டே-அண்ணனுக்குண்டே-என்றுகொண்டே
தூக்கப்போனேன்பெண்டு-காக்குமனிதன் கண்டு
மூக்குங்காதும் சண்டும்-போக்கடித்துக்கொண்டு—பட்ட

௩. இருத்தம்ஆனசூரர்-இரண்டுவீரர்-காவற்கார
அரக்கர்வேர்களைந்து-நருக்கவேநினைந்து
இருக்கிறரோவந்து-ஒருத்திப்பெண்பிறந்து—பட்ட

௪. பங்கம்இன்னம்வேறுமோ-காதுதோணுமோ-மூக்குகாணுமோ
லங்கைஆளும்வில்லி-தங்கைஆன செல்வி
மங்கையர்க்குள்நல்லி உங்கள்பேரைச் சொல்லி—பட்ட

கரதூஷணத்திரிசிரர்களின்வதம்.

விருத்தம்.

காதகிசூர்ப்பநகை இந்தப்படிக்கோடாலிக்
காம்புகுலத்துக்குக்கேடென்றால்போலப்
பாதகன்ஆம்கரன்முதல்ஆனவர்க்குச்சொல்லிப்
படைக்கடலைமூட்டிவிட்டப்பாலேநின்றாள்
சாதகன்ஆம்ராமச்சந்திரன்சாலைநீங்கிச்
சண்டகோதண்டத்தைத்தம்பாலே
ஓதம்மானும்அரக்கர்உயிர்மூசாத்தம்தன்னில்
ஓட்டினான்தருமம்நிலைநாட்டினானே (௫௩)

௯-தரு-பந்துவராளிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

அடித்தானே ரகுராமன்- கோதண்டம்கை - பிடித்தானே செயராமன்

அநுபல்லவி.

அடித்தானேரகுராமன்-முடுக்கானகரன்றமன்
அனுப்பினபதினான்கு-முனைத்தலைவராக்கு
அரக்கர்கள்காட்டியே-பொருக்கெனமூட்டியே
அப்புறத்திலேஒண்டக்-கைப்பிடித்தகோதண்ட
அப்பன்கைகளில்வச்சி-எய்கின்றசரமாரி
அதினால்உரக்கரும்-பதினால்அரக்கரும்
அலைகடல்போலெழத்-தலைதலைஆய்விழ
ஆனைப்படமுடியச்-சேனைக்கடல்வடிய—அடி.

சரணங்கள்.

௧. கரிகள்பலவும்சுற்ற-பரிகள்அநேகம்அந்த
கட்டியதேர்களும்சூழ்ந்த-பட்டணைவீரரும்மெத்த
கருந்துகளாஅலைந்து-பெருங்கடல்போல்வளைந்து
காகுத்தன்சாலையைப்பற்றி-மேகத்தைப்போலவேகத்தி
கக்குங்காய்முனைதரப்-பொங்கிஅங்கேவரவாக்
கதிகாணவைப்-பதினால்பேர்க்
கனகத்தே கொடிம்கூடி-கதிரவனைப்
பனிமொய்த்த-தெனமூடி-ராமனைமொய்த்துக்
கரனும்தூஷணன்திரி-சிரனும்வரஅந்தி
களிப்பாகக்காட்டினனே-கமறும்பனி
இளைப்பாறமூட்டினனே-உக்கிராவண
கண்டானேதம்பியைக்-கொண்டானேஒருமனு
கார்த்திரு சன்னிதன்னை-இந்தச்சண்டையைப்
பார்த்திரு முனிவும்மென்னை-என்றுகாளியைக்
கோதண்டஇழுத்துமுனைக்கோதண்டம்வளைத்துமனமுக்
கற்கடகர்சந்திரன்போலே-சரமாரிகள்
உக்கிரம்கொண்டுவிடவாலே-வல்அரக்கர்கள்
கரம்அறுந்தவர்களும் சிரம்அறுந்தவர்களும்
கண்டம்கண்டமானபேரும்-கட்டைகள்போலே
துண்டம்துண்டமானபேரும்-இறக்கிக்கட்டும்
மெய்சங்கள்பிழிந்தோரும்-அலசங்கள்பிழிந்தோரும்
கூடவாய்பிழைத்தோரும்-பிடித்துவந்த
சூடைபோய்அழிந்தோரும்-கைதொடுக்கும்

கைச்சிலைஆனதும்அற்று-வச்சஆயுதமும்அற்றுக்
கையைக்கையைப்பிசைவாரும்-குற்றுயிர்ஆகிப்
பையப்பையஅசைவாரும்-நெற்றிப்பிளந்து
கத்தும்பரிகளும்தலை-அற்றும்பரிகளும்சத்தம்
கக்கும்பரிகள் அநேகம்-குடல்அறுந்து
முக்கும்பரிகள் அநேகம்-மதயானைகள்
கைத்தலம்பிளந்துபெரு-மத்தகம்பிளந்துவைத்த
காத்திரங்களும் பிளந்து-நெருப்புப்போலும்
நேத்திரங்களும் பிளந்து-மலைமலையாக்
கதறுண்டுசிதறுண்டு-மதகுஞ்சரம்உருண்டு
காடுகளா விழுந்ததுகள்-கண்ணுக்கெட்டாத
மேடுகளாஎழுந்ததுகள்-இவைஅறிந்து
கடித்தானேஇருபல்லைப் பிடித்தானேஒருவில்லைக்
காய்ந்தானே இரிசன்-ராகவன்மேலே
பாய்ந்தானேகுணமூரசன்-பாய்ந்தவன்தேர்
கதத்தையும்வகிர்ந்த-ரதத்தையும்அய்யன்அவன்
கைச்சிலையும்முறித்துவிட்டான்-அவனுடைய
முச்சிரமும் அறுத்துவிட்டான்-அவன்பிறகே
காத்திருந் தெதிராலே-வந்தவர்களைமேலைக்
காற்றில்பஞ்சுகள்போலே-தூற்றிவிட்டொருகாலே—அடி.

௨. வெற்றிராமன்தொடத்தொட-அஸ்திரங்கள்பட்டபட
வீட்டில்ஓடு வாரையும்-காட்டில்ஓடுவாரையும்
வில்லைவிட்டறிவாரையும்-கொல்லையில்பதிவாரையும்
இலக்கம்கொண்டவரையும்-கலக்கம்கொண்டவரையும்
விருத்தம்செய்தீரென்றும்-நரகத்தினீரென்றும்
விசைகொண்டதூஷணன்-வசைகொண்டபாஷணன்
விசையத்தேர்பூட்டினனே-சக்கரம்போலே
திசையெட்டும் ஓட்டினனே-ஓட்டினதிர்த்து
விட்டவிட்டகணைகளும்-தொட்டதொட்டகணைகளும்
வெடிபடநீக்கினனே-ராமன்அம்பாலே
பொடிபொடிஆக்கினனே-பிறகேவந்த
மேல்படைகளும்புரண்டு-கால்படைகளும்திரண்டு
வெகுவாகக்குதித்தாரே-எல்லாரும்ஒரு
முகம்ஆகமிதித்தாரே-மிதித்தவர்கள்
வெட்டும்வெட்டும்என்பார்சிலர்-கட்டும்கட்டும்என்பார்சிலர்

மெல்லும்என்பார்சிலபேர்-கரன்இவனைக்
கொல்லும்என்பார்சிலபேர்-அரக்கர்விட்ட
வேல்ஒடிந்துவாள்ஒடிந்து-கோல்ஒடிந்துஇரப்பெரு
வெள்ளத்தில்மிதப்பாரும்-ஆனைவிழுந்த
பள்ளத்தில்பதைப்பாரும்-சதிகலங்கி
மெய்உள்ளம்கெடநொந்து-ரத்தவெள்ளந்தனில்வந்து
விழுந்தார்அநேகம்அரக்கர்-ரத்தவெறியால்
அழிந்தார்அநேகம்அரக்கர்-தூஷணன்கண்டு
வளைத்தானேசெருவில்லை-வளைத்தானேகணைசெல்ல
விடுத்தானேமழைபோலே-ராகவன்அதைத்
தடுத்தானே கணையாலே-அதின்பிறகு
விடுகணைபொடிபட-ஒருகணைதடுதியில்
மெய்த்தமுனையோடுதொட்டானே-சாமிக்குநெற்றி
மத்தியிலேபடவிட்டானே-ரகுநாயகன்
மிதிஅவன்ரதிவரு-தோதிலேசாரதியை
வெட்டினானேவிலாளையப்பது-குதிரைகளைக்
கொட்டினானேகணைகள்கொய்து-கொய்ததல்லாமல்
வில்லும்துணிந்திட-அவன்-சொல்லும்துணிந்திடத்தேரை
வேறுவேறுசெய்தினானே-அவன்வாகனைக்
கூறுகூறாக்கினானே-கறுக்கினபின்
மின்னும்அவனதிர்ஆகப்-பின்னும்ஒருகணைபோக
விரல்தொத்துத்தொடுத்தானே-தூஷணனும்
சிரம்அற்றுப் படுத்தானே-அதனைக்கண்டு
விண்ணுலகில்அனைவரும்-மண்ணுலகில்முனிவரும்
வெருள்சப்பம்பிரித்தாரே-வாழ்த்தொடுபுஷ்ப
வருஷங்கள் சொரிந்தாரே-அரக்கர்பட்ட
வெற்றிசீலைத்தொடுக்க-ரத்தவெள்ளாறெடுக்க
விசையமங்களம்பாட-இசைசங்குங்கொண்டாட—அடி

௩. தத்திவரும்பரிகளும்-சுற்றிவரும்கரிகளும்
தாவிவரும்பெருந்தேரும்-சேனைப்பேரியபேரும்
தளகர்த்தவீரரும்-வளம்மிக்கசூரரும்
தண்டோடெதிர்வரும்-மண்டியசேனைவீரரும்
சரிசாரிஆகவந்தார்-போரிலேநிகரிலார்தார்
தம்பிதூஷணன்பட்டதுபார்த்துமுட்ட

தணல்போல சிவந்தானே-சாதிலிங்கம்போல்
இணைக்கண்கள் சிவந்தானே சிவந்தபின்பு
தாக்கியபுலியைஒத்த முக்கிலேவிரலைவைத்துத்
தாழ்ச்சிஇதுஎன்னநொந்தானே நொந்தபொல்லாத
ராட்சதராணும் வந்தானே வந்துசுற்றிலும்
சதுரங்கதளத்தோடே ரணாங்கம்அதைத்தேடி
சாமிராகவனைக் கண்டான் மனிதன்இவன்
ஆம்என்மனதில்கொண்டான் சேனைகள்விட்ட
சக்கரம்இருப்புலக்கை கப்பணம்முசுண்டிபிண்டி
சஸ்திரம்வேலாயுதங்கள் குறித்துவிடும்
அஸ்திரம் சூலாயுதங்கள் பொடிப்பொடியாத்
துப்படும்முறிபட்டும் விலகச்சிலைவளைத்துச்
சாய்த்தானே சரதாரை-ரகுநாயகன்
தேய்த்தானேவெகுபேரை-வரும்அரக்கர்
தலையைச்சிலையாத்தின-முடியைக்கொடியைவெட்டிச்
சரித்தானேசிலகணையால்-அடிவயிற்றை
எரித்தானேசிலகணையால்-இரைக்குவந்த
சாவிரியும்டாகினியும்-காளிகளும்கூளிகளும்
சதாகூடிப்பார்த்தாடுமே-கவந்தம்அதுக்
கெதிராகக்கூத்தாடுமே-படைகளெல்லாம்
சரியானதுகண்டு-கரன்ஆனவன்மூண்டு
சாகசங்கள்செய்தானே-ஒருநொடியில்
ஆயிரம்அம்பெய்தானே-ஐயனதன்மேல்
சற்றுநேரத்தில்அய்யன்-அந்தக்கணைகளைவிட்டுத்
தவிடாக்கினானே-பின்னையும்சில
அவன்மேலேமோதினானே-அரக்கன்அங்கே
சாதித்தகணையாலே-ஆதித்தகுலநாதன்
தனுவையும்ஒடித்தானே-தவமுனிவர்
மனதையும்படித்தானே ராமனுக்குக்
திடத்தில்பரசுராமன் இடத்தில்பறித்தவில்லைத்
கதியிலே எடுத்தானே-வருணன்அங்கே
உதவியாக்கொடுத்தானே-கொடுக்கஒரு
ரதத்தாலேரகுவீரன்-வரத்தாலேபயமில்லாம
துணித்தானே உளத்தனிலே-கரன்சிரத்தைத்

அணித்தானே களந்தனிலே-இப்படி அந்த
சனஸ்தானவருக்கத்தில்-மூனைத்தாரைமுகூர்த்தத்தில்
தான்ஒருவனும்ஆக-வானவர்துயர்போக—அடி.

—*—

சூர்ப்பநகை ராவணனோடேமுறையிடல்.

விருத்தம்

முடிவரியகரன்படையைமுடித்தராமன்
 முன்போலச்சாலையில்ப்போய்இருந்தான்இப்பால்
இடிகுரல்ச்சூர்ப்பநகிசென்றாள்இலங்கைதன்னில்
 ஈனமும்புர்அழுதிட்டராவணன்முன்விழ்ந்தாள்
அடிவாலாறுகள்என்னஉன்னை இந்த
 அவமானம்செய்ததென்ன அவர்ஆர்என்ன
கெடிஅரக்கன்குலம்முழுதும்வேரைவாங்கிக்
 கெடுக்கின்றாள்அரக்கிசொல்லத்தொடுக்கின்றாளே. (௰௪)

௭-இபதை-தோடிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. கண்டேன்கண்டேன்அடா அண்ணனே
 காட்டுகிறேன்பஞ்ச வடியிலே - யார்க்கும்
அண்டாதார்இருக்கிறார் அவர்க்
 கவேசேகர்இந்தப் படியிலே

உ. கருமசிலர்ஆம் அயோத்தி
 தசரதமகாராசன் பாலர்ஆம் - அவர்
விருதுகட்டிஅரக்கர் தங்களை
 வேர்அறுக்கவந்த காலர்ஆம்

௩. நீதம்தெரிந்தவர்ஆம் அவர்கைக்கு
 நேத்திவாஇருவில் அமைந்ததாம் - அதிலே
கோதண்டம்அரக்கர் சிரசைக்
 குடிக்கவேணும்என்று சமைந்ததாம்

௪. ராமலட்சுமணர் வடிவெலாம்என்
 னாலேசொல்லிமுடி போருமோ - அந்த
காமராசன்வடிவும் அவர்
 காலில்த்தூசுக்கிணை ஆகுமோ

௫. ஓட்டிப்போய்ராமனை என்சுகக்
 கேளியிலேமையல் கொண்டேனே - அங்கே

இஷ்டிப்பிரியம்ஆன பெண்கள்
 சிகாமணிஒருத்தியைக் கண்டேனே

௬. சுந்தரமும்அவள்செவப்பும்
 தொட்டிட்டுக்கொள்ளல்ஆம்அண்ணாவே - நான்
இந்தவயதினிலே என்கண்ணால்
 எங்கும்கண்டதில்லை அண்ணாவே

௭. மன்னாஉன்னால்நான் அவளை
 வாய்க்கடங்காப்பிடியாப்பிடித்தேனே-ஒரு
சின்னமனிதன்கையால் என்தன்
 செவியும்மூக்கும்போக்கடித் தேனே.

௮. அந்தோஎன்னாலே பதினால்
 ஆயிரம்தேர்க்காறரும்மாண்டாரே-எதிர்
வந்தார்கரன்முதல்ஆனோர் அந்த
 மனிதனாலேகால் மாண்டாரே.

௯. செப்புச்சிலையும்அல்ல அந்தப்பெண்
 செம்பொற்சிலைவார்த்தாற்போல்இருக்குதே-நான்
ஒப்பெங்கும்காணேன் அவளே
 உனக்காம்என்மனம் உருக்குதே.

௰. தாவிப்பிடித்தேனெனக்கு மெள்ளத்
 தப்பிவிட்டாள்வந்தெடுப்பாயே - அந்தத்
தேவிஇங்கேவந்தால்உன்னிட
 சேவைஆகிலும் கொடுப்பாயே.

—*—

சூர்ப்பநகிராவணன்முன்சீதையைவர்ணித்தல்.

விருத்தம்.

அன்னம்அறுந்ததுனக்கென்றும் காணும்போனான்என்றும்இங்கே
பன்னல்ஆமோவிடுவிடுநீ பார்த்தேன்என்றபெண்ணவளைச்
சொன்னஉடனேஉயிர்கிடந்து துடிக்குதடியேசூர்ப்பநகி
இன்னம்ஒருகால்ச்சொல்என்றான் எடுத்தாள்சொல்லத்தொடுத்தாளே.

௮-தரு-சுருட்டிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

காணவேணும்லட்சம்கண்கள்-சீதாதேவிதன்-காலுக்கு நிகரோபெண்கள்

அநுபல்லவி.

சேணுலகெங்கும்வாட்டித்-திசைஎங்கும்கீர்த்திநாட்டித்
திரியும்ராவணாஉன்தன்-இருபதுகண்போதுமோ—காண

சரணங்கள்.

௧. குவளைவிழிகளோ பாணம் அவள்தன்வார்த்தை
கொண்டால்அதுவேசுகல் யாணம்
நவரத்தினதங்கத்தோடு நடையிலே அன்னப்பேடு
அவனிமேல்இல்லை ஈடு அவளுக்கவளேசோடு—காண

௨. தங்கக்கொடிபோல் இடையும் சிவிகையிர்ந்த
சாய்ந்தபின்னலின் சடையும்
இங்கிதயிருதுவாக்கியம் இவ்வளேதேவதா யோக்கிய
மங்கையர்க்குள்ளேசிலாக்கியம்வாய்ச்சால்உன்னதேபாக்கியம் — காண

௩. தவமுனிஒருத்தன்பெண்டு அதனுக்கேற்ற
தம்பிஒருத்தன்அங்குண்டு
அவளோநல் ஐஸ்வரியம் அவளோநல்லகாம பிரியம்
அவள்வந்தால்அல்லோவீரியம் அப்போமுடியும்உன்காரியம்—காண

மாரீசன்ராவணனைஇடித்தல்.

விருத்தம்.

கடுத்ததங்கைஇதுசொல்லச்சினத்தமேலே
கருத்தாடக்காமப்பேய்தலைசுற்றுட
உடுப்பதுவும்உண்பதுவும்மறந்தான்சிந்தை
உலைமெழுகானான்அரக்கன்அம்மானேநீ
அடுத்தெனக்குராமன்மனைவியைத்தாஎன்றான்
அதுகேட்டவுடனேநாராசம்காய்ச்சி
நடுச்செவியில்வைத்தாற்போலேமாரீசன்
நடுக்கின்றான்ராவணனைத்தடுக்கின்றானே. (௰௬)

௯. தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபுத்திநினைத்தாய்அடா - அடாராவணா-என்னபுத்திநினைத்தாய்அடா

அநுபல்லவி.

பின்ஒருத்திஅல்லராம மன்னவன்தேவியைச் சொல்ல
அன்னவன்அம்பிங்கேசெல்லஉன்இனத்தைஎல்லாம் கொல்ல—என்ன

சரணங்கள்.

௧. புள்ளிப்பொறி வரலாலே - மூங்கில்எரிந்து
வெள்ளிச்சாம்பலானால் போலே
கொள்ளிஆய்வந்தாள்உன்தங்கை - அள்ளிராமன்கணைஇங்கே
தள்ளிவிடும்முன்னேதலை துள்ளிவிடுமே நமக்கு—என்ன

67

௨. இந்தமதி பண்ணல்ஆமோ - பரதாரத்தைச்
சிந்தையிலும் எண்ணல்ஆமோ
முந்தொருத்தி ஆசைஇட்டான் சந்திரனும்பழிபட்டான்
வந்தகலிகையைத்தொட்டான்இந்திரனும்மகிமைகெட்டான் — எ

௩. உத்தமிசீதையை உன்னுதே-உன்னினால்அவன்
சற்றிலேவிடுவான் என்னுதே
புத்திரர் தலையும்சேர்ந்த - மித்திரர்தலையும்ராம
பத்திரன்அம்புகொய்யும்கொய்யும்-சித்திரவதைசெய்யும்செய்யும்-எ

௪. துப்புளவிராதன் இறந்தான்-ராமன்அம்பாலே
அப்படிகாணும் பறந்தான்
இப்படி வராதேநாடித் - தப்புவதல்லவோ மோடி
செப்பினேன்உள்ளதுதேடிக் - கைப்பொருட்கும்என்கண்ணாடி-எ

௫. வேலைஇல்லாவேலைஎண்ணினாய்-சின்னம்சிறிய
பாலர்கள்யோசனை பண்ணினாய்
கோலம்ஆனசீதைஎன்று சாலம்ஆய்அடங்கிஇன்று
காலன்வந்ததைத்தேராமல் மூலகாரணம்பாராமல்—என்ன

௬. வேதனையும் சூதும்வாதும்-சொன்னாயேஇந்தப்
பேதைமதி போதும்போதும்
சீதைஎண்ணம்எண்ணத்தானே-வாதைஉண்டாசிமானே
மாதுலன்உனக்கு நானே-ஏதுஅறிந்துசொன்னேனே-என்

௭. பைந்தொடிசீதைபேர்சொல்லாதே-சொல்லாதேஅது
எந்தவிதத்தாலும் பொல்லாதே
வந்திடுமோராமபாணம் என்தன்உரையேபிரமாணம்
என்தலைக்கும்பாயும்பொய்யோ-உன்தலைக்கும்பாயும்ஐயோ-என்

௮. முன்னம்விஸ்வாமித்திரனாலே யாகசாலை
தன்னில்வந்து நமன்போலே
அன்னையும்கொன்றான்சுவாகு-தன்னையும்கொன்றான்அவனை
உன்னஅதிர்எடுக்குதே இன்னம்நடுநடுக்குதே—எ

லட்சுமணர்பொன்மானைப்பொய்மான்என்றல்.

விருத்தம்.

இசையமாரீசன்இந்தவார்த்தைசொன்னான்
ராவணனும்சீறினான்பொன்மானாய்ப்போய்

அசையவே சீதை விழிக்கெதிரே நின்றான்
   அவளும் ராமனைப் பிடித்துத் தருவாய் என்றாள்
பசையினுல் லட்சுமணன் பொய்மான் என்றான்
   பாராமல் நான் இதனைப் பிடிப்பேன் என்று
விசயராகவன்டேர்கால்வாலையவாலைய
   மெல்லுவான் தம்பியின்னும் சொல்லுவானே (௰௭)

௯-பதம்-தன்னியாசிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. வர்ணமானும் அல்ல சொர்ணமானும் அல்ல
   மாயமான் என்   சாமி
பின்னைத் தெரியும் இது நம்மை மருட்ட வந்த
   பெரியகாரை   தேவி

௨. பார்த்த மானாதல்ல இந்த மான் மடிப்பு
   பண்ணவந்த   மானே
கூத்துப் பார்க்கப் போன இடத்தில் பேய் பிடித்தாற் போல்
   குலையுதென் மனம்   தானே

௩. ஊழியஞ் செய்கிறான் இந்த மான் சந்தேகமா என்
   முன்னது சொன்னேன்   ஐயனே
ஏழை சொல் அம்பலம் ஏறுமோ கட்டளை
   இட்டபடியே   செய்வேனே

௪. மானோ மாயம் இது தானோ அம்மணிக்கு -
   வந்தால் சொர்ண   மழையோ
ஏனோ பிடித்துத்தா என்று சொல்லுகிறீரே
   என்னகாலம்   பிழையோ

௫. அந்த அன்னை சொல்லால் அய்யன் தசரதனும்
   அலங்கோலம்   ஆனானே
இந்த அன்னை சொல்லால் என்னமோ அண்ணனுக்கு
   ஏதென்று   தெரியேனே

௬. அப்போது வேள்வியில் வந்த மாரீசன் என்றே
   அயிர்க்கிறேன்   நீயாய்
தப்பிதம் சொல்லறியேன் அப்புறம் சித்தத்துக்குச்
   சரிப்போனபடி   பாராய்

லட்சுமணர் சீதாதேவியைத் தேற்றல்.

விருத்தம்.

உறும் கருமம் தம்பி இந்த வண்ணம் சொன்னான்
   உத்தமன் ராமனும் அந்த மானின் பின்னேகிக்
குறுங்கணையால் எய்தான் மாரீசன் வீழ்போதில்
   கூக்குரல் இட்டான் அதனைச் சீதை கேட்டாள்
இறும்கணவன் குரல் இதைப் போய் அறியென்றாள்
   என்ன அன்னே அண்ணனை என் சொன்னீர் இந்த
வெறுங்கவலை என்ன லட்சுமணன் துன்பம்
   விடச் சொல்வான் சீதையைத் தேறிடச் சொல்வானே. (௰௮)

௰-தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆர் என்று ராகவனை எண்ணினீர்   சும்மா-இந்த
அறிந்து சொன்னீரோ அறியீரோ நீர்   அம்மா.

அநுபல்லவி.

பாதவார்த்தை இது வசையோ டோர்க்குமே-போரில்
எண்டிசை அதிபரும் அண்டினர் படையுடன்
மண்டினாலும் என் அண்ணன் சுண்டுவிரல் போதாதோ-ஆர

சரணங்கள்.

௧. விந்தை ஆகவெண்ணெய்க்குப்   பல்லும் முளைத்தாற் - போலே
   பித்திராட்சதர் அண்ணன்   தன்னை வளைத்தால்
வந்தா மன் அறுகனை   டேங்கி இளைத்தால் - வேறே
   மந்திரமானொரு   தந்திரமென்னவாகில்
   இந்திரன் ஈதிப்பானோ -   சந்திரன் உதிப்பானோ—ஆர் என்று

௨. ஆ ருத்திரன் வில் ஒருவர்   ஒடிக்கப் போமோ - அத்தை
   அறிந்தும் பெண்புத்தியால்   உம்பித்தப்போமோ
வேதையாய் என்னையும்   சோதிக்கல் ஆமோ - நல்ல
   வேதண்டம் எனப்பெருங் கோதண்டம் தன்னை அண்ணன்
   காதண்டவிரைக்கும் முன் பூதண்டம் பிளக்குமே—ஆர் என்று

௩. பண்ணின மாயையாலே   அந்த மாரீசன் - மானும்
   பருவத்தில் அங்கே -   ஓலம் இட்டானே நீசன்
என்னுடைத்துன்பம்   ஏதுக்கிருக்கிறேன் தாசன் - அவனை
   எண்ணாரீறுல் ஒருமேக வண்ணனுடனே நெற்றிக்
   கண்ணனுடனே கூட்டி அண்ணனையும் காணுயல் - ஆர் என்று

சீதைக்கும் ராவணசந்நியாசிக்கும்சம்வாதம்.

விருத்தம்.

மெள்ளவேஇளையோன்இந்த விதம்சொல்லிநடந்தான்பின்னே
கள்ளம்ஆம்தவசிஆகிக் கடுகிராவணன்தான்வந்தான்
வள்ளலேவாரும்என்றாள் வஞ்சனைஅறியாள்சீதை
உள்ளமாமுனிவர்என்றே உரைக்குமாசொல்லுவாளே. (௰௩)

௩ அ-இபதை-ஆபிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. வாரும்என்றஉடனே ராவணசந்நியாசி நானே
வந்துகண்டானேஅந்த
ஆரோநீஎன்றுஜானகிகேட்கவே வானே
அன்னைஇரோசொல்லு

உ. தசரதன்பாலகன் தம்பியுடனேபெற்ற பூமி
தாய்சொல்லவந்தான்இந்தப்
இசையும்சானகிஎன்பேர் காகுத்தன்மனைவிநான் சாமி
இங்கேஇருக்கிறேன்என்

௩. இக்கனைத்இச்மெத்த பழுத்தபழம்போலவே ஆபே
எங்கேவந்தீர்தேவர்
வந்ததுசொல்லுகிறேன் சந்தோஷம்ஆகச்சற்றே நீயே
மனதுவைத்துக்கேளாய்

௪. போரல்பெரியவன் ஆயிரம்வேதம்வந்தோன் போன்
பிரம்மதேவனுக்குகொட்
ஆராலும்அசையாத கயிலாசமலைதன்னை பிரன்
அசைத்துப்பிடுங்கினநம்

ரு. அமைத்ததேவனையும் அஷ்டதிக்குப்பாலரையும் ராசன்
ஆக்கினையால்அந்தமக
சுமந்ததலையும்சும் மாடுமாத்திரிய கேசன்
அனாத்தனம்செய்யும்இலங்

௬. நலங்களிருலேஅந்த இலங்கைக்குச்சொர்க்கம்ஒரு மாதே
நாகம்போலக்காணும்
இலங்கையைவிடல்ஆமோ என்னகாலமோநான் போதே
இங்கேவந்தேனிது

---

௭. நெமிக்குமுனிவாளும் மிருந்தாளும்அந்தச் தானே
வெண்கையில்வாங்கினவன்
மனதுக்கினியபெண்கள் மாணிக்கம்என்றுதேடி மானே
வருகிறாகிறேன்இவ்விய

௮. வீராதிவீரன்அஷ்டதிக்கெசதந்தங்களை ஆகன்
வெடுக்கென்றொடித்தவச்சிர
ஓரான்காணிரா மூன்றுலோகமும்காக்கும் யோகன்
ஒருத்தன் அரக்கன்கன்

௯. மூன்றுலோகமும்காக்கும் அரக்கன்என்றீர்அவன் கானே
மூவுழுகுலங்களும்
கண்டெடுபிய்வந்தானே ரகுவீரன்என்றுசொல்லக் மானே
கேளீரோஎங்கள்பெரு

௰. பெருமாள்பெருமாள்என்ற மனிதன்வந்தாக்கனாப் பெண்ணே
பிடுங்கிஎறிவான்என்றாய்
ஒருமுசல்க்குட்டிவந்து சிங்கம்தன்னைஅடித்த கண்ணே
உவமைபோல்ஆச்சுகாணும்

௰க. உவமையன்றீர்காணும் பதினாலாயிரவரும் அய்ய
உருண்டாரோமனிதனால்
இவர்ராவணன்போல்இரு பதுதோள்அல்லாமையால் செய்ய
இறந்தார்மனிதனகொலை

௰உ. ஆயிரம்தோள்இருக்கும் கார்த்தவீரியன்தன்னை முன்னே
அடித்தான்மனிதன்அல்லோ
தாய்இதுசொன்னஉடன் சந்நியாசிவேஷம்விட்டுச் பின்னே
சண்டாளன்எழுந்தானே

௰௩. நீமுகன்ஆய்அரக்கன் ஆகாதவார்த்தைசொல்லச் தேவி
செவியில்கைவைத்தேஅந்த
ஓமயண்டத்தமுதை நாய்இச்சைபட்டதுபோல் பாவி
உரைத்தாய்என்னடாஅட

௰௪. நின்றுநில்க்கேதப்பிஓடிஅப்புறம்போடா டானே
ரகுவீரன்பிழைக்கவொட்
என்றஉடன்சீதையை நிலத்தோடேதூக்கிவந்தான் டானே
எடுத்துத்தேரினில்இட்

சடாயு ராவணனுக்குப் புத்திசொல்லுதல்.

விருத்தம்.

தேரினில் இப்படி சீதைதனைக் கொண்டுபோம் அளவில் சிறிவந்து
போரினில் இராவணனுடைய முடியும் தெறிக்கப் புடைப்பேன் கண்டாய்
பேரியல் சீதையைவிட்டால் பிழைப்பாய் இல்லாவிட்டால் பிழையா
யென்று, வீரியமாச் சடாயுவந்து இளம்பிறைன் புத்திசொல விளம்புறனே.

மக-கரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

விடுவிடடா சீதையை விடுவிடடா ராவணா
விடுவிடடா சும்மா விடுவிடடா

அநுபல்லவி.

கடுநெருப்பிலனாலே அடிபோட்ட வேகாதே
சுருபத்தைத் தெரியாமல் நரகத்தில் மூழ்காதே
அடடா சொன்னேன் சொன்னேன் கடுவிலே சாகாதே
ஆசையிலே குல நாசஞ்செய்யப் போகாதே—விடு

சரணங்கள்

க. என்செய்தாய் இவளை நந்தசம்சன் நின்றாமல்
வழைவனிலையோர்க் குறியாதே
என்தாய் இவள் மனம் நொந்தால் இருப்பாயோ
என்தன் வார்த்தைசேள் முறியாதே
கொஞ்ச அரக்கர்மான் குட்டியென்றும் ராமனை
குட்டிச் சிங்கமென்றும் அறியாதே
குடிக்கிருப்பிருவனோ வதைக்க வந்தானோ அவன்
கொல்லலு கும்பாபாணத்தினங்கள் வீழ்ந்து முறியாதே—விடு

உ. கர்த்தர் மூவருக்கும் கர்த்தன் ஒருவன் இந்தக்
காகுத்தன் என்று கொண் டாடுவேன்
கையால் பேசீயல் வில்லதல்லால் நிறைக்
காற்றில் பஞ்சு பறந்தாச் சாடுவேன்
பத்தி விருத்தியன்றெங்கே வைத்துப் போடா அவள்
பக்கத்தில் வரனே கொண் டோடுவேன்
பார் அடா இல்லாவிட்டால் கூர் நகத்தால் உன்
பத்துத் தலைகளைக் கிள்ளிப் பந்தடித்து விளையாடுவேன்—விடு

ங. கைக்குள் ஏமடக்கி இக்கணமே நான் ஒரு
மிக்கா விருந்து வேண்டும் உன் தசையினை
கருங் காக்கைகளுக்கும் எமனுக்கும் உன்னை நல்ல
விருந்தாக்குவேன் பார் அடா இவ்வேளை
முக்கண்ணன் வரம்பெற்றும் அக்கிரமம் செய்தால் அது
தக்குமோ கேடல்லவோ நாளை
முனி கெட்டுப் போவாய் சீதை தனைவிட்டுப் போடா தேவர்
முன்கொடுத்த வரமெல்லாம் என் கெடுக்கிறாய் மூட்டாளே—விடு

⟹ * ⟸

சடாயுவுக்கும் ராவணனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

பொறுத்தான் இந்தப் புத்தி சொல்லப் பொல்லா அரக்கன் கொள்ளாமல்
வெறுத்தான் அதற்கப்புறம் தேனைவிடும் போதினிலே நெடுந்தூரம்
குதித்தே போன குமாரர் வந்து கூடும் அளவும் இவனை இங்கே
மறிப்பேன் என்று சடாயுவும் வாய் மடித்தான் சண்டை பிடித்தானே. (உக)

மஉ-தரு-மத்தியமாவதி ராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கொத்திக்கொத்தி அடித்தானே-இடித்தானே சடாயு ராசன்
கொத்திக்கொத்தி அடித்தானே

அநுபல்லவி.

பத்துச் சொத்திலும்-தாளிலும் தோளிலும்
வெற்றிக் காத்திலும்-மார்பிலும் தேரிலும்
தத்தித்தத்திப் பறந்-தெத்தித்தெத்திக் கையால்
குத்திக்குத்தி எங்கும்-சுற்றிச்சுற்றி மூக்கால்-கொ

சரணங்கள்.

க. ஆலகாலம் போலே சீறி எதிர்த்-தேறி உடம்பெங்கும் கீறி
கோலாகலத்தே மாறித்து-அச்சை-முறித்துப் பத்துமுடியும் பறித்து
காலாலும் கையாலும் மேலே கிள்ளிக் கிள்ளி
கண்டகன் நால்ஜாது குண்டலமும் தள்ளி
மேல்வரும் அம்பெல்லாம் வாலால் விழத்தட்டி
வில்லைக் கொடியையும் தாணியையும் வெட்டி—கொத்தி

௨. ஈரெழுகினைஅவன்சேர்த்து-விடத் - தடுத்துக்கலசத்தையும்கெடுத்து
கோரப்பின்னுரம்பைப்பூட்டி-விடமாட்டிச்சிறகால்விழக்காட்டி
போராடக்கண்டொரு சூலம்அவன்போட
புதையாமலேஅது சிதறிஅப்பால்ஓட
கூர்ஆனமூக்காலே பாகனைமடித்து
கொல்லுவேனென்றவன் வில்லையும்ஒடித்து—கொத்தி

௩. மோதும்அவன்தெண்டால்சாய்ந்து-கனை-தீர்ந்துகுதிரைகளைப்பாய்த்[து
பாதகனைவிழத்தாக்கிக்-கனை-ஆக்கிமணிரதத்தைப்-போக்கி
குறிவன்செய்திருள் என்றறியப்பட்டும்
தோழன்மருமகள் என்றிறதைத்தொட்டும்
காதகராவணன் மோதிஅறவெட்டும்
கத்தியினால்சிற கற்றைசிறும்பட்டும்—கொத்தி

* * *

சடாயுவிழவேசீதைபுலம்பல்.

விருத்தம்.

அடித்தகம்சடாயுராசன் அவனிமேல்விழ்ந்தான்சீதை
கொடிக்கொருகொழுக்கொம்பில்லாக் கொள்கைபோல்ஆனாள்இந்த
முடித்தலைபத்துள்ளானை மூடிப்பதார்எனவேஅச்சம்
பிடித்தனள்வடித்தகண்ணீர் பெருகினுள்உருகினளே. (௨௨)

௰௩-தரு-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்செய்வேன்சீதை-நான்இனிமேல்-என்செய்வேன்தெய்வமே.

அநுபல்லவி.

என்செய்வேன்மான்பின்போன - இருவிரும்வாரீரோ.
வஞ்சகராவணன்செய்-வகைமோசம் பாரீரோ—என்

சரணங்கள்.

௧. எய்தும்வீட்டினில் இருஎன்றுசாமிசொல்ல இல்லைகாணே
இருந்தேன்
மையலான்னைப்-பிரிந்திடச்சனிபோலே பாழ்மானே
வந்ததே
கையினால்பிடியும் என்றதல்லாமல்நான் பலன்தானே
கண்டேனே

அய்யய்யோஉன்-றமன்தின்னுமல்லார்
அம்பலம் ஆனேனே

௨. ஈனராவணன்-கெலிக்கச்சடாயுமன்னன்
இறந்தது என்னதொல்லையே
ஆனபோதிவன்-குடிக்கென்னகாலமோ
அறிவேனே சாமியில்லையே
வானமேவன்-மேஅவருக்குச்சொல்ல
மாட்டேரோ என்சொல்லையே
என்னென்றுகேட்-பார்இல்லையேஎன்னை
எடுத்தணை ப்பார்இல்லையே—(என்)

௩. பூட்டும்வில்இனை-யோனை இடும்புசொல்லிப் என்றேனே
போபோ
தாஷ்டிகராவணா-சந்நியாசிசெய்த நின்றேனே
சதிக்குள்ளாய்
வீட்டிலேபுகுந்-தேன்அந்தமாமனை நின்றேனே
விதிபோலே
காட்டிலேபுகுந்-தேன்இந்தமாமனைக் கொன்றேனே—(என்)
கண்முன்னே

* * *

ஸ்ரீராமர்சீதைக்காகத்தம்பியோடிரங்கல்.

விருத்தம்.

இஷ்டமுள்ளசடாயுவுக் கிவ்வாறுசீதை
இரங்கஅவளுடன்அரக்கன் இலங்கைசேர்ந்தான்
மொட்டவிழும்அசோகவனச் சிறையில்வைத்தான்
முன்போனதம்பிதன்னை அண்ணன்கண்டான்
பட்டபாடுகளெல்லாம் அறிந்தான்வந்து
பன்னகசாலையையும் சீதையையும்காணான்
வட்டமலர்முகம்வாடித் தேடித்தேடி
மலங்கினான்ஸ்ரீராமன் கலங்கினானே. (௨௩)

௯-இபதை-ஆகிரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. உற்றசீதையைப்பிரிந்தேன் உன்புத்திரையறிந்தேன்
நற்றுகள்எல்லாம்அறிந்தேன் தம்பி-லட்சுமணா

பிரி

௫. கட்டிவைத்த புதையலைக் கள்வனெடுத்தவன் போலவே
தட்டிக்கொண்டு போனான் ஐயோ தம்பிலட்சுமணா

௬. நன்மைசெய்பவர் தோப்பிது கன்மம்புரிவோர்க்கு போதாது
தன்மையென்னதானம்பண்ண தம்பி-லட்சுமணா

௭. தேடோ தேடோ தேடாய்த் தீண்டாமல் தேற்றுவதியே
ஆரோகொண்டுபோனான் இந்த அபிலாய-லட்சுமணா

௮. கலப்புள்ளோர் கலலைத்தீர்க்க காட்டிருக்க கலைவதற்கு
தலைப்புருஷர் வந்ததல்லோ தம்பி-லட்சுமணா

௯. உண்டானால் இப்போதேதேடோ ஓட்டமாயோடி தேடாக்
கண்டாலும் காணல் ஆய்வான் கண்ணே லட்சுமணா

ஸ்ரீராமர் சடாயுவின் மேலே விழுந்து இரங்கல்.

விருத்தம்.

இவர் இப்படி யோசனை பண்ணி இருபோகமோ தாரம் போனவர்
எதிரே வில் ஒன்று கண்டார் இருக்கும் அம்பொன்று கண்டார்
கவசம் கிடந்தொன்று கண்டார் கண்டார் குடை கொடி கண்டார்
கடுந்தேர் ஒடிந்தது இருமுடி குவளை கண்டார் இப்படித் தேடிப்போ
அவசரமாய்த் தேக்காவணையின் அடித்து ஆக்கிரமித்து இடம் கண்டார்
அவன் ஆயுதங்கள் துடித்தெல்லாம் அங்கே கண்டார் பின் அதின் பின்
விலாம் கண்டார் பாசம் வந்து வீழ்ந்த சடாயுவை கண்டான்
வெள்ளிமலை மேல் கருமலை போல் வீழ்ந்தார் கரும் விழுந்து மாதாகானே

௬௭-தரு-புன்னாகவராளி ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிதம் காணப்போவேனோ - சடாயு ஐயா
எந்தக்கோலம் பிள்ளை இருந்தேன்

அநுபல்லவி.

சொந்தமாய்ப் பேசக் கொல்லச் சகாய் தந்து தீ என்னைச் சொல்ல
இந்தக் காலம் உன்னையும் கண்டு பகல் போலே கொண்டேன் அல்லோ — (இந்த)

சரணங்கள்.

௧. வண்மையாய்ப் புத்தி வைதனைக் கேட்டேன் - தானும் பலருமே
வகல் போல சில் துயர் தூக்கினேன் ஐயா இப்போதென்
கன்று முன்னே உன் சொல்லும் போக்கினேன் - மாரீசன் கீ
மாறிப் பொற்றேரால் பெண்ணை ஆக்கினேன் - நான் என்ன செய்வேன்

எண்ணின என்னைம் எல்லாம் பேசி இலக்காய் ஆய்த்த தீர்த்தேன்
பெண்ணும் அல்ல ஆணும் அல்ல பெருமாளும் போல வளர்த்தேன்-இந்த

௨. வையகம் தன்னையும் விடுத்தேன்-வனத்தில் வந்து
மலைபோலே உன்னை அடுத்தேன்-தம்பிசொன்னத்தை
அய்யப்போனேனாமல் தடுத்தேன்-என்புத்தி தன்னை
அபிப்பிராயத்திலே படுத்தேன்-கபடம்செய்து
பொய்யரக்கனைத் தீண்டாமல் படம் போய் அல்லோ கெடுத்தேன்
கையில் ஆதாரவன் போல் கண் போர்ப்பிடிக்கப் படம் பெடுத்தேன் — இந்த

௩. என் உயிரைப் பார்க்கடிப்பேன்-முனிவர்க்கு நான்
இசைத்த தீப படிமுடிப்பேன்-அண்டங்களெல்லாம்
இன்னமின்னம் ஆக இடிப்பேன்-இது பார்த்திருந்த
தேவரையும் ஆவிகுடிப்பேன்-என்றதுடனே
முன்னே நீ சொன்ன விசாரம் முடித்தாய் அல்லோ இக்கோரம்
என்னுடன் உன் பீடை மாசரம் பழக்க கெடுத்தேன் சரீரம் — இந்த

ஸ்ரீராமர் கோபத்தைச் சடாயு ஆற்றுதல்.

விருத்தம்.

இச்சகத்தைப் பிடித்த
மதிமுகராகவன்
காலாதி எல்லாம் தொல்லை மண்ணும் விண்ணும்
கொள்ள எடுக்கச் சிலைதனை எடுத்தான் பின்னைக்
கொலை செய்தான் அரக்கன் அவன் குலத்து அவனி
அது கிடக்க உன் கோலை பார்த்திருக்கத் தேவர்
அனைவரையும் அடிப்பேன் என்று ராமன் சீற
இது உனக்கு முறைமை அல்ல மகனே என்ன
எற்றுவான் சடாயுமன்னன் ஆற்றுவானே.

௬௮-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமா நீ இந்தக் கோபம் செய்யலாமா
இருந்தால் லோகம் படுக்க வேணும் ராமா

அநுபல்லவி.

ராவணன் கொண்டு மீண்டான்
பூமி உடன் சிறையை
போகையில் சண்டை போடப் போச்சுதேன்-சிறை அண்டாய்
ஆம் அவனைக் கொல்லாமல் நாம் விடுவோமோ கண்டாய்
அதற்கு முன் இலேசத்தாலே பதட்டம் ஆகா ஒருக்காலே — (ராம)

சரணங்கள்.

௧. இன்பம்வருவதும் துன்பம்வருவதும்
  எடுத்தவுடற்குநிலை வரம்தானே
சம்புவானசிவன் தானும்தலையோட்டைத்
  தன்கையிலேந்திக்கொண் டிருந்தானே
அம்புவிபடைத்த பிரம்மதேவனும்
  அயப்புண்டானேஒரு சிரம்தானே
நம்பும்சந்திரனும் சூரியனும்பாம்பாலே
  நடுங்குறார்இன்னம்பிரச் தாம்தானே
உன்பிழையும்இந்தவகை ஒத்ததல்லோஆகையாலே
  அம்பினால்ராவணன்தலை அறுப்பாய்-பனங்குலைபோலே
தம்பிள்ளைபெண்டுகளோடே-தாழ்ந்துபின் னொருகாலே
  வெம்பதராம்அரக்கர்க்கு-வேலைசெய்யும் தேவர்மேலே(ராமா)

௨. சேனைஇந்திரனுக்கும்-தேவர்க்கும்உயிர்நிலை
  செய்ததுனதுதந்தை உபகாரம்
ஆனைகெட்டவன்-குடத்தில்த்தேடினால்போல்
  அவனைவெறுத்தால்உன் டோசாரம்
ஈனராவணன்-சீதையைக்கொண்டுபோய்
  எவிடத்தில்வைத்தானோ இந்நேரம்
போனதிசைதேடி-அவனைவேர்அறுத்துப்
  புண்ணியத்தைநாட்டுவ துன்பாரம்
மானைத்தொடர்ந்துபின்னே-போதென்ன-அலங் கோலம்
  போனதனால்வந்ததிந்த-சானகிபி ரிந்தசீலம்
சானகிபிரிவரக்கர்-ஆனவர்க்கு நாசகாலம்
  ஆனதனால்த்தேவருக்கு-நீநினைப்பாய் அனுகூலம்-ராமா

௩. வெள்ளிவெண்மதி-வளர்வதும்தேய்வதும்
  விதியின்பயன்அல்ல வோஆமோ
உள்ளதொருவர்க்கு-நிறைவதும்குறைவதும்
  ஊழின்படிஎன்ப தறியோமோ
தெள்ளித்தெளிந்தவன்-மன்னோஉனக்கினி
  தெரியச்சொல்லுவார் எவர்தாமோ
கிள்ளிவிடுகுவாய்-ராட்சதர்சே டிகளை
  சேதம்கொண்டிப்படிஉன் மனம்போமோ

தள்ளுசமுத்-திரம்பொங்கினால்க்-கொள்ளுமோகி ணறனேகம்
  வள்ளலேஉன்-முன்னேலங்கைக்-கள்ளர்கட்கெங் கேநிர்வாகம்
எள்ளளவுநீ-முனிந்தால்-அள்ளுப்பொடி ஆமேலோகம்
  மெள்ளஇருந்-துபகையைத்-தள்ளுவதல் லோவ்வேகம்—ரா

சீதையின்பிரிவாற்றாமல் ஸ்ரீராமர்இரங்கல்.

விருத்தம்.

பொறைஅடையத்தந்தைஇந்த-புத்திசொல்லிப்பரமபதம்- போகக்கண்டா
விறகுதம்பிஇடக்கண்டான்-சாமிசடாயுவுக்குள்ள-விதியும்கண்டான் [ன்
கறைஇருளும்வரக்கண்டான்-சீதைமுகக்கமலம்ஒன்றும்-காணான்ஆகி
மறைவுசெய்தார்ஆர்எனவே-இயங்கினான்ஸ்ரீராமன்மயங்கினானே (௨௯)

ம-திபதை-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. நல்லோர்பெரியோர்என்னை வசையும்சொல்லல்-ஆச்சே
  நடுகாட்டில்என்னைத்தெய்வம் ஆகலக்கொண்டு-போச்சே
பொல்லாராவணனைக்கண்டு கலங்கி-னாளோபேதை
  பூனைகண்டகிளிபோலே புலம்பி-னாளோசீதை

௨. ஆரும்இல்லாதகாட்டில் அதட்டி-னானோபாவி
  அய்யோநினைக்கநினைக்கப் பதைக்குதே-என்ஆவி
வாரும்வாரும்என்றென்னைக் கூவி-இளைத்தாளோ
  வழிமேலேகண்ணைவைத்துப் பார்த்துக்-களைத்தாளோ

௩. வீடேபர்ணசாலைஎன் றெண்ணி-இருந்தேனே
  விதிமோசத்தாலேதம்பி விட்டுப்-பிரிந்தானே
காடேமலையேஎன்தன் கவலை-தடுக்கீரோ
  கண்ணுட்டிபோனவழி காட்டிக்-கொடுக்கீரோ

௪. தளிர்த்தமான்குட்டிவந்தென் முன்னே-நின்றபோதே
  சொன்னானேதம்பிஅதை உண்மையென்-றெண்ணாதே
வெளுத்ததெல்லாம்பால்என்றே எண்ணி-அடுத்தேனே
  வீட்டுவிளக்கைவெட்ட வெளியில்-விடுத்தேனே

௫. அங்கலாய்ப்பாளேசீதை கண்ணை-நனைப்பாளே
  அரக்கர்க்குப்பயந்தான்என் றென்னை-நினைப்பாளே
வெங்காரவேட்டையாட வீணே-போகினேனே
  சிறகுபறிகொடுத்த பறவை-ஆகினேனே

௯. தணிக்காநெருப்பைப்போலே — மூளுதே-விசாரம்
தாரத்தைக்காட்டியதான் — வீரமான்-னவீரம்
அணைப்பாரனெறிகால்லன் — நெஞ்சம்-எண்ணினேனே
அப்போசடாயுதீக்கும் — பாவம்-பண்ணினேனே

கவந்தன்வதையும் சவரியும்.

விருத்தம்.

சானகியைஇந்தவண்ணம்கேட்டிராமன்
தஞம்பையிலேதம்பியுடன்வீர்க்குப்போனான்
போனவிடத்தேகோரமுகிலுக்கரிந்துநின்றான்
புவிதார்இருவரும்கவந்தன்கைக்குள்ஆனார்
ஆனபிறகவன்உயிரைமுடித்தார்அந்த
அரக்கனும்அந்தரத்திலேதேவனாகி
தீனம்இல்லாப்பரமபதம்தனிலேபோய்ச்
செல்லுவான்சாமிதுதிசொல்லுவானே। (உ௮)

௰௧-இபதை-முகாரிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. ஆதியும்ஆகி அநாதியுமாய்இந்த — தாயே
அகிலம்எங்கும்நிறைந்
பேதகம்இல்லாமல் ஆலந்தனிற்உள்ளே — தாயே
பிள்ளைஆகிஉறங்

௨. உன்றன்பதத்தைவேண்டித் தவம்செய்வார்கள்இந்த — ஞாயம்
உலகத்திலேஉள்ள
என்றன்பதத்தைவேண்டி நீதவம்செய்யவந்தாய் — மாயம்
ஈதென்னகண்கட்டு

௩. மூலஆதாரம்இல்லை வெப்பக்குறியும்இல்லை — தானில்
மூவாத்தாயேஒரு
மலைவாய்உலகத்தோர் பிறந்தான்இறந்தானென்பார் — வீணில்
வாய்க்குவந்தோவல்வார்த்தை

௪. என்னைப்போல்அறியாத அரக்கன்என்றுபோகி — வேறே
ஒன்றுசெய்ததுதி
உன்னைநீதானும் அறியாயேராமினன் — வேறே
உன்னைஎப்படிஅறி

௫. காட்டுவாரும்நீயே காணுவாரும்நீயே — சாலம்
தற்றுயேதீதே.

போட்டுவிட்டுத்தேடித் தவிப்பார்போலத்தவித்தெரும — கோலம்
போதும்போதும்இந்தக்

௬. சூரியகாந்தம்தரு பெருந்தைக்கொண்டதைப் — போலே
சூரியனைப்பவலது
ஆரியனைஉன்றன் அனுக்கிரகம்கொண்டோன் — தூலே
அறிந்ததைச்சொல்வேன்யான்

௭. எனதுசாபம்தீர்த்தாய் அதுபோலச்சவரிஇங் — கேனும்
இருக்கிறவளைக்காண
தனதவள்சொல்லுவாள் சும்மாஇருந்தால்ஒன்றும் — கிட்டும்
சாதிக்கல்ஆமோசொல்லாய்

௮. இடமாஅவன்சொன்ன படியேசுக்கிரீவனைச் — செல்லு
சேருமவன்உடனே
கடல்போல்வானரங்கள் வருமேசனகியைக் — சொல்லு
கணத்தில்க்கண்டுவரச்

௯. தீக்காயல்க்கேளாய்ஓர் சிற்றுளைட்டாருக்குச் — நீயே
சரிஅல்லோஅறியாயோ
இடுக்கென்றுசெய்யல்ஆமோ பதஞ்சகாரியம் — தாயே
செருசெக்வார்த்தை

* * *

ஸ்ரீராமர் சவரிக்குமுத்தி அருளிஅப்பால்வசல்.

விருத்தம்.

பத்தியாக்கவந்தன்இந்தப் படிசொல்லிக்கூடியிலப்போனான்
சத்தியராமன்பின்னே சவரிஆசிரமத்திற்போனான்
அத்திசைஅமுதுகொண்டான் அவள்உபசாரம்கொண்டான்
முத்தியும்கொடுத்தான்சொன்ன மொழிகொண்டான்வழிகொண்டானே

ஆரணியகாண்டம்-முற்றும்.

விருத்தம்-உக.
இபதைகள்-௰௬-தருக்கள்-௰௫-ஆ-உ௬.
பாயிரம்-௩-க்கும்-காண்டங்கள்-௩-க்கும்கூடிய
தொச்சகம்-௧-வெண்பா-௨-வசனம்-௧-விருத்தம்-௯௧ ஆ ௯௫.
தோடையம்-௧-இபதைகள்-௨௯-தருக்கள்-௫௮-ஆ-௮௦,
ஸ்ரீசக்கிரவர்த்திதிருமகனார்திருவடிகளேசரணம்.



ஸ்ரீராமஜெயம்.

நான்காவது

கிஷ்கிந்தா காண்டம்.

அனுமார் மறைந்து நின்று யோசித்தல்.

விருத்தம்.

சவரிசொன்னவழிபிடித்து ராமனும்தம்பியும்கடக்கத்
தான்கண்டேங்கிக்
கவலைகொண்டுசுக்கிரீவன் விட அநுமான்மறைந்துநின்று
கருதிப்பார்த்தான்
தவவடிவர்வரிசிலையர் புரிசடையர்இளங்குமரர்
தர்மசீலர்
இவர்எ [illegible]ன்றுசொல்லி நண்ணுவான்யோசனையால்
எண்ணுவானே. (க)

க-இபதை-சாரங்காராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. இன்னார்இனியாரென்று தெரியேனேபுண்ணியம்
என்னசெய்தேன்இவர்கள் வரந்தானே
உ. இங்கேஎன்கண்ணின்முன்னே உதித்தாரோ - வந்து
கங்கைஉதித்தாற்போலே குதித்தாரோ
ங. காலைப்பருவத்திரதக காட்சிதந்தாரோ - இவர்
வேலைக்குத்தக்கவேஷம் கொண்டுவந்தாரோ
ச. தேவர்க்குந்தேவர்இவர் என்றுசொல்லவோ - அவர்
மூவர்இவர்இரண்டு பேர்கள்அல்லவோ
ரு. அசங்காதபலம்உள்ள சௌக்கியவான்கள் - இவர்
பசும்புல்த்தேயநடவா பாக்கியவான்கள்
சா. எல்லாவல்லமையும் செய்யஉரியோர் - இவர்
கல்லாக்கலைகள்எல்லாம் கற்றபெரியோர்
எ. பிராணசஞ்சீவிபோலே ஒன்றைவிடுத்தார் - தங்கள்
இராணியால்அதைத்தேடி இங்கேஅடுத்தார்

௮. அடைவானமூப்பிளமை பூணுகிறாரே - இவர்
உடலும்நிழலும்போலக் காணுகிறாரே
௯. வினைத்தனில்லும்அம்பும் கைக்கொண்டபடையோர் - இவர்
இளைத்தபேரைக்கைதூக்கும் எண்ணமுடையோர்
௰. கல்லும்முள்ளும்மல்லிகை மலர்போலே - இவர்
செல்லக்குளிருதையோ வழிமலே
௰௧. குவடும்காடும்செடிக ளும்பரியுதே - ஐயோ
இவரைக்கண்டுபேயும்கண் ணீர்சொரியுதே!
௰௨. பறவைகளும்களைந்து முகம்வாடுதே - இவர்க்கு
சிறகைவிரித்துமேலேபந்தல் போடுதே

அநுமார் ஸ்ரீராமருக்கு வரலாறுகூறுதல்.

விருத்தம்.

மாசகலஇந்தவனமாம் எண்ணிச்சின்ன
வன்னிவடிவுடன்நின்றான் நீர்ஆர்பிள்ளாய்
பேசெனவேவாயுமகன் அநுமானென்பேர்
பெருமலையில்வாலியினால்ச் சுக்கிரீவன்
ஆசகலஒளித்திருப்பான் தேவரீரை
அறிந்துவரஎன்னைவிட்டான் வந்தேனென்னத்
தாசரதிசுக்கிரீவன் எங்கேயென்று
தான்செல்லவனவில அநுமான்சொல்வானே. (௨)

௧-தரு-சுருட்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சுக்கிரீவன்பேர்நீ - சொன்னபோதே - அவன்
சுகிர்தம்அல்லவோ சுகிர்தம்

அநுபல்லவி.

தற்காலத்திலே பாலால்முலைவிம்மத்
தாய்ஆனவள்பிள்ளை-பேர்சொல்லி அழைத்தாற்போல்—(சுக்கிரீ)

சரணங்கள்.

௧. பட்டமரம்தளிர்க்கும்உங்கள் வசனத்தாலே
பரித்தீரேஅவனுக்குப் பயம்உண்டோ இனிமேலே
வெட்டுணிவாலியினும் கோடைகொண் டோருக்காலே
வெதும்பியபயிர்க்கொரு மேகம்பொழிந்தாற்போலே—சுக்கி

௨. படைத்தபுவியும்சொந்த மனைவிதன்னையும்விண்டு
பதைக்கிறான்செடி-இல்லாக் கொடிபோலவேதுவண்டு
அடைக்கலம்தந்தால்உமக் கனந்தம்பலன்கள்உண்டு
ஆர்க்குக்கிடைக்கும்உங்கள் அருமைக்கனிவாய்கொண்டு-சு
௩. பலம்மிக்கவாலினாலும் தனியாய்ப்புக்காரியிலே
பருத்திப்படாப்பாடெல்லாம் பட்டோமேதீனையிலே
மலைஇருசியமயிரிலே தொங்கிறவேளையிலே
வந்தீரென்னதவம்-செய்தோமுன் னாளையிலே—சுக்கிரீ
௪. கோரவாலிவிடுக-வந்தீர்இன் றென்னசங்கை
கொண்டெங்களைஆண்டு-கொள்வது மறுபங்கே
ஆரென்றுகேட்பீர்உம்மை-என்னசொல் வேனேஅங்கே
அடியேனும்அவனாலே-அனுப்பவந் தேனேஇங்கே—சுக்கிரீ

அநுமார்தேற்றச் சுக்கிரீவன்சரண் அடைதல்.

விருத்தம்.

அநுமான்இப்படிசொல்லஅயோத்திநகரில்
ஐயன்உதித்தஅமுதவாசத்தைப்போன
மனவேதைகடையியாகடந்தவாறே
வருந்திஇளையோன்சொல்லஅறிந்துகொண்டான்
கனமானவிசுவரூபம்காண்பித்தான்
கவிக்குலவேந்தனையும்காண்பிப்பேனென்று
தனதாம்தன்அரசனுடனேபோயெல்லாம்
சாற்றினான்அவனகவலைமாற்றினானே (௩)

௨-தரு-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. குணசம்பிரமதீரர் ராமலட்சு
மணர்என் றிருவீரர் அவர்தம்மை
மனமாருந்திருவர்க்கு மறுசுகம்தேடுமோ
க்ஷணம்ஆகிலும்விட்டுப் பிரியவும்கூடுமோ
௨. கண்டேன் கண்டேனே ஆனந்தம்
கொண்டேன் கொண்டேனே நல்ல
புண்டரிகக்கண்ண னேஅந்தமூத்தவன்
மண்டலிகஅர சவேதம்பிலாய்த்தவன்

௩. சத்திய நலெம்பதுவுடைத்தோர் விசுவா
மித்திரனைக்கையும்புடைத்தோர் வெகு
வெற்றிமருவுகீர்த்தி மேவியகுணசீலர்
சித்திபெறும்அயோத்தி தெசரதராசன்பாலர்

௪. குடிலந்தாடகையைப்போலே அம்புபோட
ஓடிபட்டமரம்போலே விழுந்தாளே
அடிவைத்தவுடன்அந்த அகலிகைகல்லுருத்தாளே
சாடிக்குருள்கௌதம சாபமுந்தீர்த்தானே

௫. ஒப்பிக்கிறுடிக்கி சொன்னாலும் ராமன்கீர்த்தியை
அடக்கப்போருமோனாலும் மிதிலையில்
மிக்குடனுருத்திரன் தடக்கைவில்லுயிர்த்தானே
எடுத்தால்ப்போல்வடுத்தானே ஒடித்துவிட்டெறிந்தானே

௬. மாமனைக்கிரைதவேற்றி பரசு
ராமன்கெறுவம்மாற்றி அயோத்தி
கோமுடிதன்னைராமன் கொடுத்தானேதம்பிக்கங்கே
காடெல்லாம்நடேற நடந்துவந்தானேஇங்கே

௭. முன்னேவிராதன்மடிந்தான சாபன்அப்பாலே
பின்னேகரனும்முடிந்தான் இருதுல்லாமல்
வன்மாரீசனுக்கும் வாளிகொடுக்கலாச்சே
பொன்மான்செத்தவிடம் புல்லும்முளைத்துப்போச்சே

௮. எடுப்புள்ளபெரியோரே கவந்தனை
அடித்தாரோஇங்கேரே இவரே
அடுக்களைக்கிணற்றிலே அறுதாள்முழ்ந்தாற்போலே
கிடைத்தோரிருவர்க்கு கிடைக்குமோஇப்பாலே

௯. அவ்வாய்த்துருப்பெண்ணானே மித்தப்பித்தம்
மனைபோல்விசாரம்இன்னமோ சொத்துபெற்ற
பலகாலியும்பட்ட பாடெல்லாம்கண்டோமே
கலம்புகலாவிக்கொரு சாகோயும்கண்டோமே

௰. ராசன்மகனே வண்டா பலபல
போசனைபண்ணலேண்டா வராக்கரும்
நரன்உன்பக்கில் இருந்தானேஇருந்தானே
பூசனைசெய்தாய்என்றிப் போதல்லோதெரிந்தேனே

௰௧. சுகம்கண்டு மேவைக்குமே அவர்பகர்
முகம்கண்டால்பாவம்போமே சுக்கிரீவா

புருத்தவர்சேவைகாணப் புத்திமுத்தியுந்தரும்
இகம்பரம்இரண்டிலும் எதுநினைத்தாலும்வரும்

௰௨. இக்கதை அறிவித்தி அனுமான்சொல்ல
சுக்கிரீவன்மனம்தேறி புறப்பட்ட
அக்கணம்ஒருமன தாகவேதணிந்தானே
மைக்கடல்வண்ணரா மனைவந்துபணிந்தானே

௰௩. பணிந்தவன்தன்னைப்பார்த்து ரகுநாயகன்
அணிந்தகன் திருவைபூத்து சுக்கிரீவா
பிணங்கும்வாலிக்குமில்லது பிடித்தேன்என்றெடுத்தானே
இணங்கும்உன்னைரட்சிப்பேன் என்றுகைகொடுத்தேனே

*

ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்கு ஆதரணைசொல்லுதல்.

விருத்தம்.

சரணெனஇப்படியே சுக்கிரீவன்சொல்லச்
சாமிஅபயம்கொடுத்தான் அனுமான்தானும்
முரணுளவாலிக்குமோர் அரக்கனுக்கும்
முன்புசண்டைவரலாலே தம்பிதன்னை
ஊரன்அழித்துமண்ணையும்பெண்ணையும் கைக்கொண்டே
ஓட்டிவிட்டான்இவன்இங்கே ஒதுங்கினான்உன்
பரமெனவேதாமனதையே எண்ணிப் (௪)
பாலிப்பாயென்றரகுராயன் கோவிப்பானே.

௩-இபதை-தோடிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. சுக்கிரீவாஉன்ம-னக்கிலேசங்கள் தீரடா
னக்கேஆம்அது
இக்காலத்தில்மு-டுக்காம்வாலியை பாரடா
வைக்கேன்நீஅது.

௨. பெருவாலிக்குள-தலைசாயக்கணை தொடுக்கிறேன்
பிசகாதப்படி
அரைநாழிக்குளே-முடிசூடிப்புவி கொடுக்கிறேன்
அரசாளக்குடை

௩. அடுக்கர்மனைவியை-எடுத்தான்எனஉரை சோமே
கொடுத்தாய்அவனைஇங்
செடுத்தேஅவன்முடி-பொடிக்காவிடில்வில்லை சாமே
எடுத்தாவதில்லென்ன

௬. உடைந்தேசரணென அடைந்தோர்களைமுற்றும்
   தொடர்ந்தாதரித்திட   வேணுமே
கடும்போரினிலேகை-விடும்போதிலிந்த
   உடம்பாலென்பலன்   காணுமே

* * *

சீதை ஆபரணங்களைக்கண்டு ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

அன்னால்இராகவன் சுக்கிரீவனுக்கிவ்வாறே
   அனுமொழிந்துவாலிசேர் தனைக்குவேண்டி
வண்ணமராமரம்விழும் அம்பால்எய்து
   வழியிலேதுந்துபிதன் எலும்பைக்கண்டு
இன்னானென்னுந்தம்பியினுக் கொப்பிவிட்டுத்
   தெரிவேபோஞ்சீதை முடிந்துபோட்ட
அன்னவனும்ஆபரணங்கள் காட்டக்கண்டு
   அடிக்கின்றான்சாமிதுறை படிக்கின்றானே.   (௧)

௯-பதம்-கன்னடராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. பிணையுதெரிந்த குலமடந்தையர்
   தங்களைக்   கொண்டீரோ - இல்லையோ
கணவன்இருந்தும் உடைமையிழந்த
   பெண்களைக்   கண்டீரோ
உ. அரசிலேமணி முடிசூடாமல
   கம்கோன   காடினேனே - ஐயையோ
சிரசிலேசடை முடிசுமந்தொரு
   பெண்பழி   சூடினேனே
௩. தசரதன்தப் சுகள்புரிந்தவ
   னும்பாலன்   ஆனேனே - ஐயையோ
மிசைபடும்சுவை உளகரும்பில்
   வெறும்பூ   ஆனேனே
௪. வாரிதிதந்தவர் கல்லைநுழைத்தவர்
   மரபில்   வந்தேனே - ஐயையோ
பாரியைஆனாலும் ரட்சணைசெய்யப்
   படாமல்   மெலிந்தேனே
௫. மங்கைகளைப்பார்க்க நான்முகச்சோலைக்கு
   மாற்றிட்டுத்   தீப்பேனோ - ஐயையோ

அங்கிருந்தும்பார்த்தேன்வனம்பார்த்தேன்இனி
   ஆர்முகம்   பார்ப்பேனோ
௬. விண்பணிஇளதுக் கார்என்னைமீட்பவர்
   மேலென்று   நிந்தாளோ - ஐயையோ
ஆண்பிள்ளைஅல்லநான் பெண்பிள்ளைஎன்றெண்ணி
   அணியை   நிந்தாளோ
௭. அவளுக்குநானும் எனக்கவளும்பூட்டும்
   ஆரங்கள்   பூண்பேனோ-ஐயோ அவள்
பவளக்கனிவாயும் முத்துநகையும்நான்
   பரிந்தென்று   காண்பேனோ
௮. பணிஇங்கிது சனகியுங்கட்டி
   எறிந்திடச்   சேர்வேனோ-ஐயோ அவள்
குணசௌந்தரிய மலர்முகம்கண்டு
   கண்களி   கூர்வேனோ
௯. குலம்தரும்கொடி உடன்தவம்செய்து
   போந்தேன்   என்பேனோ - ஐயையோ
இலங்கையில்விட்டு வெறுங்கையாய்வந்து
   சேர்ந்தேன்   என்பேனோ
௰. இல்லாளைவிட்டு வல்லாண்மைபேசி
   இன்னமும்   இருந்தேனே - ஐயையோ
புல்லாளைச்செய்து கொல்லையிலேவைத்தாற்
   போலவே   இருந்தேனே

* * *

ஸ்ரீராமருக்குச் சுக்கிரீவன் துணிவுகூறுதல்.

விருத்தம்.

இந்தவிதம்ஆகராமச் ... ... *
சந்திரன்மனம்நோகும்வேலை ... *
தொந்தம்உளசுக்கிரீவ ... ... *
னுந்துணிவுசெப்புவானே ... *

உ-தரு-நாட்டை-குறிஞ்சிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எதுக்கு - இந்தவிசாரம் - எதுக்கித்தனைதூரம் ௦

---

௦ இவ்விடத்தில் - சாமி உனக்கு - என்று வருவித்து எதுக்கித்தனைதூரம் என்று கூட்டி இரட்டித்துப்பாடிக்கொள்க.

அநுபல்லவி.

போதும்பிரம்மாண்டம்அப் புறமும்போய்-வருகிறேன்
சீதையைக்கொண்டுவந்து கொடுத்திலே-தருகிறேன்—எனக்

சரணங்கள்.

க. தருமராமரம்எய்தாய் துந்துபியெனும்பைத்
தம்பியாலே எறிந்தாய் - சாமி
கருதினது தருவேன் என்பலன்உன்பலன்
களும்நீயே அறிந்தாய் - இராவணன்
ஒருபதுதலைகளும் உன்பெருங்-கணைபோலே
இருகிறேன்தருகிறேன் தேவியைக்-கைமேலே—எனக்

உ. மின்பணிகாட்டி உனக்குநான்இந்த
வேதனை காட்டினேன் - சாமி
மின்பெருங்கவலையை நீக்கவேணும்சுயமா
சேரம்பர் காட்டினேன் - சாமி
என்குறைமுடிக்கிற தென்னை திக்குமுன்னே
உன்குறைமுடிக்கிறேன் ஒருமிதி நெத்தில்சொன்னேன்—எனக்

ந. சுத்தர்ஆகிய மூவர்க்கும்தேவர்க்கும்
ஆகுமோ பட்டக்கட்டம் - என்படை
மெத்தஉண்டுவரும் வெற்றியும்தரும்இனி
மேல்என்ன மூசவாட்டம்
உற்றசீதையைஉத வுகிறேன்இ-துதிதானம்
கற்றுக்கற்றுச்சொல்லினான காரியம்அல்-லோபிரதானம்—எனக்

* * *

ஸ்ரீராமரை வாலி நிந்தித்தல்.

விருத்தம்.

ராமனைஇந்தப்படி சுக்கிரீவன்தேற்ற
நல்அநுமான் வாலியைக்கொன்றிப்போதிந்தக்
கோமகன்சுக்கிரீவன் முடிசூட்டில்எல்லாம்
கூடுமென்றான்சாலியும் அங்கிசைந்தான்அப்பால்
பூமகன்வாலியும் தம்பிதானும்சண்டை
போடையிலே ஐயன் அம்புபோட்டுச்சாய்ந்து
பேய்முகனும்வாயில்வந்த தெல்லாம்வாலி
பேசுவான்ராகவனை ஏசுவானே. (எ)

௫-தரு-சாரங்காராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்இந்தமதிகுறித்தாய்-மறைந்துவாளி-எடுத்தென்மேல் என்தெறித்தாய்.

அநுபல்லவி.

மானபூஷணன்ஆன தசரதன்உன்னைப்பெற்று
வரங்கள்தந்தது நல்லாய்
குரங்கைவெல்லவோ சொல்லாய்—என்

சரணங்கள்.

க. நார்க்கும்வானரர்க்கும்உண் டோதொந்தம்-முன்பின்
ஞாதிவழக்குண்டோசொல் அநுபந்தம்
பலவந்தம் - ஆகி
அரக்கன்அழிவுசெய்தால் அடிப்பதோஉன்சந்தம்
ஆயுதம்இல்லானை ஆண்மைசொல்லாமல்
அதுவும்அல்லாமல் என்னைவெல்லாமல் — என்
எதிரில்நில்லாமல்

உ. வலியமரங்கள்ஏழும் தொலைத்தாயே -அந்த
வலிமைஇருந்தும்எனக் இளைத்தாயே
கலிராசன்போல்வந்து முளைத்தாயே - நடுக்
காட்டில்மறைந்துவில்லைக் காணாமல்வளைத்தாயே
காரியம்இதுசுத்த கபடம்உனைப்பெற்ற
சூரியகுலம்மெத்த குலங்கும்அடமித்த—என்

ந. தன்மம்வளர்க்கவந்த ரகுராமா - பரதன்
தனக்குமூத்தபிள்ளை நீஆமா
மிகரோமா - வாலி
உன்மனதுதான்என்ன
உயிரைக்கொண்டால்ச்சீதைஒழிந்தபயம்போமா
உனக்குஞாயமோ உள்உபாயமோ
எனக் கபாயமோ என்னமாயமோ — என்

* * *

வாலிகுற்றங்களை அவனுக்குஸ்ரீராமர்விரித்தல்.

விருத்தம்.

இன்னனவாலிசொல்ல இராகவன்அவனைநோக்கி
மின்னையும்கொண்டாய்தம்பி மேதினிதனையும்கொண்டாய்
பின்னையும்கொல்லவர்மம் பிடித்திட்டாய்அதனைக்கொண்டே
உன்னைநான்கொல்லுதேனோ உரைஎன்றான்உரைஎன்றானே. (அ)

ஜெ

௬-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வடிப்பம்வடிப்பமாப்பேசிக்-கொள்ளாதே-அடா வாலிஉன்
வாயைமூடடா வண்டாதுள்ளாதே

அநுபல்லவி.

சடத்தடாகத்தெல்லாம் ஆயிரம்
கால்அரைக்கால்ப்பணம்அடாகடை கட்டடா—வடி

சரணங்கள்.

௧. பிலம்தனிலேநீ புகுந்தபோதில்உன்
பின்பலனாய்இவன் தொடர்ந்ததும்
பேய்அறைநிருல்ப்போலே நீஅறையஇவன்
பின்வாங்கிக்கொண் டடைந்ததும்
நலம்தனிலேஅப வாதம்ஆகத்தம்பி
தாரத்துக்கும்உனக்கும் நடந்ததும்
சாபத்தாலேநீ ஏறுமலையிலே
தப்பித்தவழிஇவன் அடைந்ததும் சொல்லாமல்—வடி

௨. வார்த்தைக்குமாத்திரம் ராமரூபம்நீதி
வகையும்தொகையும்சொல்லி நிறைக்கிறாய்
மனதாரச்செய்த வினைபோமோவீண்
வார்த்தைகள்வன்சொல்லி இறைக்கிறாய்
மூத்தவன்தம்பி தாரம்என்றறிந்தும்
முறைபிசகினதை குறைக்கிறாய்
மூடன்போலேவா யாடுகிறாய்அடா
முழுப்பூசினிக்காயும் சோற்றிலே மறைக்கிறாய்—வடி

௩. அம்புங்கையுமா எதிர்நின்றால்உன்தன்
அபயம்என்றுவருவார்என் அடிக்கு
ஆராகிலும்சொந்த பேராகிலும்அடுத்
தாரைக்கெடுக்கலாமோஎன் றடிக்கு
தம்பிதாரமோஉன்னைச் சித்திரவதைசெய்யத்
தருமோநான்பிடித்த பிடிக்கு
தர்மத்துக்குள்ளும் பாவத்துக்குப்புறம்புமாய்
சாத்திரத்தாலேசொல்லத் தொடுத்தேன்இந்தப் படிக்கு—வடி

ஸ்ரீராமனைவாலிவரம்கேட்டுக்கொள்ளல்.

விருத்தம்.

மழைநிறத்துராமன்இந்த வாறுசொல்லவாலியும்சம
மதித்தான்இப்பால்
பழையதொருநினைவுகொண்டான் அறிந்தும்அறியாமலும்நான்
பதறிச்சொன்னேன்
தழையும்மகன்சுக்கிரீவன் அனுமன்உனதடைக்கலம்என்
சாமிஉன்றன்
பிழைபொறுப்பாய் எனச்சொல்லிக் கூசுவான்மறுஒன்று
பேசுவானே (௧)

௭-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சாமிரகுராமா-இவர்கள்உன்-தஞ்சம்ரகுராமா.

அநுபல்லவி.

ஆர்இவரால்என்னகாணும் ஆகிலும்ராசாங்கம்வேணும்
நீமாத்திரம்வெல்ல நினைத்தால்காரியம்அல்ல—சாமி

சரணங்கள்.

௧. எனதுமகன்அங்கதன்தான் உனதுபகையைவாட்டுவான்
ராட்சதகுலங்களை உபேட்சைஇல்லாமல்மாட்டுவான்
அனுமந்தன்உன்தன்கோதண்டம் எனவிசயங்கள்காட்டுவான்
அந்தராவணனைஎன்போலத் தொம்தொம்தொம்தொம்என்றோட்டு [வான்
சாமி

௨. அந்தத்தில்உன்தனைக்காணத் தந்தானேஇது அல்லாதே
அதிதியாய்தனக்கும்நித்தியம் எனக்கும்தந்தானேஇப்போதே
என்தம்பிசுக்கிரீவன் பிழைதந்தாலும்கிருபைவிடாதே
என்மேலேதொடுத்தஅம்பை எடுத்தவன்மேலேதொடாதே
சாமி.

௩. நெடுந்தவம்ஏதோஎன்சிவன் விடும்போதுகண்டேன்உன்காட்சி
நினைக்கொணாப்பரமபதம் எனக்கல்லவோகாணியாட்சி
அடங்கலும்ரட்சிக்கவந்து தொடங்கினைநீசர்வசாட்சி
ஆள்இல்லாப்படைவெட்டுமோ ஐயாஉனக்குண்டோதாட்சி
சாமி.

வாலிசுக்கிரீவனுக்குப்புத்திசொல்லுதல்

விருத்தம்.

இன்னவாறு சாமிதன்னை இரங்கிவாய்க்கொண்டிடும்வாலி
பின்னோனாகியசுக்கிரீவன் பெருமாமுகத்தைமிகநோக்கிச்
சொன்னேன்இதுநீகேள்என்றான் சுவாமிராமன்இவன்பணியை
எக்காலமும்செய்வாய்அவனே இரக்ஷகன்தனக்கோர்வைத்தானே. (௰)

௪-தரு மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

ஆதிதேவனே-ஸ்ரீராமஸ்வாமி-சுக்கிரீவனே.

அநுபல்லவி.

வேதசாஸ்திர புராணம்எல்லாம்கூடி
விரிப்பதும்இவனேசொல்லத் தரிப்பதும்இவனேயல்ல—ஆதி

சரணங்கள்.

௧. அடைவுடன்இவன் கையில்விழுந்து
ஆருநீ நித்தியம்-பணி
விடைசெய்தால்க் குறைவுண்டோஉனக்கிது
வேணுமலோ பத்தியம்-வேறே
தொட்டும்தெய்வங்கள் எப்பேர்க்கும்
சொல்லுநேதி மித்தியம்-ஒன்றும்
நடைஇல்லாரோர் பாதிவர்த்தியர்க்காம்
தப்பாதிவன்நித்தியம் அப்பாசொன்னேன்சத்தியம்—ஆதி

௨. மதிமயக்கங்கொண்டு இப்படிக்காண்டு
மயக்கம் பண்ணாதே-எவரும்
எதிர்த்து நானுன்னைக் கொல்லுகின்றேன்போலே
ஈது எண்ணாதே-ஐயன்
உதவிசெய்அடியும் முடியும்வேண்டாவும்
ஒழிக்க ஒண்ணாதே-நன்றி
இதுநீஇவன்ஓர் மனிதன்ஆம்என்று
இருக்காமல்புத்தியை ஒருக்காலும் எண்ணாதே—ஆதி

௩. அகலாமல்அனுகாமல் சாமியை
அனுதினமும் சுற்றி-இவன்
மகிழ்வாகப்பட்ட வேலைசெய்து
வருவதே புத்தி-சொன்னேன்

இகழாதுகொண்டால்இதுவேசித்தி
இதுஅல்லோ வெற்றி-சொல்லி
உறுகுவதேன்இனிசகலபாக்கியமும்
உருவாய்ப்பரமபதமும் பெறுவாய்இதுவேபுத்தி—(ஆதி)

வாலிஇறந்தபின்தாரைபுலம்பல்.

விருத்தம்.

வாலிஇந்தவாய்கொண்டுவளர்வைகுந்தபதம்சேர்ந்தான்
வேலினைநெடுங்கண்உளதாரைமின்னல்க்கொடிபோலேயவன்
பாலில்விழுந்தாள்வானரபூபதியேகெதியார்எனக்கென்று
மேலில்விழுந்தாள்நெடுமூச்சுவிடுந்தாள்புலம்பத்தொடுத்தாளே. (௰௧)

௫-திபதை-செண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பூபதியே
௧. மன்னவனேஎங்கள்வாலியேநல்லவானர இருந்ததோதலைவிதியே
இன்னவேளைஇந்தமரணம்உனக்கென்று இறந்தாயோ
௨. இறவாமருந்தையும்தருவாயேநீஎப்படி மறந்தாயோ
மறவாதேசிவபூசைசெய்கின்றவழிபாடு தென்றேனே
௩. ஆனைக்கும்அடிசறுக்கும்தள்ளிவிழல்ஆகா தெருவில்வேகின்றேனே
சேனைத்துரை யோனாய்உன்னைக்கொடுத்திங்கே என்மேலேபாயாதோ
௪. என்உயிர்நீஆனால்உன்மேலேபாய்ந்தகணை மாயாதோ
உன்உயிர்நான்ஆனால்உன்உயிரோடேஎன்உயிர்கூட உண்டோ
௫. விந்தைமனிதன்கைக்குநீயும்விழுவாயோவெற்றிவாலி உண்டோ
என்தன்உயிர்இன்னம்இருக்குதே-ஐயோஎன்னைப்போல்நீலிஉண்டோ
தொடுத்தானே
௬. மனைதந்தாராமன்கணைதொடுக்காமல்உன்மேல்-வழக்கு கைமேலே
குன்றந்திடாக்கடல்கடைந்தமுதமும்நீகொடுப்பாயே மறுபேரோ
௭. செய்நன்றிஅறியாரோகாலனார்அன்னதேவரோ தருவாரோ
ஐயையோஅவர்க்கமுதம்உன்னைப்போல்ஆர்இனித் பொய்போமோ
௮. நான்அடிஉன்தன்பிராணநாதன்என்றநம்பிக்கை போடல்ஆமோ
வானரமங்கையர்மேல்ஆசைகொண்டோமறந்துவிட் இனிப்போச்சே
௯. வன்னபெருமுதல்மலையில்உன்கால்வைத்தஅடிவுகள் கெடுவாச்சே
நின்னைமறைந்தப்புபோட்டாராகவன்-நீதிக்கு தேவர்கண்டாரோ
௰. மருந்தமுதந்தசாமிஇங்குதானென்றுமகிழ்ந்து கொண்டாரோ
விருந்தமுதுசெய்யவாஎன்றேஉன்னைவேண்டினர்

ஸ்ரீராமர்சுக்கிரீவனுக்குராசநீதிகூறுதல்.

விருத்தம்.

பொற்பனையாள்தாரைஇவ்வாறழுதனள்அங்கதன்றன்புன்கூர்வாள்க்கொண்
தம்பிஇளையவன்கையால்முடிசூட்டசுக்கிரீவனைதரித்துக்கொண்டான் [டான்
பின்புரகுராமன்இருப்பதற்கினில்வந்தவன்பணிந்தான்பிறகுராமன்
அப்புவியைஆளும்வகைதெருளுவான்புத்திசொல்லி அருளுவானே. ()

௩-தரு-சௌராஷ்டிரராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அரசுசெய்வதென்ன-எதிர்த்துபோட்ட-தல்லடாசுக்கிரீவா.

அநுபல்லவி.

நிருபன்என்றபோதே-கெறுவம்   மெத்தகாணும்
நெருப்பாகும்பயிர்ப்பா-லமுமா   நடக்கவேணும்—(அரசு)

சரணங்கள்.

௧. கோலமன்னவருக்குச்   சதுரங்கம்-செய்
கோலைப்போலேதருமோ   உத்துங்கம
நாலுதிசைக்குப் உள்ள   ஆதங்கம்-தீர்த்து
நடத்தவல்லவன்அல்லோ   துரைசிங்கம்
ஆலகாலதுஷ்டர்   உறவென்றுதள்ளாதே
அரவமானைப்போல்ஒத்த   அமைச்சரைவிள்ளாதே
காலம்தெரிந்தபெரி   யோர்களைத்தள்ளாதே
கால்போகாஇடத்திலே   தலையிட்டுக்கொள்ளாதே—(அரசு)

௨. மங்கையர்களுடனே   சூழ்ச்சி-கொண்ட
மன்னர்க்கவமானம்   காணியாட்சி
எங்கள்இடத்தில்அந்த   அக்காட்சிபோதும்
இதைவிடஇனிவே   றென்சாட்சி
உங்கள்வாயேயும்பய்   கையால்முனேசித்த
உருண்டானே.அரிச்   தாயேபுந்தமுந்த
செங்கோல்கோனிறல்   எங்கும்கோணும்அந்த
தேசத்துமன்னமுன்னமை   ராசருக்கல்லோஇந்த—(அரசு)

௩. பண்ணினதீனையிறல்   ஒருகடணி-என்னைப்
பாதேவுக்கிருனே   அந்தாணி
என்னினனியவரா   அதுபோல்நீ-சவியா
எதிரிட்டுக்கொண்டால்அது   வேதுனி

உண்மைஆகஇன்னம்   உறுதிசொல்வேன்இப்போது
ஒருத்தர்செய்உதவியை   மறக்கில்அதுவேதீது
மண்ணில்இருந்து   வழக்கோரம்சொல்லொணாது
மயிலைப்பிளந்துவிவ   காரங்களைஒது—(அரசு)

ஸ்ரீராமர் கார்காலம்சீதையைநினைந்துஇரங்கல்.

விருத்தம்

மாமருடம்புனைந்தசுக்கிரிவனுக்கிவ்வாறே
மதிசொல்லிமதங்கமுனிமலையின்மேலே
ஏமமழைகாலம்எல்லாம்இருந்துபின்த
எண்ணத்தால்ரகுராமன்வண்ணமமாறிக்
காமலர்ச்சோலையைமயிலைக்குயிலைமானைக்
கானகத்தைப்பார்த்துவிரகாக்கினியாலே
வேமுருகுவெண்ணெயைப்போல்கனைந்துசிந்தை
விலங்குலான்தனியேதான்கலங்குவானே. (௩௧)

௯-திபதை-நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பொன்
௧. மான்காள்பழிகொண்டீர்
மான்உருவாய்அன்னை-வந்துகெடுத்தீர்
நான்அறியாவிதம்-எங்கள்கொடுத்தீர்   இரு
கான்காள்வழிசொல்லீர்
கண்ணைவிட்டுத்தரி-வாருண்டுயிர்போலப்
பெண்ணைவிட்டுப்பிரி-வார்களும்உண்டோ   சொல்ல்

௨. மயில்காள்ஒன்றுசொல்லீர்
வாய்இல்லையோஉங்கள்-சாயலைநேர்தரு
சேயிழைஆனவள்-போயதெவ்வாறே   சொன்னால்க்
குயில்காள்ஒன்றுகூறீர்
குற்றம்உண்டோஎன-துத்தமிழாகிய
பத்தினிசானகி-எத்திசைபோனாள்
ஒரு
௩. கிளிகாள்உரையீரோ
கேள்விகேளீர்படி-பாவிகளோஎன
தாவிலைநேர்தரு-தேவிவாராளோ   உலக்
அளிகாள்இருமைஇலையோ

தாயைப்பிரிந்த-சேயைப்போல்-ஆனவன்
ஒழிகையால்உயிர்-வாடுகிறேனே

௬. காலமேஅவகாலமே என்தன்
காதலியாகிய-சீதையைப்பிரிந்திட
நீதுணையாகிய-தோதகம்வந்ததோ
கோலமேஎன்னகோலமே வேறு
கொச்சையுமாய்இரு-லச்சையுமாய்உயிர்
வைச்சிடவோஇனி - லட்சுமணாசொல்

ஸ்ரீராமரைலட்சுமணர்தேற்றுதல்.

விருத்தம்.

வெம்பியேராமன்இந்தவிதம்சொல்லிஇரங்கும்போதில்
எம்பிரானேதென்னஈதென்னகோலம்சாமி
உன்பெருமையைநீகாணாய்உருகிறாய்என்றுசொல்லித்
தம்பிதான்அன்பர்எல்லாம் தணிவிப்பான்தணிவிப்பானே. (௩௯)

௮-தரு யமுனாகல்யாணிராகம் அடதாளசாப்பு.

பல்லவி.

சாமிவதையா-இந்தவேளை-சாமிவதையா.

சரணங்கள்.

௧. பூமிஉன்னோர்க்கெல்லாம் ஆதாரசாமா
நீமனதில்இப்படி நினைத்திடல்ஆமா—(சாமி)
௨. சன்னைகன்றுஉனக்குச் சமானம்வேறேதோ
உன்கையில்கோதண்டம் ஒன்றைப் போதாதோ—(சாமி)
௩. அடிப்பாரோராட்சதர் அதிகமோஆடு
கடிக்குமென்றறிவதி கலங்குமோகாடு—(சாமி)
௪. உன்மகிமைஅறியாய் உருகிறாய்இங்கே
பிரம்மாதிதேவர்க்கும் பிழைப்பினியங்கே—(சாமி)
௫. உதவிசெய்வோர்க்கிடை யூரன்டோகாணும்
பதறுஇருக்கல்லோ படுத்திடவேணும் —(சாமி)
௬. ஆறுமாதிகள்பகம் அறியாயோசாமி
நினைவுநீலையிருல் நிற்குமோபூமி— (சாமி)

௭. சொன்னேன்குறைஇல்லை சுகம்இனிமீதே
அண்ணேசீதையும்வரல் ஆச்சுதிப்போதே—சாமி

சுக்கிரீவன்தாமசங்கண்டு ஸ்ரீராமர்கோபித்தல்.

விருத்தம்.

மதிமான்ஆனதம்பிஇந்த-வகையேசொல்ல ராமச்சந்திரன்
இதிலேதெளிந்தேசானகிபோய் இருக்கும்இடம்எவ்விடம்காணேன்
சதியால்மதசுக்கிரீவன் சரத்காலமும்போய்வரக்காணேன்
விதியால்அவனைஅழைஎன்றே விடுத்தான்கோபம்மடுத்தானே.

௯-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறானோவாரானோ சுக்கிரீவன் - மனதைஅறிந்துவாராய்தம்பி.

அநுபல்லவி.

இருகுசொன்னால்அவன் குலம்ஒன்றும்வெட்டுவேனே
சித்திரத்திலும்குரங்கை வைத்தெழுத-ஒட்டுவேனோ-(வருகி)

சரணங்கள்.

௧. கருணத்தில்உதவியை மறந்தானே மதம்கொண்டு
தன்னேரும்முக்கால்பிழை பொறுக்கும் அல்லவோகண்டு
மரபுக்குச்சற்றேஇன்னம் பார்க்கவே ஞாமேபண்டு
வாலியைக்கொன்றஅம்புபோல் ஆயிரம்அம்புகள்உண்டு(வரு)
௨. கரத்தாலேஅபயம் கொடுத்தவன் தன்னைவன்னக்
கனகசிங்காசனத்தில் வைத்தோ. மேமின்ன
என்றுசொன்ன
சரத்காலம்போனஉடன் வருகிறேன் செய்தால்என்ன(வரு)
சத்தியம்மறந்தவனைச் சித்திரவதை மன்னிப்பில்லை
௩. அரியமராமரங்கள் தொளைத்தரா ஒருசொல்லை
அறிவாயோ அறியாயோ என்றுகேள் கென்னசல்லை
ஒருமசகம்இவனை அடிப்பதற் ரியஇல்லை(வரு)
உண்மையானவனக்கவன் சம்மதிதே

சுக்கிரீவன்மதுபானத்தைநிந்தித்தல்.

கொச்சகம்.

சாமிஇந்தப்படிஉரைக்கத் தம்பியும்கிஷ்கிந்தையில்போய்
ஆம்அநுமான்தாரையைக்கண் டுசொன்னான்அவராலே
மெஅ

கோமகன்சுக்கிரீவன்இளய் குமாரன்வரவறிந்துகெட்டேன்
மாமதுஉண்டேன்றுவரை வான் சொல்லிக்கலாவானே.

௫௩-தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மதுவே-உன்றால்க்கெட்ட-இதுவே.

அநுபல்லவி.

புதுமைகாண்பாவி சுக்கிரீவன்மயற்கு
பூமிதந்தானுக்குச் சாமித்துரோகம்செய்த—மது

சரணங்கள்.

௧. ஸ்வாமியன்றங்கதன் கூடின கோத்திரட்டத்
தொட்டதும்விட்டதும் நான்அறியேன்முட்டப்
பாமரன்ஆய்உன்னைக் குடித்தேனேபொட்ட
பஞ்சமாபாதகன் ஆனேன்கடைகெட்ட—(மது)

௨. பித்தாம்உடம்புக்கு மத்தம்புரப்படும்
பெண்ணென்றும்தாயென்றும் தெரியாமலேவிடும்
சூத்திரம்ஆம்கர கத்திஎளிதோ இடும்
குடித்தவன்அடித்தவன் எடுத்தவனும்கெடும்—(மது)

௩. குன்றுதவாலியை வென்றுசிறந்தேனே
கோதண்டஇராமா குருவால்ச்சிறந்தேனே
ஒன்றுஅவன்செய்த நன்றிதுறந்தேனே
உன்னைக்குடித்தேனே என்னைமறந்தேனே—(மது)

௪. வையகம்தந்து மதிகெட்டேனாளை
வைத்தானென்றுமயல் வைத்தாய்பழிமூள
ஐயையோநான்சொன்ன காலம்சற்றேகீள
ஆகாமல்ப்போனேனே சூகோசலமடாசா—மது

* * *

லட்சுமணர்சுக்கிரீவனைஇடித்தல்.

விருத்தம்.

மன்னன்ஆம்சுக்கிரீவன் மதுவினால்மயங்கிவிட்டேன்
என்னவோசாலுக்காவந்தான் எதிர்கண்டதம்பிசொல்வான்
சொன்னநாள்தவறிஇந்தத் தடுக்குநீர்செய்யீர்சிந்தை
இன்னம்பதென்றுகோபம் எழுகின்றான்மொழிகின்றானே (௯௭)

௫௪-தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தகாரியமிதுகாண்-சுக்கிரீவராசன்-வந்தகாரியம்இதுகாண்.

அநுபல்லவி.

வந்தகாரியம்இது வாலியைக்கொன்றஅப்போது
வணங்கிராகவனுக்கன்று மழைகாலப்போய்வருவேனென்று
தந்தானைஆடி அ-கன்றதுகள்மூடி இ-ருந்ததைநாடி அ-றிந்திட ஓடி—வ

சரணங்கள்.

௧. அங்கென்சாமிகோர இருக்க-அதுகண்டென்நெஞ்சை உருக்க
அங்கங்களெங்கெங்கால் பெருக்க-அசந்துங்கள்ஊ-ரை நெருக்க
வந்துவா சலைப்பிடித்தேன்அடைத்தகல்லைத்
துங்கிசம் ஆகஇடித்தேன்-வானரங்களை
அங்கங்கே ஓடஅடித்தேன்-தாரையைக்கண்டு
உங்காரவார்த்தை படித்தேன்-அவள்சொன்னது
சங்கையில்ஆயிரக்கோடிபேர்வெகு தூரம்-போனார்சேனையோ
டிங்கிதோவருவாரென்இனி இந்தவிசாரம்-என்றாள்பிறகே
தம்பியவாள்அனுமானும்வந்தான்அந்தநேரம்-யாம்உம்அடிமை
உங்கள்உதவிமறவோமென்றான்உபசாரம்-நீரும்மெய்போலே
எங்கோமான்மலர்க்கை தொட்டீர்-இருமாசம் தவணைஇட்டீர்
என்காணும்வாராமல் விட்டீர்-எப்படிநினைவு கெட்டீர்
இங்கிதம்ஆகிய-வங்கணம்முறிய-விங்களம்நீர்செய்த-சங்கையைஅ [றிய
வந்த

னகிமின்னை
௨. அஷ்டலட்சுமிக்கும் அன்னை-ஆகியச
அகலவிட்டசாமி தன்னை-அறிந்தும் அவனுலேபின்னை
விட்டுரங்கு ழவைத்தீரோ-சொன்னநாளில்வந்
தொட்டாமல்த்தாழவைத்தீரோ-ராட்சதர்இன்னும்
நெட்டாகவா ழவைத்தீரோ-தேவரெல்லாம்
பொட்டாகவி ழவைத்தீரோ-இந்தச்சாமிக்கும்
எட்டியபலசா லிகள்இருந்தால்அங்கேசேரும்-பிரம்மாதிதேவர்
மட்டிலும்ஓர்திசை எட்டினில்வீரர்எல்லாரும்-வரட்டும்[illegible]
குட்டிமுன்னோரிக்குட்டிகள்ஆக்குவென்பாரும்-பிறகாகிலும்
சட்டமானதளத்துடனே நீர்வாரும்-அணுகொட்டாமல்
அட்டிசெய்வாலியைமுட்ட-அடித்துவெகு ராச்சியம் கட்ட
அரசுமணி முடிஇட்ட-ஆண்டவன்உரைக்கப் பட்ட
கட்டளைஎன்கிறமட்டுகள்தாண்டி-தட்டியஉங்களைவெட்டிடவேண்டி
வந்த

௩. கர்த்தனுண்டபின் உச்சிஷ்டம் - கண்டுண்பதேனது இருஷ்டம்
காய்கனிநீர்தந்தால் இஷ்டம் - காணுமோ இதென்னகஷ்டம்
புத்திதானெங்கே போச்சோ - அய்யனைப்பசியில்
வைத்துநாமுண் பதாச்சோ - அய்யய்யோஉங்கள்
பத்தியெல்லாம் மேல்பூச்சோ - சகாயத்துரோகம்
கற்றவர்க்கித்தனை பேச்சோ - என்அண்ணனான
உத்தமனுக்குத்துணைமற்றவன்டோவொருவரைக்கொண்டு·கோதண்டம்தன்
சற்றேவளைக்கும்முன்செத்தானேவாலியுமங்கண்டு-அவனைக்கொன்ற[லோ
அஸ்திரம்போல்இன்னம் அஸ்திரம்அநேகங்கண்டுண்டு-தெரிந்திருந்தும்
இக்கனைநீர்செய்ததென்ன இளக்காரங்கண்டு-காரியங்கொள்ளச்
சற்றுநீரே பிரியாமல்-தசீகயுத்தி அறியாமல்
சொன்னநாளைக் குறியாமல்-தோஷமென்னும் அறியாமல்
சத்தியமோசொல்அசத்தியமோதான்-முற்றிலுநாடி இடத்தனியே [நான்
வந்த

* * *

வானரப்படைத்தலைவர்களும் படைத்தொகையும்.

விருத்தம்.

அடல்சேர்தம்பிஇதுசொல்ல அறிந்தேன்அடியேன்புத்தியென்று
உடனேசுக்கிரீவன்சாமி உபயபாதம்வந்தாகண்டான்
விடவேபோனதூதர்களில் வீரர்சேர அணிஅணியாய்க்
கடல்போல்வந்தராகவனைக் கண்டார்சேவைகொண்டாரே. (௰அ)

எ-இபதை-பங்களகௌளிகைராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. சதவலிபடைகள்நூறு பத்துகோடி - சுசே
ஷேணன்படைகள்பத்துநூறு யிரம்கோடி.
பதுமமுகன்பதினேழ்தா றாயிரம்கோடி. - வீரக்க
பாதன்இடபன்நூறா யிரம்கோடி.

௨. பனசன்படைகள்பன்னி ராயிரம்கோடி - நீலன்
படைகளும்பதினேயா யிரம்கோடி.
அனுமன்இருபத்தையா யிரம்கோடி - போரில்
அட்சயன்படைமுப்பத்தையா யிரம்கோடி

௩. ததிமுகன்படைமுப்பதா யிரம்கோடி - நல்ல
சாம்புவான்ஆயிரத்தறு நூறுகோடி
மயிந்தன்நூறுநூறு யிரம்கோடி - அந்த
துவிதன்இருபதா யிரம்கோடி

௪. கேசரிபடைஐம்பதா யிரம்கோடி - மிக்க
கெவயாட்சன்படை ஆயிரம்கோடி.

விசுதன்முகன்இருநூ றாயிரம்கோடி-வந்த
விருபாட்சன்ஐம்பதா யிரம்கோடி

௫. குமுதன்படைநாற்பத்தென் ணாயிரம்கோடி-நளன்
கூட்டும்படைகள்நூறு யிரம்கோடி
சமுகப்படைஇத்தப்படி கூடிக்கூடி-வரச்
சாமிகண்டுமகிழ்ந்தானே கொண்டாடி

* * *

சாம்புவந்தன்அனுமாரைத்துதித்தல்.

விருத்தம்.

மிக்கானகவிஎழுபத்துவெள்ளம்
வீரரொடுசாமிகண்டான்சுக்கிரீவன்தான்
தெற்கானவழிசொல்லராமன்தானும்
சீதைஉருச்சொலித்தரும்மோதிரமும்பெற்றான்
மிக்கானமலைகளும்நாடுகளும்தேடிப்
பிலம்புகுந்துகடந்துசம்பாதியின்சொல்லாலே
கைக்கானமயேந்திரம்சேர்அனுமான்தன்னைக்
கதிசெய்வான்சாம்புவனும்துதிசெய்வானே. (௰௯)

அ-இபதை-கேதாரகௌளராகம்-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

௧. எதுகாணும்சும்மா-அறிந்தும்அறியார்போல் நேயரே
இருக்கிறீர்ஆஞ்ச
ஓதுமேன்வெண்ணெய்-இருக்கநெய்தேடு சேயரே
வோமோவாதராசன்

௨. காதலாகல்ல-காலம்பிறந்துகா போலவே
ணாதுகண்டவர்
ஒதைசேதிசம்-பாதிவாயினால் சாலவே
தெரிந்துகொண்டோமே

௩. துணியுமேன்உமக்-இலங்கைதானென்ன தூரமோ
ஆரமோகடல்
அணுவும்மகமேரு-ஆகும்மேருவும் பாரமோ
அணுவாம்உமக்கென்ன

௪. வருத்தம்வன்இலங்-கையும்உம்மிடலால் செல்லுமே
மாட்டிஇழுத்தாலும்
இருத்தஎன்னபேச்சு-விளக்கிருக்கத்தீ சொல்லுமே
தேடுவோமோ நாங்கள்

௫. ஒருத்தர்ஆய்ப்பிரமம்-தேவன்பட்டமும் மேவினீர்
உமக்கெனநேர்புகழ்

குருத்தாக்குமரர்கையில் சூரியன்தேர்மேலே
குலையுயிர்கொண்டு — தாவினீர்

௬. வாசனைக்கைவச்-சொரூபத்தால்ஓர்பால்.
மயிருமுடிராத — வீரரே
தேசம்மேல்லாக்க-ரூபங்களாலும்.
சிந்தைகலங்காத — சூரரே

௭. இயற்கைபால்மக்க-வேதங்கள்எடுக்கினும்
எடுக்கவேலல்ல — தேவரோ
செயித்திடாதபஞ்சேந்திரியங்களையும்
செயித்திடும்மாறு — பாவரே

௮. ஒழும்சுக்கிரீவன்-அக்கினைதெரியுமோ
உயிரனைப்பாரோ — நாளையே
காயக்கிடுவது-மூகத்துக்கழுகெய்
களைசட்பிப்பீர்இந்த — வேளையே

௯. பட்டுத்திக்கின்அப்-புறத்தினிலேலங்கை
இருக்கினும்பாய்ந்து — கூடுவீர்
கொட்டைப்பாக்குபோல்-எட்டுமலையையும்
தொட்டெடுத்துவிசை — யாடுவீர்

௰. அனுமந்தசாமிபோ-சொந்தைதப்பிடித்திரோ
ஆர்க்குமடிக்கஅறி — வாரமோ
உமக்கில்லைப்பொரு-ளெமக்குவந்ததோ
உனைப்பதேன்டய — சாரமே

அனுமார்கடல்தாண்டஇசைதல்.

விருத்தம்.

பாட்டின்உரைக்கும்அங்கதன்முன்படித்துச்சாம்பன்துதிசெய்யக்
கேட்டஅநுமான்சிகாமணிக்கேளீர்அடியேன்தனைப்பொருட்டாக்
கூட்டிநீர்வைத்தலால்நம்கோமான்அருளும்உமதருளும்
நாட்டும்நிறையாக்கடல்கடப்பேனென்றான்புகலினைவென்றானே. (௨௰)

கிஷ்கிந்தாகாண்டம்-முற்றும்.

விருத்தம்-௰௯-கொச்சகம்-௧-ஆக-௨௰.
பெதைகள்-௮-தருக்கள்-௰௯-ஆக-௰௩.
பாயிரம்-௧-க்கும்-காண்டங்கள்-௪-க்கும்கூடிய
கொச்சகம்-௨-வெண்பா-௨-வசனம்-௧-விருத்தம்-௱௰-ஆக-௱௰௫.
தோடையம்-௧-பெதைகள்-[illegible]-தருக்கள்-[illegible]-ஆக-௱௪.
ஸ்ரீசய்யவர்த்தித்திருமகனார்திருவடிகளேசரணம்.



ஸ்ரீராமஜெயம்.

—*—

ஐந்தாவது.

சுந்தரகாண்டம்.

அனுமார் கடல்தாண்டப்பாய்தல்.

விருத்தம்.

வாய்ந்திடுநிருபன்சொல்ஆம்பொழுதொருதினம்-மாங்கனிஆம்எனவே
காய்ந்திடுகதிரவனைப்பாய்ந்தவன்நெடிய-கடல்கடக்கவேபசித்து
தேய்ந்திடவடவரைசாய்ந்திடவிசுவ-சொரூபமெடுத்தனுமான்
நாந்துதிபேசும்மயேந்திரமலைமிஅண்ணாந்தெதிர்ப்பாய்ந்தனனே. (க)

க-தரு-நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பாய்ந்தானே அனுமான் - மயேந்திரமலைமிப் - பாய்ந்தானேஅனுமான்.

அநுபல்லவி.

பாய்ந்தொருமூவுல   கேந்திராவணன்
மாய்ந்திடவேவரு   லாந்தகன்எனவே—(பாய்ந்)

சரணங்கள்.

க. கேசவராகவ   பூசிதனெனும்
வாசகம்தனது   நேசம்விடாமல்
மோசநிசாசரர்   நாசமதாய்விட
விசிவர்லமை   பாரமதாகப்—(பாய்ந்)

உ. வட்டநெடுங்கடல்   முட்டஉரம்கிழி
பட்டமைந்திடு   இட்டுகள்தெரிய
செட்டைநெடுங்கிரி   எட்டும்அறம்பொடி
பட்டுதிரும்படி   நட்டணையாகப்—(பாய்ந்)

௩. எடுத்தொருராகவன்   கொடுத்தகைமோதிரம்
இடுக்கியகாதிலே   மடல்க்குள்ளேஅடக்கி
மிடுக்குளராட்சதர்   நடுத்தலைமேல்விழும்
இழுக்கிணையாகவே   நிறுத்தெனஓடிப்—(பாய்ந்)

௪. அண்டர்கள்முனிவர்கள்   கண்டதிசயமொடு
மண்டியமருமலர்   கொண்டனர்பொழிய
விண்டலரவிசசி   மண்டலம்இருசிறு
குண்டலம்எனமுக   மண்டலம்அசைய—பாய்ந்

௫. சுமந்திடுதாய்உனை   சுமந்தவன்நார்அடி
சுமந்தவிசுவரூபம்   சமைந்திதனாலே
அமிழ்ந்தியகடல்படு   திமிங்கிலகிலம்திமி
திமிங்கிலம்இசையினில்   மிதந்திடமேலே—பாய்ந்

௬. அந்தமலையில்உள   தந்திநாடிபுலி
கொந்துநிசசிசைமி   சிந்தனைவெருள
முந்துகொடிமுடிமி   எந்துபளபளென
உந்திணைஅடிகள்   உதைந்துகிளம்பி—பாய்ந்

* * *

இலங்கணிவதை.

விருத்தம்.

வாரவிஸ்வரூபம்உடன்பாய்ந்தான்வார்த்தை
மைநாகற்குரைத்தான்மத்தியில்அங்கார
தாரைஎனும்அரக்கிகுடல்பிடுங்கிக்கொண்டான்
தலம்குலுங்கஇலங்கைமுன்னேகுதித்தான்அங்கே
காரம்உள்ளஅரக்கிஇலங்கணிதான்ஆல
காலமெனவடவாசல்க்காவல்க்காரி
ஆரடாஎன்றதட்டிவந்தாள்அனுமான்கையால்
அறைகொண்டாள்கொண்டாவேதனைகண்டாளே. (உ)

உ-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இலங்கணிமடிந்தாளே-அனுமான்கையால் - பலம்கெடமுடிந்தாளே.

அநுபல்லவி.

சலம்கொள் நீர்இரண்டு   தலையும்விரித்துக்கொண்டு
அலங்கோலமாய்ப்புரண்டு   அலறிஉளறிப்பண்டு—இலங்

சரணங்கள்.

க. பதைப்பிநாலேஎட்டுக்   கையும்பறக்கவிட்டுப்
பாரமலைபோல்வீழ்ந்   தாரவாரம்இட்டு

அதட்டி அதட்டி ஆயுதம்   எல்லாம்தொட்டுத்தொட்டு
அத்தனையும்பொடியாக   அனுமான்கை அடிபட்டு — இலங்
௨. பிடிபடாமல்இந்த   ஊர்காத்திருந்தேன்ஆகிப்
பிரம்மாஉனைத்தாடி.   ஆச்சுதேஉன்சேதி
அடிபட்டுக்கொண்டேன்போ   இறேன்உனக்கினிமீதில்
ஆட்டுக்குட்டிகள்இந்த   அரக்கர்படையென்றோதி — இலங்

௩. ஆரும்எதிர்த்திடாத   என்னைகொடிக்குள்சீதி
அடித்தாயேஉன்னைஎதிர்ப்   பாரில்லைமனப்பீதி
யாருஇடியேமஸ்க்   காரம்என்றுகூறி
வணங்கிவடக்குக்கோட்டை   வாசல்க்காவல்க்காறி — இலங்

அனுமார் இலங்கையில்சீதையைத்தேடுதல்.

விருத்தம்.

மோதும்இலங்கணியை ராவணன்படைக்கு
முதல்ப்பலியாகக்கொடுத்து முகூர்த்தம்கொண்டு
மாதவன்ஆகிய ராமன்பாதந்தன்னை
மனங்கொண்டுராட்சதர்மேல்ச் சினங்கொண்டப்பால்
தூதன்அனுமான் மாடகூடம்சோலை
சூளிகைமாளிகை எல்லாம்சுற்றிச்சுற்றி
நாதன்உளம்மகிழுந் தருணும்சீதைதன்னை
நாடினான்இலங்கையெங்கும் தேடினானே. (௧)

க-த-ந-தோடிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தானே-சீதா-தேவிதன்னை அனுமானே.

அநுபல்லவி.

ஆடிப்பறக்கின்ற காற்றும் நுழையாத
அலங்கக்கொத்தளம்தயங்கும் - இலங்கைப்பட்டணமெங்கும் — தேடி

சரணங்கள்.

௧. வாரணச்சாலையும் மந்திரச்சாலையும்
மலர்ச்சோலையும்சா   வடிகளும்
தோரணமேடையும் பூமலர்ஓடையும்
துலைகளும்தலைவாசல்   பந்திகளும்

தேர்அடிகளும்சொர்ணப்   போர்அடிகளும்செங்கல்க்
சேர்அடிகளும்மதில்   அடிகளும்
கிளைவிரைந்துதாவலைகளும்தொலைகளும்
கெடிகளும்செடிகளும்   கொடிகளும்
நாரியர்காவல்   இருக்கும்சிறைகளும்
நாடகசாலையும்   நவரத்தினஅறைகளும்
ஏராளமாக்கோலம்   எழுதியதறைகளும்
ஏகாந்தஸ்தலமும் — தண்ணீர்ப்படித்துறைகளும்
இடுக்குகளும்இருட்   டொடுக்குகளும்-உறி
அடுக்குகளும்மூலை   முடுக்குகளும்-பாய்ந்து — தேடி

௨. மலைநிகர்ஆகிய உப்பரிகைகளும்
மாடமும்கூடமும்   திரைகளும்
பலபலபூமியின் வெள்ளமும்பள்ளமும்
பாதாளம்செல்லும்   புழைகளும்
கொலைசெய்யும்அரக்கர்கள் விடைகளும்நடைகளும்
குங்குமநீர்ஆற்றங்   கரைகளும்
நலம்உள்ளசந்தியும் பந்தியும்நாற்பத்து
நாலுலட்சம்வீதி   திரைகளும்
அலைகடல்ஆகிய   அகழியும்கேணியும்
ஆயிரவெள்ள   அரக்கர்தம்காணியும்
தலைமைப்பாக   உயர்ந்தஅட்டாணியும்
சந்திரச்சாலையும்   ஒத்தஇட்டாணியும்
தடத்திலும்முனிவர்கள்   மடத்திலும்-பெண்கள்செய்
நடத்திலும்புகைபோகா   இடத்திலும்-போய்ப்பாய்ந்து — தேடி

௩. மைக்காகமலைபோலே தூங்கும்கும்பகர்ணன்
மனையிலும்சூழ்ந்தகொட்   டகையிலும்
பொன்னூசமணிமார்பன் இந்திரஜித்திருக்கின்ற
புதுமனையிலும்சூளி   கையிலும்
மெய்ந்நாளும்பேசும் விபீஷணன்வீட்டிலும்
வீட்டில்லும்குண்ட   வகையிலும்
மின்அதிகாயன்அட் சன்தேவாந்தகன்
பேர்அணமாட   மாளிகையிலும்
வன்னக்கிளிகள்   வளர்பஞ்சரத்திலும்.
வானவர்தானவர்   பணிகசரத்திலும்

அன்னமண்டோதரி வாழும்நரத்திலும்
அவளும்அரக்கனும்சேர் அந்தப்புரத்திலும்
அறையில்லனவேதேடி அணிஅணியாசுற்றி
அறைகளெல்லாந்தேடி அனுஅனுவாச்சுற்றி—தேடி

* * *

அனுமார் ராவணனைக்கண்டுகோபித்தல்.

விருத்தம்.

இலங்கும்அரக்கனையும்மண்டோதரியும்கண்டே
இவளோசானகிஆவாள்எனஉள்மயங்கி
நிலைகலங்கிமுகத்தொழுகுகோட்டுவாயும்
நெடுமூச்சும்கண்டிவள்தான்அரக்கியென்றே
மலர்விழியில்அறைந்துகாதினிலேகையை
வைத்துடனேஅரிகரீஎன்றுசொல்லிப்
பலபலயோசனைஅனுமான்எண்ணிஎண்ணிப்
பாவிப்பான்ராவணன்மேல்க்கோவிப்பானே. (௪)

௪-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தராவணனைக்-கண்டும்சும்மாப்போனால்-என்னஅனுமானானே.

அநுபல்லவி.

அந்தராமத்துரோகி இவன்பலம்குறியேனோ
ஆத்திரமாய்பிடித்தால்ப்போல்க் கிழிக்கநான்அறியேனோ—இந்த

சரணங்கள்.

க. புலிஅடங்கலும் வெட்டவே-மண்டோதரி
புலம்பும்ஓசை மூட்டவே-கண்டவர்கள்
எவரும்கெக்கலி கொட்டவே-வாலினாலே
இழுத்துப்பிடித்துப் பொட்டவே-கட்டி
இறுக்கிறேன்தோளொடிய முறுக்கிறேன்தலைபத்தும்
அறுக்கிறேன்தேங்காய்போலே நொறுக்கிறேன்அல்லாமல் —இந்

உ. பண்ணசாலை விட்டுத்-திருட்டுவேஷம்
பண்ணிஇலங்கை மட்டும்-கொண்டுவந்தேன்
அன்னையைச்சிறையில் இட்டு-வைத்தஇப்பாவி
அரக்கன்ராவணன் பட்டும்-கன்னத்தில்
அடிக்காமலும்கைகளை ஒடிக்காமலும்நெஞ்சிலே
இடிக்காமலும்என்கோபம் முடிக்காமலும்போவேனோ — இந்த

ரு. காலனுக்குப் காரம்-ஆகுமேதேவர்
களுக்கும்உண்டாதி காரம்-விருதாவாய்
மேல்இனிஎன்வி சாரம்-சாமிசொந்த
வேலைக்கிறவே நேரம்-இப்போது
வெல்லவேணும்இவனைக் கொல்லவேணும்என்பேரைச்
சொல்லவேணும்பிறகு செல்லவேணும் அல்லாமல்(இந்த)

* * *

அனுமார் சீதையைக்காணாததால் இரங்குதல்.

விருத்தம்.

மாதரசைத்தேடஎன்றுநாதன்ஆக
வந்தஇடத்திந்தராவணனைக்கொன்றால்
பேதகம்ஆம்இவன்உயிரைவாங்கவீரன்
பிரசண்டகோதண்டமேதக்கதென்று
போதுளதாமரைஇலைமேல்த்தண்ணீர்போலப்
புதையல்இழந்தவர்போலஅனுமான்ஏங்கிச்
சீதைதனைக்காணாமல்ராமமந்திரம்
செபிக்கின்றான்வெளியில்வந்துதவிக்கின்றானே (௫)

௫-த்விபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. இந்தஇலங்கைநகர்-எழுநூறுயோசனை னேனே
எங்கெங்கும்போய்த்தேடி.
கந்தமலர்க்குழலாள்-என்தாய்சீதையைக் னேனே
கண்ணிற்காணாமல்வாடி

உ. பாராஇடம்இல்லை-தாய்ஆம்சீதையைப் ரூதோ
பாதகன்செய்ததென்ன
தீரநெஞ்சுக்குத்-தெய்வமேதுணைநான் வதோ
செய்யும்வகைதான்இனி

௩. அம்பர்ஆகும்இந்த-வஞ்சனைஅரக்கர்செய் தாறோ
அதர்மம்தானேமெய்
எப்படிஆகிலும்தர்மமேதலைகாக்கும் தாறோ
என்பதெல்லாம்பொய்

ச. நாடிச்சேதிகொண்டு-வருவான்என்றுசாமி பேச்சே
ராமன்சொல்லுவான்என்றன்
தேடிவருவேன்என்று-விருதுகூறிவந்து ஆச்
செடியிலேறுசூழ்ந்தால்ப்போல்

௫. மேட்டுக்குப்பையைப்போலே இலங்கைப்பட்டணமெங்கும் வேனே
வேருடனேகெல்லு
காட்டுமென்றாயைஎன்று-ராட்சதப்பயல்களைக் வேனே
கையால்ப்பிசைந்துகொல்லு

௬. மிலங்காமல்த்தவனை-சொல்லிவந்தநாளெல்லாம் தேனே
வீணேதிரிந்துருறைத்
சலந்தனிலோஇந்த-நிலந்தனிலோசாக தானே
தலந்தனிலோமறைத்

௭. உலகில்எந்தக்காரியமும்-ஒருகரம்ராமனென்றால் வேதமே
உடன்கூடுமென்றும்அல்லோ
பலதரம்ராமனென்றும்-எனக்கிந்தக்காரியம் ரோதமே
பலியாததென்னவி

௮. ஆனைதன்பலம்தன்னை-அறியாதுபோலேதேவி ருளோ
ஆர்ஆனைக்கைகுலிக்கி
பூனைமுன்கிளிபோலே-அவர்கள்முன்னேஎன்தாய் ருளோ
புலம்பிப்பரிதபிக்கி

௯. வானைத்தப்பட்டாக்கா-முட்டைப்போலேகுங்க சாடவோ
மலைமலையாப்பிடுங்கிச்
சீதையைக்காட்டும்மட்டும்-இடனன்றுராவணனைச் போடவோ
சிறையிலேவாலிபோலே

௰. வதோஎன்றிருக்கும்சாகைமுகத்திலே பேனோ
எப்படிப்போய்விழிப்
மாதானைக்காட்டென்றிங் கேஇந்தராவணனை பேனோ
வாலாலேமாட்டிஇழுப்

அனுமார்சீதையைக்காணுதல்

விருத்தம்.

கொண்டலென்னும்அனுமான்இப்படிகலங்கிக்
கோலமுந்தருகுருடனைவாய்கின்றுமுன்னே
மண்டியகோர்அசோகவனம்கண்டான்தாவி
வந்ததிலோர்மரத்திருந்தான்அந்தவேளை
அண்டர்பயமுறுமாப்பத்தாக்கையர்
அரிமுகத்தர்பரிமுகத்தர்அனேகம்பேர்கள்
கண்டகவல்அரக்கியர்கள்நடுவிலேஓர்
கருக்கண்டான்சீதைஇருக்கக்கண்டானே.

௯-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சீதையைக் கண்டானே-அனுமான்-செடிமேல்நின்று
சேவையைக்கொண்டானே-அனுமான்.

அநுபல்லவி.

ஆதவன்காணாத இலங்கைத்தொடுவிலே
அரக்கியர்என்கிற புலிக்கூட்டநடுவிலே—(சீதை)

சரணங்கள்.

௧. தாய்இவள்தாய்இவள் நீலவரமே-சாமி
தனக்கும்இவள்மெத்தம ஞானகரமே
நீயையும்கடும்இவள் சாரீதிரமே-தெய்வ
தெய்வங்களுக்கும்இவள் மீசரமே
சாயும்சந்திரசூரிய வம்சமும்பெருக்கும்
தனிஆம்தருமமும் இனிமேல்அல்லோசெருக்கும்
எய்அடையாளம்கண்டேன் அந்தசேன்ஒருவருக்கும்
என்றுசெல்லரித்தாலும் இருந்திடத்தேஇருக்கும்—(சீதை)

௨. தேவிக்கும்தாய்என்பார் அல்லோபூமி-அவள்
இடத்தையும்வென்றாள் இந்தஅபிராமி
பாவிஅரக்கர்க்கிவள் காலநேமி-இதைப்
பார்க்கப்பெற்றான்இங்கே என்சாமி-என்று
பூவிளந்துகில்மேல் அமுதமுண்டமொய்த்த
புனல்காணேமூலைத் தடஅனலாலேவற்ற
சேவலைத்தேடும்இளம் பெடைபோலேமெத்த
இகைத்துந்திகைத்துவட முகத்திலேமுகம்வைத்த—(சீதை)

௩. இருவிகட்குமகிமை என்னகண்டு-இவள்
ராமமூர்த்தி வனத்தைக்கொண்டு
சருகுபோலேவந்திப் பொசிப்பைவிண்டு-அம்மை
தான்செய்யும்தவமே மகிமையுண்டு
ஒருசூரியன்முன்னே மதிபோல்இந்தவல்லி
உவமைகொண்டாள்அரக்கர் ஒழியவர்க்குமல்லி
இருவேஇவள்அந்த அரியேகோதண்டவில்லி
செயம்இனிசாமிகாரியம் பயம்இல்லைஎன்றுசொல்லி—(சீதை)

சீதாதேவி திரிசடையோடுமுறையிடல்.

விருத்தம்.

அநுமன்இந்தப்படிசீதைதனைமரத்தில்இருந்துகண்டான்
அப்பால்அந்த
வனிதையும்தாமரைஇலைமேல்த்தண்ணீர்ஆய்த்திரிசடைதன்
வதனம்பார்த்தாள்
கனம்உளஎன்நிறைநீங்கிச்சாமிமுகந்தனைக்காணக்
கடவேனோநான்
உனதும்இவ்வதென்றேஉருகுவாள்அம்மைசொல்லி
உருகுவாளே (௭)

௭-திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அய்யோநான்ஒரு-பெண்பிறந்தகதையை
ஆருடனேசொல்லுவேன் திரிசடையே
தெய்வமும்நீபெற்ற-தாயும்நீஅல்லால்வேறு
இக்குண்டோகேளாய்அம்மா திரிசடையே

௨. மங்கைமார்கொண்ட-கணவனைப்பிரிந்தசல்
மனையிலும் இருப்பாரோ திரிசடையே
எங்கெங்கும்வசை-ஆச்சேகேட்பவர்
என்னென்றுபழிப்பாரோ திரிசடையே

௩. கடலிலேஇந்தஇலங்காகஇருக்குதென்று
காகுத்தர்அறியாரோ திரிசடையே
தொடரும்இச்சேதி-அவர்க்குச்சடாயுராசர்
சொல்லாமல்இறந்தாரோ திரிசடையே

௪. ஆனைஆகவேவளைத்த-கொழுந்தனை அவர்பின்னே
ஆரப்போகச்சொன்னேனே திரிசடையே
கணவனார்மெத்தக்கோலிஇவள்என்றென்னைக்
கைகழுவவிட்டாரோ திரிசடையே

௫. குத்திரம்செய்து-ராசபுத்ரன்இவன்பாவினைக்
கொண்டுவந்தான்அல்லவோ திரிசடையே
இத்தனைநாள்அவன்-இன்னமிடுவானென்றே
எண்ணித்திருப்பினரோ திரிசடையே

௬. அரசில்லாஅந்த-நாடுகாடாச்சுதென்று
ஆலோசனைசெய்து திரிசடையே
பரதனும்தாய்மாரும்-வந்து அழைக்கஅவர்
பதியிலேபோய்விட்டாரோ திரிசடையே

௭. சனகராசன்வில்-ஒடித்தவன்முன்னறிந்த
தடந்தோளென்றுகாண்பேன் திரிசடையே
கனமுடனேபரசு-ராமன்வில்லைப்பறித்த
கைகளென்றுகாண்பேன் திரிசடையே

௮. வைத்தபோதிலும்கைகை-பின்னேஅந்தஅரசை
வாங்கியபோதிலும் திரிசடையே
சித்திரச்செந்தாமரை மலர்போலேமலர்ந்த
திருமுகம்என்றுகாண்பேன் திரிசடையே

௯. கொழுந்தனென்னும்குக-னுக்குத்தான்தோழரென்னும்
கூறினதும்பொய்போமோ திரிசடையே
எழுந்துசெல்லும்விராதன்-ஆவியைமனமகிழ்ந்த
இரக்கமும்போய்விட்டதோ திரிசடையே

௰. கரதூஷணர்பதி-னாலாயிரம்தேரும்
கணத்தில்பொடிசெய்தாரே திரிசடையே
சரவேகமும்கையும்-மெய்யும்என்இருவிழி
தம்மில்நிற்கின்றஅய்யோ திரிசடையே

௰௧. வல்லபேருக்குப்-புல்லும்ஆயுதம்என்ற
வழக்கச்சொல்லைப்போலத் திரிசடையே
புல்லினால்காக்கை-கண்கொண்டோர்கண்கொடுத்த
புண்ணியனைக்காண்பதென்றோ திரிசடையே

௰௨. சற்றும்வைத்துப்பாராமல்-பாவிராவணன்வார்த்தை
தணல்போல்இறைக்கிறானே திரிசடையே
பத்துத்தலையும்பனங்-காய்ப்போல்விழுந்துருளப்
பார்ப்பதெந்நாளோநான் திரிசடையே

௰௩. பாயும்கைகளும்என்னைப்-பார்க்கும்கண்களும்இந்தப்
பழிவார்த்தைசொல்லும்வாயும் திரிசடையே
பேயும்பெருங்கழுகும்-நாயும்நரியும்பிச்சுப்
பிடுங்கித்தின்னக்காண்பேனோ திரிசடையே

௰௪. குடிமகன்இந்திரஜித்தன்-கொழுந்தனால்பட்டானென்ற
கூக்குரல்என்றுகேட்பேன் திரிசடையே
அர அற்றமரம்போலமண்-டோதரிராவணன்முன்
அலறிவிழக்காண்பேனோ திரிசடையே

௰௫. பேய்ஆம்அரக்கனையும்-சேனைகளையும்என்தன்
பிராணநாதர்கொல்லாரோ திரிசடையே

தாயேஉன்அப்பன்வீடு-பாற்கடல்போலேபொங்கித் திரிசடையே
தழைக்கக்காண்பேனே

௫. இடதுகண்துடிப்பதும்-இடதுதோள்துடிப்பதும் திரிசடையே
ஏதோஅறிகிலேனே
இடதுசெவியில்ஒரு-வண்டுவந்தூதக்கண்டேன் திரிசடையே
என்னசொல்லடிஅம்மா

௬. வந்தசாமிமுன்-மிதிலையில்வில்லைத்தொட திரிசடையே
வரக்கண்டகுறிஇவை
அந்தநாளிற்குறி-இந்தநாளிலும்கண்டேன் திரிசடையே
அதிசயமேதோஅம்மா

சீதாதேவிக்குத்திரிசடைகனாநிலையுரைத்தல்.

கொச்சகம்.

கோதைமனம்தளர்ந்திந்தக் குறிகுணங்கள்சொன்னளவில்
தூதுவன்இப்போதுனக்கோர் சுபவார்த்தைசொல்லுவன்காண்
காதலியேநானும்நல்ல கனவுகண்டேன்கேளெனவே
சீதைமனம்தேறிடத் திரிசடையும்சொல்வாளே. (௮)

௯-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்கனவைக்கேளாய்அம்மா-சானகிஅம்மா-என்உனக்குக்கவலைசும்மா.

அநுபல்லவி.

மங்களம்உனக்குண்டாயே - வல்அரக்கன்வாழ்வுபோமே—(என்)

சரணங்கள்.

௧. சுந்தரிமண்டோதரிவெ ந்தலையைச்சீவினள்
அந்திடத்திலேயவள்வி ழுந்தழுதுகூவினள்
இந்தமன்னன்வீடுவிட்டெ ழுந்தொருபெண்தாவினள்
என்தகப்பன்வீட்டில்அவள் வந்துகந்துமேவினள்-(என்)

௨. பூவுகள்எல்லாம்கரிக ளாக்கருகவும்கண்டேன்
கோவில்கள்எல்லாம்மெழுகு போலுருகவும்கண்டேன்
பேய்வகையும்நரிகளு மேபெருகவும்கண்டேன்
ராவணன்எண்ணெய்த்தலையோ டேவருகவும்கண்டேன்-(என்)

௩. பத்துமுடிராவணனைக் கொத்துடனேகொல்லவோ
கலத்தினைநவிட்டமார் சொல்லுமொழிசெல்லவோ
உத்தமிஉன்பதிவிம சத்துவம்என்னசொல்லவோ
இத்தனையும்இலங்கைக் கனர்த்தமன்பதல்லவோ-(என்)

சீதாதேவிபக்கல்ராவணன்குறையிரத்தல்

விருத்தம்.

திரிசடைஇப்படிசொல்லச்சனகிகொஞ்சம்
தெளிந்தளவில்இதுநல்லவேளையென்றே
மரம்உறையும்அனுமானுங்குறுகும்போதில்
மகுடம்ஒருபத்தும்மின்னமாதர்சூழ
அருகினில்கட்டியம்போடஅந்தராவில்
அரக்கன்வந்தான் அருந்ததிக்கும்தெய்வம்ஆகும்
கருணைவல்லிசீதைமுன்னேதான்ஏதேதோ
கனைக்கின்றான்பலகெஞ்சிஉரைக்கின்றானே. (௯)

௰-திபதை-பந்துவராளிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. என்னசெய்வேன்நான் என்னசெய்வேன்நான் அன்னமே
என்னசெய்வேன்மிதிலை
மன்மதன்கணையாலே பட்டுவிழுவேன்என்று முன்னமே
மலர்அயன்வகுத்தானே

௨. அந்தம்மையவும்விட்டுப் பெண்கள்வையவும்காமன் நோகவோ
அம்பால்எய்யவும்சிந்தை
திங்கள்சுடவும்பனி அன்றில்சுடவும்வீசும் போகவோ
தென்றல்சுடவும்வெந்து

௩. ஆலைக்கரும்புபோல வேலைத்துரும்புபோல் மாயவோ
ஆசைவலையில்சிக்கி
மாலைக்கும்காலைக்கும் ஊண்உறக்கம்இல்லாமல் தேயவோ
வரவரநாளுக்குநாள்

௪. அந்தநாம்நெல்ஆனேனே நொந்துநொந்துபோனேனே வேணுமே
அநுகிரகம்செய்ய
சந்தோஷம்ஆகப்பாராய் என்தன்கவலைதீராய் காணுமே
சாஷ்டாங்கதெண்டன்இட்டேன்

௫. மறந்துமோஉனதாசை வார்த்தைஒன்றருளாயோ கூசவோ
வானோர்பழிக்கஇன்று
பிறக்கும்பிறக்கும்தலை முறைக்கெல்லாம்ராவணன்ஒர் பேசவோ
பெண்ணால்இறந்தான்என்று

௬. பதியும்உனதெனதாதியும்உனதுசொன்ன ஆகுவேன்
படிகேட்பேன்அடிமை

இதிலேவதைபடாமல் தயைபாராய்கதிதாராய்
எங்கோன்இனிப் போகுவேன்

௭. வான்ஊரும்தேவரும் மூவரும்இனம்வந்து
வணங்கும்என்கலையைத் ஈர்த்திடாய்
நானேஉன்னைப்பணிந்தால் பதினாலுலகுக்கும்நீ
நாயகிஆம்அல்லவோ பார்த்திடாய்

௮. கண்ணும்கருத்தும்நீயே மன்மதன்செய்யும்போரைக்
காட்டிஅம்மல்லதை வாதையே
என்னைத்தப்பிப்போனேனே நாயிலும்பேய்ஆனேனே
எனக்கொருபுத்திசொல்லாய் சீதையே

சீதாதேவிராவணனைஇடித்தல்.

விருத்தம்.

மீண்டானன்அரக்கன்இந்த வின்வார்த்தைசொல்லச்சொல்லக்
கண்டாள்சானகியும்என்தன் காருக்கர்சரத்திருளே
உண்டானதெல்லாம்தோற்ற ஊழியக்கிடுத்ததையோ
சண்டாளனைக்கோபித்துத் தள்ளுவாள்வின்னுவளே. (ல)

௭. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராட்சதப்பதரே-உன்மோசவார்த்தைகள்
வர்க்குமோபோடாஅடாவலு-ராட்சதப்பதரே.

அநுபல்லவி.

காட்சியாஎன்னைப் பார்க்காதே - இந்த
தாழ்ச்சிஆம்பழி வர்க்காதே - உன்
வாழ்ச்சிவிசனிலே போக்காதே - அர
சாட்சிஆனதைத் தோர்க்காதே - அட—(ராட்சத)

சரணங்கள்.

௧. விளங்கும்மூன்றுலோகமும் செலுத்தும்உன்கோலும்உன்தன்
கீர்த்தியும்வன்கொலைக்கிறாய் கௌவத்தாலே
வெளிகயபீர்த்திஆகப் பாவபுண்ணியம்பார்மல்
விருதாவில்உன்குலைக்கிறாய் ஆகாசம்மட்டும்
அளக்கும்இருப்புத்தூணைச் செல்லரிக்குமோ-இந்த
அறியாமல்உன்மலைக்கிறாய் அக்கினிதன்னில்
குளித்தாத்தவங்கள்செய்து பெற்றவரத்தைஎல்லாம்
கொஞ்சத்தில்உன்கலைத்திறாய் அடசண்டாளா
வளர்த்தியவார்த்தைகள் படியாதே-தணல்
ஒளிக்கமுன்தாளையில் மூடியாதே-வன்னை

இளக்காரமாக்கிட்டத் அடியாதே-எரி
விளக்கினில்பூச்சிபோல் மடியாதே-அட—ராட்சத

௨. காயத்துடன்பிறந்த தங்கைமூக்கும்முலையும்
காதும்அறுக்க விடுத்தாய் வெளியில்லாதென்
நாயகர்க்கும்அந்த மாயமான்பின்னேஇருட்டு
நாய்போல்பதுங்கி அடுத்தாய் எமன்போலும்உன்
தியருபத்தைக்கண்டு மூர்ச்சைஆய்ப்போனஎன்னைத்
தீண்டாமல்மண்ணோ டெடுத்தாய் கொல்வேன்என்றுஉன்மேல்ப்
பாயும்சடாயுவாலே பூனைவாய்எலிபோலஉன்
பக்ஷிஎல்லாம்பறி கொடுத்தாய் அடசண்டாளா
தாய்இவள்எனமுகம் அறியாதோ-போடா
பேயேஇம்மாத்திரம் தெரியாதோ-என்னைத்
தீபுனைசென்னாக் கெரியாதோ-பத்து
வாயிலும்புழுவாச் சொரியாதோ-அட—ராட்சத

௩. குதிக்கிறாய்சும்மாப்போமோ இப்பாவம்பின்னுக்கொன்று
கோடிஆய்வந்து வாய்க்குமே உன்செல்வமெல்லாம்
செருக்கிறஅரம்போலஎன் பொறுமைஆகிறதாம
தேவதைதானே தேய்க்குமே உன்குலந்தன்னை
மதிக்காவட்டியைக்கூடி இலவும்தீப்பட்டால்போல்என்
வயிற்றெரிச்சலே தீய்க்குமே என்பிராணநாதர்
விதிக்கும்பாணம்உன்தன் தலையைப்பனங்குலைபோல்
வெட்டிவெளியில்ச் சாய்க்குமே அடசண்டாளா
அதுக்குள்ளேதுள்ளிச் சாகாதே-இந்த
பதைப்பினால்ஒன்றும் ஆகாதே-வாய்
மதத்தினால்கெட்டுப் போகாதே-நாளைக்
கொதிக்கும்நாசத்தில் மூழ்காதே-அட-ராட்சத

சீதாதேவிதனியேபுலம்பல்.

விருத்தம்

சானகிஇப்படிவையஅரக்கன்சீறித்
தான்நடந்தான்அரக்கியனைக்கலைக்கச்சொன்னான்
ஆனதுகண்டனுமானும்இவளைஇங்கே
அடிப்பெனென்றுகையோடுகைபிசைந்தான்அப்பால்த்
தானொருமந்திரம்செபித்தான்மாதர்எல்லாம்
சவம்போலஉறங்கிவிட்டார்அந்தவேளை
()

கானகத்தில்இளங்குழந்தைபோலேசீதை
கலங்குவாள்தனியேதானேங்குவாளே. (௫௪)

௬-திபதை-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. தேற்றுவார்இல்லைஆற்றுவார்இல்லை-தெய்வமே என்னசெய்குவேன்
எற்றும்அரக்கியர்வார்த்தைஇடும்பைவிட்-டெந்நாள் இளைப்புறுவேன்
௨. சொந்தவீட்டில்இருஎன்றசாமியைத்துடுக்குசொல்லி எழுந்தேனே
அந்தவினைக்கிந்தஇலங்கையிலேபொல்லாஅருஞ்சிறையில் விழுந்தேனே
௩. தம்பிமார்அன்னைமார்எல்லாரையும் தவிக்கவிட்டுவந்தபோதே
என்பொருட்டில்அவர்க்கிங்கேவரமாம் எவ்வருமேவாராதே
௪. சிறைதவசுக்குக்குறைஇவள்என்று சினந்துகைவிடுவாரோ
பறையர்சேரியிலேசிறைஇருந்தஎன்னைப் பரிந்துகைதொடுவாரோ
௫. தாழ்வுசெய்தேனோதெய்வமேஎன்தன் - சாமிநெஞ்சைஉருக்காயோ
பாவியேனென்சாமிதிருமுகம் பார்க்கும்மட்டும்இருக்காயோ
௬. எதுகாண்இவர்அரக்கிமார்களோ இந்தப்பேரிடுவானெனே
நாதன்பிரியவும்இன்னம்இருந்தேனே நான்அல்லோஅரக்கிதானே
௭. தந்தைதசரதனும்இந்தவினைகண்டு தன்உயிரும்பிழைப்பானோ
அந்தஇளையகொழுந்தனும்என்னை அருமைசொல்லிஅழைப்பானோ
௮. புல்லும்பூமியும்உள்ளமட்டும்இந்தப் பொல்லாப்பழிபிறந்தேனே
சொல்லுவார்சொல்லும்வசைக்கெல்லாம்ஒரு-தோதகப்பெண்பிறந்தேனே

* * *

அநுமார் ஸ்ரீராமனைவர்ணித்தல்.

விருத்தம்.

அன்னைநீயும்ஞானிஇவ்வாறழுவதோடி
ஆவிஇனிவைத்திரேன்என்றுபிராணன்
தன்னைவிடநினைந்தொருபூஞ்செடிக்கீழ்வந்தாள்
சாமிஅநுமானும்முன்னேவணங்கிக்கண்டு
என்னைதசரதராமன்தூதன்தானே
எங்கெங்கும்தேடினேன் அநுமான்என்பேர்
சொன்னபடிசொல்லவந்தேன்சாமிரூபம்
சொல்லுமென்னென்றெதிர்த்துச்சொல்லுவாளே. (௫௫)

அதரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அந்தராமசவுந்தரியம்என்னாலும்-அறிந்துசொல்லப்போமோஅம்மா.

அநுபல்லவி.

கந்தமேவும்அர-விந்தமலரும்அவர்
காலுக்குநிகராமோ - கைக்குந்தான்சொல்லப்போமோ—அந்த

சரணங்கள்.

௧. உருண்டமணிமுழங்-காலுக்குவமைஅவர்
உடையஅட்சயத்தூணி ஏற்குமோ
இரண்டுபருந்தொடை-இரண்டுக்குமெட்டுத
இசைஆனைத்துதிக்கையும் தோற்குமே
வரிந்தமாவுரி-இடையும்நடையும்கண்டோர்
மனதைஎல்லாம்உருக்கி வார்க்குமே
தாம்தாமாஉல-கிருந்தவயிற்றுக்குச்
சரிசொல்லக்கூடுமோ ஆர்க்குமே
விரிந்தமார்புக்கிணை பூமிஅகலம்காணும்
விளங்கும்கழுத்துக்கோர்இணைகமுகேபூணும்
பரந்தபுசங்களுக்கு மேருமலையும்காணும்
பார்க்கப்பார்க்கப்பதினாயிரம்கண்கள்வேணும்—அந்த

௨. அதிசெயம்உடன்-பள-பளென்றிலகுகண் போலமும்
ஞாடிகீர்த்தக
மதிகள்ஒருசத-கோடிக்குமேல்ஆன கோலமும்
மங்களமலர்முகக்
கதிஎன்றடுத்தவர்க்குப்-பதியும்கதியும்தரும் சாலமும்
கருணாநயனவி
குதிகொள்ளும்பவள-வாயும்சிறுநகையும் லோலமும்
குருமந்தகாசவி
புதுமலையினில்விழும்-பொன்அருவியைப்போலும்
பூமணிமார்பினில் புரளும்முப்புரிநூலும்
எதிர்இல்லாதகோ தண்டமும்ஒருகாலும்
எழுதவேணும்என்றால் ஆமோமன்மதனாலும்—அந்த

௨. பெருத்ததாமரை-இலைபோலேஒளி காரமும்
பெருகியமேனிச்சிவ
வரித்தசிந்துர-ரேகையும்புருவமும் தாரமும்
வளர்த்தநெற்றியில்த
பரித்ததிருமுடி-வேணியும்வேணியில்ப் ஆரமும்
பச்சைஅளவட்டலர்

தரித்ததிருவாழி-கொடுத்துன்சேதியைத்
தனியேஎன்உடன்சொன்ன   சாரமும்
திருத்திச்சொல்லவெகு   வாய்இல்லைஒருவாயே
தெரிந்தும்தெரியாமலும்சொன்னேன் - நீபொறுப்பாயே
ஒருக்காலேஉண்டவர்   மகிமைநீஅறிவாயே
உனக்குத்தெரியும்வேதம் - தனக்குத்தெரியும்தாயே—அந்த-௰௨.

* * *

சீதாதேவிலட்சணியைத்தெரிசித்தல்.

விருத்தம்.

காட்டியேஇந்தவண்ணம்ராமற்குள்ள
நற்குறியெல்லாம்சொன்னான்காடுவிட்டுக்
காட்டிலேநடந்ததுவும்சுருக்கச்சொன்னான்
கரதலாமலகம்போல்அனுமான்பின்னே
ஆட்டிவிடும்பசியாலேவிழுந்தோர்கையில்
அண்டர்உலகத்தமுதம்ஈந்தாற்போல
நீட்டினன்திருவாழிஅதனைக்கண்டாள்
நிசம்கண்டாள்சீதைபரவசம்கொண்டாளே.   (௰௩)

௯-தரு-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கொண்டாளே-சாமியோதிரம்-கண்டாளே-சீதை

அநுபல்லவி.

எண்டிசைபோற்றிய   இலங்காபுரத்திலே
என்அனுமானிட   பொன்இருகரத்திலே—கொண்

சரணங்கள்.

௧. கந்தமலர்க்குழல்-மேலேசூடிக்
கண்ணுக்குக்கலந்தகண்   ணீர்விட்டு
காணக்கிடைத்ததே-கார்த்திகைப்பிறைபோலே
கண்டேனென்று   முறைபட்டு
அந்தராம-மந்திரம்எழுதிய
அடையாளமோ   இராம்தொட்டு
அணைத்துமுலைமேல்-இணைத்துடம்பிலே
அடங்காமகிழ்ச்சிகொண்   டடிக்கடிமுத்தம்இட்டு—கொண்

௨. எரிந்தபசியால்-வருந்தும்நாகம்முன்
இழந்தமணிதன்னை   அடுத்தாற்போல்

ஒளிமேல்வா-ராதென்றொழிந்தவர்
இழந்தஉடைமையைக்கண்   டெடுத்தாற்போல்
பெருந்தரையில்ஒரு-கால்மேலேநின்று
பிள்ளைபெற்றுமலடி   படுத்தாற்போல்
பின்னும்முன்னும்தோன்-றாமல்தவிக்கிற
பிறவிக்குருடனுக்குத்-தெய்வம்கண்கொடுத்தாற்போல்—கொண்

௩. சிந்தாகுலம்-விண்டேனேஉன்
திருவாக்கால்என்   குறைஆற்றி
தீயராவணப்-பாவிஊர்இதைத்
தேடிவந்தாயேஎன்   மனம்தேற்றி
தந்தாயேஎன்-சீவனைஉனக்கினித்
தருவதென்னஇதற்   கெதிர்மாற்றி
தாயும்தந்தையும்-குருவும்தெய்வமும்
சகலமும்நீயேஎன்   றனுமானைவாழ்த்தி—கொண்

* * *

அனுமார்சீதையைப்பிரிந்தபின் நடந்தசெய்திகள்.

அவளுக்குவிவரித்தல்.

விருத்தம்.

கண்டுதிருவாழியினால்மகிழ்ந்தசீதை
கடல்பாய்ந்தவிஸ்வரூபத்தைக்காட்டக்
கொண்டுமகிழ்ந்தாள்பின்னும்அனுமானேநான்
கோணுமல்மானுக்காநெடுந்தூரத்தில்
மண்டுரகுவீரன்போய்மீண்டவாறும்
வந்துஇளையோன்உடன்கலந்தவாறும்நீதான்
பண்டுபழியவாறும்சொல்வாயென்ன
படிக்கின்றான்அவள்குறையைமுடிக்கின்றானே.   (௰௪)

௰-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கேள்அம்மாசொல்வேன் முன்உள்ளதெல்லாம் கேள்அம்மாசொல்வேன்.

அநுபல்லவி.

நீளமான்ஆனமாரீசன்மறைந்து - நின்றுடனேஉயிர்கொன்றுடனேவழி
மீளவேரகு-வீரன்வந்துசேர்ந்தபின்—கேள்.

சரணங்கள்.

௧ இனம்பிரிந்தமான்போலே   என்தாயேஉன்னைநாடி
உறும்கனிகாய்களும்போய்   உலைவாய்மெழுகாவாடி

அனைத்தும்காடெம்பயிலாம் ஆறெங்கும்தேடித்தேடி
சுனைம்தனியேபுலம்பித் தம்பியால்உயிர்கூடி
வனத்தனில்வந்தசு டாயுவிறல்மதிதேறவே-ராவணன்
முனைந்ததெல்லாம்சொல்லிஅவன் - உயிர்போனகப்பறவே - அந்நேரம்
வினைந்தசவந்தனை வெந்துசவரிமொழிகூறவே-உன்தனை
நினைத்துமினைந்தழி வானரபோய்த்தடுமாறவே-தாயேனும்
பணிந்திடவேதன கடியருள்ஆக்கிப்
பணிகளும்மணிகளும் வளைவளைகோத்தித்
தாவித்திமிம்வாலியைமாட்டினன் முன்னே
சுக்கிரீவனைமுடிசூட்டினன் பின்னே—கேள்.

௮. அவிரெறநர்தம்மை அத்தத்திசையில்ஏவி
தெவிபேதெற்குத்திசைக்கு நீபோவென்றென்னைக்கூவி
பொறிஆரும்மோதிரச்கைகைப் போட்டதுதந்ததேவி
குறிகுணமெல்லாம்சொல்லக் - கொண்டுசென்றிசைதாவி
முறைமுறையேவெகு - தேசமெல்லாம்அலைக்கெட்டினேன் - என்றேடே
பிறகுசெல்வாரைவாராதிருக்கன்று கட்டினேன்-அந்நேரம்
துறையில்இருந்தகாகம்அளவும்போய் முட்டினேன்-மயேந்திர
பறுவதம்மேல்நின்றுபாய்ந்துலங்காபுரி கிட்டினேன்-கோட்டைக்குள்
சுறுசுறெனநடந் திறவேவாயில்எதிர்
கொண்டிடும்லங்கணி தொண்டையும்மண்டையும்
நெறுநெறெனநெரித் திடவேஅவர்விட்டு
நீங்கினள்ஆவியை தாங்கினேனானே—கேள்.

௯. அகலும்இலங்கைஎல்லாம் அறுஅறுஆகச்சுற்றித்
தகைசேரும்மடத்திட்ட தயிர்போலவேசுத்தி
திகழும்வேளையில்காம சோர்வந்துபற்றி
மகிழ்வேனான்அசோக வனத்தில்வந்தேனேற்றி
வனைகடனோர வணன்வந்துன்னெதிர் படித்ததும்-சண்டாளர்
அகலில்லடா என்றுநீவாய்மேல் அடித்ததும்-அம்மாஉன்
முகமலர்மேல்இரு கண்ணால்முத்தாகள் வடித்ததும்-அடியேன்
சகலமும்அறிவேன் உனதிடமாறும் துடித்ததும்-இதெல்லாம்
பகலவன்முன்பனி ஆய்விடும்மெய்யே
பாவிஅரக்கர்கள் வாழ்வதுபொய்யே
செகம்முழுதும்ஒரு இருவளமேசெய்த
தேன்மொழியேஅடி யேன்வாலரிது—கேள்.

அனுமார்சீதாதேவியைவரம்கேட்குதல்.

விருத்தம்.

சொல்லிஇந்தவகைஅனுமான்பின்னும்என்தன்
தோள்மேலேஎழுந்தருள்வாய்அங்கேபாய்வேன்
அல்லதிலங்கையொடெடுப்பாயென்னிலும்செய்வேன்
அரக்கரைவேர்பிடுங்கெனிலும்கணத்திற்செய்வேன்
பல்அரக்கர்சிறையிலேகண்டாள்மீட்கப்
பயப்பட்டான்உயிரைக்காப்பாற்றினானென்
சொல்லரும்சொலப்போகேன்தாயேசீதை
எதென்றாள்இதற்குவளகேதென்றானே. (௰௩)

* * *

அனுமானைச்சீதாதேவி மறுத்துக்கேட்குதல்.

விருத்தம்.

எண்ணிஅனுமான்இந்தவார்த்தைசொல்ல
என்னைஒருவரும்தொடப்போகாதுகண்டாய்
மண்ணைத்தொட்டரக்கன்எனைஎடுத்தான்கண்டாய்
மகிபர்கோதண்டபதிஅவர்போர்கண்டாய்
நண்ணியவன்தன்சிறைஅவரேமீட்டிடாமல்
நடைத்தூர்தன்மீட்டால்எப்படிஆம்கண்டாய்
கண்மணியேமகனேஎன்றவனைநெஞ்சம்
கரைந்தின்றாள்சீதைகனிந்துரைக்கின்றாளே.

௰௪-தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இம்மாத்திரம்செய்வாய்அனுமானே-என்னைவேண்டிநீ.
இம்மாத்திரம்செய்வாய்அனுமானே.

அநுபல்லவி.

சும்மாவிட்டுவிட்டாலே - தோஷம்உண்டுன்தன்மேலே—இம்மா

சரணங்கள்.

௧. வேடிக்கைக்கோபிடித்தார் வில்லு - அவர்க்கிருந்தலோ
எடோஇதெல்லாம்ஒரு சில்லு - நான்சபித்தாலும்
கா காதோஇலங்கைக் கல்லு - துணிந்தவர்க்குப்
டோபிராணன்என்னஹூர் புல்லு - அந்தாதிப்போட்டுக்
த்திரம்இருந்த நெல்லு - போலேஆனேனே

ஓடிப்போய்ச்சாமிமுன்னே நில்லு - அவருடனே
கூடவேஅயோத்திக்குச் செல்லு - என்னையென்று
தேடும்சாமியார்க்குநான்
தெண்டனிட்டேனென்று சொல்லு - இம்மா

௨. குருவார்த்தைஆகஉன்மேற் பாரம் - போட்டுச்சொல்கிறேன்
ஒருமாதமிருக்குமவன் சரீரம் - கல்யாணஞ்செய்த
பெருநாளில்என்மன விசாரம் - அறிந்துகைமேல்
பாவசஞ்சொன்னாரோ விஸ்தாரம் - அத்தைதாம்கோன்
வருவார்அல்லோ இத்தனைதூரம் - என்றிருந்தனை
தெரியாமல்ஊர்க்குப்போம் அக்கோரம் - நீயும்கூடப்போய்
அருகோன்சொன்ன உபசாரம் - சொன்னபின்கங்கைக்
கரைகண்டால்ச்சிதைகடலும்
கழிக்கச்சொல்வாய் உபகாரம் — இம்மா

௩. ஆழியிற்பொன்மாலுக்கா வாறு - சொன்னதண்டந்த
வேதை பொறுக்கச்சொல் என்மீது - பெண்களுக்கெல்லாம்
பேதைமையென்பது விடாது - அதுகொண்டென்ன
வேதன் சொன்னசாபம் பொல்லாது - மன்னோராவணப்
பாதகன்அணுகக் கூடாது - என்றுதிரிசடை
மாதாஉரைத்தாள்பயம் ஏது - என்றிருந்தாலும்
மேதினிவாய்மூடப் போகாது - ஆகையினாலே
சீதாராமன்என்பேரைச்
செலுத்தச்சொல்வாய் இப்போது — இம்மா

—*—

அனுமார்சீதாதேவிக்குத்திடஞ்சொல்லுதல்.

விருத்தம்.

வடித்தவடிக்கண்ணிஇந்தவார்த்தைசொல்ல
மாருதியும்நகைசெய்தான்விழற்கூளத்தை
இடிப்பதுபோல்அரக்கர்தம்மைஇடிக்கச்சேனை
எழுபதுவெள்ளமும்சேருமெனதுதோள்மேல்
அடித்தலம்கொண்டென்சாமிசேர்வார்தம்பி
அங்கதன்தோள்மேல்ச்சேர்வார்அவர்அப்பாலே
பொடிப்பொடியாய்ராவணனுந்தன்நகரிற்சேரும்
போரும்வரும்பாரும்எனப்புகலுவானே

௯௨-வது-சாரங்காராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எட்டுநாளையிலே பாரும் - அம்மா-ராவணன்பேரும்- இவனூரும்

அநுபல்லவி.

இஷ்டகாலம்வந்த இரங்கவேண்டாம்நீரே
எப்போதும்போலேராமர் இடத்தினிற்சேருவீரே
மூட்டாதவானரர்கை-தொட்டேகல்லாலறிந்து
மட்டார்கள்துஷ்டர்கள் கொட்டபலிஷ்டர்கள்
இட்டடுகட்டுகள் ஓட்டுகள்கெட்டபின்
மாட்டு மட்டிஅரக்கியர்
கட்டியபொட்டுகள் தொட்டறுபட்டிடும்—(எட்டு)

சரணங்கள்.

௧. மலர்தலைஉலகெல்லாம் வாழ-மண்மேல்
மண்டோதரிஅலறி வீழ-எங்கும்
அலகையும்நாயும்வந்து சூழ-காவல்
அரக்கியர்உனதுஏவ
ளாட்டிகள்போலே தாழ
அந்தரதுந்துமி இந்திரன்அறைந்திட
என்தன்மருந்தனெ டுந்தளம்வந்தபின்
உன்தன்வருந்திய சிந்தைமகிழ்ந்திட
இந்தஇலங்கைஅ ழிந்திடும்விந்தையை—(எட்டு)

௨. ஆகாராட்சதப்பிரேதம் மேலே-மிதக்க
ஆகுமோரத்தம்கடல் போலே-அதிலே
காகங்கள்மூழ்கி ஒருக்காலே-மாதர்
கண்ணீரால்அந்தரத்தம்
கழுவிப்போமே அப்பாலே
கங்கிலும்வங்கிலும் தங்குதலங்களும்
மங்கையர்தங்கிட டங்கொள்அரங்கிலும்
அங்கிலும்இங்கிலும் எங்கிலும்எங்கள்கு
ரங்குநெருங்கி டுங்கலகங்களை—(எட்டு)

௩. ஆனைசேனைகளோகரன் சாட-குரங்கால்
அரக்கர்தலையெல்லாம்பந் தாட-ஒருவர்
போனவழிபோகாமல் தேட-இந்தப்
பொல்லாராவணன்வாழ்க்கை

எல்லாந்தம்பியைக் கூட்டி
புத்திரமித்திரர் சுத்திர இனத்தவர்
சுற்றியவிற்பில்லு டித்துவிழத்தலை
பத்துமரித்திரள் தத்திவிழுந்திட
வித்தகன் அஸ்திரம் அறுத்திடும்வெற்றியை—(எட்டு)

சீதாதேவி அநுமாருக்கு அடையாளந்தருதல்.

விருத்தம்.

உன்னித்தாள் அநுமன் இந்த உத்திசொல்மனந் துணிந்தாள்
வன்னம் உள்ள அணிசூடாமணி கொடுத்தருள் சாமி அவள்
என்னசொன்னாள் எனக்கேட்டில் உரைப்பாய் என நெஞ்சில்
சொன்னபடி அடையாளம் சொல்லென்று சொல்லவே

௬௪-தரு-ஆனந்தபைரவிராகம்-சாப்புதாளம்.

பல்லவி.

அநுமானே சாற்றுகிறேன்-இந்த-அடையாளஞ்சொல் அப்பா.

அநுபல்லவி.

சனகியிலங்கையில் சிறையிலே தவம்புரிந்தாளென்று
மனமகிழ்ராமமூர்த்தி மெய்ச்செய்திருக்கிறாளென்று—அநு

சரணங்கள்.

௧. உலகறியக்காரிருந்த கோட்டைவாசல்கடக்குமுன்னே
முக்குறிவையென்றோன்று நான்கேட்கவே
தொலையாதசாமர்த்தியன்ரோடுசொல்லித்
வரிசையுடனேபயணித்து குளிக்கச்செய்தாரே—அநு

௨. தாழ்வில்லாதகர்மங்கே வருமெப்போதெல்லார்க்கும்
தனித்தனியேயணிவு சொல்லி அநுப்பினார் போய்ப்போ
ரூழும்அர்க்கனுநிகமே கேள்விசெய்வேனும் என்று
தோட்டுக்குப்பெண் ஆசைஅடங்கப்பகொடுத்தார் அய்யோ-அநு

௩. காட்டுவனத்திற்கோர் வனவேடம்புனைந்தகோலக்
காட்டிநான்சூர்ணமும் கேட்டபோதுனே
உனதுதம்பியையுந்தப்பி வந்தோர்நிலையெல்லாம்
உன்னாசைத்தேருமென்று சொன்னேனே-அநு

௪. உலகத்தில்மருமக்கள்போர் குறிக்கோள்வந்தாள்சொன்
உனக்குக்காண்ணையிக்கும் கருத்தில்கண்டேனே

98

வளர்த்தவெளியும்மாறும் தளர்ச்சியில்லாதபடி
வைத்திருக்கச்சுமந்திராடனெப்பத்திரமாச் சொன்னேனே—அநு

௫. ஒருநாள்என்மேல்ப்பாய்ந்த காக்கைதனைநோக்கிப்புல்லால்
ஒருகணைவிட்டார்இதென்ன தெரியாதபேச்சோ
சரணமென்றதுவிழ இருவிழிக்கும்ஒருமணியாத்
தாமேகொடுத்தாரோஅந்தமானமும்தானெங்கேபோச்சோ - அநு

அநுமார் அசோகவனம் அழிக்குதல்.

விருத்தம்.

மைந்தன்தாய்சீதைசொன்ன அடையாளங்கள்
முன்றுங்கேட்டான் அநுமான்தன்நிறைகொண்டங்கே
சிந்தித்தான்ராமலக்ஷ்மணராதிகள்
சேனைஉடனேகொண்டுவருவேன்வந்தால்
பந்தித்தார்வணனும்படையும்காவல்
படைக்காவார்தாயேநீபாரென்றேறி
வந்தித்தான்அச்சூடாமணிகைக்கொண்டான்
வழிக்கொண்டான்அசோகவனம்அழிக்கின்றானே. (௬௩)

௬௫-தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்தானே-அசோகவனந்தன்னை- முடித்தானே அநுமான்.

அநுபல்லவி.

அடித்தானே அருங்-காய்கனிகளை
ஒடித்தானே அசோ-கொடிக்குள்ளிருவரும்
பிடித்தானே அந்த-ராவணன்கீர்த்தியைக்
குடித்தானேகையைக்-கொட்டித்தொடைதட்டிக்கொண்டு—அடி.

சரணங்கள்.

௧. ஆடச்செயும்அசையச்செயும் சிலமரங்கள்-கைகளை
அறுந்தன
மூடச்செயும்முறிக்கச்செயும் சிலமரங்கள்-வேர்பிடுங்கிச்
முறிந்தன
சாடச்செயும்தாவச்செயும் சிலமரங்கள்-கொண்டாட்டம்
தறிந்தன
பாடச்செயும்பாயச்செயும் சிலமரங்கள்-வெகுவெகு
பறிந்தன
கோடாநுகோடிகளாக் கொம்புங்கொடியும்ஆகச் சிலமரத்தைப்-பெருமைய
குறைத்தான்

நீடாழிமுகட்டிலேஅணைபோலேகிடக்க
நிறைத்தான் சிலமரத்தை-தேவர்கள்
வாடாமல்ராட்சதர்கள்பாராமல்வெளியெங்கும்
மறைத்தான் சிலமரத்தை-வாரிவாரி
ஏடாகூடமாலங்கைத்தெருக்கள்தெருக்களெல்லாம்
இறைத்தான் சிலமரத்தை இப்படி
மேடென்றும்காடென்றும் தெரியாமல்முடிய
விசைகொண்டெறிந்தமரம் திசைதிசைபோய்ப்படிய
மாடங்களும்அரக்கர் கூடங்களும்இடிய
மதிள்இலங்கைவீடெல்லாம் சிதறிப்பொடிப்பொடி

௨. அடிக்கடிமரம்இடிக்கும்ஓசையில்
அண்டமும் வயிறுலைக்க-அதுகண்டு
எடுத்தராட்சதப்பெரும்படைக்கடல்
எங்கெங்கும் ஓடிவளைக்கச்-சினத்துடன்
கடுத்தரதகசதுரகபதாதிகளைக்
காலனும் கண்டுகளைக்கத்-திசைதிசை
இடுக்கெனக்கருந்தூளிசெந்தூளிஆகச்
சேடனும் முடிஇளைக்க-வந்தவரில்
தடுக்காமல்மரத்தின்மேல்மரங்களைவிட்டெறிந்து
சதைத்தான் சிலபடையை-மரம்பிடுங்கிப்
பொடுக்கெனப்பள்ளத்திலேபிணம்பிணமாஅடித்துப்
புதைத்தான் சிலபடையைத்-தேர்களை
ஒடுக்கிமளமளெனநொறுக்கிநொறுக்கிவிழ
உதைத்தான் சிலபடையை-மீன்குலம்
வெடுக்கெனவேபிடுங்கக்கடலிலேதூற்றி
விதைத்தான் சிலபடையைக்-கையினாலே
அடுத்தவர்ஆயுதத்தைப்பறித்துப் பற்றிப்பற்றி
அழுகல்வெற்றிலைபோலேகுழைய எற்றிஎற்றி
வடப்படாவாலாலேசுருக்கிச் சுற்றிச்சுற்றி
வயிற்றுக்குடல்களெல்லாம்வாயில்வரக் குத்திக்குத்தி-அடி

௩. அந்தசமையத்துக்குமரங்கள்வாய்த்ததே
அப்பனுக்குக் கொண்டாட்டம்-என்னசொல்லப்
பதியில்இருந்ததேபருந்துகாகம்முதல்
பறவைகள் ஆட்டபாட்டம்-மண்டைகளைச்

சிதறத்தேங்காய்ப்போல உடைத்துப்சாயிக்குண்டோ
சிறிதாகிலும் வாட்டம்-ராவணன்
தடியில்அநுமானுக்கு தயைவளர்த்தானே
தன்னுடைப்பெருந் தோட்டம்-அங்கங்கே
குதிரைமேல்ஆனைவிழத் தேர்மலைபோல்விழக்
குழிந்ததே பெரும்பள்ளம்-பள்ளத்திலே
எதிரும்ஆறுபோலே பெருகிக்கரைபுரள
எடுத்ததே ரத்தவெள்ளம்-பசிபோகக்
கதிஇல்லாநரிகளும் நாயும்பேயும்உண்டு
களித்ததே தங்கள்உள்ளம்-குரங்கென்று
சதிமோசம்ஆகலந்தோம் நமக்கென்னமன்னன
விட்ட தாக்கர்களாம்-கிடைக்காத
புதுவிருந்திதென்று மெத்தமெத்தவேதான
பூதங்கள்நடம்இடப் பிணநாற்றமும்மூள
எதிர்எதிர்அரக்கியர் அழுகைக்குரல்கள்நீள
எண்பதினாயிரம் கிங்கரர்களும்மாள—அடி

சம்புமாலிவதை.

விருத்தம்.

கொடிகொண்டவனூரும் அந்தக் கிங்கரர்களும்போய்மாள
முடிகொண்டஅரக்கன்கோபம்மூண்டிடமூத்தசேனை
வடிகொண்டகடல்போல்பட்ட மன்னிடந்திடும் இருப்புத்
தடிகொண்டஅநுமான்கையால் சம்புமாலியும்பட்டானே. (௨௰)

௰௫-தரு-அடாணாராகம் ஆதிதாளம்.

பல்லவி.

மடிந்தானேசம்புமாலி - அநுமான்கையால்- முடிந்தானேசம்புமாலி.

அநுபல்லவி.

அடங்காதசூரதன் விடும்குணம்உள்ள தூதன்
செங்கிரிஎனமண்டு தடங்கையால்அறைகொண்டு
மடங்கியவாயிலே முடங்கியகுடல்எழ
தொடங்கியஉதிரமும் குடம்குடமாவிழ—மடி

சரணங்கள்.

௧. நருக்குவேன்இதுஒரு குரக்கெனஎதிர்ப்பட்டு
செருக்களத்தினில்வந்து பெருக்கவேகணைதொட்டு
அரக்கர்படைக்கடலை நெருங்கிநெருக்கிஇட்டு
இருப்புலக்கையினாலே அரைக்கக்கொடுத்துவிட்டு—மடி

௨. நீலப்பெரியகடல் போலத்திரண்டுமொய்த்து
மேல்இட்டிருதனாய் கோலிப்பொருதவைத்து
சோலைக்கரும்புகளை ஆலைக்கிடுவதொத்து
வாலுக்கும்அனுமந்தன் காலுக்குமொப்பிவித்து—மடி

௩. மோதிவரும்படையை ஏதும்விடாமல்கொல்ல
மாதர்அழுதழுது வீதிஎங்கெங்கும்செல்ல
பாதகராவணன் காதிலில்இடவல்ல
தூதர்குரங்கிதுபோல் லாதென்றலறிச்சொல்ல—மடி

* * *

பஞ்சசேனபதிகள்அட்சதன்இவர்கள்வதை.

விருத்தம்.

பாய்ந்தசம்புமாலி இந்தவிதத்தில்பட்டான்
பஞ்சசேனாதிபரும் படையும்மாண்டார்
தோய்ந்தஅவர்தங்களையும் கணத்தின்உள்ளே
தோரணகம்பத்தில் இருந்தனுமான்கொன்றான்
காய்ந்தசினத்துடன் பன்னீராயிரம்பேர்
காதலரும்நாலுலட்சம் காளைமாரும்
ஏந்தபடைகளுங்கொண் டக்ஷதனும்போர்மேல்
எதிரனுமாருதிமேல்ச் சீறினனே. (௨௧)

௯௩-வன்னத்தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

வந்தானேராவணகாதகன் அனுப்பஅக்ஷதன்மிகுந்திடப்படை
தந்தானேதோரணவாயின்முன் மிகச்சமுத்திரம்வளைத்ததொப்பென
மதகரிகள்பரிகள் ரதகிளைகள்வரவும்
வருகவருகஎன ராகவதூதன்
கண்டானேஅண்டகடாகமும் வெடித்திட்டுதிகெடுத்தகெர்ச்சனை
கொண்டானேகொண்டிடுபோலவே குதித்தரக்கனைஇருப்புலக்கையில்
அடிகள்முடிகள்பல கொடிகள்தடிகள்பொடி
பொடிகள்படவிசிறி வாலனைவீசி
வளைத்தோடியும்வாரிஅடித்தும் தெரித்தும்விக்கிடமுயித்தும்வீரர்கள்
தலைக்கேதலைமோதிநெரித்துஞ்சரித்தும் அப்படைதொடுக்கும்வாளிகள்
தவிடுபொடிகள்பட உதிர[illegible]
சருகும்உதியுமென [illegible]போது
காலால்உதைபட்டபேர்சிலர் அடிக்குளேசிலர்பிடிக்குளேசிலர்
தோளால்அணைபட்டபேர்சிலர் தொடைக்குளேசிலர்இடைக்குளேசிலர்

கரம்அற்றபேர்களும் சிரம்அற்றபேர்களும்
கதிஅற்றபேர்களும் ஆகியேவிழ
அறைவான்ஓர்அறைக்குளேபல கோடிவீரர்கள்வீரர்மேல்விழ
எறிவான்ஓர்எறிக்குளேபல கோடிதேருகள்தேரின்மேல்விழ
அதிரதர்மகாரதர் சமரதர்சிதறிட
அதலகுதலமொடு சேனைகளமாளத்
தெரிந்தானேஅட்சதன்உதிய செம்புபோலவேரண்டுகண்களும்
எரிந்தானேஅங்கணமேசெல அம்புமாரிபிரசண்டம்ஆகவே
தெறித்தனுமன்உடல் இருக்கும்மயிர்முனை
முறுக்கில்மறையவும் அந்தமாருதி
தலைமேலுந்தோளிலும்மார்பிலும் முகத்திலும்கொலுவிருந்ததோரண
நிலைமேலும்தாளிலும்வாளிகள் தொடுக்கவுங்குலைகுலைந்தாரவை
சரணம்அக்ஷதமனதில் ஒருமையொடுகருதி
விறுவிறெனவிசையில் ஓடிவந்தெதிர்
அடுத்தானேஅட்சதன்வலிய ஆயிரம்பரிரதத்தைஓர்கையில்
எடுத்தானேவிட்டெறிபோதினி லேஇறங்கிமுன்னதிர்க்கவேபிற
கவனைஇவன்அறைய இவனைஅவன்அறைய
அவனிஇடுகலசமும் வில்லும்வாளியும்
ஒடித்தானேபல்லொடுகுண்டலம் உதிர்ந்திடச்செவிகலங்கஓடி
அடித்தானேகையினில்அங்கவன் நெடுங்கழுத்தினைமடங்கமாருதி
உதறவருபண்டைகள் கதறிருதனமுது
குலாபடஉரைபட ராசவீதியில்
நிலத்தோடேதேயஅரைத்துக் கனைக்கஅட்சதன்மாயவேசிலர்
குலத்தோடேரூபம்மறைத்துப் பசுகள்ஆமெனமேய்குவார்சிலர்
மணத்திலேசிலர் பிணத்திலேசிலர்
நெளித்தபேர்சிலர் ஒளித்தபேர்சிலர்
வண்டாகிமறைந்தபேர்சிலர் மான்கள்எனவெளிபாய்ந்தபேர்சிலர்
மண்டோதரிமுன்பினிலேஅடி சாய்ந்தமரம்எனவீழ்ந்தபேர்சிலர்
மலைந்தபோரினில் ஒழிந்ததூதுவர்
இலங்கைராசன்முன் விழுந்தபோர்சிலர்

—*—

அனுமானைஇந்திரசித்துஎதிர்த்தது.

விருத்தம்.

வீரராம்அரக்கரும் அட்சதனும்இந்த
விதம்அனுமான்கையாலே அதம்ஆய்ப்போனார்

இராமர்க்காதரும் ராவணன்முன்னடி
உன்மகனும்நமனுலகம் உற்றானென்றார்
நார்அடாஎனக்குரங்கைக் கிழிப்பேனென்று
நாற்பதுவெள்ளம்சேனை உடனேவந்தான்
ஆர்அடாகுரங்கேநீ ஆர்அடாஎன்
எதிர்கண்டான்இந்திரசித்-தெதிர்கொண்டானே. (௨௧)

அனுமார் இந்திரசித்தோடுபொருதல்.

விருத்தம்.

எதிர்கொண்ட இந்திரசித்தோ டெழும்பினஅரக்கர்சேனைக்
கதிதரண்டமுகாந்தாளில்க்கடல்எனவளைப்பக்கண்டான்
மதிகொண்டஅனுமான்கையில் வல்இருப்புலக்கைகொண்டு
குதிகொண்டான்எமனைப்போலே சாடினான்சாடினானே. (௨௨)

௫௭-தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அனுமந்தன் அடித்தானே-இந்திரசித்தன்
மனம்நொந்து அடித்தானே.

அநுபல்லவி.

அனுமந்தன் அடித்தானே-முனைகொண்டு பிடித்தானே
அரக்கர்படையைக் கண்டு-இருப்புலக்கையைக்கொண்டு—அனு.

சரணங்கள்.

௧. கட்டுமென்றபேரையும்-வெட்டுமென்ற பேரையும்
கறுவிவந் தோரையும்-மோதவிவந் தோரையும்
கைப்படைபோய்மான உதைத்தான்-சிலபேர்களைக்
குப்பல்குப்பல்ஆக வதைத்தான்-சிலரையாக்
கரிகள்மேல்ப் பரிகளும்-பரிகள்மேல்க்கரிகளும்
காலாள்மேல்த் தேராளும்-தேராள்மேல்க்காலாளும்
கண்பொறிகலங்க இறைத்தான்-சிலபேர்களை
மண்களில்அழுந்த மறைத்தான்-கடல்கடந்த
காலால் அனேகம்பேரை-வாலால் அனேகம்பேரைக்
கையால்ச் சிலபேர்களை-மெய்யால்ச் சிலபேர்களை
கசக்கிமூளைகள் பொழிந்தான்-கரும்புபோலே
நசுக்கிச்சாறுகள் பிழிந்தான்-அரக்கியர்க்குக்
கணவனைக் குமாரனைத்-அவனவனைத் தெரியாமல்க்
கதையில் அடித்துடலை-சிதையப் பொடித்துப்பெருந்

காற்றில்பஞ்சென எறிந்தான்-சிலநாத்தேங்காய்க்
கீற்றுக்கீற்றாக மோதினான்-எண்இறந்தோர்கள்
கரம்அற்றும் சிரம்அற்றும் - உரம்அற்றும் வரும்ரத்தம்
கண்டிடம் எல்லாம்புரள - மண்டைமண்டை ஆய்உருள-அனு

௨. முட்டிவரும் தேரையும் - கிட்டிவரும் தேரையும்
முடுகிவரும் தேரையும் - கடுகிவரும் தேரையும்
முன்கையால்வாரித் தாக்கினான் - தரையில்மோதிச்
செங்கல்பொடிபோல் ஆக்கினான் - ஆனைப்படையை
மொத்தியும்குத்தியும் வாலால்ச் - சுற்றியும் எற்றியும்வாரி
மூட்டுப்பூச்சிபோல் மடித்துக் - கூட்டம்கூட்டமா அடித்து
முட்டுமுட்டா அடுக்கினான் - கோட்டையும்லங்கைப்
பட்டணமும் நடுக்கினான் - அங்கவீதி
முகப்பும் கோபுரங்களும் - வகுப்பும் தாவரங்களும்
முத்துமாடங்களும் தேய்ந்து - சித்திரகூடங்களும் சாய்ந்து
முடிபவிசி நொறுக்கினான் - கோட்டை காலத்தில்
இடிபோலேவே உறுக்கினான் - அடித் தடித்து
மூலையும் குதிரைமலர்ச் - சோலையும் குதிரைநடைச்
சாலையும்குதிரை அலை - வேலையும் குதிரைஆக
முறைமுறையாச்சாய்த்து விட்டான் - காலால எற்றித்
தரையிலேதேய்த்து விட்டான் - அரக்கர் தலை
மூளையும்சதையும் வண்ணக் - காளியும்கூளியும் உண்ண
முழுதும்பேய்க்குலம் ஆடக் - கழுகும் காக்கையுங்கூட-அனு

௩. அங்குசமும் தோட்டியும் - [illegible]லியும் ஈட்டியும்
அஸ்திரமும் சூலாயுதமும் - சஸ்திரமும் வேலாயுதமும்
அரக்கர்விடுத்து மொய்க்கவே - அதெல்லாம் அய்யன்
பெருத்தாயத்தில்த்தைக்கவே - தைத்தவை எல்லாம்
அழுந்தத்தோரணம் மேலே - குழந்தைச் சூரியன்போலே
அட்டகாசமது பண்ணி - இஷ்டாரகணைகள் எண்ணி
அமரவே மதித்தானே - பட்டவல் எல்லாம்
உமிபோலே உதிர்த்தானே - ராவணன் மகன்
அடுத்தபடை களிலும் - விடுத்தபடை களிலும்
தொடுத்த படைகளிலும் - பிடித்தவன் மேல்பட
அள்ளியே தெறித்தானே - சிலபடை யைச்
சுள்ளிபோல்முறித்தானே - அரக்கியர்கள்

அழுவாரும் தெய்வத்தைத் - தொழுவாரும் விடுவிட்
டெழுவாரும் அரக்கன்முன் - விழுவாரும் தலைவிரித்
தலங்கோலம் ஆனரோ - எல்லாரும் பேய்க்
குலம்போலே போனரோ - இந்தப் படியா
அடிப்போம் குரங்கைக்கட்டிப் - பிடிப்போமென்னவேகட்டி
ஆர்ப்பரவத்துடன் வந்த - காற்பதுவெள்ளமும் சிந்த-அநு

* * *

அநுமார்பிரமாஸ்திரத்தால்கட்டுண்டல்.

விருத்தம்.

அநுமான்பின்னையும்இந்திரசித்தம்பெல்லாம்
அடித்துவில்லையொடித்துஅச்சாரதியைமாட்டி
வனம்ஆம்தேரையும்வீசிமரத்தால்மோதி
மண்கடைகலங்கிட அடித்தான்அரக்கன்அப்பால்க்
கனம்ஆனபிரம்மபாசத்தைவீசிக்
கட்டினான்ஐம்பதினாயிரம்பிசாசர்
இனம்ஆகஇழுக்கஇலங்கையில்உள்ளோர்கள்
டேசுவார்மாருதியைப்பேசுவாரே.

௫-திபதை-பைரவிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. வந்ததுகுரங்குவந்தஇந்திரசித்தன்
வலையில்மாட்டிஎன்பார் சிலபேர்
இந்தஊருக்கெமன்ஆகக்கோலம்கொண்
டிருந்தகுரங்கிதுவென்பார் சிலபேர்

௨. வினைக்குரங்குவந்ததெனச்சொல்லிராவணனைக
வெகுமானம்கொள்வார் சிலபேர்
தனக்கென்றிருக்கையாலேசமையத்துக்காச்சுஇந்த
சதுர்முகாஸ்திரமென்பார் சிலபேர்

௩. அந்தச்சிவனேசீதைக்காகஇலங்கைதன்னை
அழிக்கவந்தானென்பார் சிலபேர்
தந்தையைஅன்னைசோமகனைக்கொன்றபழி
தந்துபோட்டானென்பார் சிலபேர்

௪. மணவாளனைக்கொன்றதுவலனைக்கொன்றுஒழிய
வாங்கோம்மங்கலியம்என்பார் சிலபேர்

கணைஆம்பாசத்தால்முகத்தில்வாட்டம்இல்லை
கபட்டுக்குரங்கிதுவென்பார் சிலபேர்

௫. அகப்பட்டகுரங்கிதைவிட்டால்இலங்கைநாசக்
கனர்த்தகாலமென்பார் சிலபேர்
நகத்தால்கிள்ளுவதைக்கோடாலியால்வெட்ட
நமக்குமுடியுமோவென்பார் சிலபேர்

௬. இங்கேஇந்திரசித்திதைப்பிடியாவிட்டால்இன்னம்
என்னென்னசெய்யுமோவென்பார் சிலபேர்
தங்கைமூக்குப்போனதகப்பனுக்குமூக்குத்
தந்தானேமகனென்பார் சிலபேர்

* * *

இராவணன்கொலுவில்வீற்றிருத்தல்.

விருத்தம்

முனைசேர்அரக்கர்இவ்வாறுமுறையிட்டலறச்சேனைசுற்றில்
இனம்ஆய்வளைக்கமலைபோலேஇலங்கைஅழித்தகுரங்கிதென்றே
அநுமான்தனைக்கொண்டிந்திரசித்தன் அங்கேவிடஎங்கேயென்று
புனைமாமுடிராவணன்கண்டுபொரிந்தான்கொலுவில்இருந்தானே.

௭-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வீரசூரராவணன்கொலு-வீற்றிருந்தானே.

அநுபல்லவி.

போதரத்தினசிங்கா சனம்மேலேசொர்ன்ன
பீடத்தில்மைநாக மலைபோலேதன்ன
சாருதய்ம்சேர்பத்து சூரியர்கள்ன்ன
தலைப்பத்திலும்பத்து மகுடங்கள்மின்ன—(வீர)

சரணங்கள்.

௧. நடர்ஆடும்அரம்பையும்-ஊர்வசியும்அடி
நயம்தகட்டிமயில்போலஉ லாவு
கடல்போ[illegible]மேள-தாளங்கள்அண்டக
டாகம்[illegible]டும்சென்று தாவு
அட்டா[illegible]கிராவாட-சந்திராவாடாளன்
றவசரக்காறர்கள் கூவ
வடவாக்கினிஆன-விரயாக்கினிநீர்
வந்துமேகம்பனிநீர் தூவ

சுடர்மணிமண்டபம்அண்ட கூடம்அதைத்தொடவே
தொடைநடுங்கிஅசுரர்எல்லாம் நெடுமூச்சுவிடவே
முடிகளொடுமுடிமோதி அடிஇணைபுண்படவே
மூவுலகத்துள்ளோரும் சேவடிகும்பிடவே—(வீர)
௨. எப்போதென்றுமுகம்-திரும்பியவாக்கெல்லாம்
ரிஷிகள்வந்துதலை நீட்ட
தப்பாளட்டானைக்கொம்பொடிந்ததுபதினாறு
சந்திரன்போல்மார்பிலே காட்ட
வைப்பாகியாக-ராஜாக்கள்மாணிக்க
மாலைகொண்டடிமேலே சூட்ட
வெப்பானதுர்முகன்-முதல்ஆனமந்திரிகள்
வியயோசனைகள் பாராட்ட
முப்பத்துமுக்கோடி— தேவரும்கொண்டாட
முதல்ஆனதும்புரு நாரதர்கீதம்பாட
கற்பகம்மென்மலர்மாரி குப்பைகள்போலேபோட
கட்டியம்சொல்லுசைதிசை எட்டிலும்மேலேஓட—(வீர)
௩. இனம்ஆம்மேகங்கள்-புகைபோல்ஒதுங்கிக்கொண்
டிரைச்சல்இடாமலே கூச
புனைமாமுகலட்சுமி கரம்துடைப்பார்போலப்
பூவையர்கவரிகள் வீச
எனைநாடிஞன்னை-ப்பார்த்தான்வார்த்தைசொன்னான்
என்றியக்கர்சந்தோஷம் பேச
இனம்ஊழியத்துக்கு-வரும்தெய்வப்பெண்களைச்
சிறுக்கியர்போல்அரக்கியர் ஏச
முனைபெறும்அட்சதன்வீழ்ந்த மனவேதைகூடி
மூத்தமகன்செயித்துவந்த கீர்த்தியைக்கொண்டாடி
அனுமான்வருகிற வார்த்தைதனையோதி
அடிக்கடிச்சிறையையெண்ணித் துடித்துடன்மனம்வாடி—(வீர)

—*—

அநுமாரைராவணன்வி[illegible]

விருத்தம்.

இருந்தராவணன்முன்பாக-இருந்தமாருதியைநோக்கிப்
பெருங்குரங்குருவாய்வந்தாய்-பிரமன்மால்சிவன்விட்டாரோ
வருந்திவானவர்விட்டாரோ-மனத்துளகபட்டையெல்லாம்
தெரிந்திடவிட்டாளென்று செயவான்கூறுவானே.

௬௯-தரு-செஞ்சுருட்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆடாகுரங்கே-இங்கேவந்தநீ-ஆடாகுரங்கே

அநுபல்லவி.

ஆடாகுரங்கே-அயிலாயோலங்கை
வாசிங்காசனம்போல்-வால்இட்டென்னிலும்-மேல்இட்டிருக்கிறாய்
ஆடா

சரணங்கள்.

௧. அச்சம்இல்லாமல் அடங்கிச்சொல்லாமல்
நிச்சயவணிங்கார் நியுத்தமில்லாமல்
நிசாசரர்களும் அசோகவனமும்
திசாதிசையில்விழ விளைவித்தநீ—ஆடா

௨. கம்பத்தின்மேலே காலனைப்போலே
செம்புதூலியையும்சேனாதிபனையும் கொன்றொருக்காலே
கிட்டசெய்வென்றன்று கட்டிஉடனேவந்த
அட்சதனைக்கூட பட்சணம்செய்தநீ—ஆடா
நீஒருபூச்சி

௩. நிந்தனைசிச்சி எதிர்த்ததென்னசண்காட்சி
இந்திரசித்தன்உன்னோடே அடிக்கவோபல்லால்க்
இடிக்கவோகட்டி குடிக்கவோநீ—ஆடா
கடிக்கவோரத்தம் வகுத்தஉன்மர்மம்

௪. மறைந்தொருகர்மம் அதற்குமுன்கொல்லதர்மம்
அறிந்தல்லோகொல்லவேணும் கல்லாடாநிசம்
அல்லடாநெஞ்சு சொல்லடாநீ—ஆடா
சொல்லடாபொட்டச்

அநுமார்ராவணனுக்கு விடையும்மதியும்கூறல்.

விருத்தம்.

[illegible]ன்இந்தவார்த்தைசொல்ல
[illegible]ன்அயன்மால்விடுக்கவந்தேன்அல்லகண்டாய்
[illegible]மயில்ச்சீதையைத்தேடிவந்தேன்கண்டாய்
வந்திட்டதில்லைனைக்காணவேண்டிஉன்ஊர்
இடம்உடையஅசோகவனம்அழித்தேன்கண்டாய்
ராகவன்தூதுவனானேனீபிழைக்கக்

கேடல்அரியபுத்திகேள்கண்டாய்என்றே
விளம்புவான்அனுமன்எதிர் விளம்புவானே

௨௰-தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமசாமிதூதன்நான்அடா-அடடாராவண
நான்அடாஎன்பேர் அநுமான்அடா

அநுபல்லவி.

மாமலர்த்தலைவாசனும்கபி-லாசனும்ரிஷிகேசனும்
மறைந்துநின்றுதந்தநானே அல்லடா
புறப்பேநின்றுவந்தான் அல்லடா—(ராம)

சரணங்கள்.

௧. கொடுத்தரைமும்தனமும் கனமும்-வினையிலேஎன் போக்கிறாய்
குடிக்கும்பாலை அய்யையோகமர் - வெடிக்குளேஎன்வார்க்கிறாய்
துடுக்குடனபரஸ்திரீசெனங்களைத் - தொடர்ந்தேனபழியர்க்கிறாய்
அக்கிரமனிட்டேணிவயவாங்கும்-தூர்த்தர்வார்த்தையைக்கேட்கிறாய்
நடைபடாமல்என்   அப்பன்கால்மீதே
சாண்என்றால்இழைப்   பாயேஇப்போதே
அடக்கஉன்தரம்   அல்லடாசீதை
அவன்இவன்விட   வந்தான்இன்றே—ராம

௨. காலமும்பலமும்தெரியாமல்   ஆடிக்கிறாய்என்னமாயமோ
காமத்தாலேகர்ம்மபுத்தியைக்   கட்கிறாய்இதுபாயமோ
சாலமோசேடுகாலமோஅடா   உனக்கும்தெய்வசகாயமோ
தங்கைமூக்கறுப்புண்டதல்லவோ   கண்டாளாஇதுஞாயமோ
வாலியும்போனான்   உன்னைச்சிறைவைத்த
வானும்போய்விட்ட   தந்தசாதேபெறத்த
சிலாகவன்   அம்பால்அவன்செத்த
சேதியைநீஅறி   யாயோடாஇத்த—ராம

௩. தேர்திருந்தும்வேதம்தெரிந்தும்   பாதகங்கள்செய்கிறாய்
கெடும்திகண்ணுக்குத்தோன்றமல்   படுகுகத்தில்வீழ்கிறாய்
மாதர்மோகத்தாலேஉண்டு   தாமரைகளைத்தாழ்கிறாய்
மயக்கமோஎன்னவிளக்கைப்   பிடித்துக்கிணற்றிலேஎன்விழ்கிறாய்
ஆதிமூர்த்தி   தானேஉத்தண்டம்
ஆகவந்தானே   அரக்கனாயண்டா

சீதையைவிட்டுப்   பிழைஅடாகண்ட
சேதியைச்சொன்னேன்   வீரகோதண்ட—ராம

இதுவும் அது.

௨௧-தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிழைக்கஎன்றால்வாடா-நான்சொன்ன - பேச்சைக்கேள்அடாமூடா.

அநுபல்லவி.

படிக்கெல்லாம்நீதானேஆளா-படைத்துக்கொண்டாயேசண்டாளா-தம்பிப்
பிழை

சரணங்கள்.

௧. வேதன்முதல்விண்ணோர்கள்   குறைநீங்க - ஆதி
விஷ்ணுவேபுவனமெல்   லாம்தாங்க - ஒரு
கோதண்டராமனெனும்   போரோங்க - வந்து
குதித்தானேசாத்தால்உன்   உயிர்வாங்க
ஆதவன்முன்இருள்   இட்டுமோ - மூட
வனுக்குக்கொம்புத்தேன்   எட்டுமோ - அந்த
சீதைஆம்தெய்வம்உனக்   கொட்டுமோ - இந்தக்
இருட்டுப்புத்திதலைக்   கட்டுமோ - தம்பிப் — பி

௨. வினைசெய்வதற்குச்செய்யும்   வகைஎதோ - ராமன்
விடும்கணைஒன்றுனக்குப்   போதாதோ - மிக
இனிதாகநான்சொல்லுவதெல்   லாம்தீதோ - சற்றும்
இணக்கம்இல்லாதஉன்   உடன்வாதோ
உனதுதங்கைகொங்கை   போய்அடா - பாவி
உனக்கிதன்மேல்என்ன   வாய்அடா - அந்த
சனகிஉலகுக்கெல்லாம்   தாய்அடா - அவள்
தானேஉன்குலம்சுடும்   தீய்அடா - தம்பிப் — பி

௩. புவிமேல்உன்னைவென்ற   கார்த்தவீரன் - விழப்
புடைத்தானேபரசுராமன்   எனும்சூரன் - எதிர்த்
தவனைப்புட்வென்றாகு   குலதீரன் - தேவி
அவனைவிட்டால்இலங்கைக்   கதிகாரன்
தவறில்லாவரத்தொ   டகஸ்தியமுனி - முன்னம்
தக்கவில்லுக்குன்சேனை   வெய்யில்பனி - அங்கே

எவர்களுக்கும்   ஏழைஆனதனி - நான்
எனக்குமிஞ்சும்வானரர்   அனேகர்இனி - தப்பிப் — பி

அனுமாரைக்கொல்லாமல் ராவணனை விபீஷணர் விலக்குதல்.

விருத்தம்.

போதரவாஅனுமன்இந்தப்புத்திசொல்லப்
பொங்கியவாள்அரக்கன்விழிப்பொறிகள்சிந்தி
நீதிவசனம்குரங்கேநீயோசொல்வாய்
நேத்திஇதுநேத்திஇதுஎன்றுசீறிப்
பாதகரால்இவனைவெட்டும்என்றான்அங்கே
பணிந்துவிபீஷணன்அண்ணேன்பாவம்கண்டாய்
தூதனைக்கொல்லுவதென்நன்றாய்ச்சொல்லித்
துலக்குவான்ராவணனைவிலக்குவானே

௨௨-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இவனைக்கொல்லுவெனென்று-நீஎழுந்ததுமெத்த
விரச்சிஅடாஅண்ணேன்

அநுபல்லவி.

தவம்தானேமிகுந்த   இலங்கேசனேஅந்த
சாதிமனிதன்சொந்த   தூதுவனென்றுவந்த — இவனை

சரணங்கள்.

௧. தரம்கட்டும்கீர்த்திக்கு   அழிவுவந்ததிப்போதே
தூதனைக்கொல்வேனென்று   துடிக்கிறாய்என்னதோ
கொசுவைப்பொருட்டா   எண்ணிக்கருடன்எதிர்ப்பதேதோ
குரங்கைநீஎதிரிட்டால்ப்   புறப்பெங்குரங்கையாதோ — இவனை
௨. அந்நாள்நம்தங்கையைக்   கொல்லாமல்காத்தாமே
அவர்பலம்வெளியாக   அனுப்பினதறிந்தோமே
இந்நாள்நமதுபலம்   வெளியாம்என்றெண்ணினாமே
இந்தக்குரங்கைக்கொன்றால்   எங்கெங்கும்வஞ்சஆமே — இவனை
௩. பொறுக்காக்கோபம்வந்தாலும்   குரங்கைக்கொல்வதோசத்தி
புலிபசித்தாலும்என்ன   புல்லைத்தின்றுபோகாதி
அறிக்கைசெய்தேன்இனி   நீயேஅறிவாய்புத்தி
ஆக்கினைசெய்தப்பால்இதை   அகற்றுவதுவேவெற்றி — இவனை

அனுமார்வாலில்தீச்சுடாமல்அக்கினியைச் சீதைவேண்டல்.

விருத்தம்.

தம்பிவிபீஷணன்சொல்ராவணனும்கேட்டான்
தையலார்தாலியிலேகயிறில்லாமல்
எம்புபடுகயிறெல்லாம்முறுக்கிச்சுற்றி
வாலிலேகிழிசுற்றித்தீயைஇட்டான்
முன்பிருநாலாயிரம்போர்இழுத்தோர்வீழ
முனைந்தெழுந்தஅனுமந்தன்தனைத்தொடாதே
பொனபொறிபோலேஇருப்பாய்நெருப்பேயென்று
போற்றுவாள்சீதைசொல்லிஆற்றுவாளே

௨௩-தரு-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அக்கினிபகவானே-வருத்தாதே-அனுமானைநீதானே

அநுபல்லவி.

இக்குவேறில்லைநீயே   இக்குபுடவைசோர்ந்தால்
கைக்குண்டோஉபசாரம்   காக்கஉனதுபாரம்(அக்)

சரணங்கள்.

௧. இத்திசைசவந்தானே-எம்பிரானேசன்னை-மூத்திவனாதந்தானே
சத்தியம்ஆகச்சர்வ   சாட்சிநீதானேஆனால்
பத்தினிமார்க்குள்மேலாம்   பத்தினிநானேஆனால்(அக்)
௨. விவரித்துள்ளதுசொல்லவோஉனதுமித்திரன்தவபுத்திரன்இவன் [அல்லவோ]
கவலைஅரக்கர்இரு   கண்ணுக்கெல்லாம்நெருப்பாய்
இவனுடைவாலுக்குமாத்   திரம்மலர்போல்இருப்பாய்(அக்)
௩. தன்மத்தைக்குறியாயோ-ராமதூதன்என்-றின்னமும்அறியாயோ
முன்னாள்என்சாமிகையைஉன்னால்அல்லவோதொட்டேன்
இந்நாளும்நான்அவனை   இணங்கவைப்பாய்கும்பிட்டேன்(அக்)

*

அனுமார்இலங்கையைக்கொளுத்தல்.

விருத்தம்.

கோடையிலேகசங்குகின்றமலர்போல்சீதை
குழைந்துகுழைந்துஇவ்வாறுபுலம்பியங்கி
வாடையிலேஅக்கினியும்பயந்துசெம்பொன்
மலர்போலவேஇருந்தான்நாலுதிக்கும்

ஆடரங்கும்சாலையும்மூலைகளும்கோப்பும்
அரசிருப்பும்திண்ணைகளும்படுக்கைவீடும்
மாடமும்கூடமும்இலங்கைஎங்கும்வாகாய்
வளர்த்திறன்அனுமந்தன்கொளுத்தினனே

௨௩-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பற்றிக்கொண்டது-அனுமான்இட்டஅனல்
சுற்றிக்கொண்டதுலங்கையை

அநுபல்லவி.

வெற்றிப்பெண்சா னகி உறைமாப்பொழிலும்
விட்டுநீங்கித்திசை எட்டுந்துங்கிமுட்டி(பற்றி)

சரணங்கள்.

௧. எடுத்தபொற்கோ புரங்களும் - மலர்
படுத்தபூஞ்சப் பரங்களும் - எரி
அடுக்களையுந்தா வரங்களும் - சுவர்
கொடுத்தமணிஉத் தரங்களும்
உன்னத உப்பரிகையும் - தங்கத்தாலே
மின்னியகொடி வலைகயும் - ஆனைசேனை
மன்னும்விமானத் தொகையும் - கலாத்தினப்
பொன்அறைகளும் குகையும் - திருவினைக்
கொண்டல்கொண்டலாப்புகை ஏறவே - அத்தனைக்
கண்டவர்சிலன்விட்டு மாறவே - அவர்
பெண்டுபிள்ளைகள்பற்றி கூறவே - பெண்கள்
கொண்டைகள்எல்லாம்சுற நாறவே
உருவங்கள்தாறுமாறாய் பருவங்கள்வேறுவேறு
அருகெங்கும்கீறுகீறாத் தெருவெங்கும்நீறுநீறு(பற்றிக்)

௨. மூதெயில்லோங்கு சொலிக்கவே - பதும்
வானத்துகண்டமார் சலிக்கவே - சொல்லும்
வேதசாஸ்திரங்கள் கெலிக்கவே - எங்கள்
சீதைசொன்னபடி பலிக்கவே
சாகரங்களும் குறைய - புகைப்படலம்
ஆகாசம்மட்டும் நிறைய - பாதாளத்தில்
காகரும்கூட இறைய - ராவணனும்
மேகதலத்தில் மறைய - இலங்கையிலே

கிணற்றுநீரும்சுண்டி வற்றவே - செத்த
பிணத்தின்கெடிநாற்றங்கள் சுற்றவே - சாலை
வணக்கிளமூழ்ந்தெழுந்து மெத்தவே - செங்
கணல்ப்பொறிஆகதீயன் ஏற்றவே
புரிஎல்லாம்உலவிய நிருதர்எல்லாம்அலறிய
எரிஎரியாக்கவிய கரிகரியாக்குவிய(பற்றிக்)

௩. கைக்குழந்தைகளைப் போடுவார் - பெற்ற
மக்களைவிட்டுவிட்டு ஓடுவார் - புகைக்
அக்கினிலேதள்ள மாடுவார் - ஒரு
மிக்கஅரக்கியர்கள் வாடுவார்
மலர்ச்சோலைபொரிந்த தென்பார் - ராவணன்
கொடிக்கூடம்எரிந்த தென்பார் - வீட்டின்மேலேவிட
நிலத்தில்காடேசரிந்த தென்பார் - வெட்டவெளியாத்
[illegible]நடைதெரிந்த தென்பார் - தவிதவித்து
வேலைக்குள்ஓடிவிழச் செல்லுவார் - பெண்கள்
மூலைக்குமூலைவாயை மெல்லுவார் - அனல்
மேலிட்டிடாமல்க்குழி செல்லுவார் - அனுமான்
வாலுக்குத்தெண்டன்என்று சொல்லுவார்
மாடகூடம்அனேக கோடிகோடிநீருக
வேடுவேடாகிப்போகக் காடுகாடாகவேக(பற்றிக்)

வானரவீரர்கள்திரும்புகையில்மதுவனம்அழித்தல்.

விருத்தம்.

அக்கினியைஇலங்கையில்இவ்-வாறிட்டுச்சீதைதனை
அறிந்துபோற்றி
மைக்கடல்வாய்மைநாகம்-தனைக்கண்டான்சேனைகளை
வணங்கிக்கண்டான்
புக்கதுசொல்அனுமானும்-அங்கதனும்சேனைகளும்
போய்ச்சுக்கிரீவன்
தக்கமதுவனம்கண்டு-இலைப்பட்டார்மதுவைஉண்ணத்
தலைப்பட்டாரே

௨௪-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வானரவீரர்எல்லாம் பார்த்தாரே - மது
வனம்எல்லாம்கொள்ளைஇட்டு மேய்ந்தாரே

அநுபல்லவி.

வானுஞ்சூரியபக — வானுந்தெரியாவந்த
கானத்தினில்மிருந்த — தேனுங்கனியுமிருந்த(வானர)

சரணங்கள்.

௧. இளதானமாங் — கனியும் - ஆ
இனிபழுத்த — தேங்கனியும் - தேன்
உருகுகதலிப்பூங் — கனியும் - சுவை
ஒழிபடாவினாங் — கனியும் - கையால்த்
திருமித்திருமிப் — புசிக்கத் - திசைதிசை
பெருகிப் — பெருகித்தெறிக்க - வழிமேல்
வரும்இளைப்பினால் — வந்தடைத்தவே
இருவிலாப்புற — மும்புடைக்குவே(வான

௨. வாயிலேஅளிப்பார் — சிலபேர் - தேன்
வாயிலேஒளிப்பார் — சிலபேர்
வாயிலே விளிப்பார் — சில்பேர் - கடை
வாயிலே அளிப்பார் — சிலபேர்
ஈய்கள்மொய்த்தால்ப் — போலே- மொய்த்து
இரைச்சலிட் — டொருக்காலே - பெரு
வாயிலேமதுவைவழியக் — குதட்டிக்கொண்டு
ஒயமின்றவலாஉறுபி — அதட்டிக்கொண்டு(வானர

௩. இந்திரன்வாலிக்கிட்ட — தோட்டம் - இப்ப
இதிலேசுக்கிரீவர்க்கு — நாட்டம் - என்று
வந்துபுகுந்தாகட்டல் — ஓட்டம் - போலும்
மதுவையெல்லாம்குடித் — தாட்டம் - செய்ய
அந்தவேளை — ததிமுகனெதிர்க்க - அவனை
அடித்தானேஅங்கதன் — பதைக்க - சொல்லும்
எந்தஆணைஆக்கினைக்கும் — நில்லாமலே
தந்தம்இச்சையில்த்தடை — இல்லாமலே(வானர

—*—

சீதையைத்தேடப்போனவர்களைக்குறித்து.
ஸ்ரீராமர்இரங்கல்.

விருத்தம்.

இப்புறம்ராமசாமி-தெற்கினில்போனபேரை
எப்படிகாணுவேன்எனக்குரைகூறுவானே

ரு-இபதை-ஆகிரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. இக்குத்திக்காகச்சீதையைத் — தேடிநோக்காரோ - பார்த்
திக்கிலும்காணுமோவெங்கே — வாடிவந்தாரோ
௨. தெற்குத்திசையிற்போனோரைக் — காணேன்கண்ணாலே - அடா
சுக்கிரீவாநான்வருக்கின்னம் — இருந்தேன்மண்மேலே
௩. கன்னிச்சீதைஇறந்தாளோ — என்னபட்டாரோ - இக்கத்
என்னசொல்வோமென்றுசிவன் — தன்னைவிட்டாரோ
௪. நாள்க்கணக்கைஎண்ணிஎண்ணி — ஏக்கமுற்றாரோ - உன்தன்
ஆக்கினைக்குப்பயந்துதவசு — நோக்கப்போனாரோ
௫. மற்றொருலோகத்தைச்சுற்றித் — நேடுகின்றாரோ - சிறையில்
வைத்தஅரக்கரோடேபோர் — ஆடுகின்றாரோ
௬. ஏழுமுகமேமுகமாக — இன்னம்செல்வாரோ - இங்கே
என்முகத்தில்சீதைசேதி — என்னசொல்வாரோ
தனைவரவுபார்க்குமென்னைத் — களைப்பார்ப்பானோ-அனுமான்
என்வயிற்றில்என்றுவந்து — பாலைவார்ப்பானோ
௭. கவலைஎன்அனுமான்இருக்கக் — காரியம்போகுமோ - அய்யோ
அவனால்ஆகாதகாரியமின் — ஆரால்ஆகுமோ

ஸ்ரீராமருக்குஅனுமார்சீதையின்இருப்புகூறல்.

விருத்தம்.

வண்டேபோல்மனமகிழஇந்தவண்ணம்
மடலேபோல்ச்சுக்கிரீவனுடனேசொல்லிக்
கொண்டேதென்முகத்திலேமுகத்தைவைத்துக்
குமித்துராகவன்இருந்தசபைக்குமுன்னே
பண்டேஅங்கதன்முதல்ச்சேனைகள்பின்செல்லப்
பறந்துவந்துகரங்குவித்துப்பணிந்துக்கண்டேன்
கண்டேன்சீதையையென்றுகூவிக்கூவிக்
கதிகொண்டான்அனுமன்வந்துகுதிகொண்டானே

௨௬-தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கண்டேன்கண்டேன்கண்டேன்சீதையைக்-கண்டேன்ராகவா

அநுபல்லவி.

அண்டரும்காணாத — இலங்காபுரத்திலே
அரவிந்தவேராமைத் — தரவந்தமாதாளைக்— கண்டேன்

உச

சரணங்கள்.

க. காவிவிழிகளில் உன்உருவெளிமின்னக்
கனிவாய்தனிலேஉன் திருநாமமேபன்ன
ஆவித்துணையைப் பிரிந்தடஅன்னம்
ஆனாள்நான் சொல்வதென்ன
பூவைத்திரிசடை நித்தம்நித்தம்சொன்ன
புத்திவழியேதன் புத்தியிலேமன்னப்
பாவிஅரக்கியர் காவல்சிறைதன்னப்
பஞ்சபடிந்தப பூர்ணசந்திரம்என்னக்—கண்டேன்

உ. பனிக்காலவாரிசம் போலநிறம்கூடிப்
பகல்ஒருயுகம்ஆகக் கழித்தாளேபிரயாசி
நினைத்தங்கோராவணன் அந்நாள்வரச்சீசீ
நில்லடா என்றேசீ
தனித்துத்தன்உயிர்தன்னைத் தான்[illegible]மகராசி
சாரும்பொழுதுகாணும் சமயமிது[illegible]
இனித்தாமதம்செய்யல் ஆகாதென்[illegible]
ராமராமராம ராமஎன்றேஓர்பேசிக்—கண்டேன்

௩. அடல்சேரும்வாலியை வானுலகிலேகூட்டி
அவனியைச்சுக்கிரீவன் ஆளமுடிசூட்டி
உடனேநீஅதபோ என்றசொல்அமுதூட்டி
உன்எழில் பாராட்டி
விடவந்தஅனுமந்தன் நான்என்றுசீராட்டி
விவரம்சொல்லஉயிர்கொண் டிருக்கிறேன்மாட்டி
இடமாலட்சுமணன்செய்த பர்ன்னசாலைவிட்டில்த்
தேவாதிதேவாஉன் திருவாழிதனைக்காட்டிக்—கண்டேன்.

ஸ்ரீராமர்சீதாதேவிசூடாமணிகண்டுமகிழ்தல்

கொச்சகம்.

பணிஅனுமான்இதுசொல்லிப்பாவைதவிர்சூடா
மணிஅடையாளம்கொடுத்தான்-வள்ளலிராகவன்கண்டான்
அணிஉடலம்புளகித்தான்-அகம்குளிர்ந்தான்முகம்மலர்ந்தான்
அணியும்அந்தமணிவாங்கித்-துதித்தான்சம்மதித்தானே

௨௪-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சூடாமணிகண்ட-போதேசாமிக்குவந்த-சுகமேஅனந்தசுகம்.

அநுபல்லவி.

வாடிஅனுமான்சொல்ல ஆடிமுட்டமுட்ட
நாடிச்சீதைஅம்மை சூடிவாவிட்ட—சூடா

சரணங்கள்.

க. அமலமாமணிதன்னை வாங்கினான் - உயிர்செய்
அமுர்தசஞ்சீவிபோலத் தாங்கினான் - சீதை
கமலக்கைபோல்பிடித் தோங்கினான் - கவலை
கதிர்கண்டபனிபோல் நீங்கினான் - கண்டு
கண்இரண்டும் குளிர்ந்தான் - மேல்வரும்
எண்ணங்களும் தெளிந்தான் - அந்த—சூ

உ. மடித்துவாய்இதழ் கடித்தான் - மேனி
மயிர்ப்புளகம் பொடித்தான் - வேலை
பொடிக்கத்துடி துடித்தான் - அனுமான்
புத்திசொல்லிப் படித்தான் - சேனையைப்
போர்க்குச்செல்லும் என்றான் - அடிக்கடி
சேர்க்கச்சொல்லும் என்றான் - இப்படி-சூ
அரக்கராம்இருள்எல்லாம் ஓடவே - தர்மம்
[illegible]பயிர்வளர்ந்து கூடவே - கீர்த்தி
விரித்தரம்பையர்கீதம் பாடவே - தேவர்
வீசும்பூமலர்எங்கும் மூடவே - வானவர்
மேனி பாரிக்கவே - தர்க்காப
வானி பூரிக்கவே - அந்த—சூ

ஸ்ரீராமர்தென்சமுத்திரக்கரையைக்காணுதல்.

விருத்தம்.

இந்தவண்ணம்சாமிமனமகிழ்ந்துதேறி
இலங்கையைப்போய்வளைந்திடவேசேனைசூழ்
அந்தஅனுமான்மேலேதானும்தம்பி
அங்கதன்தோள்மேலும்எழுந்தருளிச்சென்று
தொந்தம்உள்ளபடைத்தலைவர்முன்னும்பின்னும்
சூழ்ந்துவரச்சுக்கிரீவன்அருகேநின்று
முந்திவழிகாட்டி-இடராமச்சந்திரன்
முறைகொண்டான்தென்கடலின்துறைகண்டானே

சுந்தரகாண்டம்-முற்றும்.

விருத்தங்கள்-௩௨-கொச்சகம்-௩-ஆக ௩௫.
திபதைகள்-௯ தருக்கள்-௨௪-ஆக ௩௩.
பாயிரம்-௧-க்கும்-காண்டம்-௫-க்கும்கூடிய
கொச்சகம்-௫-வெண்பா-௨-வசனம்-௧-விருத்தம்-௱௪௨-ஆக ௱௫௰.
தொடையம்-௧-திபதைகள்-௪௰-தருக்கள்-௯௯-ஆக ௱௩௭.





ஸ்ரீராமஜெயம்.

ஆறுவது.

உயுத்தகாண்டம்.

அனுமார்மீண்டபின்ராவணன்கேட்க மந்திரிகள்ஆலோசனைகூறல்.

விருத்தம்.

ஆலிலைமேல்பள்ளிவிடுத்தயோத்திவந்தோன்
அரு[illegible]ல்வர்ப்பெருங்கவிகள்உடன்இருந்தான்
மூலஇ[illegible]ங்கையைமுன்போல்விசுவகர்மா
[illegible]ங்கஅந்தப்படிக்குராவணனுங்கண்டான்
[illegible]லும்காவிலும்அனுமான்இடுதீயாலும்
[illegible]மாண்டராக்ஷதர்போகஅந்தஊரில்
மேல்ஊராக்ஷதருக்கும்அரக்கன்பொல்லா
வினைசெய்வான்மந்திராலோசனைசெய்வானே (௧)

௧-திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. வாரும்வாரும்பாரம்பரிய மந்திரிமாரே
பாரும்பாரும்ராவணன்எனைப் பார்த்தென்னசொல்லுவீரோ
௨. அரிஅயன்கூடப்பயப்படும்இலங் காபுரித்தெருமேலே
கரிகரியாக்குவியக்குவியக் கண்டோமேகுரங்காலே
௩. இங்கேசுட்டகூறைஇல்லையே இலங்கையில்நாலுசாரும்
நங்கைமார்கொண்டைவெந்திடச்சுறு நாறுகின்றதுபாரும்
௪. மனிதர்அனுப்பக்குரங்கிங்கேவர மாண்டதரக்கர்கூட்டம்
இனிஎன்னவெற்றிஇனிஎன்னசக்திஇனி என்னகொண்டாட்டம்
௫. என்னராவணன்சொல்லச்சீறி எழுந்தானேஉன்மத்தன்
நன்னிக்குரங்கும் கொசுகும்பகையோ நாக்கென்றானேபிரகஸ்தன்
௬. ஒருவர்வருக்குரானேகட்டுபணன் உடனேஅவன்அண்ணன்
இருவர்தலையும்கொண்டுவருவேன் என்றானேபுகைக்கண்ணன்
௭. நரனையும்வானரனையும்கொல்ல நான்அல்லோஅனுபந்தன்
அரிதமாஎன்னைப்போகச்சொல்என்று சொன்னானேவச்சிரதந்தன்

அ. இவன்மனிதருக்கிவன்குரங்குக்கென் றேகினான்என்கோனே
அவன்அவன்பலம்தெரியல்ஆகுமென் றன்மகோதரன்தானே
௯. நாமேஇன்றிறநரரும்குரங்கும் நம்மைஎதிர்க்கலாச்சே
மாமோசம்இதுவென்றுருன்முக்கன் அருக்தானேதப்பேச்சே
௰. முட்டனுக்குத்தன்புத்திநாலிலும் முற்றிலும்செம்மைபோலே
துட்டமந்திரிகள்வாயில்வந்தது சொன்னாரேஒருநாலே
௰௧. சூரியகேதுபிசாசன்முதலோர் சொல்லிடும்அந்தவேளை
காரியம்அல்லவென்றுறுக்கிறான்கும்ப கர்ணனென்றும்அக்காலை

கும்பகர்ன்னன்ராவணனுக்குஆலோசனைகூறல்.

விருத்தம்.

படபடெனமந்திரிகள்-இந்தவிதம்சொன்னதெல்லாம்-பரிந்துகேட்டே
உடல்மறந்தேராவணனும்பிரியார்கைச்செய்பொன்போ[illegible]உச்சாகத்தால்
கடல்கடந்துபோராட-நினைந்தளவில்அமைச்சர்களைக்-காய்ந்[illegible]பின்பு
இடம்உடையகும்பகர்ன்னன்-கூறுவான்அண்ணன்முன்னே-[illegible]

௧-தரு-கலியாணிராகம்:ஆதிதாளம்.

பல்லவி.

நேத்திஇதுவெகுநேத்திஅடாஅண்ணேனன்-மந்திராலோசனை
நேத்திஇதுவெகுநேத்திஅடாஅண்ணேன்

அநுபல்லவி.

எற்றகும்பகர்ன்னன் என்சொல்லைவீழ்க்கிறாய்
எடுப்பானகீர்த்தியைத் துடுக்காலேதாழ்க்கிறாய்
குத்தில்அடிக்கவே-பல்லுபோச்சுதென்ற
சொல்லைப்போலேஇந்த ஆர்த்தர்சொல்கேழ்க்கிறாய்(நேத்தி)

சரணங்கள்.

௧. தோட்டம்ஆம்அசோக-வனம்அழிபட்டபோதே
தேவருக்குஉனது பயம்போச்சு
நாட்டம்ஆம்அரக்கர்-தலைகள்உன்னாலேதெரு
நாலுபுறமும்உருண் டிடல்ஆச்சு
வீட்டுப்பெண்கள்நகைக்க-ஒருத்திகாலடியினில்
வீழ்கிறாய்இதினும்உன் போனச்சு
கோட்டைமூன்றும்கரிக்-கோட்டைசெய்தகருந்
குரங்குக்குமனிதர்க்கும்பயந்தோமோஎனும்பேச்சு (நேத்தி)
௨. விதம்விதமாப்பெற்ற-விசயம்எல்லாம்அய்யய்யோ
விராகாக்கினியிலே கருக்கிறாய்

மதிமோசமோஉன்தன்-விதிமோசமோசொன்னால்
மனதுகொள்ளாமல்அரு வருக்கிறாய்
அதிகவேதங்கள்ஓர்-ஆயிரமும்தெரிந்தும்
அறியாமலேசெல்வம் செருக்கிறாய்
மிதிலைப்பெண்கற்பால்இந்தப்-பதிவெந்ததல்லாமல்
வேறொன்றால்வெந்ததென்றே நினைவிலிஇருக்கிறாய் - (நேத்தி)

௩. கருமலைபோல்இந்த-நிருதரைக்கண்டால்அந்த
காலருத்திரனுக்கும்உண் டோவீரம்
இருஇருகாண்இதோ-புறப்படுகிறேன்என்முன்
எவ்வளவுயரிட ஆரவாரம்
மருதுடன்சீதையைவிடுவதுவேநல்ல
மார்க்கம்இல்லாவிட்டால் இக்கோம்
ஒருமிக்க[illegible]போய்-உனக்காச்செனக்காச்சென்று
ஒரு[illegible]பாராமல்இங்கே குறுகுறுக்கும்விசாரம்(நேத்தி)

விபீஷணர்இந்திரசித்தைவிலக்கிராவணனுக்குப்
புத்திகூறல்.

விருத்தம்.

கும்பகர்னன்இந்தமொழிசொன்னபின்பு
குதித்திந்திரசித்தெழுந்தான்எனதுகையில்
வெம்புபிரம்மாஸ்திரமும்நாகபாசம்தானும்
விண்போமோபின்அதைநீகாண்பாய்என்றான்
வம்புசொன்னாய்பயலேநீபோடாகாளை
வருங்காரியம்அறியாய்என்றவனைத்தள்ளித்
தம்பிவிபீஷணன்அண்ணேன்உனக்கிதெல்லாம்
சதிஎன்றான்கேட்பாய்என்மதிஎன்றானே

உ-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராகவன்பகைராவணாஒருகாலும்நமக்காமோ
அண்ணேன்பழிசுமக்காதே

அநுபல்லவி.

ஏகன்ஆய்அந்தமும்வரும்தசரத-ராமன்என்றும்வந்தாரே
நாம்எங்கேபோவோம்அந்த (ராக)

சரணங்கள்.

௧. அலைகடல்சூழ்இலங் - காபுரிகளைப்போலே வெந்தொருக்காலே
அளவறுராட்சதர் - மலைமலைகள்போலே மண்டினத்தாலே

அலைந்தோம் - மெத்த உலைந்தோம் - மேனி
குலைந்தோம் - நிலை கலைந்தோம் - என்றுதேவர்
காலமே ஓலமே - செயஆதி
மூலமே கோலமே - ஆகிவந்து
இளையும்விளையும் மூளையும்களையவே
வலக்கைதந்து நிலத்தில்வந்தவதரித்த—(ராகவ)

௨. பாதகிதங்கையால் சிந்தையைவிளைமூளா - அடாசண்டாளா
பன்னகசாலையோ டுன்இருபதுதோளால் - பாவத்துர்த்தாளா
எடுத்தாய் - ஆசை தொடுத்தாய் - நன்மை
விடுத்தாய் - குடி கெடுத்தாய் - அவள்ஒரு
தாய்அடாதாய்அடா - நமக்கொரு
நீய்அடா தீய்அடா நிறைமேல்
எத்தாய்வைத்தாய் பித்தாய்செத்தாய்
சனிஅல்ல உனையேகொல்லவந்தவள்—(ராகவ)

௩. மேதருகார்த்தவீ - ரியன்முன்எதிர்இட்டாய் - சிறுமைவிட்டாய்
வேதவதிசொன்ன-சாபத்தில் அகப்பட்டாய் - பிழைக்கஓட்டாய்
மதமோ - உனக் கதமோ - எந்த
விதமோ - லங்கை சதமோ - இத்தனை
சூரரும் வீரரும் - உனதரு
மாரரும் பேரரும் - உன்னுடைய
முடியும்செடியும் - கொடியும்படியும்முன்
சிதைபேர - வாதைதீரும்உள்ளது—(ராகவ)

விபீஷணனை ராவணன்சீறிக்கூறல்.

விருத்தம்.

உதிக்கின்றதிரோன்முன்னே-ஒளிக்கும்மின்மினிபோல்அல்லால்
கொதிக்கின்றஎன்முன்அந்தக்-குரங்கொடுநரன்என்செய்வார்
மதிக்கின்றசொல்என்சொன்னாய்-எனவிபீஷணனைப்பார்த்து
கதிக்கின்றஅரக்கன்பல்லைக்-கடிக்கின்றான்படிக்கின்றானே

௩-தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

போதும்போதும்இந்த புத்திவிபீஷணா
போதும்போதும்சொன்னது போதும்அடா

அநுபல்லவி.

ஏதடாநான்பயப் பட்டிடக்குமோ
எலியைக்கண்டுபூனை வெதிக்கிடக்குமோ

நாதன்ஆனநானே உன்சொல்லைக்கேட்பது
நரிவாலைக்கொண்டோ கடல்ஆழம்பார்ப்பது(போது)

சரணங்கள்.

௧. உலகும்அரசும்போய்-வெள்ளாட்டியால்க்காட்டில்
ஒருங்குண்டராமன்என்றேடெதிர்ப்பாரோ-அவன்கூட
விலங்கிடமாயம்செய்து-குலமங்கையைஎடுத்து
மேடும்காடும்திரிய விட்டேனெங்கும்தேட
பலருக்கும்தெய்வம்என்றாய்-இந்திரன்சிறைபட்டான்
பாலனோஇவன்என்றேடேலாதோசண்டைபோடக்
கொலைசெய்யும்அரக்கனா-மனிதன்கொலைசெய்வானோ
கொல்லத்தெருவில்ஊசி விற்றல்விலைபோமோடா(போது)

௨. துப்பானவாலிமுன்னே-எதிர்த்தவர்பலம்போமே
தோர்வையோஆர்க்கும்அந்த சாபமென்றறியோமோ
பழிகாரன்முன்இந்த   பயம்தீர்த்தாயே
அழியாதசிரஞ்சீவி   ஆயிருப்பாயே — அனு

—*—

இலங்கையில் வானரர் நெருப்பிட்டுக் கொர்ச்சனை இடுதல்.

விருத்தம்.

கட்டிஉவந்தனு-மந்துஇராகவ-கர்த்தன்உலாத்தளவில்
தட்டறஅண்டர்இ-றைத்தனர்பூமலர்-தந்தையர்நிர்த்தமிட
மட்டறவெந்துபொ-டிப்பொடிஆகவ-லோங்குநெருப்பதனைக்
கொடிஇலங்கையில்-இட்டனர்வானரர்-கொர்ச்சனை இட்டனரே.

—*—

இந்திரசித்துமாயாசிதையை அனுமார்முன்
கொண்டுவருதல்.

இதுவும் அது.

இத்தலையில்இவர்ஆரவாரம்கேட்டான்
    இலங்கேசன்உள்ளுடைந்தான்உடனேஇந்திர
சித்தெழுந்தான்சஞ்சீவிமலையைமுன்பேரல்
    செலுத்தியமாருதியும்வந்தானெதிர்த்துக்கொண்டான்
வித்தைதனிலொருத்தனைஅந்நேரம்தன்னில்
    மெய்ச்சீதையாக்கிவெட்டுவேனென்
றத்தலையிலக்கைத்தலத்தில்வாளொன்றேந்தி
    ஆட்டினான்மாயையினாற்காட்டினனே.

௫௩-தரு-சௌராஷ்டிரராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மாயச்சீதைகொண்டிந்திரசித்தனு-மான்முன்வந்தானே

அநுபல்லவி.

இலங்கைமேலேவாசலிலேமந்-திரத்தாலேதந்திரத்தாலேசெய்த (மாய)

சரணங்கள்.

௧. அளப்பில்லாவெகுதளக்கோடேபோர்தனை
    அதிரவே   அடித்துக்கொண்டு - நீ

விளாத்தசண்டைகள்விண்ணூச்சென்று
    விகடங்கள்   படித்துக்கொண்டு - உடல்
நெளிக்கமயிர்தொட்டிழுத்துப்பல்லைநெற
    நெறென்று   கடித்துக்கொண்டு - மண்டை
பிளக்கவெட்டுவேனென்பார்எனவேகத்தி
    பிடித்துக்கொண்டுதடி-   துடித்துக்கொண்டு - ஒரு (மாய)

௨. வீரம்சூழ்புலிவாய்மான்போல்அவள்
    மெலிந்து   குறைந்துகொள்ள - மழைத்
தாரையாவிட்டழுதகண்ணீர்மலைத்
    தடங்களில்   நிறைந்துகொள்ள - கலை
சோரவேபுரண்டழுந்தஉடைமைகள்
    சுற்றிலும்   இறைந்துகொள்ள - அய்யா
மாருதியேமுறையோஎன்றவள்வெட்கம்
    மறைந்துகொள்ளக்   கண்ணில்அறைந்துகொள்ள - ஒரு (மாய)

நேசம்உள்ளஅநுமானேஇங்கேசற்றே
    நில்லடா   சொல்லுகிறேன் - வாள்
வீசிநான்இந்தச்சீதைதனைஉன்றன்
    விழிமுன்னே   கொல்லுகிறேன் - மறு
யோசனைஇல்லைஇப்பொழுதந்தஅ
    யோத்திக்கும்   செல்லுகிறேன் - கை
கேசிபரதன்எல்லாரையும்வேருடன்
    கெல்லுகிறேன்உன்னை   வெல்லுகிறேன் - என்று (மாய)

—*—

இந்திரசித்து வெட்டின சீதைக்காக அனுமார்புலம்பல்.

விருத்தம்.

வந்தபாதகன்இ[illegible]தன்பான்மாயாசீ-தைதனைவாளாலே
விந்தைமாருதிகல்ல-வார்த்தைசொல்லவும்துணியா-வீசிப்போட்டான்
பந்தமாம்அயோத்திமே-லேபோக்குகாட்டிநிகும்-பலையிற்சேர்ந்தான்
சிந்தைமாருதிகண்டு-சோம்பினன்அழுதழுது-தேம்பினனே

௫௪-தரு-எருக்கலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இதுக்கோநான்பட்டது   சும்மா - பாவிஅநுமான்
இனிமேல்நான்என்செய்வேன் அம்மா

அநுபல்லவி.

விதிக்குள்ளன்னைப்போச்சே - விதனம்நித்தம்பேச்சே — இதுக்

சரணங்கள்.

௧. இம்மென்றுமுன் நானலந்தேன் உன்உயிர்க்குக்கேடுதந்தேன்
அம்மானவைப்படிசெல்வேன் அம்மானுக்கெப்படிசொல்வேன்
சாமிசொன்னானென்றுகேட்டான் தாய்நீஇருந்தால்அல்லோகேட்பான்
நீமைதானேயே விட்டதோ தெய்வமுந்தான்கண் கெட்டதோ
இதுக்கோநான்.

௨. அன்னையேதாயேஎன்தன்னை அரிக்கும்இந்திரஜித்துன்னை
பின்னமேசெய்திடானே பிரேதம்போலஇருக்கேனே
சொன்னசஞ்சீவிக்காத்தாண்டி சுருக்காகவளன்னைவேண்டி
என்னென்னசெய்தாலும்அங்கே இப்படிஆச்சுதேஇங்கே
இதுக்கோநான்.

௩. அருந்ததிசெளமுகிபெண்ணே அனைவர்க்கும்இருகண்ணே
விருப்பும்உயிர்க்குயிர்ஆயே விளங்குகின்றவுந்தாயே
கொண்டுநான்உன்னைத்தேடி கண்டேன்என்றுமுன்னோடி
இறந்தாளென்றவையாலே இறந்தாள்என்னவோமேலே
இதுக்கோநான்.

—*—

சீதைக்காகஇரங்குகிற ஸ்ரீராமரைலட்சுமணர் முடுக்குதல்.

விருத்தம்.

அஞ்சனைபாலகன்இந்தப்படிக்குரைத்தான்
அய்யன்இராமனுக்குப்போய்அறிக்கைஇட்டான்
செஞ்சிலைவீரனும்அதிர்ந்தான்பதித்தான்விதிநொந்தி
தேடினான்வாடினான்தியக்கம்கொண்டான்
தன்செயலானதுமறந்தான்அந்தவேளை
தம்பியும்அப்படிதளர்ந்தான்இனிமேல்சாமி
என்செயல்ஆவதுநமக்கும்இருப்பேதென்றே
இனம்சொல்வான்லட்சுமணன்சிரம்சொல்வானே.

௬௫-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இனிமேல்யோசனைவதையா-சீதைபோனபின்-இரங்கினால்ஆகாதையா

அநுபல்லவி.

உனதுகவலைசொன்னால் ஊரார்க்கென்னகவடியோ
இனம்எங்கேபோச்சுதையோ சிவன்கருப்படியோ—இனி

சரணங்கள்.

௧. இலங்கைஉள்ளாரும்தேவரும் எவரையுமிப்போதுநேரோ
குலங்களோடும்கொல்லாவிட்டால் கொஞ்சம்சொல்லினைப்பாரோ

புலம்பல்ஆமோஇன்னம்சற்றே பொறுத்தால்சிர்த்தபேரே
விலங்கினும்பேருவோர்அடிமை வேலையும்செய்யச்சொல்வாரே
இனிமேல்

௨. விலக்கவும்சீதையைப்பாவி விசனென்னன்றுமான்சொன்ன
கலக்கம்கொண்டாய்தாரத்துக்கிதா காலமிதுஅல்லவேவேளை
கொடிக்கொழில்செய்தம்பாலனோடும் கொணருத்தாரைப்பொருப்பாரி
தலைக்குமேல்ஓடியவெள்ளம் சாணோடிஎன்னமுழமோடிஎன்ன
இனிமேல்

௩. நாட்டின்அரசும்போச்சு ஆன்றுடைநன்மையாலேவந்ததெண்டம்
காட்டிலும்வந்திருக்கொள்ளை கட்டிக்கொண்டேபோனதினாலெண்டம்
பூட்டிநீவில்லைவளைத்தால் பொடிப்பொடியாய்போமண்டம்
ஆட்டம்காட்டல்ஆமோசாமி அடியேன்சொன்னபடிஎடுநீகோதண்ட[ம்
இனிமேல்

—*—

ஸ்ரீராமரை அநுமார் முடுக்குதல்.

விருத்தம்.

இனமாஇப்படிஇளையோன்தானுரைக்கஇந்த
சித்தயோர்ந்திபின்மேலேபோனபோக்கை
அநுமானும்சாமியுடன்சொன்னான்சாமி
ஆவிதமுமாறிநான்அந்தவேளை
புனவீரபடைகளையும்உமையும்கொண்டு
போய்அரக்கன்முன்குதிப்பேன்அல்லவென்றால்
மூனைபாணனேபொருதிக்கொல்வேன்என்று
முடுகுவான்மாருதியும்கடுகுவானே

௬௬-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இதுக்கோஇந்தயோசனைசாமி-அநுமான்நான்இருக்க
இதுக்கோஇந்தயோசனைசாமி

அநுபல்லவி.

பதைக்கிறேன்இந்திரஜித்தை-உதைக்கிறேன் அவனைநான்
வதைக்கிறேன்அயோத்தியில் புதைக்கிறேன்அதுக்கென்ன(இது)

சரணங்கள்.

௧. சுற்றியமதில்வழும் நீட்டி ராவணன்தன்னைக்
எற்றிவளரிலேகையை
கொத்துப்பனங்காய்போலே மகனைஇந்திர
பத்துத்தலையும்பிடித் தாட்டி

சித்தேனென்றவன்அங்கே
சுத்திஅலறும்படி   மாட்டி   ஆட்டுக்குட்டிபோல
மெய்த்தஅரக்கர்களைக்
குத்திக்கழுக்கிரை   ஊட்டி   பாராய்என்சாமி
சூழ்விலேலங்கைக்க-சத்தைப்பிடுங்கிஒரு
பந்தைப்போல்தூக்கிஅங்-கெத்துகிறேன்அடியேன்—(இரா)

௨. தடுக்காளென்தாய்முன்னத்தி
எடுத்தான்அவனுக்கிந்த   மீண்டேன்   கொல்லாதேஎன்று
படித்துப்படித்துச்சொல்லி
அடிக்கடிவேண்டிவேண்டிக்   கொண்டேன்   கேளாமல்பாவி
முடுக்கிவிசக்கண்டு
துடித்துத்துடித்துமனம்   மீண்டேன்   பரதன்மேலே
வடக்குத்திசையைநோக்கி
நடக்கஎன்கண்ணாரக்   கண்டேன்   உத்தாரம்தந்தால்
பிடிப்பேன்ஒருகடியாக்   கடிப்பேன் - அவன்உயிரை
குடிப்பேன்பழிக்குப்பழி   முடிப்பேன் - என்றால்ஆகாதோ(இரா)

௩. பூத்தபுவனமெல்லாம்
காத்திடவந்தபரந்   தாமா   உன்வில்லுக்குமும்
மூகத்திகள்ஆகிலும்
பாத்திரரோராரு   ராமா   தர்மம்செயும்என்ற
சாஸ்திரமும்உனது
தோத்திரமும்தப்பிப்   [illegible]ராமா   நம்பினதேவர்
பேய்த்தனம்சொன்னென்ன
கூத்திதாதீவாருந்தல்   ஆமா   சேனையும்தோளில்
ஏற்றிஉடம்மையும்கொடி-மாத்திரத்துக்குள்ளாக
நேத்தியாக்கொண்டுபோய்அ-யோத்தியில்க்குதிக்கிறேன்—(இரா)

—*—

சீதையின் இருப்பைக்கண்டு வந்தவிபீஷணர்
ஸ்ரீராமருக்கு அறிவித்தல்.

விருத்தம்.

அளப்பரியஅனுமன்இது-சொல்லவிபீஷணன்அதனை
அறிந்தானான்போய்
வளப்பமெல்லாம்கண்டுவந்து-சொல்வேன்என்றிலங்கை
யில்ஓர்-வண்டாய்ப்போனான்

களக்கம்இல்லாச்சீதையையும்-திருட்டிலேயரக்கன்செய்
கவடும்கண்டோன்
உளக்கவலைக்கடல்கடக்கக்-கரைசெய்வான்சாமிமுன்னே
உரைசெய்வானே.

இ௭-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இருக்கிறாள்தாய்-அசோகவனத்தினில்இருக்கிறாள்சாமி.

அநுபல்லவி.

இருக்கிறாள்நமக்கொரு   பாக்கியம்உற்றால்போல
ராவணன்குடிக்கொரு   சூனியம்வைத்தால்போல—இருக்

சரணங்கள்.

௧. மோதுவேன்என்றும் இடிக்கிறேன்என்றும்
முன்றமுறை   யேமிண்டு - சொல்லும்
வாதரக்கியர்முன்-புலிக்கூட்டத்தின்ஒரு
மான்போல்   மனம்மிண்டு - என்றும்
தீதிலாஒருராமாமிர்தமே
சீவனம்   ஆகஉண்டு - ரகு
நாதனேஉன்கைவில்லோசையும்வா
னரஓசையும்கண்டு   பூரணம்கொண்டு—(இருக்கிற)

௨. சொன்னமுறைபிசகிச்-சிஷ்டர்எண்ணம்அழிந்து
அஷ்டர்என்   னமேமுற்றுமோ-தர்மமேசெயம்
என்னாது வேதங்களும்ஆயுசாஸ்
திரங்களும்   வீண்கத்துமோ - நல்லது
இன்னதேமெய்ஆனால்சந்திரசூரியகதி
இரண்டும்இங்   கேசுற்றுமோ - என்தன்
அன்னையைத்தொட்டால்அவன்-இன்னமும்இருப்பானோ
அருக்கனிப்பேதுக்கையோ-நெருப்பைப்புழுப்பற்றுமோ—(இரு

௩. அந்தநிகும்பலை-யாகம்செய்யப்போனான்
அறிந்தேன்   அவன்சூதை - சாமி
உன்தன்அயோத்திக்கவன்-ஓர்அடிவைத்ததில்லை
உனக்கேன்   மனவேதை - சீதை
சிந்தைதேற்றுவாள்அடியேன்விபீஷணன்பெண்
திரிசடை   எனும்பேதை - மதி

மந்திரி அநுமான்முன்னே-இந்திரசித்துகொன்றது
மாயாசீதைஅது   தாயார்ஜானகிசீதை—(இருக்கிறு)

ஸ்ரீராமர்லட்சுமணருக்குயுத்தமந்திரங்கற்பித்தல்.

விருத்தம்.

கலக்கம்அறஇப்படிசொல்லிக்-காட்டிஅந்தவிபீஷணன்பின்
விலக்கவேணும்நிகும்பலையின்-வேள்விமுடியாமுன்னென்றுன்
பெலத்தபடையும்தம்பியும்என்-பின்கூட்டென்றுன்சாமிஉட்கொண்
டிலக்குமணனைஅழைத்துநதி-யடுத்தான்சொல்லத்தொடுத்தானே.

௫௮-தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தம்பிலட்சுமணா-இந்திரசித்தன்-தலைகொண்டுவாபோடா

அநுபல்லவி.

நம்பீஉன்னோடேயாவர் எதிர்ப்பார்கள்
நான்அறிவேனேஉன்   வீரம் - சத்தியம்
ஆனதுவே   உபகாரம் - உனக்
கேன்இனிச்சொல்லவிஸ்தாரம்-இதுவோபாரம் இந்நேரம் - அடா (தம்பி

சரணங்கள்.

௧. முதல்சண்டைபோல்மறுசண்டைபோல்ச்சேனையை
மோசப்படுத்தாமல்த்   தேக்கி - நின்று
பகைத்தவன் அம்புக்கெதிர் அம்புபோட்டுப்
படுதுகள்ஆகவே   நீக்கி - சாலு
விதத்திலும்போர்செய்து-மகிமைசலித்தவன்
மெலிவானவேளையை   நோக்கி - மார்பில்ப்
பதித்தகவசமும்வில்லையும்போக்குவாய்
பார்த்திடுவார்தேவர்   சாக்ஷி - ஆக
கூற்றுவன்போல்அம்பு   தாக்கி - எல்லாம்
தோற்றிடவேணுமடி-ஆக்கிஉயிரைப்போக்கிவெட்டித்தூக்கி-அடா (தம்பி)

௨. ஆசைநிகும்பலைவேள்விமுடிந்தால்ப்பின்
ஆராலும்வெல்லக்கூ   டாதே - ஒரு
கேசரிபோல்படையோடும்போய்அத்தைக்
கெடுத்திடுவாய்வேளை   ஈதே - அந்த
ஈசன்அருளால்பிரமாஸ்திரம்தொட்டால்
நீயும்பிரமாஸ்திரம்தொ   டாதே - கயிலை

ஈசன்சூலமும் சக்கரமும்இவை
சண்டையும்போட்டின்   மீதே - அது
துண்டுதுண்டாகும்தப்   பாதே - அவன்
சண்டைஎல்லாம்வெறும்சூதே-மலைக்காதே-இப்போதே-அடா
தம்பிலட்சுமணா.

௩. முந்திரவாள்இது இந்திரன்கையினில்
வச்சிரத்தையும்செய்யும்   ஈங்கு - பார்
இந்தவில்அந்த மாயவன்வில்இத்தை
எதுவும்செய்யாதுபோல்   லாங்கு - என்று
அந்தநாளினில்க் கும்பமுனிசொல்ல
அறிந்தாய்நீஅல்லவோ   ஆங்கு - இனி
வந்துநமக்குத் தருமம்தானேபிர
மாணம்என்றுகையில்   வாங்கு - நான்
பூணும்கவசத்தைத்   தாங்கு - அம்பறாத்
தூணிஇந்தாபிடித்தோங்கு-வென்றுநீங்கு-இதேபாங்கு-அடா
தம்பிலட்சுமணா.

இந்திரசித்தை அநுமார்பழித்தல்,

விருத்தம்.

டித்தார்ராமன்சொன்னபடி-பாய்ந்தார்லட்சுமணன்முதலோர்
த்தார்பிடித்தார்கரிபரிதேர்-அழித்தார்[illegible]த்தார்அரக்கர்உயிர்
டித்தார்கடித்தார்யாகத்தைக்-குலைத்தார்கலைத்தார்கொக்கரித்தார்
இடித்தார்வரிவில்இந்திரசித்தை-இழுப்[illegible]ன்அநுமான்பழிப்பானே.

௫௯-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்திரசித்தேஉன்[illegible]ள்-தந்திரவித்தைகள்எல்லாம்-எண்டாபுறப்படடா.

அநுபல்லவி.

உன்தன்நிகும்பலையில்   ஒளித்துச்செய்கிறாய்பூசை
ஒளிக்கும்சேவகனுக்கு   முகத்தில்வண்டாமீசை—இந்தி

சரணங்கள்.

௧. முந்தஉன்தாயைப்போல்   ஒருத்தியைக்கொன்றாயே
முடுக்காஅயோத்திமேல்   நடக்கிறேனென்றாயே
பந்தல்அலைந்தவனே   நீயும்சென்றாயோ
பரதனை   வென்றாயோ
அந்தராவணனுக்கு   வந்தலச்சைசாதோ
அங்கத்தைக்கொண்டுபோய்-ஆற்றில்   அலசொணாதோ

வந்தநாளிக்கொள்ள
வாணுல்லவங்கவேணுமோ-சாண் பந்தபோகமிது
அல்லவோவயிறு—இந்தி

உ. விடுக்கும்வச்சிராயுதம் முனைவேலாயுதம்
விஷ்ணுசக்கராயுதம் சிவன்சூலாயுதம்
எடுக்கும்நாகபாசம் பிரம்மாஸ்திரத்தோடு
எதைவேணும் அதைப்போடு
இடுக்கிடவினைசெய்யும் உங்களுக்கோரசம்
செத்தவனெங்க ளுக்குண்டோடாமோசம்
அடுக்களைபூனைபோல் இடுக்கிலேசுழிக்கிறாய்
ஆட்டுத்தகள்ளன் போலேயிழிக்கிறாய்—இந்தி

௩. நிறைகடல்போலஉன் சேனைகள்களமேலே
சேர்ஆகவிருந்ததைப் பாரடாகண்ணாலே
பறப்பறப்பிலேயிரும் பலியாகமும்போச்சே
பாழும்கூடலே ஆச்சே
கருவிநமனும்வந்து குறுகிக்கொண்டான்உன்னை
காலம்முடிந்ததினி பேலேன்னடாமுன்னே
சிறைபட்டஇந்திரனும் குறைவிட்டுத்தழைக்கிறான்
செல்வலட்சுமணன்இதோ-கொல்லவந் தழைக்கிறான்—இந்தி

இந்திரசித்துக்கும் லட்சுமணருக்கும் மூன்றாம் முறையுத்த

விருத்தம்.

மாருதிஇவ்வாறோத வளைந்தார்[illegible]த்துருச்சேனை
வீரவானரரும்சண்டை விளைத்திட்டார்இந்திரசித்தன்
தேரினிலேறிக்கொண்டான் சிலைகொண்டான்தம்பிதானும்
மாருதிமேல்க்கொண்டப்பு வருவித்தான்கருவித்[illegible]

௬௰-தரு-கலியாணிராகம்-ரூபகதாளம்.

பல்லவி.

அஸ்திரவருஷம்தம்பி பொழிந்தானே - இரும்பலையிலேஇந்திர
சித்தன்படைகள்போ யொழிந்தானே

அநுபல்லவி.

வைத்தசமித்தும் பிணமும்எரிபட - மந்திரபூரணகும்பமும்நெரிபட
எத்திஅதில்எழும் தேரும்சிதைபட - எருமையின்கூட்டங்களெல்லாமல
ரத்தம்எழுந்திட சுற்றம்விழுந்திட [அதைபட
யாகம்கலைந்திட பூதம்சூழ்ந்திட—அஸ்திர

சரணங்கள்

க. தேரில்அரக்கனேறிஅநுமானைச்
சிலகணையால்க்களை செய்தான்
தேரில்எழுந்தஅநுமன்புயம்தம்பி
சின்னகணைசில பெய்தான்
கூரியஅரிகளால் அரக்கன்அந்த
குரங்குப்படையிந்த அடித்தான்
வாரிஅம்பால்த்தம்பி அரக்கன்சேனையை
மண்ணுமேமண்ணாக மடித்தான் - தேர்
வலம்கொண்டுசுற்ற அநுமான்-இடம்கொண்டுதந்த-அவன்தேர்
வானில்உலாவ அநுமான்வி-டேன்என்றுதாவ-இருவர்கை
வாழிவிடுங்கணை எங்கும்நிறைந்திட
மலைகள்எல்லாம்வெந்து நீறாய்இறைந்திட
வருகடல்நீரும் வற்றிக்குறைபட
எட்டுத்திக்கும்தெரி யாமல்மறைபட
எங்கும்புகைமூட்ட எங்கும்தணல்கொட்ட
இரவுபகல்ஆக நிருதன்மனம்நோக—அஸ்திர

இளையான்மேல்ப்பின்னும் அரக்கன்சிறி விடுத்தான்
இருபத்தைந்துகணை
தொளையாஅவன்மார்பும்கவசமும்தம்பி தொடுத்தான்
தொளைத்தோட்டிருகணை
[illegible]ளைஆய்அவன்அநுமான்மேலேசத்தம் விதைத்தான்
[illegible]ணைச்சிலகணை
வளையவரும்அநுமான்அவன்தேரினை உதைத்தான் - அவன்
மனுக்கொன்றொடியவே பத்தம்பைத்தூறி-விடத்தம்பி
மற்றொன்றிலேறி-அப்பன்மேலே தடுக்காமல்முந்தி-பொட்ட-அவன்
வடிக்கணைசிந்தி-அவன்அதைத்- அம்பால்த்தொளைசெய்ய
மந்தாரத்தோளூர் தேனாவிழக்கொய்ய
மற்றோர்அம்பால்அவன் கக்கிஅவசத்தில்
கொந்தரக்கன்ரத்தம் தம்பிகவசத்தில்
நூறுபத்தம்பெய்யத் பழுதாய்விடக்கண்டு
மழைபாமலேவிண்டு எங்கும்தன்னைமுந்த—அஸ்திர
நுங்கிஅவன்மிந்த

௩. சிந்தச்சிலகணைஅரக்கன்பின்னும்அந்தச் தூற்றினான்.
சேவகன்மார்பினில்

புந்திமகிழ்தம்பிஅரக்கன்மணிநெற்றி
புதையச்சிலகணை   ஏற்றினன்
இந்தவில்அந்தமாயவன்வில் இவன்
ஈசன்ஆமென்றவன்   கூறினன்
அந்தவேளைவிபீஷணன்தம்பியை
அரக்கன்மேல்முடுகென்று   பேசினன் - அவன்
அக்கினிஅஸ்திரம்-விடத்தம்பி-அக்கினிஅஸ்திரம்-விட்டிட-அவன்
ஆதித்தன்அஸ்திரம்-விடத்தம்பி-ஆதித்தன்அஸ்திரம்-விட்டேவி
ஆகப்பின்னும்சில   அம்பைப்பொழிந்திட   [சை
அணிஅணியாகின்ற   தேர்கள்அழிந்திட
ஏகத்தில்வந்த   கெசங்கள்படிந்திட
ராக்ஷதவீரர்கள்   ஆரும்மடிந்திட
இற்றதுண்டங்களும்   அற்றமுண்டங்களும்
லங்கையில்ப்போய்விழ   மங்கையர்கண்டழ—அஸ்திர

௪. ஆரணன்அஸ்திரம்அவன்விடச்சிவன்
ஆயுதத்தால்த்தம்பி   கொய்தான்
காரணன்சூலத்தைஅவன்விடத்தம்பி
ஈசர்சூலத்தால்ப்பொடி   செய்தான்
நாரணன்அஸ்திரம்தொட்டரக்கனெங்கும்
நடுங்கிடவேவாய்   தோங்கினன்
போரினில்த்தம்பியைஅவலஞ்செய்து
போகக்கண்டேபயந்   தேங்கினன் - தன்
புத்தியுங்கெட்டான்-தனக்கு[illegible]சத்தியும்[illegible]ட்டான்-தம்பிசெய்த
போரையும்பார்த்தான்-ஓடிஒளிக்க-ஊரையும்பார்த்தான்
போக்கிடம்இல்லாது   பார்த்துமெலிபட்ட   [ம்
போதினிலேஅந்தப்   பாதகன்மெல்ப்போட
வாக்கிஅய்யன்அம்புபோடக்   [illegible]பட்டு
மார்புங்கரங்களும்   தோளும்தொளைபட்டு
வல்அரக்கன்வட்சம்   எல்லரும்ஒருலட்சம்
சல்லடைக்கண்ஆகச்   சில்லிகள்ஆய்ப்போக—அஸ்திர

* * *

இந்திரசித்து விபீஷணனை வயிற்றெரிச்சலாலே ஏசுதல்

விருத்தம்.

சில்லிகளாய்ப்போனஇந்திர சித்தனவன் அழிந்ததொரு தேர்மேல் நின்றே, கல்லின்மழையெனஅம்பு பொழிந்தவ்வீடணனைக் கண்டான்

எம்மைக், கொல்லநிரும்பலைகெடுத்தாய்அரக்கர்குலத்தையும் கெடுத்தாய் [illegible]ரினாலே, எல்லவரையும்கெடுத்தாய் என்றுவசைபேசுவான் வசுவானே

௬௧-தரு-பைரவிராகம் ஆடதாளசாப்பு.

பல்லவி.

சிற்றப்பா நீதான்-இத்தனை அபகீர்த்தி-பெற்றதேபோதும்அடா

அநுபல்லவி.

றெடுத்தாயே - ஜோரான்
சத்தியவிபீஷணன்என்   கெடுத்தாயே
சகைத்தகிரும்பலையும்   போனாயே - அய்யோ
வற்றல்மனிதர்க்காளாய்ப்
வளர்த்தகிடாக்கையில் பாய்ந்தால்ப்போல்ஆனாயே— சிற்றப்பா

சரணங்கள்.

௧. விநயம்சொல்லிமாயப்பூனைவேஷம்கொண்டாய்
வேருடனெங்களைக்   கெல்லவோ - நாங்கள்
அனைவரும்இறந்தபின்ஓரான்காணியா
அரசாளலங்கையில்ச்   செல்லவோ
இனமும்ஒருகுலத்தில்உண்டும் இப்படிசதி
செய்தபாவம்நிரச்   சொல்லவோ-அற்ப
மனிதர்க்கும்பஞ்சைஆய்ப்பணியம்செய்கிறாய்உயிர்
வைத்திருக்கிறதிலும்செத்தால்குணம் அல்லவோ— சிற்றப்

௨. மாடுமேய்க்கிபோனோ-தடிகொண்டதிரிகிறாய்
மானமும்லச்சையும்   துறந்தாயோ - இனி
[illegible]ம்முடிபெற்றாலும்-சின்னமனிதர்க்குநீ
தொண்டன்அல்லால்என்ன   சிறந்தாயோ
தேடிநம்மைவணங்கும்-பேரைநாம்வணங்கினால்
சின்னத்தனம்என்பதை   மறந்தாயோ-உன்னுடன்
கூடப்பிறந்தவனைக்-கொல்லென்றுகோட்சொல்லி
குடிகெடுக்கவென்றிந்த-குலத்தினில்ப்   பிறந்தாயோ — சிற்றப்

௩. பார்ஆளல்ஆமென்று-மனப்பால்குடிக்கிறாய்
பஞ்சைஉன்னால்அது   தள்ளுமோ - இந்த
ஊரில்வராதுக்கு-வழிஇட்டாயேஉனக்
கொருக்காலும்வசைஇது   விள்ளுமோ
நீர்உள்ளமட்டுக்கும்-மீனும்துள்ளும் அந்த
நீர்போனால்மீன்என்ன   துள்ளுமோ-வெகு
பேர்ஆம்ராட்சதர்எல்லாம்-போய்நீஒருத்தனும்
பிணந்தின்னிப்பூச்சிபோல்-இருந்தால்க்கனம் கொள்ளுமோ(சி)

விபீஷணர்இந்திரசித்துக்குரைத்தமொழிகள்.

விருத்தம்.

எல்லாம்முடன்இந்திரசித்தன்-இவ்வாறுரைக்கஉரைத்ததெல்லாம்
செல்லாதடடா தருமமும்சத்-தியமும்நானேகைக்கொண்டேன்
பொல்லாப்பாவம்கைக்கொண்டாய்-போவாய்உருண்டுபோவாய்என்
நல்ஆர்மேனிவிபீஷணர்அவர்-சொற்பான்மறுசொல்லுரைப்பரானா

௬௨-தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

கஷ்டப்பயலே-இந்திரசித்தேஎன்ன - சொன்னாய்அடாபயலே.

அநுபல்லவி.

இஷ்டம்ஆம்எனக்கு ராமன்பதமேசொந்தம்
எனக்கும்உங்களுக்கும் இனிமேல்என்னடாசொந்தம் —(கஷ்)

சரணங்கள்.

௧. மன்னர்ஆதிமுன்பின்தர்மம்தன்னைஅல்லாமல்
வாழ்ந்தவர் எவர்தாமோ
தன்னிலேகுதித்திருய்-பாவம்சாம்அல்லாமல்
தர்மமென் ப்துசாமோ
கன்னிச்சீதைஅன்னை-சிறைஇருந்தழுகிற
கண்ணீர்சும்மாப் போமோ
அன்னியஸ்திரிபுண்ணியஸ்-திரீஎன்றெண்ணிப்பாராமல்
அநீத்தியம்செய்யும்உங்கள்-முகத்தில்விழிக்கல் ஆமோ—கஷ்

௨. சிந்தைவஞ்சனைசெய்யேன்-புலைசெய்யேன்கொலைசெய்யேன்
தெய்வம்என்னை ஒறுக்குமோ
அந்தப்புத்திஉங்களுக் கிருந்தால்வசவர
ஆதிக்கமும் [illegible]றுகுமோ
எனதாய்சீதைமேல் ஆசைஉன்அப்பனுக்கு
இன்னம்தான் வெறுக்குமோ
இந்தப்புத்தியினாலே இலங்கைச்செல்வமெல்லாம்
இழக்கல்ஆச்சேஎனக்குமுழுதேங்காய் பொறுக்குமோ—கஷ்

௩. கொடும்பாவம்என்னசெய்தேனோநான்உங்கள்
குலத்தில்வந்துடம் பெடுத்தேன்
கடந்துபோகவேண்டி-உங்களைக்கட்டிலே
வைநயக்கழுவி விடுத்தேன்
மடங்காராவணனுக்கு நந்தனைபுத்திகள்
வகைமணியாத் தொடுத்தேன்

அடங்காப்பாம்புக்கு-சாசா[illegible]த்தடி
ஆம்என்றவரைவிட்டு ராமன்தனைஅடுத்தேன்—கஷ்

இந்திரசித்துதகப்பனுடன்முறைபடுதல்.

விருத்தம்.

எதிர்கொண்டிவ்வார்த்தைசொன்ன விடணன்மேல் அம்பொன்றை
எய்தான்அத்தகக், கதிகொண்டதம்பிகொய்தான் வேலெய்தான்அத்தையு
ம்அக்கணைத்துண்டுக்கொய்தான், மூதிர்கொண்டகோபமுடன் கொச்சனையி
ட்டொழித்திலங்கை மூதூர்சேர்ந்தான், குதிகொண்டான் அப்பன்முன்
சேர்ந்துமுறையிட்டான் இந்திரசித்தன் குறைபட்டானே.

௬௩-தரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அய்யாராவணா-என்னுடைச்சண்டை-ஆகாதாகாதையா.

அநுபல்லவி.

நொய்ஆம்மனிதன் கைஅம்புகளாலே
நொந்தேனேஒளித்தோடி வந்தேனேஇனிமேலே—அய்யா

சரணங்கள்.

௧. வட்டவாரஉலகில்த் நம்பிறக்கத்தறை
மட்டம்ஆச்சுதெம்பார் உனக்கேஅந்தத்துறை
கட்டிஉன்தம்பிஎன் வேள்வியைத்தடுத்தானே
கெடுத்தான் கெடுத்தானே
இட்டம்ஆனதொரு பிரமாஸ்திரம்போட்டும்
சிவன்படையுடனே சவன்படைதன்னைவேட்டும்
குட்டிக்கரணப்பாட் டென்றாலேஆனமட்டும்
குதித்தும்குடத்தில்இட்ட விளக்காச்சேஎன்னபட்டும்(அய்)

௨. ஆரும்அறிவா ரேஎன்கைவில்லை
ஆண்டவன்காரியத்தில் சற்றும்வஞ்சனைஇல்லை
தாராளமா அடிக்கடிபோய்நின்றேன்
சகலபே ரையும்கொன்றேன்
வாராஉயிர்வந்து வந்துகிளைக்கிறார்
வருத்தப்பெழுந்து முளைத்தால்போல்முளைக்கிறார்
தீராப்பழிகொண்டோம் ஆனாவிட்டதுசனி
தெய்வபலமும்இல்லை செய்வதுஎன்டோ இனி-(அய்ய)

௩. நீஇருகாம்
நீயுங்காணும்அல்லோ
எதோபலம்
எடுத்தஅடி
ஆகலால்அவர்முன்னன்
அங்கேஇன்னம்போனால்
சீதையைவிடுவதோ
சித்தத்துக்குச்சரிப்

மன்செல்வம்செருக்கிறோம்
தட்டிஇருக்கிறோம்
வரவரஅடங்குதே
மடங்குதே
ருதெல்லாம்விட்டுப்போட்டேன்
இங்கேநான்வரமாட்டேன்
காரியம்அப்பால்[illegible]ன்தன்
போனபடி[illegible]ன்தன்(அ)

—*—

இந்திரசித்தனைராவணன்உடாசனித்தல்.

விருத்தம்.

இனம்கொண்டிப்படி தன்பிள்ளை-இசைத்ததைஇலங்கைவேந்தன்
கனம்கொண்டதணல்வாய்நெய்யைக்-கவிழ்த்ததுபோலேகொண்டான்
மனம்கொண்டபயத்தால்சொன்னாய் மனிதரோர்பொருட்டோவென்னச்
சினம்கொண்டேஇந்திரசித்தைச்-சீறுவான்கூறுவானே.

௬௨-தரு-நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபுத்திசொன்னாய் அடா - இந்திரசித்தே நீ
என்னபுத்திசொன்னாய் அடா

அநுபல்லவி.

என்னபுத்திசொன்னாய்நீ-சின்னமனிதர்க்கஞ்சி
என்றுடனேமுறை
இட்டாயே - பயப்
பட்டாயே - நீ
கெட்டாயே - (என்னபுத்தி)

சரணங்கள்.

௧. ஆறுமுகஉமையவள்-கோன்ஆரும்பிள்ளை
மேனாளில்எடுத்ததைத்
நானுசெய்வதற்குநீ-தானுபயமேல்
போனதும்என்னளவ
தலம்போச்சோ
குலம்போச்சோ - படைக்
கலம்போச்சோ - மூல
பலம்போச்சோ - என்னபு

௨. சோருவேனோமனிதர்-சரஉயிரையும்அடி
வேருடனேகல்லிப்
பறியாமல்

*நீரும்போதும்ராமன் பேருமென்பேரும்எல்
லாரும்சொல்லிக்கொள்வாரோ
பிரியாமல்-இத்தை
அறியாமல்-முன்பின்
குறியாமல்—என்ன

௩. செயம்ஆனகீர்த்தியைப் புயலர்மல்[illegible]பிதாக்குப்
பயம்ஆய்அபகீர்த்தியைத் தொடுவேனோ
கயில்ஆகாதவன்போலே மயில்போலும்சீதையை
உயிர்போடேநான்இனி விடுவேனோ-முது
கெடுவேனோ-சும்மாப்
படுவேனோ—என்ன

[illegible]ம்முறையுத்தத்தில் இந்திரசித்தன்வதை.

விருத்தம்.

தவறுபடா இடிக்கும்ஒருத் தலைவலிக்குத்
தலையணையை மாற்றிப்போட் டால்போமேஎன்
உவமைஇது என்மகன்வார்த் தையைக்கேளாமல்
உறுமும்இரா வணனைவிட்டான் ஊரைவிட்டான்
கவனமொடாப் பிரங்குதி[illegible]கொண்டதேர்மேல்க்
கடல்ப்படையும் தானும்[illegible] களத்தில்வந்தான்
பவன்எனும்லட் சுமணன்அம்பு பாயப்பாயப்
பாய்ந்திட்டான் இந்திரசித்து மாண்டிட்டானே.

௬௩-தரு-கல்யாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

[illegible]ந்தானே-இந்திரசித்தன்-விழுந்தானேமண்மேல்.

அநுபல்லவி.

இழந்திட்டோம்[illegible]கையை என்மனம்மீண்டுமீண்டு
அழுங்கத்தழுவிஅப்பன் ஆசையைவிண்டுவிண்டு
எழும்பிப்பரிகளா யிரம்கொண்டதேர்மேல்க்கொண்டு
குழந்தைத்தம்பிகைஅம்பால் கிழிந்திட்டுவதையுண்டு—விழுந்

சரணங்கள்.

௧. பிறைபக்கணைதொடுத்தார் இரண்டுபேர்களும்
நெறநெறென்றுசொரி மழைபோலே

---

* இதை இரட்டித்துப்பாடும்போது நான் என்று முதலிலே கூட்டிப்பாடிக்கொள்ளவும்.

பிறகவன்தேரையும் சாரதியையும்
பிளந்தானேதம்பி   ததன்போலே
உறுதியாஅரக்கன் கல்லின்மழைபொழிய
உருண்டவேகுரங்குகள்   ஒருகாலே
கறுவிஇளையவன் ஒருகணைவிடஅந்தக்
கணைவந்தரக்கன்மேல்   படலாலே
மறையும்கவசம்பிளந்   துடம்படங்கலும்ஊதக்கு
வடிக்கணைஒன்றால்அவன்   விடும்வென்றுலட்டு இதற்
பிறைமைப்பாய்புதொட்டுத்   தறையில்விழுமெகாகது
பிடித்தவில்லுடன்அவன்   இடக்கையுங்கூட அற்று—விரு

௨. வளர்த்ததாயாரும் பெண்களும் இலங்கையில்
வாய்விட்டழுதுகண்   ணீர்விட
இளைப்பிலாஇனா வந்ததென்றுபேய்
எழும்பிஎழும்பிக்கொண்   டாடிக்க
ஒளித்ததிருட்டரக்கன் வருகிறான்என்றுதேர்
ஓசைகொண்டுதேவர்   கிலிபிடிக்க
கிளைத்தாலேபோலே ஆகாசத்திலாங்கு
கொர்ச்சித்தானேஅண்ட   முழ்வெடிக்க
சளைப்பில்லாமல்வரும்   சேனைகளெட்டு
திக்கிலும்லட்சுமணன்   கைக்கொள்ளாகவிட்டு
குளத்தைக்குழப்பிஅங்கே   பருந்துகளை இட்டு
கொடுத்தால்போல்அரக்கரைக் குரங்குக்கேஇட்டுப்பட்டு—விரு

௩. நித்தியம்ஆவசவேள்விஇவச
னத்திலேசொல்லும்   பொருள்ஒன்று
சித்திஆவது வேதியரைத்தெரி
சித்தவருகிற   தோன்று
கர்த்தன்ஆம்ராமனேபர
தத்துவம்ஆம்அவன்   வேறன்று
(*) சத்தியம்எனில்இந்திரசித்தன்த[illegible]யிபி
சத்திலேகொண்டு   வாவென்று
அர்த்தசந்திரபாணம்   அய்யன்தொடுத்தால்போலே
அற்றதேஅவன்தலை   எற்றிவிடுத்தால்போலே.

(*) இதைஇரட்டித்துப்பாடும்போது இவை என்று முதலிலே கூட்டிப்பாடிக்கொள்ளவும்.

தத்துவமுனிவர்க்கெல்லாம்வெ[illegible] கொடுத்தால்போலே
தாரும்இந்திராதியர்க்குக் கொடுத்தால்போலே—விரு

இந்திரசித்துவதையிராவணன்கேட்ட இடத்திலேபுலம்பல்

விருத்தம்.

இந்திரசித்தன்இந்தவிதம்விழுந்தான்தேவர்
இரக்கத்தால்குரக்கினத்தார்எழுந்தார்தம்பி
வந்தனுமாறுடன்போனான்சாமிகாலில்
வச்சரக்கன்தலைதனைஅங்கதனும்வைத்தான்
மைந்தர்கவிபீஷணனைஅய்யன்மகிழ்ந்தான்அப்பால்த்
தூதர்இராவணற்குப்போய்ச்சொன்னார்சொல்லப்
பாநம்எரித்தால்போலமகனைஎண்ணிப்
பத்துவாயாலும்அலங்கத்துவானே.

மக-இப்பதை-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மந்திரியேஎன்றுனையே-மகனே   மகனேஎன்பான்ஒருவாயால்
இந்திரசித்தேஇந்திரசித்தேஎன்று   இரைந்தழுவான்ஒருவாயால்
௨. இத்தினில்என்னைத்தனிக்கவிட்டுப்போய்-இறந்தாயேஎன்பான்ஒருவாயால்
முத்தத்தைஇனிக்காண்பதெப்போதோ   என்று-முறைஇடுவான்ஒருவாயால்
[illegible]வனிவாழைக்கனிதனிலே-முள்ளு   பாய்ந்ததுபோலேமகனே
[illegible]மனிதன்அம்புகள்பாய்ந்ததோ-உன்தன்   மார்பில்என்பான்ஒரு[illegible]யால்
[illegible]பரம்சேர்இந்திரன்முடிமேல்-மகனே   பதித்தவிந்தமணிமாலை
நரன்காலில்விழலாச்சோ-இந்த   நாளில்என்பான்ஒருவாயால்
௩. நன்றும்மூசலாலேசிங்கம்-பெருந்   [illegible]த்ததுபோலே
பிள்ளைமனிதன்கைஅம்பால்பட்டுப்-பிரண்டாயோஎன்பான்ஒருவாயால்
கூசன்முதலோர்படைகளும்-உடு   எனப்போமேஉன்னைக்கால
பாசமதுஇண்டிடுமோ-ஐயோ   பதிஎன்பான்ஒருவாயால்
௪. அரனையும்மாயனையும்வென்று திக்கில்   அஷ்டகெசங்களையும்வென்று
நரனுக்குத்தோற்றிடலாச்சே[illegible]   இந்த-காலில்என்பான்ஒருவாயால்
௫. மலைகலங்கினாலும்சற்றே-உன்[illegible]   மனதுகலங்காயேமகனே
நிலைகலங்கிவிழுந்தாயே-இந்த   [illegible]த்திலென்பான்ஒருவாயால்

——*——

இந்திரசித்துக்காகராவணன்ரணகளத்திலேபுலம்பல்.

விருத்தம்.

என்றழுதுகளம்பார்க்கநடந்தான்பிள்ளை
இடக்கையும்வில்லும்அற்றுக்கிடக்கக்கண்டான்

சென்றெடுத்தான்முண்டம்[illegible]ம்உடம்பைக்கண்டான்
சிரம்காணுன்இரங்கினு[illegible]லகம்மூன்றும்
வென்றநான்இந்தஅலங்கோ[illegible]ம்பார்க்க
விதித்தாயோஎன்மகனே[illegible]கனேஎன்று
கன்றிழந்தபசுப்போலவா[illegible]விட்டுங்
கதறினுன்ராவணனும்பதறினனே

சுசு-தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மகனேஇந்திர-சித்தோரன்-இனிமனதெப்படி-துணிவேன்

அநுபல்லவி.

இகம்மேல்நான்ஒரு பெண்ணாசையைத்தொட்டு
என்உயிர்க்குயிரான உன்னைஇழந்துவிட்டு—மகனே

சரணங்கள்.

க. வனமான்ஒருபுலியை-அடித்தால்போல
மனிதன்உன்னைஅடிக்க விடுத்தேனே
கனமும்துரைத்தனமும்-தரும்உன்னைஎன்இரு
கண்பறிகொடுத்தால்போல் கொடுத்தேனே
மனிதன்நாளைச்சண்டையினில்என்னை மாட்டுவானே
மயங்கியநமனும்கைச்-சங்கிலி ஆட்டுவானே
இனிமேல்இந்திரனும்-என்காப்பு காட்டுவானே
இலங்கையிற்சூரியன்தேராக் கலங்கியல் ஓட்டுவானே(மக)

உ. நாற்றிசையிலும்உன்தன் கூத்தியர்அழக்கண்டு
நானும்அழு[illegible] களிப்பேனோ
சீர்த்திஆம்சிவனுக்கும் மாயனுக்கும்பயந்து
இருட்டின்போர்லேஇனி ஒளிப்பேனோ
பார்த்தால்இனிஇந்த
பரியாசம்செய்தென்னைத் [illegible]தருவாரோ
போர்த்தெவரும்வகை [illegible]என்மருவாரோ
பெண்டுகள்கூடஇனிச் வார்த்தைகள்தருவாரோ
சண்டைக்குவருவாரோ(மகனே)

ங. பயம்ஆம்குரங்கினில் ஒன்றுமசெத்ததில்லையே
படுகளத்தினில்நீயே செத்தாயே
நயமானஎனக்குநீ-செய்யும்உத்தரிமையை
நானேஉனக்குச்செய்ய வைத்தாயே
உயிரோடேமனிதன் கையில்விழுந்தபேச்சே
உலகம்உள்ளமட்டுக்கும் தொலையுமோஇதுவச்சே

வயிறும்குடலும்பற்றி ம[illegible]யல்ஆச்சே
வல்லமையும்செல்வமும் எல்லாம்உன்னோடேபோச்சே—(மக)

—*—

இந்திரசித்துக்காகமண்டோதரிபுலம்பல்.

விருத்தம்.

எடுத்திந்தவண்ணம்போர்க்களத்திலுள்ளே
இராவணனும்அழுதுமகன்உடலைக்கொண்டு
தடுக்கரியஅரமனையில்வந்துசேர்ந்தான்
தரியமண்டோதரிஅறிந்தாள்அவன்கால்விழுந்து
கெடுத்தாயோமகனைஎன்றொப்பாரிசொன்னுள்
[illegible]டகெடென்றுபிரண்டாள்பின்மகன்மேல்விழுந்தாள்
ஆடுதமகன்உடலைத்தன்கண்ணீராலே
அலம்பினுள்பதைபதைத்துப்புலம்பினுளே

சுஎ-தரு-ஆகிரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஐயோமகனே-இனிஎன்செய்வேன்-ஐயையோமகனே

சரணங்கள்.

க. கைஇருபதுள்ளஉன்தன்
ஐயனைப்போல்மூஉலகும்
மெய்மைஆகநீஅரசு
செய்குவாயென்றிருந்தேனே.
ஐயோ.

உ. குழந்தைஆய்ப்பிறந்தஅன்றுன்
அழும்குரல்கேட்டிடும்மேகம்
மழுங்கியேஒடுங்கிமண்மேல்
விழுந்தகீர்த்தியும்பாழாச்சே
ஐயோ.

ங. தன்நிகர்ஒன்றும்இல்லாத
உன்னைஇவ்வுலகத்திலோர்
சின்னமனிதன்கொல்லவோ
என்னபாவம்பண்ணினேனோ.
ஐயோ.

ச. அப்புலிவாஎன்னவந்து
கும்பிட்டவன்மேல்மறவை
வம்பிதென்றுவாய்க்குஉனதன்
தென்னபகாஎன்றுகாண்பேனோ.
ஐயோ.

ரு. கண்ணேஎன்கருக்கலமே
மண்ணோடேமண்ஆனுயோ
பெண்ணாலேகெட்டுக்குடியாய்ப்
பண்ணிவிட்டானேஉன்அப்பன்.
ஐயோ.

சு. காட்டுச்சிங்கக்குட்டிதனைக்
கூட்டிப்பிடித்துச்சண்டை
மூட்டும்உன்னுடையவிளை
யாட்டைஎன்றைக்குக்காண்பேனோ.
ஐயோ.

எ. சின்னஞ்சிறுவயதினில்
இன்னபடிஆவாயென்று
என்னமாப்பாவிப்பிரமன்
தன்கைஎழுத்தைஇட்டானோ.
ஐயோ.

அ. அந்தரங்கிட்டியேஅந்த
இந்திரனைக்கட்டியேஅன்றுன்
தந்தைமுன்விட்டையேஇன்று
என்தன்னைத்தெருவில்விட்டையே
ஐயோ.

கூ. கோளுங்குன்றுமிடிபேச்சும்
காளும்சொல்லிஉன்அத்தை
ஆளும்பிள்ளையைக்கொல்ல
மூளுவித்தாளேபோர்பாவி
ஐயோ

ய. இரக்கம்ஆயஉன்தேவியாம்
அரக்கியர்கூடிவந்திங்கே
உரக்கஅழுதாய்உன்முகம்
பார்க்கநீகாட்டாததேனோ
ஐயோ

யக. ஒக்கலையும்மக்களையும்
தக்காமலேசெய்தக்காரணம்
மக்கமனைக்குலைத்தகாரன்
வெட்கவைத்தானேஉன்அப்பன்
ஐயோ

யஉ. இச்சகம்பேசுவோர்வார்த்தை
மெய்ச்சியேஉன்அப்பனைஎன்தன்
மச்சுனர்சொன்னவார்த்தையைத்
துச்சம்ஆகமதித்தானே
ஐயோ

யங. வீரியமில்லாமனிதன்செய்
போரில்நீவிழ்ந்ததுமக
மேருவும்வாயுவினாலே
வேர்ந்துவிழ்ந்தாற்போலாச்சே
ஐயோ

யச. துதிசெய்துசீதையைவிடத்
தந்திடுதென்றுநீசொல்லியும்
விதிவழியிலேஉன்அப்பன்
மதிபோச்சுதேஎன்செய்வேன்
ஐயோ

யரு. ஒப்பில்லாச்சீதையாலே
இப்படியடிபட்டபோதுன்
அப்பன்ஆருயிருங்காளை
எப்படிஆயோஅறியேன்
ஐயோ

யசு. பெருகும்உன்துயருங்காளை
வருதுயர்களையும்எண்ணி
இருதலைக்கொள்ளியில்எறும்
புருகுதல்போலஆனேனே
ஐயோ

சீதையைவெட்டநடந்தராவணனைமகோதரன்தடுத்தல்.

விருத்தம்.

தொடுத்துமண்டோதரிபுலம்பும்வசனமெல்லாம்
சுயக்கெணவுண்டிட்டுமிதுக்கென்றங்கே
அடுத்திருந்தஅரக்கன்மனம்கலங்கிமக்கள்
அனைவர்களும்அரக்கர்களும்மாண்டார்ஆசை
விடுத்தவன்சீதைதனைஇனிமேற்கொல்வேனென்று
வெகுண்டெடுத்தான்அந்தவேளைஇந்த
துடுக்காமோராவணாஇதுபெண்பாவம்
சொல்லென்றான்மகோதரனுமின்னன்றானே

சுஅ தரு-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தச்சனகிதனைக்-கொன்றிக்கட்டுக்கிறாய்-வதையாராவணேஸ்வரா

அநுபல்லவி.

சொந்தமென்றவளைப்   பந்துபோல்க்கொண்டுபோன
அற்பமனிதர்தம்மை   விட்டுவிட்டேபிழைஆன—இந்த

சரணங்கள்

க. போட்டானதேவர்களும்   கொட்டமாய்யடிப்பாரே
புலஸ்தியன்குலத்தாக்கோர்   பழிகாட்டியிருப்பாரே

அஷ்டசெம்பத்தி   கெட்டான்என்றொன்றதோ
அரணாகயிலாசமும்   பரியாசம்பண்ணுதோ
கட்டானகாலமேயோ   மேலேஎறிந்தவாளை
கன்னிமேலேஎறிந்தால்   சொன்னம்சொல்லாரோநாளை
முட்டாளும்கூடஉன்னைச்   சட்டைதான்செய்வானோ
மூன்றுலோகமும்கட்டி   ஆண்டஇப்படிதானோ—இந்

உ. முடிக்கில்இருந்துகொண்டு   அடிக்கிறாய்என்னசாரம்
முன்கொன்றமனிதரை   முனைகொண்டால்அல்லோவீரம்
அடித்தாரைக்கெடுக்கிறாய்   உன்னைப்போல்உண்டோஎவனும்
ஆயிரம்வேதம்கற்றும்   நீயேகற்றறிவோனும்
பிடித்தகத்திஉறையில்   அடக்கவேணும்என்சாமி
பெண்பழிகொண்டால்முனே   பங்கம்சொல்லாதோபூமி
எடுப்பானபேருக்கெல்லாம்   எடுப்பானநீஉன்மேலே
எய்தவனைநோகாமல்   அம்பைநொந்ததுபோலே—இந்

உ. அரிஅரபிரம்மாதிகள்   யாவர்க்கும்முதல்மூர்த்தி
ஆகியஉனக்கிது   ஆகுமோஅபகீர்த்தி
பெருமைபோகிறதைபோ   பாராய்எனதுசொல்லை
பெண்பேச்சைக்கத்திஎடுக்   மன்னவர்எங்கும்இல்லை
தரும்ஒருகோபம்வந்து   கிணற்றில்விழுந்தால்ஆயிரம்
சந்தோஷம்வந்தாலும்   எழும்பப்போமோசரீரம்
நரைக்கெலிப்பாய்நாளை   விருதாசனும்புகுவாய்
நகரில்வருவாய்பிற   கிவனைஎங்கேகாணுவாய்—இந்

*

தூதர்ராவணனுக்குமூலபலத்தைவிவரித்தல்.

விருத்தம்.

அருந்துணைமந்திரிஇந்தவாறுசொல்ல
அரக்கனும்வாள்விட்டெறிந்தான்மகன்றம்மைப்
பெருந்தமிலத்தோணிஇட்டான்அழைக்கப்போன
பெருமூலபலசேனைவரவுகேட்டான்
விரிந்தஅதுஅணிஅணியாய்போகட்டென்றான்
மென்மேலும்அதுபோகவந்ததூதர்
தெரிந்ததுசொல்வோம்சாமிகாதுக்குள்ளே
சேர்என்றராவணைகலைகையாய்ப்பாரென்றாரே.

௬௨-இபளை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. இராசராவணவீரா விசயம்-சேர்இருபதுதோளாய்
யாரும்சொல்லா-மூலபலம்இந்த அறிந்ததுசொல்லக்கேளாய்
௨. சாகத்தீவினில்உறைவார் இவர்-வேகத்தைஎவர்மொழிவார்
மேகத்தைக்கூடத் தாகத்தினாலே-நோகக்கைகொண்டுபிழிவார்
௩. குசைஎனும்பெருந்தீவோர் இவர்-விசயம்கேள்ஒருபேச்சு
வசனம்சொல்லவே-இசையும்தேவர்க்கும் அசையுமோஒருமூச்சு
௪. இறலித்தீவினில்உறைவோர்-உன்தன் முறைதப்பாமலேதிரிவோர்
திறம்மிக்கோர்இந்தத்தரைமுற்றும்சுற்றி மறலிக்கும்கொலைபுரிவோர்
௫. பவளத்தீவினைவிட்டோர் இவர்-கவனத்தால்புறப்பட்டோர்
அவனிக்கேபெருந்-திவலைப்பாற்கடல் எவறக்கால்அடிஇட்டோர்
௬. மலையமாமலைத்தீவோர் இவர்-தொலையிலேநின்றும்வந்தோர்
சிலையினால்இந்திரன்-தலையையும்குலை குலையவேவசைதந்தோர்
௭. இவர்கள்கிரவுஞ்சத்தீவோர் இவர்-எவரிலும்பிரதாபர்
அவர்இவர்என்றும் பாரார்தாமே-ஆறிலும்கொல்லும்கோபர்
௮. கந்தமாதனக்கோளர் இவர்-சாந்தம்ஆம்படையாளர்
அந்தகனுக்கும் அந்தகன்என்ன-வந்தபாவசண்டாளர்
௯. புட்கரப்பெருந்தீவோர் இவர்-விக்கிரமம்என்னசெய்யார்
திக்கெசயங்களை ந[illegible]கொடுங்கையில்-வைக்கிறஇவர்அய்யா
௰. இலவமாமரத்தீவோர் இவர்-கார்மேகநிறப்படித்தோர்
மலையையும்கடலை-அலையையும்சேடன் தலையையும்தூக்கிப்பிடித்தோர்

—*—

சமர்த்துப்பேசின்வன்னியைமாலியவான்இடித்தல்.

விருத்தம்.

மகிழுடன்இப்படிமூலபலத்தின்சேதி
வந்ததூதுவர்சொன்னார்அரக்கன்கேட்டான்
அதில்ஒருவன்வன்னிஎன்பான்பிதையாலே
அடைந்ததெல்லாம்அறிந்தவர்ஆர்மாலியவான்என்ன
பதறிஅழும்நோயாளிமுகத்தின்முன்னே
பரிகாரிதலைமாட்டில்அழுநின்றாற்போல்
எதிர்இருந்தமாலியவான்வன்னிதன்னை
இடிக்கின்றான்பகைமைசொல்லிப்படிக்கின்றானே.

௬௩-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வன்னியோசனைசெய்வதேதடா-அந்த
மானிடனைவெல்லப்போகாதடா

அநுபல்லவி.

உன்னுடையகெறுவத்தாலே ஒருஇராச்சியமும்வாதும்
தென்னிலங்கைபட்டபாடு சென்மசென்மத்துக்கும்போதும்(வன்னி)

சரணங்கள்.

௧. கோலமாரீசனும்மானைப் போலவேசென்றுகெட்டான்
சாலவேகரனும்கொடி வேலையினிலேபட்டான்
வாலியும்அவர்கை அம்பினாலேஉயிரைவிட்டான்
[illegible]ணனும்மாத்தின மாலைதந்தும்விட்டான்
மேல்என்னசானகிஎன்றும் விஷத்தில்காம்தப்பல்ஆமோ
காலிலேசுற்றியபாம்பு கடித்தால்ஒழியப்போமோ(வன்னி)
௨. பண்டுகும்பகர்ணனையும் கண்டதுண்டம் ஆக்கினார்
அண்டும்அதிகாயன்முடி பிண்டுவிழத் தாக்கினார்
கண்டகன்இந்திரசித்தன் மண்டைவிழத் தூக்கினார்
ஒண்டிஒழிந்தோரைநமன்அண்டையிலே போக்கினார்
மண்டுகடல்வெந்ததங்கே வந்ததில்லையோநெருப்பு
மிண்டர்ஆம்அரக்கர்க்கினி மேலேஎன்னஇருப்பு(வன்னி
௩. முக்கண்வில்ஒடித்ததேபிர சித்தம்ஆன போடா
சக்திஒருகுரங்குக்கே ருத்தியதில் ஊரடா
மற்றதுசஞ்சீவிதந்த வித்தைஎன்ன பாரடா
செத்தவர்பிழைத்தால்இனி வெற்றிகொள்வ தாரடா
இத்தலைஆயிரம்வெள்ளம் நாசம்தரும்அவராலே
புற்றில்ஈசல்போல்மடிந்து போனபிறகினிமேலே(வன்னி)

மூலபலம்கண்டுஓடினசாம்புவான்முதலோரைமறிக்க அங்கதனுக்குஅவன்சொல்லுதல்.

விருத்தம்.

அரக்கன்இந்தப்படிபாட்டன்வன்னிக்கோத
அதைமறுத்தான்மூலபலம்தன்னைவிட்டான்
திரைசகடம்காருவரக்கண்டஞ்சியேங்கிச்
சாம்பன்முதல்அனைவரும்சாமியைவிட்டப்பால்
காக்கவில்லைநக்கலைகடலைத்தாண்டிப்போனார்.
காருத்தன்அருளாலேஅப்போதந்த

குரக்கினத்தைஅங்கதன்போய்மறிப்பேனென்று
கூடினன்சாம்பன்ஞாயாடினனே

8

எ௰-தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

எங்களால்ஆகாதையா-மூப்பலத்தின்-எதிர்நிற்கப்போகாதையா.

அநுபல்லவி.

அங்கதாஉன்தர்மம்-எங்கள்மேலேயோதர்மம்
அரக்கர்க்கெங்களைக் கொடுக்கத்துடிக்கிறாய்
அகுதியைப்பிடித்துப் பகுதிக்கடிக்கிறாய்—எங்க

சரணங்கள்.

விளக்குள்இந்திரசித்தம்பால்-பட்டபுண்கள்ஆறி
வேறோத்தம்இன்னம் ஊறவும்இலேயே
அனர்த்தகாலம்போல்க்கரு-கனைகாணுச்சேனைமேல்
அஞ்சாதேஅழைக்கிறாய் என்செய்வோம்கோலேயே
நறுக்கையர்இருவரும்-அனுமானும்இவர்முன்னே
தரிக்கொள்வதேமெத்த பெரிதவர்கிலேயே
பலித்தபஞ்சினில்ப்பாயும்-கனலைபோல்எங்களைஅவர்
பாய்ந்துகொல்வாரென்று சாய்ந்துபார்க்கலேயே
கனத்தகும்பகர்-ணனைத்தின்பானொரு
அரக்கன்பொரிக்கறி போலும்
கனிதம்இவர்களுக்-குண்டோபெருங்கடல்
மணலேயெண்ணரி றாலும்
உனக்கென்னசிறு-பிள்ளைஆலோ.
சனைக்குத்தெரியுமோ நாலும்
ஒட்டும்பாதையும்-இட்டுத்தலைதொட்டெம்
உயிர்க்குப்பிணைநீசொன் றாலும்—எங்க

உ. ஆனராவணன்தலை-பத்திவர்க்காயிரம்
ஐந்நூறுதலைகண்டோம் என்னென்னபோரோ
போனவாலியும்கால-நேமியும்மாலியும்
பூச்சிபோல்இவர்க்கொரு மூச்சுக்காவாரோ
ஈனர்ஆகும்இவரை-மூவரும்ஆராயின்
தெட்டிப்பார்ப்பார்அல்லாமல் கிட்டிப்பார்ப்பாரோ
கீனர்ஆகியகொஞ்ச-வானரர்நாம்அந்தத்
தேவர்களிலும்பலம் ஆகியபேரோ
வானமாஇந்தச்-சேனைமுன்விடுத்

தேன்குழைக்கறிபோல் குழைக்கிறாய்
உற்றப்போர்களைக்-கெடுக்கவோஉன்தன்
சிற்றப்பனுடனே பிழைக்கிறாய்
ஆனமட்டும்பார்த்-தோமேதுணையே
வஞ்ஞேவிணிலே உழைக்கிறாய்
அறமுழுக்குகொண்ட-புரிபோல்அ[illegible]விட
அறியாப்புத்தியி னாலேஅழைக்கிறாய்—எங்க

௩. இனித்தான்அவர்எங்களைத்-தொடாமல்அணையைப்போய்
இடிக்கிறோம்இதற்குநீ தடுத்துச்சொல்லாதே
சினத்தெருதும்எருதும்-போராடிநடுப்புல்லைத்
தேய்த்தால்ப்போல்எங்களை வைத்துக்கொல்லாதே
இனத்தோடேநாங்கள்எல்-லாரும்போய்அவர்கையில்
இறக்குமட்டும்உனது பறப்புநில்லாதே
தனித்துத்தாய்வயிற்றினில்-செனிக்கையிலேஇவர்
சதியும்மாயமும்கற்றோர் அதுவும்அல்லாதே
பனிப்பெருக்கிலே-கப்பல்ஓட்டிட
நினைக்கிறாய் நீசொன்ன
படிக்குடக்மோ-குரங்குப்பிடியே
பிடிக்கிறாய்பன்னப் பன்ன
அனுப்பினு எழு-பதுவெள்ளமும்ஒரு
வனுக்குப்போதுமோ இன்ன
அருந்தத்தல்முஉண்டு-உறங்கமுழைஉண்டு
அரக்கர்ஆண்டென்ன மனிதர்ஆண்டென்ன—எங்க

*

அங்கதன் சாம்புவந்தனைஇடித்தல்.

விருத்தம்.

இரங்கிச்சாம்பன்முதல்ஆனோர்-இவ்வாறுரைக்கநீங்கள்என்ன
உரம்கெட்டீரோபடைக்கஞ்சி-ஓடல்ஆமோசூரனுக்குத்
திரும்பத்தனையேசிலன்என்னச்-சொல்வார்இலையோவாருமென்று
பரிக்தப்போர்தங்கதன்நீதி-படிப்பான்சொல்லிஇடிப்பானே.

எக-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

என்னகாரியம்எண்ணினீர்-சாம்பவரேநீர்-என்னகாரியம்பண்ணினீர்

அநுபல்லவி.

முன்னவர்என்றும்மைச் சாமிசொன்னதும்போச்சே
சாமித்துரோகிஎன்று பூரிக்கும்பேர்ஆச்சே

பன்னும்அங்கதன்என்சொல் எண்ணாமல்ஏதுங்கிறீர்
படைக்குப்பயந்திப்போது செடிக்குள்ளேபதுங்கிறீர்—(என்)

சனங்கள்.

௧. பேய்த்தனம்ஆகவே-இகத்தர்க்கும்பாத்துக்கும்
பிரட்டன்என்றுசொல்லக் கேட்டோ
பிராணன்போனால்என்ன-மானம்போகல்ஆபோகாம்
பின்பேரைப்போலிக்கை விட்டோ
ஏற்றராமன்ஆதி-மூர்த்தியென்றநீரே
இங்கேகளிக்கத்தலைப் பட்டோ
இலங்கைதஅல்லவோநீர்எல்-லாம்தெரிந்திருந்தும்பக
டிப்பானையிலில்கையை இட்டோ
ஆத்திரமோஅவர்க் கென்னஉங்களோதொட்டு
அழிந்துவாலிஓர்அம்பால் விழுந்தானேதலைகெட்டு
சாத்தியமோஉடல் ஆமோமுதுகிட்டு
சாகிறபேருக்குச் சமுத்திரம்முழங்கால்மட்டு—(என்)

௨. இடுக்கென்றபோம்இந்தப்-பாழும்சரீரத்தைத்
திரணமென்றெங்கோனணம் பேற்றீரே
சீவன்போனால்என்ன-கீர்த்தியும்உடன்போமோ
தெரியாமல்நீரெல்லாம் செத்தீரே
அடுத்தபேரைக்கொல்லும்-விஷம்ஆனநீங்களும்
அமுதம்போல்சாமியை உற்றீரே
அன்பெல்லாம்வெளிஆச்சே-மண்குதி[illegible]யம்பி
ஆற்றில்இறங்கச்சொல்லி வைத்தீரே
முடுக்கிவாரும்உயிர் கொடுத்துப்பழிஒழிப்பீர்
முன்ஒன்றும்பின்ஒன்றும் செய்தவசைகழிப்பீர்
நடுக்கிறுடிறுல்ப்பேர் எடுத்தெப்படிசெழிப்பீர்
நாயகன்முகத்தினி மேல்எப்படிமிழிப்பீர்—(என்)

௩. நால்வரும்போல்சண்டை-பார்ப்பதல்லால்உண்டோ
நம்மாலேசாமிக்கு வைமிலசம்
நமக்குத்தான்அபகீர்த்தி-சுபக்காயமோஇனி
நாலெங்கெப்படிசெல்லும் விசுவாசம்
மேல்கீழ்ஆனதும்-அப்பன்வில்இருக்க
பிழைக்கமக்குவரு மோமோசம்
வீரர்கள்நாசம்மா-போர்கொண்டோமேஅப்போ
வேண்டா[illegible]அறுவா கிறும்சோசம்

சாலம்செய்தோடினும் நம்மைத்தடுப்பதோ
சதிசெய்யும்பேருக்குச் சமர்த்தர்என்றும்பேரோ
நீலஅரக்கர்கெடும்காலம் என்றறியீரோ
நில்லாதுவாருங்கள் நீலகடந்துபாய்வாரோ—(என்)

—*—

மூலபலசண்டை.

விருத்தம்.

ஓதிஇவ்வாறங்கதன்சொல் உரைக்குச்சாம்பன்
உடன்பட்டான்அங்குதம்பி முதல்ஆனோர்கள்
நாதன்உரையால் அவனைக்கூடப்போனார்
நாலுசமுத்திரமும்ஒன்றாய் வளைந்தால்போல
தீதுசெய்யும்மூலபலம் எதிர்க்கக்கண்டான்
சிராமன்கோதண்டத் தினைநாணஏற்றிக்
காதளவும்வாங்கிஇதெம் மாத்திரம்என்று
கருஷித்தான்சரமாரி வருஷித்தானே

௭௨-தரு-பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மூலபலசண்டையைக்கேளும் - ஸ்ரீராமன்செய்த
மூலபலசண்டையைக்கேளும்

அநுபல்லவி.

மூலபலசண்டைகேளும் - வேலைசூழ்இலங்கைஆளும்
மூடன்இராவணன்குடி - கேடன்இராவணன்கெடி
மூவுலகத்திலோருக்கும் - [illegible]கத்தவுணர்க்கும்
முந்தஉபசாரம்பண்ணிப் - பிந்திட்டவிசாரம்எண்ணி
முன்அரக்கர்நம்பினோர் - தன்னோடொத்ததம்பியார்
முக்கியதேவாந்தகன் - உக்கிரமநராந்தகன்
முடிபெறும்சூரியகேது - கொடிபெறும்யாககேது
முனைபெற்றசம்புமன்னன் - ரணமஸ்தன்கும்பகர்ணன்
முதுபோர[illegible]ம்பன்அகம்பன் - அதிகாயன்கும்பன்நிகும்பன்
முச்சிரத்தாக்க[illegible] சங்கன் - வச்சிரத்தெயிற்றன்சிங்கன்
முகைக்கும் பருத்தக்கண்ணன் - புகைக்கும் குருதிக்கண்ணன்
முதல்வீரர்மடிந்தனர் - சதிமாரும்முடிந்தனர்
முழுதும்செஞ்சு காய்ந்தது - பழுதுவந்துசேர்ந்தது
முற்றுயிர்கொடுக்கும்போர்கள் - கத்திஎன்றெடுக்கும்போர்கள்
மூடவர்முதல்ஆகஇன்று - கடுகிவாவேணும்என்று
முபதிட்டதூதர்செல்லப் - போயவர்க்கும்சேதிசொல்ல
மூட்டிஇலங்கையைநாடி - வந்துதாக்கக்கொண்டாடி

முண்டரக்கர் தன்னைத்தேற்றி - சண்டையைஉட்கொண்டுதேற்றி
மூளும்கனல் போலேபற்றி - ஆளும்கள மேலேசுற்றி
மூடவும்பூமிஅசைந்தாடவும் தேவர் அஞ்சி
வாடவும் வானரர்கள் ஓடவும் தேடிவந்த—(மூண்பல)

சன்னைங்கள்.

௧. அஞ்சுமுகங்கள் ஈர்...ஐந்துகை. வெற்பகங்கள்
ஐம்பதுதலைகள் ஈர்...ஐம்பது புசமலைகள்
ஐந்நூறுமுடிகள் ஈர்...ஐந்நூறு தோள்அடிகள்
ஆயிரம்சிரங்கள் இரண்...டாயிரம் கரங்கள்உடன்
அங்கம்மிகு காத்திரங்கள்...பொங்குபொறி நேத்திரங்கள்
அலைபோலும் நாக்குகள்...மலைபோலும் மூக்குகள்
ஆவெனத்திறந்த வாய்கள்...தாவெனப்புகுந்த ஈய்கள்
ஆகாசம் தொட்டகைகள்...ஆகாசம் இட்டமெய்கள்
அடரக்கரு கறுத்துப்...படையைக் குமிருகிந்து
அண்டத்தில் உள்ளோர்...கண்டத்தில்உள்ளோர் எல்லாம்
அடியோடெழும்பி அந்தக்...கடல்எழும்பொங்கிஇந்த
அரும்பார்க்குள்நிறைப்பட்டால்போல்-புற்றினில்ஈசல்
பெரும்போக்குப்புறப்பட்டால்போல்-மலைமலைகள்
ஆனபெருராக்ஷதர்கள்-மானம்அளவாநிறைந்து
ஆயிரம்வெள்ளம் சேனை - ரதங்களுடன்
பாய்பரிகொல்லும் யானை - இலைஉனக்கில்
அஸ்தகிரியமகிரி-சித்திரகூடாமகிரி
அனையபெருமத்தகெசங்கள் - தேவரைவென்று
தனிவிருதுபெற்ற துரகங்கள் - கணக்கில்லாத
அண்டபகிரண்டம்முழுவதா-எண்டிசைஅகன்றமட்டும்
அளவும்காத்திர ரதங்கள் - கண்களில்பொறி
வளரும்போர்த்துரகதங்கள் - முறைமுறையா
ஆற்றுமணல்அளவிட்டேகட்-சேத்திரம்அளவிட்டாலும்
அதிகக் குதிரைக்கூட்டம் - இக்குகள்எல்லாம்
பதறிக்கொள் ஆட்டபாட்டம் - கைக்கடகங்கள்
ஆகம்அணிபதக்கங்கள்-தோள்வளைகள்கால்வளைகள்
அக்குமணிக் குண்டலங்கள் - மணிஇழைத்த
பொற்கொலுசுவெண்டையங்கள் - வெற்றிக்கொடிகள்
ஆலவட்டம் தாலவட்டம்-சாமரங்கள்சுருட்டிகள்
அவுதாக்கண்முத்துக் குடைகள் - மயிலிக்குடைகள்
கவிகைகள்சித்திரக் குடைகள் - வெயில்மறைக்க
அதிவிதராகசுரம்-தவிலொடுகொம்பினம்

அறைந்தசங்குகள் எக்காளங்கள் - கர்ணவொடு
சிறந்தகொம்புகள்கைத்தாளங்கள் - துத்தாரிகள்
ஆகுளிகள்மேளங்கள்-காகளம்டமாரங்கள்
ஐந்துவித பேரிகைகள் - வீராணங்கள்
பம்பையொடு பூரிகைகள் - முழுங்கிவர
அங்குசங்கள்பரிசைகள்-சங்கிலியின்வரிசைகள்
அஸ்திரம்வேலாயுதங்கள் - வல்உலக்கைகள்
சஸ்திரம் சூலாயுதங்கள் - இப்படிக்கொத்த
ஆயுதத்தின்பேதங்கள்-கோடிகோடி பூதங்கள்
அங்கைகொண்டுசூழ்ந்துவர - பேய்களும்கொண்டு
கங்குகங்காப் பாய்ந்துவர - புலிஇறைச்சி
ஆட்டிறைச்சிமான்இறைச்சி-மாட்டிறைச்சிநாய்இறைச்சி
அலகைகள்கொடுத்துவர - மதுக்குடங்கள்
பலபேய்கள் எடுத்துவர - கெக்கலிகொட்டி
அண்டமும்அகன்றநவ-கண்டமும்கிடுகிடென்ன
ஆர்ப்பரித்துத்தொடைகள்தட்டி - விழிகள்எல்லாம்
தீப்பறக்கப்பொறிகள் கொட்டி - ராவணன்சொன்ன
தாரடாமனிதன்அவன்-ஆரடாவென்றேகத்திகள்
அடங்கலும் வீசிக் கொண்டு - ராமன்எங்கேஎன்
றிடும்புகள்பேசிக் கொண்டு - விதம்விதமா
ஆளிபுலிகரடிகள்-ஞாளிகழுதைகள்மேலே
அரக்கர்மெத்தப்பாய்குவாரும் - சிங்கத்தில்ஏறி
இறைச்சலிட்டுச் சாய்குவாரும் - சிலஅரக்கர்
ஆகத்தினில்அடங்காத-தாகத்தாலேமேகங்களை
அங்கையால்ப் பிடிப்பாரும் - சலம்பிழிந்து
செங்கையால்க் குடிப்பாரும் - அதுக்கிஷ்டமாம்
ஆரும்வேசாயிஅந்த-நீரும்அகப்படாமல்
அலைகடலை அள்ளுவாரும் - பெருவாயாலே
சலசலெனக் கொள்ளுவாரும் - கைகளைநீட்டி
அஷ்டகெசங்களைக்கூட-கட்டெடுத்துத்தின்னவந்த
அனைப்போலச்செயிவாரும் - பரங்களாலே
இனவுகளைச்செரிவாரும் - பிறைகள்போலே
அக்கிரமம்பிருந்தபல-வக்கிரதந்தங்களைக்காட்டி
ஆவென்றுதிறப்பாரும் - பசிக்குதையோ
கூவென்றுபறப்பாரும் - கழுதைமுகம்
ஆனைமுகம்புலிமுகம்-பூனைமுகம்பரிமுகம்
ஆகும்அரக்கர் அனந்தம் - கண்கள்நெருப்பா
வேகும்அக்கர் அனந்தம் - சற்றுஇனும்

அஸ்திரமில்விரல்இல்லாமல்-ஒற்றைநக்கை ழுற்றைநகாலும்
ஆசுரர்கள் கோடி - சொரூபம்கெட்டுப்
போனஅரக்கர்கோடி - இவரைக்கண்ட
அண்டர்கள்எல்லாரும்நீல-கண்டன்இடம்போய்எப்படி
அய்யாஎன்றேஒடுங்கியே - உயிர்மேல்ஆசை
வையாமலே நடுங்கினர் - சிவனேஇந்த
அம்புவியில்கடல்களும்-பப்புசராசரங்களும்
அரக்கர்ஆய் வந்தனஎன்று-ஓடிஒளித்துக்
குரக்கினம்சொன்னதை இன்று - நாங்களும்இனி
அம்பரத்திருக்கும்இந்த-உம்பருலகத்தைவிட்டு
அப்பாலேசெல்வோம்என்றார் - இருந்தால்இவர்
தப்பாமல்கொல்வார்என்றார் - பன்னகேஅரன்
அந்தராமன்சரத்தாலே-இந்தஅரக்கர்கள்எல்லாம்
அதம்ஆகிப்போவார்இன்ன - நீங்கள்எல்லாரும்
சதம்ஆகிவாழ்வீர் - என்ன - கேட்டமரர்கள்
அகத்திலேமுன்னம் இருந்ததுயர்கள்எல்லாம்
அகற்றிப்பயங்கரம் விண்டார் - ராட்சதர்கோரம்
சகித்துத்தயிரியம் கொண்டார் - முனிவர்எல்லாம்
அண்டநிழல்இல்லைஎன்று-தண்டிகமண்டலங்கள்வி
டலங்கோலம்ஆய்வெதும்பினர் - தாமரைஇலைச்
சலம்போலவே தளும்பினர் - சித்தர்கள்எல்லாம்
அனந்தம்அரக்கர்க்கொரு-குன்மகைஉறையிட்டாலும்
அளவிடத் தள்ளாதென்பார் - இந்தச்சேனைக்கு
களம்இடம்கொள்ளாதென்பார் - யர்எல்லாம்
அந்தகனைஇத்தனைஅல்ல-இந்த தகலோ
அப்பன்என்னகொய்யுமோஎன்பார்-சமதுயங்கில்
தெய்வம்என்னசெய்யுமோஎன்பார்-வித்தியாதரர்கள்
ஆயிரம்கோடிஅந்தகர்-ஆகிலும்இவரைக்கொல்ல
அனந்தம்நாள்வேணும்என்பார்-உலகழிக்க
நினைந்ததோகாணும் என்பார்-கந்தருவர்கள்
ஆமையும்சேஷனும்இந்தப்-பூமியும்எப்படிஇவர்
அங்கத்தைச்சுமந்ததோஎன்பார் - இத்தனைபேரு
எங்கிட்டுச்சமைந்ததோஎன்பார் - இவர்கள்இந்த
ஆச்சரியம்கொள்ளவெகு-மாச்சரியம்கொண்டரக்கர்
அஷ்டதிசைமேலும் மேவினார் - ஆகாசங்களும்
வெட்டவெளிமேலும் தாவினார் - இவரைக்கண்டு
ஆர்வம்உள்ளபதினெட்டு-வீரரொடுசாம்புவனும்
ரணடங்கோட்டம்கொள்ளவே - நடுநடுங்கிக்

குரங்கெல்லாம் டம்கொள்ளவே-இவ்வகைநீசர்
அடர்ந்துமகேந்திரகுன்றும்-கடந்துநாலுதிக்கிலும்
படர்ந்துராகவன்முன்னே-தொடர்ந்துதொடர்ந்து } வந்த—(மூலபல)
எட்டி வருவார்சிலர்...கிட்டி வருவார்சிலர்
ஈண்டி வருவார்சிலர்...தாண்டி வருவார்சிலர்
ஏறி வருவார்சிலர்...சீறி வருவார்சிலர்
இரைந்து வருவார்சிலர்...விரைந்து வருவார்சிலர்
இடத்தில் வருவார்சிலர்...வலத்தில் வருவார்சிலர்
எடுக்க வருவார்சிலர்...முடுக்க வருவார்சிலர்
இடிஇடி என்பார்சிலர்...பிடிபிடி என்பார்சிலர்
எற்றும்எற்றும் என்பார்சிலர்...குத்தும்குத்தும் என்பார்சிலர்
எட்டும்எட்டும் என்பார்சிலர்...வெட்டும்வெட்டும் {என்பார்சிலர்
எதிர்எதிர் என்பார்சிலர்...மிதிமிதி என்பார்சிலர்
இந்தவகைராமனை-வந்துவந்துமென்மேலும்
ஈய்கள்மொய்த்துக்கொண்டவகைபோல்-பெரும்புலியை
நாய்கள்சுற்றிக் கொண்டவகைபோல்-சுற்றியில்அய்யன்
என்சமர்த்துமராவணன்-தன்சமர்த்தும்வந்தபடை
யின்சமர்த்தும்பார்ப்போம்என்றே-நினைந்துமெள்ள
புன்சிரிப்பு கொண்டுகொண்ட-நிருசாட்சதர்
எல்லாரும் இவன்வெகு-வல்லாளிகண்டன்தனித்
திருக்கும்செருக்கேபோதும்-இதிலும்செயம்
பெருக்கவேணுமோ இதும்-என்முதுவில்
எத்தேசகாலமும்-வற்றாப்பெருஞ்சமுத்திரம்
என்றஅம்புறாத்தூணிசாத்தி - பிரசண்டகோ
தண்டவில்லை ஏற்றி - குணத்தொனிசெய்
திட்டபோதுமுமதமும்-பொட்டெனவேஉறண்டுகண்
இருண்டசிலயானைகளுக்குத் - தோசைடயுங்கூட
வறண்டசில யானைகளுக்குச் - சிலயானைமேல்
இருந்தபாகனைத்தள்ளி-வருந்துவதைத்திக்கையை
எடுத்துப்பிடித்தவோட்டம் - பயதைஎல்லாம்
விடுத்தது தேவர்கூட்டம் - வல்அரக்கர்கள்
எறிவல்சுபுரவிகள்-வீழ்விசித்தகிமாறி
இளைத்தத்தள் ளாடினவே - ராசுந்தருக்கு
உளைத்துள்ளாடி வாடினவே - பின்சாயிமுனைங்
கிணைஇல்லாவெங்கடு-கணைவிகின்றவர்கள்
எவரும்இறக்கஅடித்தான் - அப்பாலேநின்ற
அவரும்பறக்கமுடித்தான் - முடிக்கவோராம்
இருநாலுவெள்ளம்இவன்-ஒருமானிடன்போகாதிர்

னைத்திருப்பிக் - கூடிக்கொண்டார் சூரியன்முன்னே
பனிக்குலம்போல் மூடிக்கொண்டார் - சேனைக்
கிடைச்சின்ன ஆகாற்றூடிபோல்ச்சுழலும்படைகளை
இலக்கம்அறுகளை தாக்கினன் - தாக்கிஅவரைத்
தொலைத்துவெட்டிவெளியாக்கினன் - பின்னும்அரக்கர்
இருநூறுவெள்ளமுடன்-ஒருநூறுவெள்ளம்சொண்டு
ஏகோபித்துமுனைந்துக் கொண்டார் - நெருங்கிவந்து
மாகோபத்தில்வளைந்து கொண்டார் - அவர்அவர்கள்
ஐயாய்வழியாறுவெகுநூறுகணைநாறிமுது
கிட்டோடத்தரிக்கின்றான் - சிலைத்தரி
கொட்டோடமுறிக்கின்றான் - விடவிடவே
இப்படிஅந்நூறுவெள்ளம்-தப்பறமுடிந்துநலன்
டிசமானன்வன்னிஎன்பவன் - மிகவும்பர
வசமாகியே புலம்புவன் - அரக்கர்இன்று
இறந்தனர்எல்லாரும்பறந்தனர்அய்யோவன்
றேங்கம்ஆய்க்கலைபெற்று - குழுகுழுத்து
மூக்கிலே விரல்வைத்து - இனிஎப்படி
ராவணன்முகமுழிக்கப்போறோம்இதென்னமெத்த
லர்சைக்கேடாயவிளைப் விளைப்பியின்
அச்சத்தோடன்றுமெலம்பிப் புலம்பையின்
இனாச்சலைமாற்றிநின்ற அரக்கனைப்பார்த்துநீங்கள்
சடமிருந்துநொந்ததேதென்றும் - மனிதற்கஞ்சி
ஓடிஇங்கேவந்ததேதென்றும் - தேவர்கள்கண்டால்
லச்சாகும்இதுகொஞ்சப்பேச்சாகுமென்றவனை
எடா பசைராயலி - சிசின்னவே
ரோசமாவார்த்தைதபேசி - அரக்கர்எல்லாம்
இலாக்தோக்கியேஒரு-பெரும்பாம்பைத்தேளாசன்
இளப்பம்என்றுஎடுத்தக் கொண்டாற்போல்-விட்டிப்பூச்சிகள்
விளக்கைவந்துமொய்த்துக்கொண்டாற்போல்-மொய்க்கமனித
எய்மாத்திரமென்றுதானே-ஐந்நூறுவெள்ளம்சேனை [ன்
வேகமாக் கடுகவிட்டான் - அம்பிலும்அதி
வேகமா முடுகவிட்டான் - விடுத்தபின்னை
இளைத்தவன்போல்அவர்தன்னை - வளைத்திடும்படிக்குத்தந்தே
இடம்கொடுத்துப்பின்வாங்கினன் - எவரும்எனக்குள்
அடங்கவிட்டுமுன் தங்கினன் - வந்தஅரக்கர்
எதிரேரிசம்கட்டாரி-தமிரோமரங்கள்வாரி
லக்காகம்தில் சொரிந்தார் - அதுகள்தொக்கு
லெக்காரராமன்அரிந்தான் - பின்னும்நெருங்கி

இரதம்ஓர்பக்கத்தில்விட்டுப்-புரவிஓர்பக்கத்தில்விட்டுப்
யானைஓர்பக்கத்தில் விட்டுப் - அணிஅணி
சேனைஓர்பக்கத்தில் விட்டு நிரைநிரையா
இருப்புலக்கைபிண்டிபாலம்-பெருத்தகதைதண்டுசூலம்
என்னும்படைவாங்கி விடுத்தார்-விடுத்தேஅதை
பின்னும்கணைவாங்கித்தொடுத்தார் - அவர்அவருக்
கெத்தனைகைஎத்தனைவில்-எத்தனைஅம்பெத்தனைதன்
டெப்படிஒருவன் தடுப்பான்-அவர்மேல்அய்யன்
எப்படிதான்போர்கொடுப்பான்-பெருமழைபோல்
எடுத்துவிட்டபடைஎல்லாம்-தடுத்துவிட்டான்என்றுரையால்
எட்டிக்கடிக்க மேவினார் - கைப்பிடிஆகக்
கட்டிப்பிடிக்கத்தாவினார் - ஆகாசத்திலே
சஞ்சரர்இருதர்கள்-நாசமாய்ப்போவாரென்
றெல்லோர்க்கும்பயம்தேற்றினார் - சாமியைத்தேவர்
உல்லாசமாக வாழ்த்தினார் - அந்தவேளையில்
எப்புறத்தும்ராட்சதர்கள்-அப்புறம்போகாமல்வாளிக்
கிரைக்காகத்தெரிந்துக்கொண்டான்-சுற்றிலும்பொட்ட
சரக்கூடம் வகுத்துக்கொண்டான் - வகுத்தபின்பு
ரதங்கள்யானைகள்குதிரைகள்சேனைகள்பட
எவையும்மண்ணில்சிதைத்தான் - பிடித்தவில்லோ
டவர்அவர்முன்னில்குதித்தான் - தனித்தனியே
இந்திரவாணம்மோகவாணம்-சந்திரவாணம்நாகவாணம்
எரிவாணம் வாயுவாணம் - விஜயமுர
ஊரிவாணம் மாயவாணம் - குபேரவாணம்
இமையர்தவருணன்வாணம்-யமன்வாணம்அருணன்வாணம்
இடிவாணம்ஆகதொடுத்தான் - அரக்கர்தம்மை
அடியோடேசாகஅடித்தான் - பின்னையும்அவர்
என்இறந்தசேனைசண்டை-பண்ணிமுடிப்பதென்றெண்ணி
யகமாக் கடுகடுத்தான் - மந்திரம்சொல்லி
மோகனாஸ்திரம்தொடுத்தான் - தொடுத்தபோதில்
இங்குராமன்அங்குராமன்-அங்குராமன்இங்குராமன்
எங்கும்ராமன்ஆகத்தோற்றினான் - அவருக்கவர்
தங்களாலே சாகமாற்றினான் - இந்தவகையா
சனர்ஆறும்ஆயிரம்வெள்ளம்-சேனையும்முகூர்த்தம்தன்னில்
இப்படிஆகப் புடைத்தான் - ரணகளத்தை
வெறுங்களம்ஆகத் துடைத்தான் - அனந்தம்கோடி
எரிவாளிகள் பிறந்த - கருமேகம்போல்சிறந்த
ஒருராமனால் இறந்த சருகுகள்போல்ப்பறந்த—(மூலபல)

௧. தோள்கள் அறுந்தபேரும் ... தாள்கள் முறிந்தபேரும்
தொடைகள் இடிந்தபேரும் ... இடைகள் ஒடிந்தபேரும்
தொந்திகள் சரிந்தபேரும் ... சந்துகள் முறிந்தபேரும்
துணைக்கைகள் இற்றபேரும் ... கணைக்கால்கள் அற்றபேரும்
தொண்டைகள் தறிந்தபேரும் ... மண்டைகள் திறந்தபேரும்
துண்டம்துண்டம் ஆனபேரும் ... கண்டம்கண்டம் ஆனபேரும்
ஆரணிகள் இழந்தபேரும் ... காரணிகள் இழந்தபேரும்
ஆரகம் உலைந்தபேரும் ... இரதம் கலைந்தபேரும்
தோரணங்கள் கெட்டபேரும் ... வாரணங்கள் விட்டபேரும்
தோமரம் பறிந்தபேரும் ... சாமரம் எறிந்தபேரும்
தொட்டெடுத்தவாள்கெட்டு - நட்டகட்டைபோல்பட்டுத்
துள்ளித்துள்ளிநெளிப்பாரும் - பிணங்கள்தம்மேல்
தள்ளித்தள்ளி ஒளிப்பாரும் - பலபலவா
துண்டங்கள்ஆம்உடம்புகள்-இண்டங்கொடிபோல அம்பு
துளைபட்டு மாய்வாரும் - குறைத்தலைஆய்
அளைபட்டுச்சாய்வாரும் - இவ்வளவென்று
சொல்இடம்இல்லாதபேரும் - எல்லைக்கண்போல்உடம்
தொளைபட்டுவீவாரும் - வாய்வடுத்துக்
களைபட்டுச் சாவாரும் - போடப்போடவும்
தொலையாஅம்புகளாலே-தலைபோய்ப்பம்பரம்போலே
சுற்றிச்சுற்றி மடிவாரும் - முண்டங்கள்ஆடித்
தத்தித்தத்திப்படிருவாரும் - நிலைகலங்கி
தோள்என்றும்தாள்என்றும்-வாள்என்றும்அடையாளம்
தோன்றாமல்கெட்டபேரும் - காயங்களாலே
ஆற்றாமல் பட்டபேரும் - தலைகள்அற்றுத்
தூணமேலேநின்றபடி-தொய்யப்போலவாருகொண்டு
தொப்பெனவேவிழ்வாரும் - மண்ணைக்கடித்துக்
குப்புறவே தாழ்வாரும் - அம்புகளெங்கும்
சொருகிஉயிர்விடச்சே-மாணவலிப்பெடுத்துச்
சுருட்டிக்கொண்டுபடுப்பாரும் - கண்பூச்சிபறந்
திருட்டிஉயிர் விடுப்பாரும் - கைகால்கள்அற்றுச்
சுருங்காமலேஅடிக்கும்-பெருங்காற்றில்கொம்புபோல்
சோலைபோலேகாணுவாரும் - தங்கள்குடலை
மாலைபோலே பூணுவாரும் - அடுத்தடுத்துத்
தொண்ணூறாயிரம்அய்யோ-தண்ணீர்தண்ணீரென்று
அடிஅடித்து ஓய்வாரும் - ரத்தத்தைஅள்ளிக்
குடிகுடித்துச்சாய்வாரும் - மனிதனென்று
அடுக்குச்சொல்லியவோயின்-இடுக்குக்காயிரம் அம்பு

சொரிபட்டு வ[illegible]வாரும் - சின்னபின்னமா
அரிபட்டுச் சிதைவாரும் - கழுக்கள்கொத்த
தொங்கியபனங்காயிலே-தூங்குபோலக்கண்களும்போய்
டொங்குவிழும்தலைஅனந்தம்-ரத்தம்பெருகிப்
பொங்கிவிழும்தலைஅனந்தம் - கழுத்துகளும்போய்த்
தூரத்தொலையில்விழப்-பிரட்டுஇரா[illegible]ம்எழுந்
ஆடும்தலைகள்அனந்தம்-ஒன்றின்மேல்ஒன்று
ஏறும்தலைகள் அனந்தம் அந்தத்தலையைத்
தொக்கொம்பெய்ப்பேயினங்கள்-பந்துகள்போல்எடுத்தாடச்
சுற்றிலும்விழ்தலைஅனந்தம்-கடலின்கரை
முற்றிலும்விழ்தலைஅனந்தம்-சுவாமிஅம்பாலே
சொற்கம்உண்டெங்களுக்கென்று-கொக்கரித்துக்கொக்கரித்துத்
துடித்துவிழும்தலைஅனந்தம்-ஒன்றோடொன்றுக
அடித்துவிழும்தலைஅனந்தம்-அம்புபட்டிரு
துண்டாச்சிலைகள்விழ-கண்டாத்தலைகள்எழச்
சுழலும்கவந்தம்அனந்தம் - பிணங்களோடே
உழலும்கவந்தம்அனந்தம் - முடிந்தலைகள்
துண்டித்துவிழவும்வேகம்-கொண்டிட்டிநடந்தபாலே
சோரும்கவந்தம்அனந்தம் - எதிரெதிரா
நேரும்கவந்தம் அனந்தம் - சரீரமெங்கும்
துருவிட்டகணைபட்டு-மரவட்டைஉருவிட்டுச்
சுருளும்கவந்தம்அனந்தம் - நாட்டிசிக்க
உருளும்கவந்தம்அனந்தம் - நட்சத்திரம்போலத்
தொடுத்தமணிக்குண்டலத்தை-அடுத்தடுத்தம்மானைபோடத்
தொட்டாடும்சிலபேய்கள் - கவந்தத்தோடு
முட்டாடும் சிலபேய்கள் - ரத்தத்தில்ஆனைத்
தோட்டியினில்பிணங்களை-மாட்டிவிளையாட்டுக்காகத்
தூண்டிவிடும் சிலபேய்கள் - அதைப்பறிக்கத்
தாண்டிவிழும்சிலபேய்கள் - இன்றுகொழுத்துச்
சயம்கொண்டராமனுக்குச்-செயம்செயம்என்றுசொல்லித்
துதித்தாடும்சிலபேய்கள் - பிணமலைமேல்
குதித்தாடும்சிலபேய்கள் - ஆனைமணியைச்
சோடாணதாளம்ஆக்கி-ஆடிக்கொண்டிராகவற்குத்
ஸ்தோத்திரம்சொல்லும்சிலபேய்கள்-சண்டைஉண்டென்று
சாஸ்திரம்சொல்லும் சிலபேய்கள்-ராட்சதர்வாயில்
சுனைவினைபோன்றபல்லைப்-பொரிஎன்றுவாயில்கவ்வித்
தூவிஇடும்சிலநாய்கள் - லங்கையைப்பார்த்து
கூவிஇடும் சிலநாய்கள் - நாலெல்லாம்

தோண்டித்தோண்டிப்பிடுங்கித் - தாண்டி[illegible]ப்பிடிக்கத்
தொலைத்திடும்சிலநாய்கள் - களத்திலடங்கும்
குலைத்திடும் சிலநாய்கள் - பெருகுட்டத்துச்
சுனைக்குள்விழும்பிணத்தைக்-கூன்கெனக்கொளுசண்டை
தொடுத்திடும்சிலநரிகள் - குட்டிக்கிளையாக்
கொடுத்திடும்சிலநரிகள் - இழுத்திழுத்துத்
துணுக்குத்துணுக்காக்காத்திட-பிணத்தைப்பெரும்பசியும்
குளைஇடும்சிலநரிகள் - இலங்கையைப்பார்த்
ஊளைஇடும்சிலநரிகள் - எலும்புகளும்
தொண்டைகளும்மண்டைகளும்-கொண்டுபோய்இலங்கையிலே
தூற்றும்சிலபருந்துகள் - வீடுகள்மேலே
ஏற்றும்சில பருந்துகள் - மூக்குகளாலே
தொப்புளின்சைப்புகளை-முப்புரிகொள்வதுபோலச்
சுருட்டும்சிலகழுகுகள் - தலைதலையா
உருட்டும்சிலகழுகுகள் - பிணையலேமேல்
தொத்தித்தொத்திமண்டைகளைக்-கொத்திக்கொத்திழுக்கிறதே
தாக்கும் சிலகழுகுகள் - ஓர்இடத்திலே
